In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ சாரதாம்பாள் திவ்யசரிதம்

பாரதிகாவலர் கே.ராமமூர்த்தி

The FIRST & the FOREMOST BOOK

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ சாரதாம்பாள்
திவ்ய
சரிதம்

ஸ்ரீ சாரதாம்பாள்
திவ்ய
சரிதம்

ஸ்ரீ சாரதாம்பாள்
திவ்ய
சரிதம்

ஸ்ரீ சாரதாம்பாள்
திவ்ய
சரிதம்

ஸ்ரீ சாரதாம்பாள்
திவ்ய
சரிதம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ சாரதாம்பாள்
திவ்ய
சரிதம்

ஸ்ரீ சாரதாம்பாள்
திவ்ய
சரிதம்

ஸ்ரீ சாரதாம்பாள்
திவ்ய
சரிதம்

ஸ்ரீ சாரதாம்பாள்
திவ்ய
சரிதம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ சாரதாம்பாள் திவ்ய சரிதம்

(சிருங்ககிரி ஸ்தல ஸ்ரீ சாரதாம்பாள் வரலாறு)

பாரதி பக்த பூஷணம், கவிமௌக்திகம்,
பாரதி பிரசங்க ரத்னாகரம், பாரதி சாகரம்,
பாரதியச் செல்வர், பாரதி கலாநிதி,
பாரதிகாவலர்
டாக்டர் கே. ராமமூர்த்தி



நவபாரதி
3, கிருஷ்ணசாமி தெரு,
அபிராமபுரம்,
சென்னை - 600 018.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முதற்பதிப்பு : டிசம்பர் 1999

© உரிமை ஆசிரியருக்கு

SRI SHARADAMBAL DIVYA CHARITHAM:

[The Divine Story of Sri Saradambal]

Copy Right : © Bharathi Kaavalar Dr. K. RAMAMURTHI

All rights reserved with the Author. No part of this book may be reproduced or translated in any language, or utilised in any form, or by any means, electronic or mechanical including photo copying, recording or by any information storage or retrieval system, without permission in writing from the author, except in the case of brief quotations embodied in critical articles and reviews:

TITLE	:	SRI SHARADAMBAL DIVYA CHARITHAM
AUTHOR	:	BHARATHI KAAVALAR Dr. K. RAMAMURTHI
SUBJECT	:	RELIGIOUS-HISTORICAL
LANGUAGE	:	TAMIL
EDITION	:	FIRST EDITION, DECEMBER 1999
No. OF PAGES	:	336
PUBLISHED BY	:	NAVABHARATHI 3, Krishnaswamy Street, Abiramapuram, Chennai – 600 018.
PRICE	:	Rs.60/–

Printed at : **NOVENA OFFSET PRINTING CO.**, Chennai - 5 ✆ 8588471, 8548891

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ சாரதாம்பாள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



ஸ்ரீ சாரதா பீடாதிபதி
ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியார்
ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

श्री श्री जगद्गुरु शङ्कराचार्य महासंस्थानम्
दक्षिणाम्नाय श्री शारदापीठम्. शृङ्गेरी
Private Secretary To His Holiness Sri Jagadguru Shankaracharya
Dakshinamnaya Sri Sharada Peetham, Sringeri - 577 139 (Karnataka)

அருளாசி

Bharathi Kaavalar Dr. K. Ramamurthi
3, Krishnaswamy Street,
Abiramapuram,
Chennai. 600 018.

Sringeri
Ref: D7/3500
16-12-99

தங்கள் 6-12-99 கடிதமும் தாங்கள் எழுதி, பிரசுரிக்க இருக்கும் "ஸ்ரீ சாரதாம்பாள் திவ்ய சரிதம்" புஸ்தகமும் ஸ்ரீஸ்ரீ ஜகத்குரு சங்கராசார்ய மகாஸ்வாமிகள் பாதகமலங்களில் தங்கள் நமஸ்காரத்துடன் சமர்ப்பிக்கப்பட்டது.

ஸ்ரீ சாரதாம்பாள் திவ்ய சரித்திரத்தைத் தாங்கள் பக்திபாவத்துடன் எழுதியிருப்பதும், நூலாகப் பிரசுரிப்பதும் தெரிந்து ஸ்ரீஸ்ரீ மகாஸ்வாமிகள் சந்தோஷமடைந்து, மேற்படி ஸ்ரீ சாரதாம்பாள் திவ்ய சரிதம் புஸ்தகத்தை ஆஸ்திக பக்தர்கள் அனைவரும் படித்து, இன்புற்று ஸ்ரீ சாரதாம்பாள் அருளுக்குப் பாத்திரர்களாக அருளாசி வழங்கி உள்ளார்கள்.

தாங்களும், இப்பிரசுரத்திற்கு ஒத்துழைத்த அனைவரும் ஸ்ரேயஸ்ஸுடனும் க்ஷேமமாகவும் சகல சௌபாக்யங்களுடனும் வாழ்ந்துவர ஸ்ரீஸ்வாமிகள் ஆசீர்வதித்து அருளிய ஆசீர் மந்த்ராக்ஷதையும் ஸ்ரீ சாரதா சந்த்ர மௌளீஸ்வரர் ப்ரஸாதமும் அனுப்பி இருக்கிறது.

இப்படிக்கு
T. தக்ஷிணாமூர்த்தி
(கையொப்பம்)
Private Secretary to H.H. Sri Jagadguru

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

श्री श्री जगद्गुरु शङ्कराचार्य महासंस्थानम्
दक्षिणाम्नाय श्री शारदापीठम्. शृङ्गेरी
Sri Sri Jagadguru Shankaracharya Mahasamstanam
Dakshinamnaya, Sri Sharada Peetam, Sringeri.

FOREWORD

Guruseva Dhurina
V.R. GOWRI SHANKAR,
B.E., D.I.I.Sc., AMIMA
Administrator : Sri Sringeri Math and its Properties.

It is with great pleasure, I write this Foreword for the Sacred book entitled "Sri Sharadambal Divya Charitham", the divine story of Sri Sharadambal, in Tamil, first and foremost of its kind, by Bharathi Kaavalar Dr. K. Ramamurthi.

The author of this book has aptly divided the totality of the Divya Charitham into exhaustive twenty one chapters with authentic information based on historical facts covering 336 pages.

The main themes include pleading of Devi Saraswathi to Dhurvasa Muni for mercy at Sathyalokam, ordering of Lord Shiva (at Kailasa Giri) to his son Subramanya – Guha to go to earth to save Vedas from evil forces, birth of Guha as Kumaarila Bhattar at the banks of river Mahanadhi, birth of Viswarupa (incarnation of Brahma) at Kashmir, birth of Adi Shankaracharya at the banks of river Purna, birth of Bharathi (incarnation

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

of Goddess Saraswathi, the consort of Brahma) at the banks of river Sona and other connected realities, all. in accordance with religious scriptures.

The fine descriptions of realities in all the chapters are depicted well. It is interesting to note all places, (Sathyalokam, Kailasagiri, Jayamangalam village, Kashmir, Kalady, Sonapuri, Mahishmathi, etc.,) all rivers, mountains and all other incidents linked with puranic episodes, have been dealt both historically and geographically and written in panoramic style.

Bharathi also known as Ubhaya Bharathi is married to Viswarupa, called by the elite as Mandana Misra, the disciple of Kumaarila Bhattar. The celestial marriage of Ubhaya Bharathi with Viswarupa has been portrayed in an absorbing pattern, in this Divya Charitham, by Bharathi Kaavalar, is praisewothy.

The philosophical debate between Sankara and Mandana formed well in simple language. The style is elegant. Ubhaya Bharathi's debate with Sankara which is narrated with crisp and cream.

At the end of the debate, Sankara had received the promise from the Divine Mother (as Ubhaya Bharathi) that She would reside wherever he would invoke Her in future. Sankara installed Her at Sringa-giri under the name of Mother Sharada.

At Sringa-giri Sri Sharada resides even to this day, granting devotees their prayers. Fascinated at the peace and tranquility in and around Sringa-giri, Jagadguru Adi Shankaracharya spent 12 years of His short life span of 32 years in this place.

Goddess Sharada's grace is boundless, Her mercy unlimited, Her knowledge infinite, Her power

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

immeasurable, Her glory ineffable and Her splendour indescribable.

All these tentacular features of facts are described by Bharathi Kaavalar in this book, in an Epic style based on Veda, Ithihasa and Purana. The Bibliography given by the author is quite valuable to scholars engaged in research works.

This is the first time that a book on the divine life of Sri Sharadambal is becoming available and the work undertaken by Bharathi Kaavalar is really monumental. I appreciate Dr. K. Ramamurthi sincerely. I am sure all the devotees will welcome this Sacred Book and encourage this faithful and laudable effort.

For to read this Divine Charitham of Sri Sharadambal, to contemplate on the greatness and sweetness of the events in it would purify the reader's minds, and prepare them for an inner life. It would bestow on them not only material things of life but also all that is good and lasting.

May Lord Chandramoulishwara, Goddess Sri Sharada and exalted His Holiness Sri Jagadguru shower benign Blessings for the continued efforts of Sri Bharathi Kaavalar Dr. K. Ramamurthi, in spreading the Hindu philosophy and culture through his scholastic Tamil works.

29.12.99
Sringeri

V.R. GOWRI SHANKAR

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வாக்தேவி, ஸ்ரீ ஸரஸ்வதியாம்

ஸ்ரீ சாரதாம்பாள்

திருவருளினாலும்

சிருங்ககிரி ஸ்ரீ சாரதா பீடாதிபதி

ஸ்ரீ ஜகத்குரு

ஸ்ரீ சங்கராசாரியார்

எண்டிசை போற்றும்

பண்டித ராஜ குருநாதர்

ஸ்ரீஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்

அவர்களின்

கருணாவாத்ஸல்யம், அருளாசி,

பரிபூர்ண அனுக்ரஹத்தினாலும்

ஸ்ரீ சாரதாம்பாள் திவ்ய சரிதம்

என்னும் இந்த நூல்

உருவாகி இருக்கிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சாஹித்ய,மீமாம்ஸ, ந்யாய, வேதாந்த சிரோமணி,
வித்யாவாரிதி, அத்வைத ஸித்தி ரத்னாகர

டாக்டர் கோடா வெங்கடேஸ்வர சாஸ்திரி

அவர்கள் வழங்கிய

அணிந்துரை

வேதங்கள் நித்யா 'வாக்' எனப்படும். அவைகள் அபௌருஷேயங்கள். அவைகள் பரம்பொருளின் மூச்சுக் காற்று வடிவங்கள். ஒரு மனிதனை, தங்கரேக்குப் போன்று ஜ்வலிக்க வைத்து, அவனுடைய மனத்தில் குரு பக்தியையும் தெய்வபக்தியையும் நிறையச் செய்து பரம்பொருளை அறிய வைத்து, அவனை, க்ருதார்த்தனாக ஆக்கும். இதுவே, வேதங்களின் மஹத்தான பிரயோஜன மாகும்.

பரம்பொருளை அடையும் மார்க்கமாக அமைந்தது வேதம். அதைத்தழுவிய ஸ்மிருதி, புராண இதிகாஸ, காவிய, சரித, ஸங்கீத ஸாஹித்யங்கள் ஆகிய எல்லாவற்றிற்கும் சேர்த்து அறிவு, ஸரஸ்வதி என்று பெயர். இவற்றைப் படிப்பதால் ஏற்படும் அறிவே ஸரஸ்வதி என்றும், அந்த அறிவிற்கு ஸாதனமான இந்த க்ரந்தங்கள், காவிய, சரிதங்களே ஸரஸ்வதியின் வடிவமாகும்.

மனிதர்களின் வாழ்க்கைக்கு மிகச் சிறந்த ஸாதனம் வாக்காகும். அவ்வாக்கிற்கு அதிபதி வாக்தேவி ஸரஸ்வதி மாதா. இவளே காயத்ரி, பாரதீ, சாரதா முதலிய அனேக பெயர்களுடன் துதிக்கப்படுகிறாள். பரம்பொரு ளாக இருக்கும் ப்ரும்மத்தின் சக்திகளில் ஞானசக்தி,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

க்ரியா சக்தி, இச்சா சக்தி மூன்றினிலும் ஞானசக்தியே மிகவும் முக்யமானது. அந்த ஞானசக்தியின் வடிவமே ஸரஸ்வதி; பாரதீ.

மஹாவிஷ்ணுவின் மானிட அவதாரங்கள் இராமர், க்ருஷ்ணர் முதலியன. அதே போன்று, பரமேஸ்வரரும் ஆதி சங்கர பகவத்பாதராக அவதரித்தார். அது ஞானப்ரதானமான அவதாரம்.

அதேபோன்று, வாக்தேவி ஸரஸ்வதி மாதாவும் பாரதியாக அவதரித்தாள். ப்ரம்ம தேவரின் அவதாரமான விச்வரூபர் என்னும் அந்தணரை மணந்து, ஆதர்ச தம்பதிகளாக வாழ்ந்து காட்டினார்கள்.

பெண்ணாக இருந்தாலும், ஸகல ஸாஸ்திரங்களையும் அறிந்து, தன் பர்த்தாவிற்கு தர்ம வழியில் ஸஹசாரியாக இருந்து காட்டின திரு அவதாரமாகிய ஸ்ரீ சாரதாம்பாள் திவ்ய சரிதம், பாரதிகாவலர் டாக்டர் கே. ராமமூர்த்தி அவர்களால் காவியம் போல் எழுதப் பட்டிருக்கிறது.

அவரவர்கள் தம்தம் தர்மத்தில் ஸ்திரமாக இருந்தால் பரம் பொருளை அடைய முடியும் என்று பகவத்கீதையில் பரமாத்மா கூறிய வண்ணம், உபயபாரதீ ஆதர்ச பத்னியாக இருந்து, வாழ்ந்து காட்டிய, உன்னதமான அவதார மகிமைகளை ஸ்ரீ சாரதாம்பாள் திவ்ய சரிதத்தில் ஆசிரியர் பாரதிகாவலர் பொருத்தமாகக் காட்டி, எழுதியுள்ள விதம் அற்புதமாக இருக்கிறது.

பாரததேசத்தில் பெண்மணிகளுக்கு ஓர் எடுத்துக் காட்டாக அமைந்ததான ஸ்வரூபமான அவதாரம் இது. நூல் முழுவதும் ஸரஸ்வதியின் ஸ்வரூப அவதாரத்தின்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அம்சங்கள் அழகுபட வாக்யார்த்தங்களுடன் எழுதப் பட்டிருக்கிறது. மெச்சும்படியாக உள்ளது.

மஹாஸரஸ்வதியின் அவதாரமான உபயபாரதியின் சரித்திரம், ஸ்ரீசங்கரபகவத் பாதாளின் திவ்ய சரித்திரத்துடன் பிரிக்க முடியாமல் ஒன்றிப்போய் விட்டது. அந்த மஹா ப்ரகாசத்தில் ஒன்றி மறைந்ததால், வெகுகாலம் உலகிற்கு ப்ரகாசமாகவில்லை. ஆனால், பரமாத்மாவின் திருவுள்ளத்தினாலேயே மஹா ஸரஸ்வதியின் அவதாரமான இந்த உபயபாரதியின் ஜீவிதவரலாறு, உலகிற்கு ப்ரகாசப்படுத்த வேண்டி, நம் பாரதிகாவலர் அவர்களுக்கு ப்ரேரணை ஆகிவிட்டது.

உபயபாரதியின் ஜீவித வரலாறு, மிக அற்புதமாகவும், அநிதர சாதாரணமாகவும், மேலும் மேலும் படிக்கத் தூண்டுவதாகவும், எப்பொழுதும் வியப்பைத் தரும் வகையிலும், வரலாறும் வர்ணனைகளும் நயமாகவும் அமைந்து ஸ்ரீசாரதாம்பாள் திவ்ய சரிதம் பாரதிகாவலரால் மிக நன்றாக எழுதப்பட்டிருக்கிறது.

மஹாஸரஸ்வதிக்கு சத்யலோகத்தில் ஏற்பட்ட துர்வாஸரின் சாபமும், அது மானிட உலகிற்கு வந்த அனுக்ரஹமாகவும் அந்த சத்யலோக சபாமண்டப வர்ணனைகளுடன் தெய்வீகமாக சித்தரிக்கப்பட்டு சரிதம் தொடங்குகிறது. பரமேஸ்வரரின் கைலயங்கிரி, குஹன் குமாரில பட்டராக அவதாரம் செய்தது, விச்வரூபரின் ஜனனம், சங்கரரின் அவதாரம் ஆகியவை படித்தின்புற வேண்டியவை.

சோணா நதியின் முழுமையான வரலாறு, பாரதீ அவதார நிகழ்வு, பாரதீ, விச்வரூபர் விவாகமும்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மாஹிஷ்மதி மண்டனர் மாளிகையின் உன்னதங்கள், மண்டமிச்ர பகவத்பாத ஸம்வாதம், பிறகு உபயபாரதீ பகவத்பாத ஸம்வாதம், ஆச்சாரியாருடன் உபய பாரதியின் விஜய யாத்திரை, சிருங்ககிரியில் பாரதியின் பிரதிஷ்டை, சாரதையாகி அதனால் மனுஷ்ய லோகத்திற்கு ஏற்பட்ட மிகச் சிறந்த நன்மை ஆகிய சகல விஷயங்களும் காவிய பாவத்தோடு (உணர்வோடு) மனம் கவரும் வண்ணமும், மிகத் தெளிவாகவும், எல்லோரும் புரிந்து கொண்டு ரசித்து அனுபவிக்கக் கூடிய முறையிலும் நூலில் தரப்பட்டுள்ளது.

பரம் பொருளுக்கு விச்வரூபரென்றும் விரா டென்றும் பெயர்களுண்டு. இவ்வுலகமே பரம் பொருளின் ஸ்தூல வடிவம். ஆகையாலோ என்னவோ, ஒவ்வொரு இடத்தினுடைய வர்ணனைகளும் மனங்குளிர நூலில் உன்னதமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது.

காஷ்மீர் முதல் சிருங்ககிரிவரை எல்லாப் பிரதேசங் களும் பகவத்பாதர் திக்விஜயத்தின் வாயிலாகவும், உபயபாரதியின் வரலாற்றின் வாயிலாகவும் அந்தந்த ஊர்களின் சிறப்புக்களும் அங்கங்கு பாய்ந்தோடும் நதிகள் ஒவ்வொன்றின் உற்பத்தி, ப்ரவாஹம், நதிக்கரைச் சிறப்புக்களும், அங்குள்ள மலைகள் பற்றியும், அங்கங்கு வசிக்கும் ஜனங்களின் பண்புகளும் பெருமைகளும், மேலும் அந்தந்த ஊர்களும் நதிகளும் ஜனங்களும் எந்தவிதமாக ப்ரசித்தி பெற்று உயர்ந்தார்களோ அவைகளுடன் இதிகாஸ புராண வரலாற்றுத் தொடர்பு களும், மிகத் தெளிவுடன் எடுத்துக்காட்டப்பட்டு இனிய அழகு நடையில் எழுதியிருப்பது பாராட்டுக்குரியது.

புத்தகத்தின் முதல் பக்கம் முதல் கடைசி எழுத்து வரை பக்தி பாவமும் (உணர்வு) நாட்டுப்பற்றும் ததும்பி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வழிகிறது. இவைகள் இரண்டும் ஒன்றாகச் சேருவது மிக அரிது. ஆனால், இந்நூலாசிரியருக்கு இது சாத்தியமாகி, வெகு சிறப்பாக அமைந்திருக்கிறது சந்தோஷம் தருகிறது.

நம் நாட்டின் சிறப்பும் பெருமையும் அதன் அனேக ஸ்தலங்கள், பல நதிகள், அவற்றின் வரலாறும் அங்கு நிகழ்ந்த சம்பவங்களும் இப்புத்தகத்தின் மூலம் உபயபாரதியின் ஜீவித வரலாற்றோடு சேர்ந்து அநாயாசமாக அனைவராலும் அறியக்கூடும்.

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தில் விச்வாமித்ர முனிவர் இராம லக்ஷ்மணர்களை அயோத்தியிலிருந்து மிதிலை வரை காலால் நடத்தி அழைத்துச் சென்று, அவர்களுக்கு ஆங்காங்கிருக்கும் இடங்களின் பெருமைகளையும், நதிகள், மலைகள், ஆச்ரமங்கள் இவைகளின் வரலாற்றையும், வர்ணித்துச் சொல்வார். அந்தவிதமாகவும் இந்நூலில் வர்ணிக்கப்பட்டு, சாரதாம்பாள் சரிதத்தோடு ஒன்றி எழுதப்பட்ட வண்ணம் இப்புத்தகம் காவிய ரஸத்திற்கு ஒரு எடுத்துக் காட்டாகவும் திகழ்கிறது.

உத்தம காவ்யத்தில் ப்ரக்ருதி வர்ணனம், ப்ரதேச வர்ணனங்கள், வம்ச வர்ணனங்கள், ஸ்திரி வர்ணனம் முதலியவைகள் இருக்க வேண்டுமென்று கட்டாய முண்டு. அதற்கிணங்கி, இவைகள் எல்லாவற்றையும் தெய்வ சம்பந்தமாக ஆக்கி, ச்ருங்காரம், வியப்பு போன்ற நவரஸங்களையும் பக்தி ரஸத்துடன் இழைத்து, மனத்தை ஆனந்தக்கடலில் மூழ்க வைத்துள்ளார், ஸ்ரீசாரதாம்பாள் திவ்ய சரித நூலாசிரியர் பாரதிகாவலர்.

சகல விஷயங்களும் அழகு, அர்த்த பாவங்களுடன் (உணர்ச்சிகளுடன்) அமைந்துள்ள இப்புத்தகத்தின்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

படனம், நிச்சயமாக விச்வரூப உபாஸனையே ஆகும் என்பதில் ஓரையமுமில்லை.

பல நூல்களை ஆதாரமாகக் கொண்டு, மாதுகர விருத்தியை அவலம்பித்து, சிறந்த விஷயங்களை உரியபடி கோர்த்து, கங்கா ப்ரவாஹம் போன்றும் சுலபமாக மனத்தில் பதியும்படியும் எழுதி, ஸரஸ்வதி மாதாவின் அனுக்ரஹத்தை எல்லோருக்கும் அளிக்கச் செய்வதே இந்த நூலாசிரியரின் நோக்கமோ என்று வியப்பையுண்டு பண்ணுகிறது இந்நூல்.

முக்யமாக, மண்டனர்மிச்ரர், பகவத் பாதர் இவர்களின் வரலாறு சம்பவங்கள், ஸம்வாதங்கள் நுணுக்கமானவை. மண்டன மிச்ரர் பகவத்பாதர் தத்துவங்கள், ஸம்வாதங்கள் வடமொழி அறிந்தவர் களுக்கே அறிந்துகொள்வது மிகவும் கடினமாகும். அதை மிகத் தெளிவான நடையில், புரிந்து கொள்கிற விதத்தில், உயர்ந்த பாவங்களை (உணர்ச்சிகளை) மூல நூலுக்கு எந்த விதத்திலும் விரோதமில்லாமல், தமிழில் சிறிதும் ரஸாபாஸம் ஏற்படாமல், பாரதிகாவலர் கையாண்டி ருக்கிற முறை மிகவும் போற்றத்தக்கது.

சாதாரணமாக, வரலாற்று க்ரந்தங்களிலும் வாழ்க்கைக் குறிப்பு நூல்களிலும் தர்ம சாஸ்திரத்திற்கும் வாழ்க்கை நெறிகளுக்கும் விரோதம் ஏற்படுவது வழக்கம். ஆனால் இந்நூலில், அப்படியில்லாமல், ஸ்திரி தர்மமோ, க்ருஹஸ்தாஸ்ரம தர்மங்களோ, குருசிஷ்யர் களின் நடவடிக்கைகளோ, வாதக்கதையின் நியமங் களோ, ஸம்பரதாயத்திற்கு யாதொரு விரோதமுமின்றி, தெளிவாக, இக்கால மக்களுக்கும் ஏற்றுக் கொள்ளக்கூடிய வண்ணம் இந்நூலில் அமைக்கப்பட்டுள்ளது. இது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆசிரியர் பாரதிகாவலரின் திறமைக்குச் சிகரமாக அமைந்துள்ளது.

தர்மங்களையும் ஸதாசாரத்தையும் ஸம்ப்ர தாயத்தையும் மாற்றவே முடியாது. அவை மாறும் பொருட்கள் அல்லவே. மேற்கத்திய கலாசாரத்தை மிகைப்படுத்தும் நம் புதிய தலைமுறையினரும் முன்கூறியவைகளை ஏற்றுக் கொள்ளுமாறு வரலாறு வாயிலாகவே இந்நூலில் அளித்துள்ளது அதியற்புதம்.

வால்மீகி இராமாயணமோ, மகாபாரதமோ, ஸ்ரீமத் பாகவதமோ மற்ற சிறந்த நூல்களோ பரம்பொருளின் ஸங்கல்பத்தினாலேயே உலகில் வெளிவந்தன என்பது எல்லோரும் அறிந்ததே. அவைகள் வெளிப்படுத்தப் பட்ட சூழ்நிலைகளோ, வெளிப்படுத்திய மஹான்களோ வெறும் நிமித்தமே.

அவ்வண்ணமே, ஸரஸ்வதி தேவியின் ஸங்கல்பத்தினாலேயே, தன் பெயரையே (பாரதி) பட்டமாக உள்ள, தன் சீடரால் உலகிற்கு அறியப்படட்டும் என்றும், தான் ஆட்சி புரியும் பீடத்தில் தன் அம்சமாக இருக்கும் ஜகத்குருவின் கருணை கலந்த அனுக்ரஹத்தினாலும், பாரதி காவலரால் எழுதி வெளிவர வேண்டுமென்று அவர் மனதில் தூண்டுகோலாக அமைந்தது போல் இந்நூல் காணப்படுகிறது. ஆசிரியர் ஒரு நிமித்தமே. ஆகையினால் தான் இந்நூல் இங்ஙனம் ஸர்வதோ முகமாக எல்லா வகையிலும் சிறந்ததாக அமைந்திருக்கிறது.

நூலில் கடைசியில் ஸ்ரீஆதிசங்கர பகவத்பாதர் அவர்களால் அருளிச் செய்யப்பட்டதான ஸ்ரீ சாரதா புஜங்கப்ரயாதாஷ்டக ஸ்தோத்திரமும் அதற்குச்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிறந்ததான தமிழாக்கமும் தரப்பட்டுள்ளது. ஸரஸ்வதி தேவியின் அபார கருணா கடாக்ஷம் பெற இந்த ஸ்தோத்திரம் மிகவும் உதவும். வடமொழி அறியாதவர்களுக்கு உபயோககரமான வகையில், தூய தமிழில், ஓர் அம்சத்தையும் விட்டுவிடாமலும், மாற்றாமலும் அமைந்துள்ளது பாரதி காவலரின் கவிதா சக்திக்கு ஓர் எடுத்துக்காட்டு.

இப்புத்தகத்தை அமைக்க அவருக்குத் துணைபுரிந்த நூல்களின் பட்டியல் (Bibliography) நூலின் இறுதியில் அளிக்கப்பட்டுள்ளது. அதைப் பார்க்கும்போது, ஆசிரியர் இந்நூலைத் தயார் செய்து எழுத எடுத்துக் கொண்டதான பெருமுயற்சி தெளிவாகிறது.

ஸரஸ்வதி தேவியின் திருஅவதார வரலாறாகிய ஸ்ரீசாரதாம்பாள் திவ்ய சரிதத்தை உலகிற்கு அளிப்பதற்கு ஸங்கல்பம் பூண்ட நூலாசிரியர் ராமமூர்த்தி எத்தனை மணி நேரங்கள், எத்தனை நாட்கள், அல்லது எத்தனை மாதங்கள் அல்லது வருடங்கள் அந்தச் சிந்தனையில் இருந்திருக்கக் கூடும் என்ற நினைப்பே வியப்பை யளிக்கிறது.

ஜகன்மாதாவிடத்தில் செலுத்தப்பட்டதான எண்ணங்கள், நிச்சயமாக மனிதர்களை பண்படுத்தும்; முக்தியளிக்கும். ஸகல க்ஷேமங்களையும் ஸத்ஸங் கத்தையும் குருபக்தியையும் அளித்து லோகக்ஷேமத்திற்கு வழிகாட்டும்.

இப்படிப்பட்டதான சிறந்த, அரியதொரு நூலை உலகிற்கு அமைத்துக் கொடுத்த, நூல் ஆசிரியர் பாரதிகாவலர் டாக்டர் கே. ராமமூர்த்தியும் அவர் குடும்பத்தினர்களும் பரம்பொருளின் பரிபூரண

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆசிகளுடன் எல்லாத் துறைகளிலும் உயர்வடைந்து பரிபூரண ஆரோக்யத்துடன் ஜகத்குருவினிடத்தில் அசஞ்சலபக்தி மேலோங்கி மேலும் இப்படிப்பட்டதான சிறந்த நூல்களை தமிழ்த்தாயின் பொற்பாதங்களில் ஸமர்ப்பிக்க வேண்டி, வேதோக்த ஆசிகள் பகவத்நாம ஸ்மரணங்கள், ஸத்குருபாத வந்தனங்கள்.

இப்படிக்கு

ஸத்குருபாதபத்மரேணு

கோடா வெங்கடேஸ்வர சாஸ்திரி

சென்னை.

18-10-99
சென்னை.



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சென்னை, நந்தலாலா ஆலயம், நந்தலாலா கலாசார மையம்
இவற்றின் ஸ்தாபகரும் தலைவருமாகிய
அருளரசி மதிஒளி ஸரஸ்வதி வழங்கிய

பாராட்டுரை

ஸ்ரீ சாரதாம்பாள் கலைகளின் நாயகி. வாக்தேவி. சங்கர பகவத் பாதர்களின் வேண்டுகோளுக்கிணங்க, துங்கா நதிக்கரையில், மங்காப் பொலிவு நிறை சிருங்ககிரியில் சிங்காதனமேற்றுத் தெய்வமாக வாழ்ந்து கொண்டிருக்கிறாள்.

இறைவியின் புகழ்ச் சரிதமாகிய இந்நூலுக்கு ஏற்றம் இமயத்தளவு. ஊற்றாகும் உள்ளுணர்வு உவகையின் அளவு. தேர்வு செய்ய வேண்டிய தேவையே இல்லாத இந்த திவ்ய சரித்திரத்தில் தித்திப்பே திரட்சி; ஜீவனே பயிற்சி; திறமைகளே முயற்சி.

பாரதீ - விச்வரூபர் விவாஹத்தில், நடை முறையி லுள்ள விவாஹ மந்திரங்களின் தாத்பர்யங்கள் விரிவாகச் சொல்லப் பட்டிருக்கிறது. வீணாகானம் விவாஹத்தின் போது வாசிக்கப்பட வேண்டுமென்பது குறித்துக் கொள்ள வேண்டிய தொன்று. சப்தபதி பற்றிய விளக்கம் அருமையாகவுள்ளது.

விச்வரூபர் - பாரதியின் காஷ்மீரப் பயணத்தில் தேவதாரு மரம் பற்றிய குறிப்புக்கள், காய்ந்த இலைச் சருகுகளின் மேல் ரதம் செல்லும்போது ஏற்படும் மர்மர சப்தம் போன்ற வர்ணனைகள் நன்றாக இருக்கின்றன.

ஸோம யாகம் பற்றிய விளக்கம் சுருக்கமாக விளக்கமாக உள்ளது. மண்டனரும் உபயபாரதியும் ஈடுபடுத்திக் கொள்ளும் வேதகர்மா குறிப்புக்குத் தொடர்ப் பொருத்தமும் இருக்கிறது. வாதபிக்ஷைக்குச்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சங்கரர் வந்துள்ளதாகச் சொல்வதும், ஆயிரம் நாவுடைய ஆதிசேஷனிடமே வாதிடத் தான் தயங்கவில்லை என்று மண்டனமிச்ரர் சொல்வதும் நன்கு களை கட்டும் விதம் உள்ளது.

சங்கரர் - மண்டனமிச்ரர் சம்வாதம் அருமையான அத்தியாயம். பூர்வமீமாம்ஸகமும் (மண்டனர்) அத்வைதமும் (சங்கரர்) வாதிடுவதும் அழகோ அழகு. நடையழகும், எளிமையுடன் ஆழமாகவும், அளவோடும் இருக்கிறது.

பாரதிகாவலர் ஸ்ரீஇராமமூர்த்தி அவர்களின் மலை போன்ற இந்த மகோன்னத முயற்சியில் ஆராயப் பட்டுள்ள நூல்கள், அந்த ஆய்வுகளின் ஆழம், அந்த ஆழத்தில் அகழ்ந்தெடுத்த சாரத்தின் சங்கீதலயம், பல இடங்களில் ஆனந்தப் பெருக்கமான வர்ணனைகளாகப் படர்ந்துள்ளது.

வாடாத இந்த மலர்ச்செண்டு வான் முகட்டுக்கு சூடாத மணம் தேக்கித் தேடாது தெய்வீக நிலை சேர்த்தருளத் திருவருளின் நிறைவுடனே பொலிகிறது. பாரதி காவலரைப் பார்ட்டுவதால், உபயபாரதியைப் போற்றி, உருகி, பூஜித்து விடுகிறோம். இந்த வளம் நம் மண்ணில் மட்டுமே மலரக்கூடியது. இது மேலும் மேலும் பெருக வாழ்த்துகிறோம்.

சிருங்கேரி ஜகத் குருவின் திருவருளில் தோய்ந்து, தெளிவாகவும் சிறப்பாகவும் ஆசிரியர் பாரதிகாவலர் எழுதியுள்ள ஸ்ரீ சாரதாம்பாள் திவ்ய சரிதத்தின் ஒவ்வொரு கணுவிலும் குருநாதரின் ஆசி குறைவின்றி புலப்படுகிறது. நிறைக குருவருள். விளைக நிறைபயன்.

1-10-99
சென்னை

மதிஒளி
(R. ஸரஸ்வதி)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்னுரை

ஸ்ரீ சாரதாம்பாள் திவ்ய சரிதத்தின் கையெழுத்துப் பிரதியை, சிருங்ககிரி ஸ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்யார் ஸ்ரீஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பித்ததும், அவர்கள் பணித்ததற் கிணங்க, சரிதச்சுருக்கத்தைக் கூறலானேன். ஸ்ரீ ஸன்னிதானம் கருணையுடன் திருச்செவி மடுத்து, அருள் பாலித்தார்கள்.

அந்த கையெழுத்துப் பிரதி, இரு தினங்களாக நரஸிம்மவனத்தில், ஸ்ரீஸன்னிதானம் அவர்களின் அருட்பார்வையின் ஆகர்ஷணத்தினால் புனிதம் பெற்றது. தம்முடைய திருக்கரங்களினால் கையெழுத்துப் பிரதியை எளியேனிடம் வழங்கி, ஸ்ரீ ஸன்னிதானம் அவர்கள் அருளாசி நல்கினார்கள்.

எண்டிசை போற்றும் பண்டிதராஜ குருநாதர் ஸ்ரீஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள் பொற்கரத்தில் ஸ்படிக மாலை; திருமுகத்தில் அருள் பொலிந்திட, ''ஸ்ரீ சாரதாம்பாள் திவ்ய சரிதம் நூல் வடிவு பெற்று சீருடன் திகழ்ந்து ஒளிரும்'' என்று அனுக்ரஹித்தார்கள். அம்பாளின் அவதாரமாகிய ஸ்ரீ ஆசார்யாள் தம் திருக்கரத்தில் ஸ்படிக மாலையுடன் கருணை சுரந்து, அருள் பாலித்துக் கொண்டிருந்த அந்த அரிய காட்சி, வாக்தேவி ஸரஸ்வதியாம் ஸ்ரீ சாரதாம்பாள் ஒரு கையில் ஸ்படிக மாலையை தரித்துக்கொண்டு அருள் பாலிக்கிற திவ்யமான காட்சியாகவே, என் அக நயனங்களில் பிரகாசித்துக் கொண்டிருந்தது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அந்த உள்ளொளிப் பிரகாசத்தில், நெஞ்சத்தில் குருபக்தி மீதூர ஆனந்தப் பரவசநிலை எய்தி நின்றேன். அது தருணம், ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீஸ்ரீ பாரதீ தீர்த்த மஹா ஸ்வாமிகள் அவர்கள், தம்முடைய கையிலிருந்த அந்த ஸ்படிக மாலையை, எளியேனுக்கு வழங்கி, அனுக்ரஹம் செய்து, அருளாசி நல்கிய பொன்னார்ந்த நிகழ்வு, ஸ்ரீ சாரதாம்பாளின் திருவருளும் ஸ்ரீஸ்ரீ பாரதீ தீர்த்த மஹா ஸ்வாமிகளின் குருவருளும் ஒன்றாகி இணைந்து இந்நூலுக்கு அமைந்த ஓர் அணி மகுடமாகும்.

சிருங்ககிரியில் ஸ்ரீ சாரதாம்பாள் சன்னிதியில், ''நமஸ்தே சாரதே தேவி ஸர்வலோக நிவாஸினி'' என்று தியானிக்கிற பொழுதும், ''தேவதா சாரதாம்பிகா'' என்று தோத்திரம் புரியும் பொழுதும், ''பஜே சாரதாம்பாம் அஜஸ்ரம் மதம்பாம்'' என்று துதித்துப் பிரார்த்திக்கும் பொழுதும் வானுலகிலிருந்து பூவுலகில் வந்து அவதரித்த ஸரஸ்வதி தேவி, ஸ்ரீ சாரதாம்பாளாக அருள்பாலிக்கிற வரலாறு, என் இதயத்தில் பவனி வரும்.

மஹாஸரஸ்வதியின் திருஅவதாரமான உபயபாரதியின் சரித்திரம், ஸ்ரீ சங்கர பகவத்பாதாளின் திவ்ய சரித்திரத்துடன் பிரிக்க முடியாமல் இணைந்து ஒன்றிப் போய்விட்டது. அந்த மாபெரும் பிரகாச ஒளியில் ஐக்யமாகி மறைந்த காரணத்தால் நீண்ட நெடும் காலமாக உலகிற்கு அந்த சரித்திரம் பிரகாசமாகவில்லை. ஸ்ரீ சாரதாம்பாள் திவ்ய சரித்திரம் என்னுள் சுடர் விட்டுச் சுடர்விட்டுப் பிரகாசித்துக் கொண்டே இருந்ததை நான் உணர்ந்து வந்தேன்.

ஸரஸ்வதியின் திரு அவதாரமாகிய ஸ்ரீ சாரதாம்பாள் திவ்ய சரிதம் மகோன்னதமானது. வாக்தேவியாம் ஸ்ரீ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸரஸ்வதி பாரதியாக அவதரித்த சோணா நதிக்கரை என் கண் முன்னே தெரிவதுபோல் உணர்ந்தேன். துங்கபத்திரையைக் காணும் போதெல்லாம் அந்த சோணபத்திரையின் புனிதக் காட்சிகளும் என் உள்ளத்தில் எழுந்து சிந்தனையில் பதியும்.

ஸரஸ்வதி பாரதியாக அவதரித்த அந்த சோணா நதிக்கரையில் பிறந்த பெருமையுடையவரே என் இல்லத்தரசி கங்கா ராமமூர்த்தி என்பதில் எனக்குப் பெருமிதம் உண்டு. சிறந்த சிறுகதைகள், நாவல்கள் எழுதுபவரான என் மனைவியிடம் ஒருநாள், பாரதீ உபயபாரதீ, சங்கரர்-மண்டனர் வாதம் என்று என் நெஞ்சில் பவனி வந்து கொண்டிருந்த திருக்காட்சிகளை எல்லாம் மொழிந்தேன். உபயபாரதீ ஸ்ரீ சாரதாம்பாளாக சிருங்ககிரி துங்கா நதி தீரத்தில் நித்தியவாஸினியாக அருள் பாலித்துக் கொண்டிருப்பது வரை சொல்லிக் கொண்டே வந்தேன்.

நான் மொழிந்ததை, சிரத்தையுடன் மிக கவனமாகக் கேட்ட பிறகு, என் மனைவி, ''இதை நல்ல பக்திக் கதையாக எழுதலாமே என்று தனது விருப்பத்தைத் தெரிவித்தாள். ''தேவி ஸரஸ்வதியின் சங்கர தரிசனம்'' என்ற தலைப்புடன், பக்திக் கதையாக எழுதியதைப் பலரும் பாராட்டினார்கள். மாதவிய சங்கர விஜயத்தில் மிகச் சுருக்கமாகவே சொல்லப்பட்டிருந்தவற்றை மாத்திரமே வைத்துக்கொண்டு எழுதியதால், சிறியதொரு கதையாக அமைந்தாலும், அது சுவையும் பக்தியும் கொண்டதாகத் திகழ்ந்தது.

என் இல்லத்தரசி கங்கா ராமமூர்த்தி எழுதிய அக்கதை, என் நெஞ்சுக்குள் கங்கையின் பிரவாஹமாகப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெருகிப் பாய்ந்தது. சுடர்விட்டுக் கொண்டிருந்த என் சிந்தனைகளுக்கு ஒரு தடம் கிடைத்துவிட்ட மகிழ்ச்சி ஏற்பட்டது. இருந்தாலும், ஒரு மாபெரும் சரிதம் முழுமையாக விரிவுபடச் சொல்லப்படாமலேயே இருக்கிறதே என்பதை ஏதோ ஒரு சக்தி நினைப்பூட்டிக் கொண்டே இருந்தது. மகோன்னதமான காவியமாக ஸ்ரீ சாரதாம்பாள் சரிதத்தைப் படைக்க வேண்டுமென்ற மன உந்துதல் என்னிடம் வலுப்பெற்றது.

ஆதி சங்கரரின் வரலாற்றைக் கூறும் சங்கர விஜயங்கள் பல உள்ளன. அவற்றுள்ளும் ஒருசில மாறுபாடுகள் நிலவுகின்றன. மாதவிய சங்கர விஜயத்தைப் பெரிதும் கருத்தில் கொண்டேன். சரித நாயக, நாயகியர் தலங்கள், நதிகள் பற்றிய ஆய்வில் ஈடுபட்டேன். சரிதச் சம்பவங்கள் ஒவ்வொன்றையும் தீர்க்கமாகக் கண்டறியும் வகையில் பாரத நாட்டின் பல இடங்களுக்கும் சென்றேன். வட நாட்டிற்குப் பலமுறை சென்று வந்தேன். வாரணாசி (காசி), கயா, சோணாநதிக்கரை ஸோனாப்பூர் எனப் பயணங்கள் நிகழ்ந்தன. காலடி, திருப்பணித்துரா, திருச்சூர், வைக்கம் மற்றும் பல்வேறு இடங்களில் பல தகவல்கள் கிடைத்தன.

ஆங்காங்குள்ள பண்டிதர்களின் பேருதவியால் பெரும் பயன் கிடைத்தது. பல நூலகங்களிலும் இருந்த அரிய நூல்கள் பெரிதும் உதவிகரமாக அமைந்தது. சங்கர விஜயங்களில் காணக் கிடைக்காத செய்திகள், நான் மேற்கொண்ட ஆய்வுப் பயணங்களில் சந்தித்த பண்டிதர்கள் மூலமாகவும் எண்ணற்ற அரிய நூல்களின் வாயிலாகவும் கிடைத்தன. என் உத்தியையும் பயன்படுத்திக் கொண்டு சரிதத்தை எழுதலானேன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாரதீ, உபயபாரதீ, விசுவரூபர், மண்டனர், குமாரிலபட்டர் ஆகியவர்கள் பற்றியும், நதிகள், பதிகள், சம்பவங்கள், மன்னர்கள், மாந்தர்கள், அன்றைய சமுதாய நிலவரம், மலைகள், மாநகரங்கள், பூகோள ரீதியான விஷயங்கள் எனப் பலதரப்பட்ட விஷயங்களையும் திரட்டும் முயற்சிகள் பயன் தந்தது. ஒரு வேள்வியில் ஈடுபட்டது போல நான்கைந்து ஆண்டுகளாக இம் முயற்சிகள் எல்லா வகைகளிலும் பயன் தருவதாக அமைந்தது. அவற்றை விவரித்தால் அதுவே தனி வரலாறாகி விடும்.

தேவியின் திருவருளால் சரிதத்தை எழுதியிருக் கிறேன். ஸ்ரீ சாரதாம்பாள் திவ்ய சரிதம் என்பது பக்தி மயமானது. வேத இதிகாஸ புராணம் சார்ந்தது. அத்துடன் வரலாற்றில் நிகழ்ந்த ஒரு சரித்திரச் சம்பவமாகும். ஆதலின், வேதங்கள், சுருதி ஸ்மிருதிகள் பற்றியும் கண்டறியும் பணியில் ஈடுபட்டேன். வேதங்களின் அடிப்படைகளையும், இதிகாச புராணங்களின் ஆதாரங்களைத் தேடித் திரட்டியும், சரிதம் முழுவதும் உரிய வண்ணம் இடம் பெறச் செய்திருக்கிறேன்.

சரித்திரச் சம்பவங்கள் என்பதால் வரலாற்றுச் சான்றுகளையும் கண்டு ஆய்ந்து எழுதியிருக்கிறேன். இந்த நூற்பணிக்காக ஏராளமான நூல்களைப் படித்தறிந்தும், சில இடங்களில் சுவடிகளை, செப்பேடுகளைக் கண்டு தெளிந்தும் நூலாக்கத்தை நிறைவு செய்து உள்ளேன். சரித நாயக, நாயகியர், சரிதச் சம்பவங்கள், சரிதத் தலங்கள், நதிகள், யாகங்கள், கர்மாக்கள், திருமணம், அணிகலன்கள், வீணாவாதனம், சத்யலோகம், கைலயங்கிரி, சிருங்ககிரி என

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒவ்வொன்றுக்கும் உரிய பூர்வாங்கங்கள், விஸ்தாரங்கள், உபகதைகள் இவற்றை வேத இதிகாசபுராண, வரலாற்று ரீதியில் எழுதியுள்ள சக்தியை தேவி ஸரஸ்வதி தான் எளியேனுக்கு அளித்திருக்கிறாள்.

விசுவரூபர் மண்டனர் என, பிரசித்தி பெற்றதை உரியபடி எழுதி உள்ளேன். சங்கரரை குருவாக ஏற்குமுன் மண்டனரின் நிலையையும், பின்னர் அவரது நிலையையும் கவனத்தோடு சொல்லி இருக்கிறேன். மண்டனர் சங்கரர் சம்வாதங்களின் நுண்மையான கருத்துக்கள் தத்துவரீதியிலும் தர்க்க ரீதியிலும் அமைந்துள்ள பாங்கைத் தெளிவுடன் புரிந்து கொண்டு, எளிமையாகவும், பிறருக்கு விளங்கும் வகையிலும் என் சிந்தனையைச் செலுத்தி எழுதுவதில் அதிக கவனம் செலுத்தியிருக்கிறேன். சங்கரர் உபய பாரதீ வாதத்தைச் சூழலுக்கேற்பச் சுருக்கமாகவே தந்துள்ளேன்.

சங்கரர் வானுலகு செல்ல விரும்பிய ஸரஸ்வதியை சிருங்ககிரி துங்காநதி தீரத்தில் நித்ய வாஸினியாக்கிய பகுதியைச் சுவையேற்றி, ஆதாரப்பூர்வமாக விளக்குவதில் பெரும் சிரத்தை எடுத்துக்கொண்டு, எழுதியிருக்கிறேன். தவளை, சர்ப்பம் இவற்றின் நிகழ்வினால் மட்டும் சங்கரர் அந்த இடத்தில் நின்றுவிடவில்லை. வேதங்கள் கூறும் யாகங்களில் எழும் ஒரு மந்திர சப்தம் தவளையின் குரலுடன் ஒத்ததாக இருப்பதாகச் சித்தரித்துள்ளதை பண்டிதர் உலகம் ஏற்குமென்று கருதுகிறேன்.

பக்தியும் பரவசமும் நிறைந்த ஸ்ரீ சாரதாம்பாள் திவ்ய சரிதம், இதிகாஸ புராண வரலாற்றுச் சிறப்புச் சேர்ந்திருந்தாலும் சுவை மிகுந்து காவிய ரஸங்களுடன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திகழ்ந்திடுமாறு எழுதிடச் செய்த சக்தி கலைகளின் நாயகியான ஸரஸ்வதி தேவி அருளியதே.

மாணவப் பருவம் தொட்டே எனக்கு உலகக் காவியங்களிலும், பாரதக் காவியங்களிலும் வரலாற்று நூல்களிலும் மிகுதியான ஈடுபாடுண்டு. அவற்றில் எல்லாம் ஆய்வுகள் செய்து சத்தியங்களைக் கண்டறியும் பாங்குகளை என்னுடன் பதிய வைத்தவளும் வாக்தேவி ஸரஸ்வதியே. அவ்வாறு என்னுடைய சிந்தனைகளோடு பரிச்சயப்பட்டு என்னுள் சங்கமமாகிவிட்ட அலங்காரங்கள், வர்ணனைகள், உவமைகள், சொல்லணிச் சீர்கள் ஆகிய காவியப் பாங்கும் மகாகவி பாரதியை நெஞ்சின் நாயகனாக வரித்துக் கொண்டதால் கவித்வ-உணர்வுகளும் ஸ்ரீ சாரதாம்பாள் திவ்ய சரிதத்துடன் இரண்டறக் கலந்து ஒன்றியபடி எழுதியிருக்கிறேன். உணர்ச்சிக் கனிவூட்டும் பாங்குடன், நுணுக்க நயமுடையதாக்கி, அழகுபடுத்தி கற்பனை மெருகூட்டி, சுவைப் பெருக்கோடு அமையும் நடையில் (ரிதி) எழுதியுள்ளேன்.

முந்நூறுக்கும் மேற்பட்ட பக்கங்கள் கொண்டதாக இந்நூல் ஒரு முதன்மையான, முழுமையானதாக உருவாவதற்கு, என் இல்லத்தரசி கங்கா ராமமூர்த்தி முப்பதே பக்கங்களில் எழுதிய படைப்பே தடம் அமைத்துத் தந்த ஒரு உந்துதல் ஆகும் என்பது குறிப்பிடத்தக்கது.

மாதுசிரோமணியாகத் திகழ்ந்த என் தாயார் விசாலாக்ஷி அம்மாள் செய்த தவப்பயனும், சாரதா பீடத்தின் நான்கு ஜகத்குருமார்களை தரிசனம் செய்து, குரு பக்தி நெஞ்சத்துடன் ஜீவிய வந்தராக இருந்து இன்றும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எனக்கு ஆசி வழங்கிக் கொண்டிருக்கும் என் தகப்பனார் ஸ்ரீ கே.எஸ். குளத்து அய்யர் அவர்கள் செய்த தவப்பயனுமே இந்நூல் சிறப்பு பெறக் காரணமாகும்.

இந்நூல் ஆக்கப் பணிக்கு உதவிய பெருமக்கள் பலராவர். கையெழுத்துப் பிரதியைப் படித்து திருத்தங்கள் செய்து செம்மைப்படுத்தி அழகூட்டியவர், என் மனைவியின் சகோதரியும், பக்தி, யோகம் இவற்றில் ஈடுபாடுடையவருமான திருமதி லக்ஷ்மி கிருஷ்ண மூர்த்தி. அவர்களுக்கு முதலில் நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். என் இனிய நண்பரும், ஸ்ரீ சாரதா பீடத்தின் சீடருமாகிய 'சேவா சக்ரா' திரு. கே. நாராயணஸ்வாமி அவர்கள் கையெழுத்துப் பிரதியைப் படித்து, என் முயற்சியைப் பாராட்டி ஊக்கம் அளித்ததற்கு என் நன்றி உரித்தாகும்.

என் மகள் திருமதி பானு ஆனந்த் பல மொழிகளில் தேர்ச்சி உடையவள். ஸம்ஸ்கிருத நூல்கள் பலவற்றின் நயங்களை நான் அறிந்து கொள்ள அவளுடைய பேருதவி குறிப்பிடத்தக்கதாகும்.

எங்கள் சம்பந்தி திருமதி சுபா ராமன் அவர்கள் பல முனைப்பட்ட விஷயங்களை நன்கறிந்து தெளிந்தவர். அத்தகையவர், இந்நூலின் கையெழுத்துப் பிரதியை மிகுந்த ஆர்வத்துடன் படித்து, நூல் சரிதமாகவும் விஷயச் செறிவு நிறைந்ததாகவும் இருப்பதாகத் தெரிவித்த கருத்து, எனக்கு உற்சாகமளித்தது. அவருக்கும் என் நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னை ஸம்ஸ்கிருத கல்லூரி குப்புசாமி சாஸ்திரி ரிசர்ச் இன்ஸ்டிட்யூட்டைச் சார்ந்த, ஆழ்ந்த புலமையும் அடக்கமும் நிறைந்த இனிய சகோதரி டாக்டர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வி.காமேஸ்வரி அவர்கள் பல அரிய நூல்களை வழங்கியும் சீரிய ஆலோசனைகள் தந்தும் உதவியதற்கு என்றும் என் நன்றி உரித்தாகும். நூலுக்குப் பாராட்டுரை நல்கி வாழ்த்தியுள்ள, நந்தலாலா கலாசார மைய ஸ்தாபகர் - தலைவர் திருமதி. மதிஒளி ஸரஸ்வதி அவர்களுக்கு என் பணிவார்ந்த நன்றி.

வேத சாஸ்திர விற்பன்னர் டாக்டர். ஸ்ரீ கோடா. வெங்கடேஸ்வர சாஸ்திரி அவர்கள் வழங்கியுள்ள அணிந்துரையினால் இந்த நூல் வலிவும் பொலிவும் பெற்றுத் திகழ்கிறது. சரிதம் முழுவதையும் கருத்தூன்றி கவனத்துடன் படித்து 'டாக்டர்' பட்டத்துக்கு உரிய ஆய்வு விஷயத்தைப் பரிசீலனை செய்வது போல் மிகத் தேர்ந்த வண்ணம், நுண்மான் நுழைபுலத்துடன் பொருத்தமான வகையில் அணிந்துரை வழங்கிச் சிறப்பித்துள்ள பாண்டித்ய சாகரம் ஸ்ரீ கோடா வெங்கடேஸ்வர சாஸ்திரி அவர்களுக்கு பெரிதும் நன்றி கூற நான் கடமைப் பட்டுள்ளேன்.

ஸ்ரீ சாரதா பீடத்தின் நிர்வாகி, குருஸேவாதுரீனா ஸ்ரீ வி.ஆர். கௌரி சங்கர் அவர்களின் அன்பும் ஆதரவும் பெற்று இந்த நூல், நன்முறையில் அமையப் பெற்றதற்கு அவருக்கு என் நன்றி.

நூலின் இருபுறத்து மேலட்டையையும் தெய்வக்களி துலங்கும் ஓவியமாக வரைந்து தந்துள்ள ஓவியர் பத்மவாஸன் அவர்களை நன்றியுடன் நினைத்துக் கொள்கிறேன்.

நூல் தயாரிப்பிலும் வடிவமைப்பிலும் எனக்குப் பெரிதும் துணை புரிந்த அன்புக்குரிய திரு. ராமநாதன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(கங்கை புத்தக நிலையம்) அவர்களின் மெய்யான ஈடுபாட்டிற்கு என் நன்றி.

வாக்தேவதையான ஸரஸ்வதியின் திரு அவதாரமான ஸ்ரீ சாரதாம்பாளின் திவ்ய சரிதத்தை, அவளுடைய அருளினால், வாக்தேவியின் கருணா கடாக்ஷத்தால் எழுதியுள்ளேன். இந்நூலின் நிறைகள் யாவும் ஸ்ரீ சாரதாம்பாளின் திருவருள். குறைகள் இருந்தால் அவை என்பாற்பட்டவை.

ஸ்ரீ சாரதாம்பாளின் பாத கமலங்களில் நமஸ்கரித்து இத்தகைய நூல் எழுதும் திருப்பணியில் என்னை ஆட்படுத்திய பேற்றினை எண்ணி, அம்பாள் சன்னிதியில் இந்நூலை சமர்ப்பிக்கிறேன். ஸ்ரீ சாரதா பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்களின் அருட்பார்வையினாலும் அவர்தம் பொற்கரங்களின் ஸ்பரிசத்தினாலுமே பொலிவுடன் உருவாகிய ''ஸ்ரீ சாரதாம்பாள் திவ்ய சரிதம்'' ஆகிய இந்த நூலை, ஸ்ரீ ஸன்னிதானம் அவர்களின் பொற்பாதங்களில் வினயமுடன் நமஸ்கரித்து காணிக்கையாக்குகிறேன்.

பக்தர்கள் அனைவரும் இந்நூலை வரவேற்று ஆதரிக்க வேண்டுகிறேன்.

24.12.1999
அபிராமபுரம்
சென்னை 600018

பாரதிகாவலர் கே. ராமமூர்த்தி



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ சாரதாம்பாள் திவ்ய சரிதம்

விஷய அட்டவணை

(பொருளடக்கம்)

அத்தியாயம்: 1 :: 37-46

சத்தியலோகத்தில்

ஆயிரம் தூண்கள் தாங்கும் மணிமண்டபம் — ஈரேழு பதினான்கு லோகங்கள் — அரியணையில் ஸரஸ்வதி தேவியுடன் ஸர்வ ஸப்தார்த்த பிரம்மதேவர் — தேவி சபையில் வேதகானம் — துர்வாஸமுனிவரின் கானம் — ஸ்வர பேதம் — ஸரஸ்வதி தேவி நகைப்பு — முனிவரின் கோபமும், ஸரஸ்வதி பூவுலகில் பிறக்குமாறு சாபமும் — சாப விமோசனம் அருள்தல் — அவதார ஜனன உதயம் — சந்தோஷ ஆரவாரம் — இயற்கை எழிலின் கோலக்களிப்பு.

அத்தியாயம்: 2 :: 47-56

கைலயங்கிரியில்

வானார் கைலயங்கிரி — ரிஷப வாகனத்தில் பார்வதி, பரமேஸ்வரர் தரிசனம் — ஏழு கோடி மந்திர

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சித்திர மண்டபம் — சிவபெருமானின் சீலம் பொலியும் திருக்கோலம் — ஈச்வரத்வப்ரகடனம் — சிவாம்ச தரிசனக்காட்சி — மானஸரோவரின் ரம்மியம் — போற்றி போற்றி முழக்க ஒலி — குஹனின் பூவுலக அவதாரத்திற்கு சிவபெருமானின் ஆக்ஞை — குஹன் பணிந்தேற்றல் — தெய்வங்கள், தெய்வ அம்சங்கள் தேவர்கள் மண்ணுலகில் அவதரிக்கத் திருவுள்ளம் கொள்ளல் — பாரத வர்ஷத்தில் புனித அவதாரங்கள்.

அத்தியாயம்: 3 :: 57-67

குமாரிலபட்டர்

அர்க்க க்ஷேத்திரம் — அரசவம்சங்கள் — கஜஸேது — நிலமாதவர் திருத்தலம் — பௌத்த கேந்திரங்கள் — உத்கல தேசத்தின் மஹாநதி — ஜெய மங்கள கிராமம் — குஹன் குமாரிலராக அவதாரம் — பட்டராகப் பெருமை அடைதல் — இந்திரன் சுதன்வா மன்னன் — மன்னனின் புத்தமத ஈடுபாடு — வேதம் சிறக்க வந்த குமாரில பட்டர் — குமாரிலருக்குச் சோதனை — மலை உச்சியிலிருந்து வீழ்தல் — பானையுள் ஆதிசேஷனும் மகாவிஷ்ணுவும் — வேதமார்க்க ஸ்தாபிதம் — மன்னர் வேத மார்க்கம் தழுவுதல் — கர்ம சாகைக்குப் புத்துயிர்.

அத்தியாயம்: 4 :: 68-79

விசுவரூபரின் ஜனனம்

காம்போஜம் என்னும் காஷ்மீரம் — பிதாஸ்தா என்கிற ஜீலம் நதி - பிருகத்ரதனின் மகதம் — மகதத்தில் மாஹிஷ்மதி, தர்மமூலா நதி — காஷ்மீர மன்னர்கள் —

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தொன்மையும் சிறப்புக்களும் — வேத பண்டிதர்களுக்கு மதிப்பு — ஹிமமித்திரர் குடும்பத்தில் பிரம்மதேவர் விசுவரூபராக அவதார ஜனனம் — விசுவரூபரின் இளமைக் காலம் — விசுவரூபரின் பாண்டித்யம்.

அத்தியாயம்: 5 :: 80-97

பூர்ணா நதிக்கரையில்

பூர்ணா நதிப்பொலிவு — காலடி என்னும் கிராமம் — ஆசாரசீலர் வித்யாதிராஜர் — கைப்பள்ளி இல்லம் சிவகுரு — மேல் பள்ளூர் ஆர்யாம்பாள் — சிவகுரு ஆர்யா இல்லறம் — வடக்குநாதர் கோயிலின் வரலாறும் அமைப்பும் — பிள்ளைப் பேறு பெற சிவகுரு ஆர்யா தவம் — விருஷபாசலர் வரம் அருளல் — சிவபெருமான் சங்கரராக அவதரித்தல் — சங்கரரின் உபநயனம் — பொன்மழை பொழிந்தது — முதலை, கால் பற்றியது — நதி திசை திரும்பியது — அம்பா நதி — குருவைத் தேடி சங்கரரின் சஞ்சாரம்.

அத்தியாயம்: 6 :: 98-105

காஷ்மீரத்திலும் மாஹிஷ்மதியிலும்

விசுவரூபரின் வேத ஈடுபாடு — தர்ம சாஸ்திரங்களில் தன்னிகரில்லாத் தன்மை பெறல் — வேதம் சாகைகள், வித்யாஸ்தானங்கள் — காஷ்மீரத்திலும் மாஹிஷ்மதியிலும் விசுவரூபரின் செல்வாக்கும் செல்வச் செழிப்பும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அத்தியாயம்: 7 :: 106-118

சோணா நதிக்கரையில்

தேவ கங்கையின் ஜீவ பவனி — குசமன்னர்களின் வம்சம் — கிரிவிரஜ ராஜ்யம் — சோணா நதி தீரத்தில் கௌசிக முனியுடன் ராமலக்ஷ்மணர் — கிருஷ்ண பகவான் பாதம் பட்ட நதி — யசோவர்மனும் சோணாநதியும் — கங்கா, யமுனா, சோணா - சோணா நதி புருஷஸ்வரூபம் — பத்ரசோணா சோணபத்ரா — சோணா நதியின் புனிதம், அமைதி, ஆரவாரம், பிரவாஹம் — சோணம் விநாயகர் — தேவி ஸரஸ்வதி திரு அவதாரத்தை முன்னிட்டு சோணா நதியின் மனோரம்யம்.

அத்தியாயம்: 8 :: 119-136

சோணாபுரியில் பாரதீ

சுந்தரமான சோணாபுரி — ஸோன்பூர் — ஸரஸ்வதி பாரதியாக அவதார ஜனனம் — மாந்தர் மனமகிழ்வு — விஷ்ணுமித்ரர் மாளிகையில் வேத மழலை — பாடலிபுத்ரத்தின் பெருமை — நாளந்தாவைத் தந்த நல்நகரம் - விஷ்ணுமித்ரர் பெருமிதம் — சிந்தூர வண்ணச் சோணாநதி — நதி தீரத்தில் நங்கையருடன் பாரதீ — பாரதீ வளர்ந்தாள் — பாரதீ மனத்தில் விசுவரூபரை வரித்தல் — விசுவரூபர் பாரதியை மானசீகமாக விரும்புதல் — பெற்றோர்களின் மகிழ்வும் இசைவும் — தூதுவர்கள் மூலம் செய்தியின் பயணம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அத்தியாயம்: 9 :: 137-145

விவாஹப் பொருத்தங்கள்

எட்டு வகை விவாஹங்கள் — மணச் சேதியுடன் தூதுவர்கள் வருகை — வரனின் குண விசேஷங்கள் — சாமுத்ரிகா லக்ஷணங்கள் — அகவையும் அறிவும் — வம்சமும் வளமும் — பெற்றோரும் உற்றாரும் — பொருத்தங்கள் கூடிப் பூரணமாக அமைதல் - விவாஹ நாள் குறித்தல் — ஹிமமித்ரருக்குச் செய்தி அனுப்புதல் — வரன் குடும்பத்தினர் விஜயம் — விவாஹ நிச்சயதார்த்தம் — விருந்துபசாரம்.

அத்தியாயம்: 10 :: 146-170

பாரதீ விசுவரூபர் விவாஹம்

வானம் வெளுத்தது — விவாஹநாள் மலர்ந்தது —வியன்கலை எழிலுடன் விவாஹ மண்டபம் — அணிதிகழ் அதிசய மண்டபத்தின் சுடரொளி — வேதியும் நாதமும் — மணமக்கள் கரம் பற்றுதல் — ஹோம குண்டம் — அக்னிஜ்வாலை — மந்திரப் பேரொலி — மங்களச் சின்னம் — அம்மி மிதித்து அருந்ததி பார்த்தல் — ஸப்தரிஷி மண்டலம் — லாஜஹோமம் — பொன் அணி மின்னிடும் பாரதீ — பன்மணி பூண்ட விசுவரூபர் — கீதவாதித்ரமும் வீணா கானமும் — மணக்கோல நங்கையும் நம்பியும் திருக்காட்சி — ஸப்தபதி எனும் ஏழடி மந்திர உச்சாரணம் — நூறு சரத்ருதுக்கள் — அன்பளிப்புப் படலத்தின் அற்புதம் — மணப் பெண்ணுக்குப் பெற்றோரின் அறிவுரை — விவாஹ வைபவச் சீர்மை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அத்தியாயம்: 11 :: 171-183

பதியுடன் பயணம்

மணமக்களும் வரன் வீட்டாரும் காஷ்மீரம் செல்லல் — பரஸ்பர மரியாதை, உபசார நிகழ்வுகள் — பல்வண்ண காஷ்மீர சால்வைகள் — ரத ஓட்டம் — குதிரைகளின் பல்வித நடை — மலை வனப்புக்கள் — தேவதாருவின் வரலாறு — நமேரு, பூர்ஜ, அக்ஷோட விருக்ஷங்கள் — துள்ளி ஓடும் புள்ளிமான்கள் — கலாப மயிலும் கமல மலரும் — பொற்குடத்தில் நதி நீருடன் பயணம்.

அத்தியாயம்: 12 :: 184-195

காஷ்மீர வாஸம்

பாரதீ கரங்களில் கீதை வாசகச் சுவடி — மனத்தேரில் புதிய பவனி — கடமைகள், கர்மங்கள், ஸமபாவம் — பாதச்சிலம்போசையில் ஏழு ஸ்வரங்கள் — ஆலத்தி கானம் — காஷ்மீர மாளிகையில் பாரதீ — நயமிகு சம்பாஷணைகள் — காஷ்மீர வனப்பில் வெண்மை, சிவப்பு வண்ணச் சிந்தனைகள்.

அத்தியாயம்: 13 :: 196-207

சங்கரரின் திக்விஜயம்

தமால விருக்ஷப் பிரதேசம் நர்மதை நதி தீரம் — குகையினுள் கோவிந்த பகவத் பாதர் — குரு தரிசனம் — வெள்ளத்தை அடக்கிய கமண்டலு — காசியில் சங்கரர் —

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸனந்தனர் சீடராதல் — மனீஷா பஞ்சக உதயம் — அன்னபூரணி துதி பிறந்தது — பத்ரி விஜயம் — வியாசபகவான் அருளாசி — சங்கரர் ஆயுள் அதிகரிப்பு — பிரயாகையில் குமாரில பட்டர் — பன்னிரு வகை மீமாம்ஸை — பட்டர் வழி மீமாம்ஸையும் மிஸ்ரவழி மீமாம்ஸையும் — விசுவரூபர் மண்டனர் என்னும் சிறப்புப் பெயர் பெற்றுத் திகழ்தல் — துஷாக்னியில் குமாரிலரைச் சங்கரர் கண்டு உரையாடுதல் — சங்கரரின் ஞானக் கோலத்துடன் நதிகளின் திருக்கோலமும் அருட்கோலமும் தவக்கோலமும்.

அத்தியாயம்: 14 :: 208-223

கிருஹஸ்தாச்ரமத்தில் மண்டனர் - உபயபாரதீ

மாஹிஷ்மதி மண்டனர் மாளிகை — ஐந்துவகை தர்மங்கள் — கல்ப சூத்ரங்கள் — பல்வகை ஸ்மிருதிகள் — அனுஷ்டுப் சந்தஸ் — கிருஹஸ்தாச்ரமத்தின் மகத்துவம் — மனுவின் ச்லோகம் — பாரதீ உபயபாரதியாக மிளிர்ந்தொளிர்தல் — பர்வத வாசிகள் பண்டிதராதல் — பாரதீ வீணாவாதனம் — வேதம் கூறும் வீணைகள்— பரதேவதை தர்பாரில் தேவி ஸரஸ்வதியின் வீணாகான நினைவு — மதுரம், மதுரம்.

அத்தியாயம்: 15 :: 224-243

மாஹிஷ்மதி மண்டனர் மாளிகையில்

யஜுர் வேதத்தில் ஸரஸ்வதியின் நாமமென்னும் சித்த சாகரத்தில் சொற்கப்பல் — ஸப்த தீபங்கள் — ஜம்பூத்விப வரலாறு — பாரத வர்ஷமென்னும் பாரத

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தேசம் - கர்ம பூமி பாரதம் — பூரணமான ஸோமயாகம் - வாஜபேயம் — விஸ்வஜித்யாகம் — யாகங்களில் வீணாகானம் — கர்மமும் சிரத்தையும் மிகுந்த இல்லற வாழ்வு — சீலமும் தேஜஸும் மல்கும் வேத வாழ்வு — உபயபாரதியின் அன்பும் அருளும் — கிருஹமே ஒரு சர்வ கலாசாலை — தக்ஷசீலம், காசி, நாளந்தா, வல்லபி, மிதிலை, விக்ரம் ஷீலா, காஞ்சி - கல்விக் கேந்திரங்களின் சங்கமமே மாஹிஷ்மதி மாளிகை.

அத்தியாயம்: 16 :: 244-258

வாதபிக்ஷைக்கு வந்த சங்கரர்

மண்டனர் மாளிகையின் மகோன்னதம் — அரவணைக்கும் அன்பு வரவேற்பு — புலமையின் மோதல்களும் வாதங்களின் வசீகரமும் — உலகுக்கு வழிகாட்டும் சங்கரர், வழி கேட்டல் — வழி கூறும் பெண்களின் சமத்காரப் புலமை — கிளிகளின் வேத விசார உச்சாரணம் — கிளிகளின் பல நாமம் — மாளிகைக்குள் சங்கரர் வருகை — வாதபிக்ஷை நாடி வந்தது — வியாசர் ஜைமினி முறுவல் — வாதத்திற்கு இசைதல் — மத்யஸ்த பீடத்திற்கு உபயபாரதீ.

அத்தியாயம்: 17 :: 259-275

மண்டனர் - சங்கரர் சம்வாதம்

பொழுது புலர்ந்தது, பரிதி எழுந்தது — பண்டிதர் திருச்சபை வாதப் பேரவையின் பொலிவு — மத்யஸ்தர் ஆஸனத்தில் உபயபாரதீ — வாத நிபந்தனைகள் —

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சம்வாதத் தொடக்கமும் நடப்பும் — பரமாத்ம ஜீவாத்ம விளக்கம் — மகாவாக்ய விசேஷார்த்தம் — வேதத்தின் கர்ம காண்டம் — உபாஸனா மார்க்கம் உச்சமான தர்க்கம் — சைதன்யம், ஸர்வஜ்ஞத்வம், ஸர்வாத்மத்வம் — சேதனம் அசேதனம் — பிரதக்ஷ்யம், அனுமானம், பிரமாணம் — ஞானம், பிரபஞ்ச காரியம் — சூடும் நெருப்பும் — சம்வாதம் நிறைவில் புஷ்பஹாரம் வாடல் — சங்கரர் வெற்றி பெறல் — சிவ தரிசனம் பெற்று உபய பாரதீ சாப விமோசனம் — உபயபாரதீ சத்யலோகம் செல்ல விருப்பம் — சங்கரர் ஸரஸ்வதியாம் உபயபாரதியை பூவுலகில் நித்யவாஸம் புரிய வேண்டுதல் — உபயபாரதீ சங்கரரைத் தன்னுடன் வாதிட அழைத்தல்.

அத்தியாயம்: 18 :: 276-284

உபயபாரதியின் வாதம்

ஸ்திரிகளுடன் வாதம் புரியலாமா — சங்கரரின் தயக்கமும் உபயபாரதீ விளக்கமும் — உபயபாரதீ, சங்கரர் வாதம் — நவமான வினாவும் சங்கரரின் அவகாச விழைவும் — சங்கரரின் ஜெயக் கொடியில் உவகை — உபயபாரதியை (ஸரஸ்வதியை) சங்கரர், சிருங்ககிரியில் நித்யவாஸினியாக, பிரத்யக்ஷ தெய்வமாக அருள் பாலிக்கப் பிரார்த்தித்தல் — தேவி ஸரஸ்வதியாம் உபய பாரதீ, சங்கரருடன் சிருங்ககிரி தொடர்ந்துவர அருளிசைவு — மண்டனர் சுரேஸ்வரர் என தீக்ஷாநாமம் - சீடராதல்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அத்தியாயம்: 19 :: 285-303

சிருங்ககிரியில் ஸ்ரீ சாரதாம்பாள்

சங்கரர் திக் விஜயம் தொடர்தல் — மூகாம்பிகைத் தலம் வருகை — ஹஸ்தாமலகர் சீடராதல் — பத்மபாதர், சுரேஸ்வரர், ஹஸ்தாமலகருடன் சிருங்கிரி வந்தடைதல் — ஸரஸ்வதி மகாமந்திரம் உபதேசிக்கப்பட்ட திருத்தலங்கள் — விபாண்டகர், ரிஷ்ய சிருங்கர் தவபூமி — நந்தினி நதி பாயும் கீழ்க்கா பிரதேசம் — துங்காநதி ப்ரவாஹம் — சிருங்கிரி எழிற்சிலிர்ப்பு — ககன மார்க்கத்தில் வந்த ஸரஸ்வதி நதி தீரம் வருகை — தவளை சூல்வலிக்கு ஸர்ப்பம் நிழற் கொடை — துங்கா நதிக்கரை மணற்பரப்பும் தேவி ஸரஸ்வதியின் பொற் சலங்கையொலியும் — சங்கரரின் பரவச நிலை — திரும்பிய சங்கரர் பார்வையும் தேவி ஸரஸ்வதி நின்ற அருள் காட்சியும் — சங்கரர் திருவுள்ளப் பாங்கின்படி ஸரஸ்வதி சாரதையாக துங்கா நதி தீரத்தில் நித்ய வாஸம் — சங்கரரின் சாரதா ஆலய நிர்மாணம் — தோடகர் வருகை — குருபரம்பரை — நான்கு மார்க்கங்கள் - பாரதியே சாரதை — சிருங்கிரியில் சாரதா பீடஸ்தாபிதம் — ஸ்படிகலிங்கம், ரத்னகர்ப்ப கணபதியை சங்கரர் வழங்கி அருள் புரிதல்.

அத்தியாயம்: 20 :: 304-313

குருஸ்வரூபிணி ஸ்ரீ சாரதாம்பாள்

தக்ஷிணாமூர்த்தி ஸ்வரூபமாக ஸ்ரீ சாரதை — சதுர்புஜ நாயகி — சுத்தவித்யா ப்ரதாயகம் — ஸ்ரீ சக்கரத்தில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அம்பாள் — சக்தியாத்மகம் — பிரகாச விமர்ச, பரப்ரும்மஸ்வரூபிணி — ஸ்ரீ வித்யை எனும் சாஸ்திரம் — ஸர்வ வேதாந்தப் பிரக்காசினி, பிரம்ம வித்யா ஸ்ரீ சாரதா — துங்கா நதி தீரவாஸினி ஸ்ரீ சாரதாம்பாள் — சங்கரர் சாரதையைத் துதித்தல் — நானாவித வீணாநாதம் — வேத கீதமும், தேவகான வியாபகமும் — ஸ்ரீசாரதாம்பாள் சிருங்ககிரியையும் ஜகம் முழுவதையும் ரக்ஷித்து அருள் பாலித்துக் கொண்டிருத்தல் — ஸ்ரீ சாரதா தெய்வம் ஜகத் ரக்ஷகம் — ஸர்வ மங்களப் பொழிவு.

அத்தியாயம்: 21 :: 314-319

ஸ்ரீ சாரதா புஜங்க ப்ரயாதாஷ்டகம்

ஸ்ரீ சங்கர பகவத்பாதர் அருளிய, எட்டுப் பகுதிகள் கொண்ட தோத்திரமும், அதன் தமிழாக்கமும்.

★ ★ ★

- துணை நூல் பட்டியல் (Bibliography) :: *320*
- நூலாசிரியர்களின் முன்னோர்கள் :: *326*
- நூலாசிரியரைப் பற்றி :: *330*



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

1

சத்திய லோகத்தில்

சத்திய லோகம். சூரிய ஒளியில் பொன்போல மின்னுகின்ற ஒன்பது மதில்களிலும் எண்பது துவாரங்கள் இருக்கின்றன. பல கோடி யோசனை விஸ்தீர்ணமுள்ளதாக சத்திய லோகம் திகழ்கின்றது.

கத்தி, கேடயம், தனுசு ஏந்திய துவார பாலகர்கள், மதில் துவாரங்களில் சூழ்ந்து நிற்கின்றார்கள். பிரம்மாண்டமான சுவர்களில் சித்திரங்களும் தீபங்களும் மிளிர்கின்றன.

எங்கு நோக்கினும் தாவள்யமான ஒளி வீசும் முத்துத் தோரணங்கள்; நிருத்தியம் செய்கின்ற அப்சரஸ்கள்; பற்பல வாத்யங்களிலிருந்து இன்னிசை அமுதமெனப் பாய்கிறது.

மிருதுவாகவும், மத்யமாகவும் உக்ரமாக்வும் உள்ள சப்தங்களால், சத்திய லோகம் நிறைந்து, காட்சியளிக் கின்றது.

எங்கும் நிராசரர்கள் உலாவுகின்றார்கள்.

கோடிக்கணக்கான ரதங்கள், யானைகள், குதிரைகள் ஆகியவற்றால் ரமணீயமாகத் தோற்றமளிக் கின்றது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வண்ணமயமான ரத்தினங்களும் தாதுக்களும் நிரம்பப் பெற்று விளங்குகிற சத்திய லோகம், சகுந்த பக்ஷிகள் நிறைந்தது; மணம் வீசும் மலர்களால் சூழப்பட்டது. புண்ணிய தீர்த்தங்களை உடையதான பிரம்மவனத்திலே மந்தமாருதம் தவழ்கின்றது; தேவகானம் இடையறாது ஒலிக்கின்றது.

எழில் நிறைந்த சத்திய லோகத்திலே நடு நாயகமாக ஒரு மாளிகை. அந்த மாளிகையிலே ஒரு மணி மண்டபம். மண்டபத்தை ஆயிரம் தூண்கள் தாங்குகின்றன. அழகாக அலங்கரிக்கப்பட்டு கல்ப விருக்ஷங்களோடு கூடிய அவ்விடத்திலே ஸிம்ஹ முகத்தோடு கூடிய ஆறு கால்களுள்ள அரியணை உள்ளது.

எல்லா லோகங்களையும் விட மிக உன்னதமான லோகம் சத்திய லோகம்.

ஸ்வர்க, மர்திய, பாதாள என்று மூன்று லோகங்கள் பொதுவாகச் சொல்லப்படும்.

அதலலோகம், விதல லோகம், சுதல லோகம், ரசாதல லோகம், தலாதல லோகம், மஹாதல லோகம், பாதாள லோகம் என்றும் கூறப்பட்டுள்ளது.

கௌஷீதகீ ப்ரஹ்ம உபநிஷத்தில் பிரம்மலோகம், பிரஜாபதி லோகம், இந்திரலோகம், ஆதித்ய லோகம், வருணலோகம், வாயு லோகம், அக்னிலோகம் ஆகிய இந்த ஏழு லோகங்களும் உரைக்கப்படுகிறது.

''மண் தின்றாயா கண்ணா? வாயைத் திறந்து காட்டு'' என்று யசோதை கூறியதும், கண்ணன் வாயைத் திறந்து காட்டினான்,.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யசோதை, கண்ணனிடம் நெருங்கி வந்து, கண்ணனின் வாயைப் பார்த்தாள்.

அவ்வளவுதான்! அந்தத் தாய் பிரம்மித்து விட்டாள்; கண்ணனின் திருவாய்க்குள் லோகங்களைக் கண்ணாரக் கண்டாள்.

''விண் கண்டாள்; விண் வளைக்கும் வெங்கதிரும் தண் சுடரும், விளங்கக் கண்டாள்; மண் கண்டாள், மண் வளைத்த மாக்கடலும் பேருயிர் மால் வரையும் கண்டாள்; தண்கொண்ட வெண்டோட்டு நெடுவரை கண்டாள்; தன்னையும் கண்டாள்; பண் கொண்ட வண்டரற்றும் பசுந்துளவோன் இவனென பரவினாளால்'' என்ற பக்திப் பாசுரம், பல உலகங்களைக் கண்முன் நிறுத்துகிறது.

''மண்ணும் மலையும் கடலும் உலகேழும் உண்ணும் திறத்து மகிழ்ந்துண்ணும் பிள்ளைக்கு'' என்ற பாட்டு வரிகளும் உலகங்கள் ஏழையும் காட்டுபவை யாகும்.

பூர்லோகம், புவலோகம், ஸுவர்லோகம், மஹர் லோகம், ஜனலோகம், தபோ லோகம், சத்திய லோகம் என்கிற பிரம்ம லோகம் ஆகிய ஏழு லோகங்களையும் உயர்ந்தவைகளாகக் கருதுவார்கள்.

சத்திய லோகத்தில் எக்காலத்திலும் ஜீவிதமாக இருக்கக் கூடிய முக்தர்கள் வாசம் புரிந்துகொண்டிருக் கிறார்கள்.

சாசுவதமான பேரொளிப் பிரகாசத்தில் சத்திய லோகம் ஒளிமயமாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது. அந்த ஒளிமயமான, ஆகர்ஷணம் பொருந்திய பிரகாசம், பிரமிப்பூட்டுவதாக இருக்கிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தங்க ரேகைகளின் கீற்றுக்களாக எங்கும் காணப்படு கிறது. மின்னிக் கொண்டே இருக்கும் அந்த ஸ்வர்ண ரேகைகள் ஒன்றுடன் ஒன்று உறவாடிக் கொண்டிருப்பது போல் காற்றலைகளுடன் இழையோடும் கோலம், வசீகரத்தை எங்கும் வழங்கிக் கொண்டிருக்கிறது.

சப்தப் பிரபஞ்சத்தின் ஆதி தேவி, ஸ்வேதவர்ண நாயகியாம் ஸரஸ்வதியின் சத்தியலோகம் வேத, நாத ஒலிகளுடன் நிறைந்திருக்கிறது.

சத்திய லோகத்தில் பிரம்ம தேவரின் ஸபை திவ்யமாகக் காட்சி தந்து கொண்டிருக்கிறது. காந்தமென வசீகரிக்கும் அரியணை, பேரெழில் பொலியக் காட்சி தருகிறது.

ரத்ன கசிதமான அரியணையிலே ஸரஸ்வதி தேவியுடன் ஸர்வ ஸப்தார்த்தமானவரான பிரம்மதேவர் வீற்றிருக்க...

கிரீடம் ஜொலிக்க, ரத்ன குண்டலங்கள் தரித்து மணிமாலையணிந்து, பிரசன்ன முகத்தோடு பிரம்ம தேவர் அமர்ந்திருக்கிறார். கடகங்களும் மோதிரங்களும் வாகுவலயங்களும் அவருக்கு அணி செய்கின்றன.

பட்டு உத்தரீயமும் வெண்ணிற யக்ஞோபவீதமும் தரித்து, அத்தர் பன்னீர் போன்ற வாஸனாதித் திரவியங் களைப் பூசிக் கொண்டு, மணமிகு மலர்மாலையுடன், வெள்ளை வஸ்திரமணிந்து செம்பொன் மேனியராய் அமர்ந்திருக்க, தவயோகியரும் முனிவர்களும், தேவர்களும் அஸுரர்களும் அவரெதிரே பணிந்து நிற்கின்றார்கள்,

சபா மண்டபம் நிறைந்து விளங்குகின்றது. தேவ சபையிலே யோகியரும் ஞானியரும் ரிஷி புங்கவர்களும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நான்கு வேதங்களையும் நயமொடு ஓதத் துவங்குகிறார்கள். வீணையின் இனிய நாதமாக, வேதம் இழையோடுகிறது.

ரிக், யஜுர் வேதங்களை ஓதி முடித்த பின் சாமவேதத்தை ஓதத் துவங்கினார்கள். இனிய நாதமென இழைந்து வந்தது, சாமகானம். அத்தனை ரிஷி முனிவர்களும் ஒரே குரலில் வேதத்தை ஒலித்தபோது சுஸ்வரத்திற்கிடையில் வேறு ஸ்வரத்தில் ஸ்வரபேதத்துடன் ஒரு குரல் ஒலித்தது.

பேதமுற்ற குரலின் தன்மையால், ஸரஸ்வதி தேவி தன்னிலை மறந்து, நகைத்து விட்டாள். வினோதமான ஒலி, அவளுக்கு வேடிக்கையாக இருந்திருக்க வேண்டும்!

வினோத ஓசையுடன் கானமிசைத்தவர், சினத்திற்குப் பெயர் பெற்றவரான துர்வாஸ மாமுனிவர். சாபம் அளிப்பதால் தவ வலிமை கூடும் வரம் பெற்றவர். சாக்ஷாத் ருத்ரனின் அம்சமாக அனஸூயா தேவியின் திருவயிற்றில் உதித்தவரல்லவா? நெற்றிக் கண் இல்லாமலே, கோபக் கனலால் எரிப்பவர்; எரிதழலாக நோக்கினார்.

சபையிலே, தன்னைக் கண்டு ஸரஸ்வதி நகைத்ததைச் செவியுற்று, கட்டுக்கடங்காத கோபத்துடன் துர்வாஸர் எழுந்து நின்றார்.

ஸ்ருதிபேதமாகப் பாடியது துர்வாஸரே என்றறிந்ததும் ஸரஸ்வதியின் வெண்மேனி நடுங்கியது. கண்கள் கலங்கின.

''சசாபதாம்
துர்விநயே S வணீதலே
ஜயஸ்வ மர்த்யேஷு''

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கோபத்தின் மேலீட்டால் துர்வாஸ முனிவர், ''மனுஷியாகப் பிறப்பாய்'' என்று சாபமிட்டார்.

துர்வாஸரின் சாபத்தைக் கேட்டதும் ஸரஸ்வதி மனம் பதறினாள். அரியணையினின்று இறங்கி அவரை நோக்கி விரைந்து வந்தாள்.

''துர்வாஸரே என் செயலை மன்னித்து, தங்கள் சாபத்தை நீக்கிக் கொள்ளுங்கள்'' என்று அவருடைய காலடியில் நின்று கண்ணீர் மல்க வேண்டினாள்.

துர்வாஸரின் சீற்றம் சற்று தணிந்து விட்டது. ஆயினும், நிகழ்ந்ததை மாற்ற, தம்மாலேயே இயலாது என்பதை உணர்ந்தவர் தானே அவர்.

அவர் என்ன மறுமொழி கூறப் போகிறார் என்பதை சபா மண்டபத்திலே வீற்றிருந்த அனைவரும் ஆவலோடு எதிர்பார்த்து இருந்தார்கள்.

''தேவி, நடந்தது நடந்தது தான்; மாற்ற முடியாது; என் செய்வேன்?''

''சாபம் கொடுத்தவர் நீங்கள்; இதற்கொரு விமோசனமும் தாங்கள்தான் கூற வேண்டும்'' என்று ஸரஸ்வதி துர்வாஸரிடம் இறைஞ்சினாள்.

''ஆம். சாபத்திற்கு விமோசனம் உண்டு, தேவி, நீ பூவுலகில் சோணா நதிக்கரையிலே நற்குடியிலே பிறப்பாய். பிறந்து செல்வமும் கல்வியும் செழிக்க வளர்வாய். ஒருநாள் சந்யாசி ஒருவரைச் சந்திப்பாய். சாக்ஷாத் பரமசிவனே பூவுலகில் மானிடராய் சங்கரரெனும் பெயரோடு அவதரித்து சந்யாசியாவார். அந்த சங்கரரின் தரிசனம் கிடைக்கும்போது, உன்னுடைய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சாபமும் விமோசனமடையும். மீண்டும் ஸரஸ்வதியாக சத்திய லோகத்தை அடைவாய்.''

மகரிஷியின் கருணை மொழிகள், கலைமகளை மகிழ்வடையச் செய்தன.

துர்வாஸர் ஸரஸ்வதிக்குச் சாபமிட்ட வேளை, விண்ணுலக மூர்த்திகளும் தேவர்களும் மண்ணுலகில் அவதரித்து மண்ணைப் புனிதப்படுத்தும் மகத்துவம் நிறைந்த காலமாக அமைந்தது.

ஆம், அந்த மகத்துவமான காலம், மண்ணில் புண்ணியம் பொலிந்து புனிதம் பூத்த பொற்காலமாகும்.

தேவர்கள் யாவரும் துதித்து மூன்று உலகங்களையும் துன்பங்களினின்று நீக்கி, அகிலேச்வரியாக அருள் பாலிக்குமாறு வேண்டிய அம்பிகையான மஹா ஸரஸ்வதி, ஸத்வகுணவதி.

வித்தைகளுக்கு நாயகியான வாக்தேவி ஸரஸ்வதி, பிரம்ம சக்தியாகத் திகழ்ந்து ஒளிர்பவள். அக்கமாலை, அங்குசம், வீணை, புஸ்தகம் இவற்றைத் தாங்கிய சதுர்புஜ நாயகியாய், மஹா வித்யா, மஹாவாணி, பாரதீ, வாக்ஸரஸ்வதி, ஆர்யா ப்ராம்ஹீ, காமதேனு, பீஜகர்பாசதீச்வரி என நாமம் பல படைத்தவளாகிப் பிரகாசத்துடன் சத்திய லோகத்தில் காட்சி தந்து கொண்டிருக்கும் ஸரஸ்வதி பூவுலகில் ஜனனிக்கும் காலம் தான் அந்தப் பொற்காலம்.

அதை முன்னிட்டு, படைக்கின்ற பிரம்மனும், பள்ளி கொண்ட மாலவனும் மலைவாழும் மகேசனும் தாங்கள் துதிக்கின்ற சீர் கொண்டவளான ஸரஸ்வதி தேவி மண்ணில் பிறக்கிறாள், என்றதுமே அவர்களும் இந்தப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பூவுலகில் அவதாரம் எடுத்து புண்ணியம் பெறும் வண்ணம் பூவுலகை மேம்படுத்த, திருவுளம் கொண்டார்கள்.

வெள்ளிதழ்ப் பூங்கமலாசனத் தேவி அவள்.

ஆம்;

வேதங்கள் நான்கும் உபவேதங்கள் நான்கும் அங்கங்கள் ஆறுடன் நான்கு உபாங்கங்கள் என பதினெட்டு வித்யாஸ்தான நாயகி ஸரஸ்வதி சத்தியலோகம் விட்டு மானுடம் வாழும் மண்ணுலகு வந்து பெண்ணாகப் பிறக்கலானாள்.

ஹம்ஸம் பூட்டிய விமானத்தில் ஒளிரும் தேவ தேவி, அந்த ஸரஸ்வதி வானகத்திலிருந்து பூவுலகம் வந்து அவதரிக்கக் கூடிய புண்ணிய காலம் அது.

சப்தப் பிரபஞ்சத்தின் அடிநாதமாக, ஆதாரமாக, பிரம்ம தேவரின் சக்தியாய், வாக்பீஜமாய் விளங்கும் வாக்வாகினியாம் மஹாஸரஸ்வதியின் ரூபாந்தரமே ஸரஸ்வதி. ஐம்பத்தோரு அக்ஷரஸ்ரூபிணி, சத்திய லோகம் விட்டு வருகிற காரணத்தை உத்தேசித்து, மும்மூர்த்திகளும், தேவர்களும் மண்ணில் வந்து பிறந்து, ஸரஸ்வதியின் அன்பு வளையத்திற்குள் பிணைந்திருக்கவும் தேஜஸ் என்கிற ஞான ஒளிப் பிரகாசச் சுடரை ஒளிரச் செய்யும் வண்ணமுமாக, தங்களை அவ்வழியிலேயே ஆட்படுத்திக் கொள்ளலானார்கள்.

பூவுலகில் வந்து பிறக்கும் ஸரஸ்வதி தேவியுடன் அவளது அவதார ஜனன காரணத்திற்கு உதவும் வகையில் சகல தேவர்களும் தேவதைகளும் மனம் ஒன்றி லயித்து இருந்தார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மகத்தான அவதார ஜனனங்கள் தோன்றிய வண்ணம் இருந்தன.

சமுத்திர அலைகள் முன்னிலும் பன்மடங்காக ஓங்கி உயர்ந்து ஆர்ப்பரித்தன; அந்த அலைகளின் ஆர்ப்பரிப்பு வானைத் தொட்டு மீண்டன; மண்ணுலகு நாடி வருகின்ற வானுலக தெய்வங்களுக்கு, அவர்களது புதிய ஜனனங்களுக்கு, வரவேற்புக் கூறுவது போல் இருந்தது. அலைகள், பொங்கி எழுந்து வானை முத்தமிட்டு, வேத கோஷம் போல் சப்தித்து கரையைத் தொட்டுத் தழுவின.

எல்லா நதிகளிலும் இரு கரைகளையும் தொட்டுத் தழுவியபடி நீர் பாய்ந்தோடிக் கொண்டிருந்தது. நதிகளின் நீரோட்டம் கான இசை போன்று ஸ்வரங்களின் ஒசைகளை உற்பத்தி செய்தவாறு, வன்னடையும் இல்லாமல் மென்னடையும் கொள்ளாமல் நன்னடை பயின்று கொண்டிருந்தன.

மலை முகடுகளினின்று பெருங்காற்று வீசிற்று. வெறும் காற்றாக ஆவேசமாக வீசாமல் நறுங்காற்றாக, தென்றலாக, மந்த மாருதமாக வீசிற்று. இதமான தன்மையுடன், வீசிய மலைக்காற்று மனங்களை மகிழச் செய்தது.

அங்கிங்கெனாதபடி எங்கும் மங்களகரமான சின்னங்களும் ஒலிகளும் மணங்களும் நிறைந்திருந்தன.

பாரதத்தின் பண்டையப் பெருமைகளின் ஆகர்ஷண வீச்சுக்களின் பழம் சுவடுகளைப் பற்றியவாறு புத்தம் புதிய அடிச்சுவடுகள் ஒன்றியபடி பொற்காலம் உதயமாயிற்று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எங்கும் பொன்முலாம் பூசிற்று.

தேவி ஸரஸ்வதி பாரத வர்ஷத்தில் பெண்ணாக ஜனனமாகும் அவதார வைபவத்திற்கு முன்பாகவே மும் மூர்த்திகளும் தேவர்களும் பாரதத்தில் அவதரித்து மகத்துவங்களை ஏற்படுத்தும் திவ்ய நிகழ்வுகளுக்கான முன்னோட்டமான திருச்செயல்கள் வானுலகில் தொடங்கின.



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

2

கைலயங்கிரியில்

வானார் கைலயங்கிரியில் சர்வாலங்கார பூஷிதராக ரிஷப வாகனத்தில் பார்வதி-பரமேச்வரரின் திவ்ய தரிசனம் கண் கொள்ளாக் காட்சியாக இருக்கிறது. மாதேவன், மாமணிகண்டன், மூலமாகிய மூவர்க்கும் மூத்தவன், வளர்சடைமேல் மாதங்கிக் கங்கை நீர் மன்னுவித்த மகேஸ்வரன் தேவியுடன் திருக்காட்சி தந்து அருள் நலம் பாலித்துக் கொண்டிருக்கிறார்.

விண்ணிறங்கா ஓங்கும் வியன் கைலை அது; தக்கோர் ஏத்தும் திருக்கைலைக் கோன், உய்யநெறி காட்டுவித்து. ஓங்காரத்து உட்பொருளாய் அருள் சுரந்த வண்ணமிருக்க,

திருக்கைலயங்கிரியில் மந்திரச் சித்திர மண்டபம் வண்ணப் பொலிவுடன் காட்சி தந்தது. ஏழு கோடி மந்திரங்கள் அடங்கியது, அந்த மந்திரச்சித்திர மண்டபம். ஏழு கோடி மந்திரங்களுக்கு நடுவில் சமஷ்டிப் பிரணவம், வியஷ்டிப் பிரணவம் எனும் இரு பிரணவங்கள் ஒலி செய்த வண்ணமிருக்கின்றன.

சிவபெருமானின் திருமுடிப் பிறைச் சந்திரன், கிரீடத்தின் நடுவில் எழிலொளி வீசும் மணிபோல

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒளிர்ந்தது. நெற்றிக்கண் திலகமென ஒளிப் பிரகாசத்துடன் திகழ்ந்தது.

அல்லும் பகலும் அருள்கின்ற வல்ல பெரும் சிவ பெருமானை, தாயின் நல்லன், சேயினும் நல்லன், கடந்து நின்றான், எங்கும் கண்டும் நின்றான், அம்பலத்தும் அண்டத்தும் அப்பாலுமாய் நின்றிடுவான், ஆதியும், அந்தமும் இல்லாது அன்பினில் ஒளிர்ந்திடுவான், அந்தப் பரமேச்வரனை, ''கண்டார் வணங்கும் கைலாயத்து எம் பெருமானே'' என்றும் போற்றும் ஒலி பரவியது.

சோதியும் நீதியும் நித்தமுமாகக் காட்சி தந்து கொண்டிருக்கும் நிமலனாம் சிவபெருமானின் குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும் காண்பாரை ஈர்ப்பதாகக் காட்சி தந்தது.

கைலயங்கிரியில் தேவியோடு பரமசிவன் காட்சி தரும் போதுதான், உலகத்தின் ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம், திரோதானம், அனுக்ரஹம் என்பதான ஐந்து விதமான, தம்மிடத்துள்ள 'ஈச்வரத்வம்' என்கிற தன்மையை உலகிற்குப் பிரகடனம் செய்கிறார்.

அத்தகைய 'ஜகத்காரணத்வ'மான காட்சி தந்து கொண்டிருக்கிறார் சிவபெருமான்.

அம்பாள் அருகிலே, இருந்துகொண்டு, காலைக் கதிரவனின் வண்ணத்தோடு காட்சி தருகிறாள். அம்பாளின் வண்ணத்தால் செம்பஞ்சுக் குழம்பு சாகரமாக கைலயங்கிரியே காட்சிப்படுவது போல் தோன்றுகிறது.

அம்பாளின் திருவதனம் கண்ணாடி போன்று திகழ்வதால் கைலயங்கிரி, காட்சிகளின் பிம்பங்களாக கவினுடன் காட்சி தந்து கொண்டிருக்கிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிருங்காரம், பீபத்ஸம், அத்புதம், பயானகம், வீரம், ஹாஸ்யம், கருணை ஆகிய ரஸங்களைப் பொழிந்த வண்ணம் கௌரி நாயகர் கைலாஸ வாணர் அருகிலிருக்க, கைலயங்கிரி புது வண்ணப் பொலிவுடன் ஒளிர்ந்து கொண்டிருந்தது.

கைலாய வாணர், கௌரி நாயகரின் கோதகன்ற தோற்றத்தில் கைலயங்கிரி மின்னிக் கொண்டிருந்தது.

சடையில் கங்கையைத் தரித்த சங்கரன், அந்தச் சிவபெருமான் சடைமுடி ஞானியர்களுக்கு அடையாளமாகத் திகழ்வது.

பனித்த சடை, செஞ்சடை, முடிச்சடை, பரந்த சடை, உடையோன் இறைவன். 'நுண்சிகை ஞானமாம்' என்றாற் போல் ஞானமூட்டும் ஞான சொரூபியாக, அந்த நீள் சடையான் முற்றுமுணர்ந்த பெருஞானியாய், திருவதனம் பொலிய திகழ்ந்தொளிர்ந்தான்.

கங்கை சடைக்கண் சிக்கி விளங்குகின்றாள். பெரும் பிரவாஹமெடுத்துப் பாய்ந்தோடும் அந்த கங்கையையும் ஒரு சடை முடியில் கட்டி அடக்கவல்ல, அளப்பரிய ஆற்றலுடையவராக, அந்த கங்கை புனையீசன், கண்கள் அருட்கதிர் வீச, காட்சி தந்து கொண்டிருந்தார்.

சிவபெருமானின் பாதம் ஆடும் பாதம்; அருட்பாதம், குஞ்சித பாதம், தூக்கிய திருவடி, தன்னிழல் தந்து காத்தருளும் பாதம்; திருவடிகளுள்ளும் திரோதனத் திருவடி. 'நான், எனது' எனும் பற்று இரண்டினையும் போக்கும் தூக்கிய திருவடி; பற்றற்றவன் திருவடிகளைப் பற்றிடும் உயிர்கட்குப் பேரின்பம் பயக்கும் பாதங்கள், சிவபிரானின் செம்பொற்பாதங்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''வரமாவது எல்லாம் வடகைலை மன்னும் பரமா, உன் பாதார விந்தம் சிரமாரப் போற்றி என்றும்'' வேத ஒலி போன்று எழுந்த இன்னொலி எங்கணும் எதிரொலித்தது.

பவள மேனியனாம் அந்தப் பால் வெண்ணிறத்தான் சந்ததமும் திருவெண்ணீற்றுத் திருமேனியன். தூயதன்மை பெறுகிற பெருமை படைத்த திருநீறு வெண்மைத் தன்மை மாறாத தனிப் பொருளாய், அநாதி நித்தியப் பொருளாய், சிவபெருமான் திருமேனியில் துலங்கிட., சீருடைக் காட்சி செம்மையாக இருந்தது.

சிவபிரானின் திருமார்பினில் குறுக்காகி உந்தி வரையும் தொங்குகிற முப்புரிநூல். பூணும் நூல்; ஆதலால், இது பூணூல். மூலாதாரத்தில் தொடங்கி, நாபிக் கமலத்திற்கு மேலாக வந்து எழுகின்ற குண்டலினியைக் குறிப்பால் காட்டுவதே இது. வேத முடியாம் பிரணவ காயத்ரியின் அறிகுறியாக, சொரூபமாக 'நூலது வேதாந்தம்' என்ற திருமந்திர முழக்க ஒலி விண்ணில் படர, சிவ பெருமான் திருவருள் பாலித்துக் கொண்டிருந்த காட்சி கருணா மயமாக இருந்தது.

கைலயங்கிரி என்கிறபோது மாந்தாதா மலை கண் முன்னே வந்து நிற்கும். இங்கே ஐநூறுக்கு மேலான தேவரிஷிகள் சதா தவம் புரிந்துகொண்டிருக்கிறார்கள். நாவல்மரம், கம்பீரமாகத் திகழ்கிறது. தாமரை, மலர்த் தடாகத்தில் மலர்ந்து காட்சி தருகின்றன.

இங்கிருந்து கைலாஸபர்வதத்தைக் காணலாம். பருவ கால நிலைகளுக்குக்கேற்ப மலைச் சிகரங்கள் ஒளிந்து விளையாடுகின்றன. மாந்தாதாச் சக்கரவர்த்தி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கண்டறிந்த மான ஸரோவர், பிரம்மதேவரின் முதல் சிருஷ்டி என்று மொழிவதுண்டு.

பிரம்மாவின் மனஸிலிருந்து, உருவானதால் மானஸரோவர் இது. நூறு ஜன்மங்களின் பாபநாசனம் செய்யும் புனிதஹரி மானஸரோவர்.

வடபுறம் கைலாஸபர்வதமும், தெற்கில் குர்லா மாந்தாதா மலையும் உடைய மானஸரோவர் நீர் பரப்பு மரகதமணி பரப்பியது போல் காட்சிப்படுகிறது. 'அவநதப்த' என்று உஷ்ணமும் சஞ்சலமும் இல்லாததைச் சொல்லி மானஸரோவருக்குப் பெருமை சூட்டுவதுண்டு.

ராஜஹம்ஸங்கள் குஞ்சுவும் குழுவுமாய் நீந்தி நீந்திச் செல்லும் போதே தேவ கீதங்கள் இசைக்கும் ஒலி, தண்மையான நீரிலிருந்து இனிமையுடன் ஒலிக்க, மானஸரோவரின் காட்சியே தனிரம்மியம். பொன்முடிப்பனி இமயத்தின் சிகரம் தாண்டி, மேலே செல்லுகையில், கைலயங்கிரியின் காட்சி, வெள்ளியும் பொன்னுமாக மின்னிக் கொண்டிருக்கிறது.

கைலயங்கிரியில் சிவபெருமான் பொன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் மேனி பொலிந்திட மின் வண்ணம் கொண்ட ஈசனாகக் காட்சி தந்த வண்ணமிருக்க,

கண் என்னும் ஒளிப் பொருளும் பொருள் உணர்ச்சியால் பார்க்கிற அறிவுணர்ச்சியும், உணர்ச்சியூட்டும் புறச் சோதிகள் சூரியன், சந்திரன், தீச்சுடர் (சூர்ய, சோம, அக்னி) ஆகிய முச்சுடர் முக்கண்ணன். ஞான, இச்சா, கிரியா முச்சக்தியாய் காட்சி தந்து கொண்டிருக்கும் சிவபெருமான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''எவ்வுருவில் யாரொருவர் உள்குவார் உள்ளத்துள்
அவ்வுருவாய்த் தோன்றி அருள் கொடுக்கும் ஈசன்''

ஆவான்.

'கலைமலிந்த கற்பகம் ஈன்ற கமழ் பட்டினை யுடுத்துப் பொற் கழல்கள் கால் மேற்பொலிவித்து, விற்பகரும் சூளாமணி சேர் முடிகவித்துச் சுட்டிசேர் வாளார் நுதற்பட்டம் மன்னுவித்து, தோளதனில் மணி மகர குண்டலங்கள் காதுக்கணிந்து, ஆங்கு கணிவயிரக் கண்டிகை, பொன்னாண், ஆரம் அவை பூண்டு' அணிதிகழ் சிவனாரின் கோலம், சீலம் மிகுந்த காட்சியாக இருந்தது.

பன்னிரு ஆதித்தர் மங்கல வாழ்த்து இசைக்க, வருணன் மணிக்கலசம் தாங்க, எங்கணும் வாயுநலம் விளைய, மாமழை நீர் தெளிக்க, சோமனாம் சந்திரன் குடைபிடிக்க, உருத்திரர்கள் தோத்திரம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

குபேரன் திருத்தகு மாநிதியஞ் சிந்த, கங்கை, யமுனை மற்றுள்ள தீர்த்தங்கள் பொங்கி கவரி புடை இரட்ட, இவ்வாறே நிகழ்வுகள் நிகழ்ந்த வண்ண மிருக்கிறது.

தும்புரு, நாரதர் பாடிக் கொண்டிருக்கிறார்கள்.

வீரத்திருவுருவாய் முருகனாம் ஸ்கந்தன் முன்னிருக்க, இந்திராதி தேவர்கள் உடனிருக்க, வேழமுகத்து விநாயகனும் உள்ளிருக்க, வீணை, குழல், யாழ், தடாரி, படாகம், மத்தளம், துந்துபி ஆகியவற்றின் ஒலி எத்திசையும் எழுந்திட;

மங்கலம் பாடுவார் வந்திறைஞ்சிடவும் மல்லரும் கிங்கரரும் எங்கும் கிலுகிலுப்ப, காலங்கள் மூன்றும் கணமும் குணங்களும் வந்து நிற்க-

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''ஈசனே எந்தாய் இறை போற்றி!
இமையோர் பெருமானே போற்றி!''

''எழில் சேர் உமையாள் மணவாளா போற்றி!
தூயசீர் சங்கரனே போற்றி! சடா மகுடத்தாய் போற்றி!
பொங்கரவா பொன்னங்கழல் போற்றி!''

ஆங்கொரு நாள் ஆய விழுப்போர்தனில் அருச்சுனனுக்கு பாசுபதம் தந்த பதம் போற்றி!

கைலயங்கிரி எங்கும் 'சிவனே போற்றி!', 'அமரர் குழாம் சூழ அமர்ந்திருக்கும் எம்பெருமானே போற்றி!' என்ற பேரொலி நாற்றிசையும் பரவி, பூமாரி பெய்த வண்ணமாகக் காட்சியளித்துக் கொண்டிருந்தது.

ரிஷிகளும் முனிவர்களும் வேதகோஷம் எழுப்பு கின்றார்கள்.

அந்தத் தருணத்தில்...

சிவபெருமானின் சுடர் விழிகள் திருக்குமாரன் ஸ்கந்தனின் பக்கம் திரும்பின. அந்தப் பார்வையில் பல அவதாரங்கள் நிகழப் போவதற்கான சுபசூசகங்கள் தெரியலாயின.

தேவி ஸரஸ்வதியின் பூவுலக ஜனனத்தை முன்னிட்டு, வானுலகிலிருந்து பூவுலகில் அவதரிக்கத் திருவுளம் கொண்ட சிவபெருமானுடன், தெய்வங்களும் தேவர்களும் அவர் வழி பற்றி, பூவுலகில் தோன்றிட விழைந்தார்கள்.

அவர்களது விருப்பத்திற்கு சிவபெருமான் அனுக்ரஹம் செய்தார். சிவபெருமானின் பார்வை ஸ்கந்தனின் புறம் திரும்பியதும், ஸ்கந்தன் தந்தையின் திருவார்த்தைகளைச் செவிமடுக்க, தயாராகி அருகில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நெருங்கி, நமஸ்கரித்தவாறு, நின்ற காட்சி மெய்ச் சிலிர்ப்பாக இருந்தது.

செம்பொற் செழும் சோதி, கைலாசகிரிவாசனின் பேரொளி, பிரகாசமாக ஜொலித்தது.

வானோர் வணங்கும் தானைத் தலைவன், அரும்பெறல் மரபில் பெரும் பெயருடை முருகனாம் ஸ்கந்தன், அருகிலிருக்க, சிவபெருமானின் நயனங்களி லிருந்து வீசிய ஒளிக்கதிர்கள், ஸ்கந்தனின் திருமுகத்திலே படர்ந்தன. சூரியனின் ஒளிக்கிரணங்களால் செந்தாமரை மலர்வது போன்று தந்தையின் விழிக் கிரணங்களால் தனயனின் முகம் மலர்ந்து விகசித்தது.

சடைமுடியில் பிறைசூடிய பெருமான், ஸ்கந்தனை நோக்கி, ''குமாரா, உலகை ரக்ஷிப்பதற்காக, நாம் கூறுவதைக் கேட்பாயாக!'' என மொழிந்தார்.

''வேதத்தின் சாகைகளான கர்ம, பக்தி, ஞான வழிகளை நிலைப்படுத்தி, அதன் தெய்வீகத் தன்மையை ஸ்திரப்படுத்தி, அவற்றை காப்பாற்ற வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இச் செயலைச் செய்வதன் மூலம் உலகைக் காக்க முடியும். பக்தி, ஞானம் என்ற இரண்டு மார்க்கங்களையும் காப்பாற்ற மகாவிஷ்ணுவும் ஆதிசேஷனும், சங்கர்ஷண முனிவராகவும், பதஞ்சலி முனிவராகவும் பிறவி எடுத்திருக்கிறார்கள். ஜைமினி முனிவரால் வகுக்கப்பெற்ற கர்ம மார்க்கத்தை வலியுறுத்தும் மீமாம்சையை உலகுக்கு உணர்த்தி, வேதத்துக்கு புத்துயிர் அளிக்க, குமாரா, நீயும் அவதாரம் செய்ய வேண்டும்'' என்று திருவாய் மலர்ந்தருளினார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தந்தையின் அன்புக் கட்டளையை ஆஞ்ஞை யாகவே ஏற்று அவ்வண்ணமே நிறைவேற்றுவதாக குஹன் கூறியருளினார்.

குஹன் குமாரிலராக அவதரிக்கத் திருவுள்ளம் கொண்டார். அவ்வண்ணமே குஹப் பெருமான், வேதத்திற்குப் புத்துயிரும் புதுப் பொலிவும் மிளிரச் செய்வதற்கு பூவுலகில் வந்து அவதரித்தார்.

கைலயங்கிரியில் சிவபெருமான் திருமுன்னர் பூவுலக ஜனனத்திற்காக அனைவரும் தங்களை சித்தப் படுத்திக் கொண்டார்கள்.

பிரம்மதேவர், விசுவரூபர் என்னும் திருநாமத் துடன் பூவுலகில் பிறக்க திருவுளம் கொண்டு, அவ்வாறே அவதாரம் புரிந்தார்.

சிவபெருமான் காலடி என்னும் புனித ஸ்தலத்தில் சங்கரராக திருஅவதாரம் புரிந்தார். திருப்பாற்கடலில் பள்ளி கொண்ட பெருமாள் மகாவிஷ்ணு கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கிய விமலன் என்பவருக்கு திருமகனாகப் பிறந்தார். சனாதனன் என்ற நாமத்துடன் வளர்ந்தார். பிற்காலத்தில் சிறந்த சீடராக விளங்கி, சங்கர குருமணியின் மொழியாலே 'பத்மபாதர்' என்று போற்றப்படலானார்.

வாயுதேவனின் அம்சமாக, பெரும் பண்டிதராகிய பிரபாகரருக்கு புத்திரனாகப் பிறந்தவர் ஆனந்தகிரி. பிறந்து சில ஆண்டுகள் பேசாமல் இருந்து பின் பேசத்துவங்கியதும் ஸ்லோகங்களாகவே பொழிந்து இவர் ''ஹஸ்தாமலகர்'' என்று புகழ் பெறலானார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அக்னிதேவனின் அம்சமாக சிலாதரின் திருமகனாக உதித்தவர் உதங்கர். இளம் வயதில் உதங்கர் என்று அழைக்கப் பெற்ற இவர் பின்னாளில் ''தோடகர்'' என்ற பெயரில் பிரசித்தியாகி அறிவுக்கனலாக ஜோதியாக வாதம் புரிந்து ஒளிர்ந்தார்.

அனைத்து தெய்வங்களும், தெய்வாம்சங்களும் தேவதேவர்களும் மூவரும், வானுலகோர் அனைவரும் பூவுலகில் வந்து அவதரித்தார்கள். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகப் புனிதம் நிறைந்த பாரத வர்ஷத்தில் மேலும் மகத்துவத்தை ஏற்படுத்தும் வகையில், இந்த அவதாரங்கள் நிகழ்ந்தன.



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

3

குமாரில பட்டர்

ஆயிரமாயிரம் ஆண்டுகளாக அர்க்க க்ஷேத்திர மாகத் திகழ்கிற பூவுலகப் புனித ஸ்தலத்தில் குஹனின் அவதாரம் நிகழ்ந்தது. வைவஸ்வத மனு உருவாக்கிய க்ஷேத்திரம் என்று அதனைக் கூறுவார்கள். முனிபுங்கவர்களின் தபோவனமாக இருந்த பிரதேசம் அது.

கிருஷ்ண பரமாத்மாவின் புத்திரன் சாம்பன் நலம் பெற்று வாழ சூர்ய ஸ்துதி புரிந்த இடம் இது என்று சாம்ப புராணம் செப்பும்.

அக்னியின் உருவாகப் பிறந்த குஹப் பெருமானின் மண்ணுலக அவதாரம், பொருத்தமாக இந்த ஸ்தலப் பகுதியில் நிகழ்ந்தது.

ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இப்பிரதே சத்தை அரசாண்ட மன்னர்கள் பிரசித்தி பெற்றவர்கள்.

ஹஸ்தினாபுர பரம்பரையைத் தொடர்ந்து கோசலவம்சம் மகத வம்சம், பிரத்யோத வம்சம், சிசுநாக வம்சம், நந்த வம்சம், மௌரியர், சுங்க, கன்வ என்று ஆட்சி புரிந்த பரம்பரைகளின் வரிசையில் சாதகர்ணி என்ற பெயருடையவர்கள் ஆட்சி புரிந்திருக்கிறார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்கந்த சாதகர்ணி, முருகேந்திர சாதகர்ணி, சுந்தர சாதகர்ணி, சிவசாதகர்ணி, சிவஸ்கந்த சாதகர்ணி என்ற திருநாமங்களுடன் பல மன்னர்கள் இப் பிரதேசத்தை ஆண்டிருக்கிறார்கள்.

இப்பிரதேசத்திற்கு இன்னுமொரு சிறப்புண்டு. திலீபனின் புத்திரன் ரகு வீர தீரப் பராக்கிரமம் படைத்த தலைவன். 'தர்மவிஜயி' என்றே போற்றப்பட்ட மன்னன். கபிசை என்ற நதியைக் கடந்து உத்கல நாட்டிற்கு வந்ததும், ரகுவை, அந்நாட்டரசர்கள் பணிந்து வரவேற்று உபசரித்த பிரதேசம் இது. யானைகளை வரிசையாக நிறுத்தி பாலமாக 'கஜசேது' அமைத்து , நதியைக் கடந்த விசித்திரம் நிகழ்ந்த இடம் இது.

ஏழாயிரம் இந்துக் கோயில்களை உள்ளடக்கிய பகுதியாகத் திகழ்ந்த இப்பிரதேசம், வேத காலக் கீர்த்தியுடன் புராண காலச் சிறப்பும் உடைய பல சாம்ராஜ்யங்களைக் கண்டிருக்கிறது.

விஷ்ணு பக்தனாக விளங்கிய அரசன் இந்திரத்யும்னன் உருவாக்கிய தெய்வீகமான பிரதேசம் இது என்பதாக புராண கால வரலாறு சொல்லும். அரசன் இந்திரத்யும்னனும் அரசி குந்திசா தேவியும் கொண்டிருந்த பக்தியும், அதனால் தேவலோகச் சிற்பி விஸ்வகர்மா உருவாக்கிய ஆலய விக்ரஹங்கள் இப்பிரதேசத்திற்கு மகத்துவத்தை உண்டாக்கிய சிறப்புண்டு.

கொப்பூழ் போன்ற உச்சி அமைவுடைய பூஜைக்குரிய பண்டைய சின்னம் நவிபத்மாவில் பிரதிஷ்டை செய்து, அரசனும் பிரஜைகளும் வழிபட்ட புனிதத்தலம் இது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'நிலமாதவர்' என்றும் 'புருஷோத்தமர்' என்றும் பிரசித்தமாக அக்காலத்தில் (இக்காலத்தில் புரிஜகந்நாதர்) வழங்கப்பட்ட தெய்வத்திருத்தலத்தில், குஹனின் அவதாரம் நிகழ்கிறது.

புத்தமதச் சின்னங்களும் பௌத்தர்களின் பெருக்கமும் நிலவிய பகுதியாகவும் விளங்கிய இப்பிரதேசத்தில் உள்ள தண்டபுரி (இப்போதைய புரி) பிரதானமானதொரு புத்தமத இடமாகும்.

புத்தகயா, கபிலவாஸ்து, சாரநாத், ராஜக்ருஹம், வைசாலி, கௌசாம்பி, நாலந்தா, சன்கிசா, பாடலி புத்திரம், கன்யாகுப்ஜம் (கன்னோசி) குஸிநாகா (புத்தர் பரி நிர்வாணமடைந்த இடம்) ஸாஞ்சி (ஸ்தூபி உள்ள இடம்) ஆகிய இடங்கள் புத்தமத நிறுவனங்களும் ஆலயங்களும் திகழ்ந்த பிரதேசமாகும்.

'புத்த', 'தர்ம' (உண்மை) 'சங்க' (சகோதரத்வம்) ஆகிய மூவகையிலும் சங்கம் என்கிற இயக்கம் வலுப்பெற்றும் ஹீனயானம், மஹாயானம் என்று பௌத்தம், பின்னாளில் இருவகைப்பட்டும் நிலவியது.

அசோகச் சக்கரவர்த்தியின் ராஜ நிகழ்வுகளும் கலிங்கக் காட்சிகளும் மனநெகிழ்வுகளும் காலத்தால் அழியாதவைகளாகும். புத்தமத சம்பந்தமான எண்ணற்ற சம்பவங்கள் பதிந்துறைந்த பிரதேசம் இது.

கோதகன்ற எழில் குமரனாம், குஹன் சுந்தரவதனன்; அழகு மிளிரும் வீரத் திருஉருவம் கொண்ட வெற்றி வேலன்; அந்த வெற்றி வேலனாம் குஹனின் அவதாரப் பிரதேசம் பழம் பெருமைகளுடன் எழில் மயமான நதிக்கரைப் பிரதேசமுமாகவும் அமைந்தது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இங்கு பிந்துஸாகர் ஏரிக் கரையழகு பிரமிப்பூட்டுவ தாகும். ஏரியின் நீர் வெண்முத்துப் போன்ற சிற்றலைகளை எழுப்பிக் கொண்டிருக்கும்.

கங்கை, பிரம்மபுத்ரா, சிந்து, மகாநதி ஆகிய பெருநதிகளில் உத்கல தேசத்து நதி என்றே மகாநதி அழைக்கப்படும்.

மிக எளிமையாக சிற்றாறு போல் புறப்பட்டு, படிப்படியாக உருவிலும் வேகத்திலும் வளர்ந்து மிகுதியாகி மலைத் தொடர்களினூடே செல்லும் மகாநதி பல்லோருக்கும் அதிகம் தெரியாமலே இருக்கும். தெற்கு முகமாக மகாநதி திரும்பி, சோணாபுரி என்ற இடத்தை நோக்கிச் செல்கிறது.

காடுகளையும் பள்ளத்தாக்குகளையும் கடந்து சென்று, மகாநதி உத்கல பிரதேசத்தின் தென்கோடியில் பாய்ந்தோடும் போது மிக உக்கிரமாக காட்சியளிக்கும்.

பாரத நதிகளிலேயே அதிக அளவு நீர் பாய்ந்தோடும் நதி இது. குமுறிப்பாயும்; கொந்தளிப்புடனும் கோபாவேசத்துடனும் வீறுடன் பாய்ந்தோடும் மகாநதிக் கரையில் உள்ள கிராமத்தில், குஹன் குமாரிலராக அவதாரம் செய்தார்.

உத்கல தேசத்து மகாநதிக்கரையின் ஊர்களும், மலைப்புறத்தின் கிராமங்களும் எழில் நிறைந்தவை களாகும்.

வேதகாலக் கீர்த்தியும் புராண சரித்திர காலச் சீர்த்தியும் உடையதான இப்பிரதேசத்தில் மகாநதிக் கரையில் ஜெய மங்களம் என்னும் கிராமம் உள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அக்னிப் பிரதேசம், உக்கிரமான மகாநதிக்கரை, ஜெயமும் மங்களமும் நிறைந்த ஊர்; அதுவே ஜெய மங்கள கிராமம்.

ஜெய மங்கள கிராமம் வேதத்தை ரக்ஷிக்கும் விற்பன்னர்களின் உறைவிடமாக ஒளிர்ந்து வந்தது. அங்கே வாழ்ந்து வந்த அனுஷ்டான சீலரான யக்னேஸ்வரரின் தவப்புதல்வராக குஹன் அவதரித்து குமாரிலர் என்னும் திருப்பெயருடன் வளர்ந்து வரலானார். வேத ரக்ஷகத்துக்காக மகா நதிக்கரையில் வந்துதித்த மகான் குமாரிலர் சிறு பிராயம் தொட்டே எந்த விஷயத்திலும் தீர்க்கமாக முனைந்து எதையும் கண்டறிந்து உண்மைகளை விளக்கும் பாண்டித்யம் பெற்றவராக வளர்ந்து வந்தார்.

மிக உன்னதமான கிரந்த கர்த்தாவாக விளங்கினார். கர்மானுஷ்டானங்களில் யக்ஞம் முக்கிய பங்கு வகிப்பதாகும்.

யக்ஞங்களுக்கு மிக முக்யம் அக்னி. குஹன் குமாரிலராக வந்துதித்து அக்னியின் தேஜஸுடன் யக்ஞங்கள் புரிந்து கம்பீரமாகக் காட்சி தருவார்.

யக்ஞ கர்மானுஷ்டானங்கள் தேவர்களுக்குப் ப்ரீதியானவை.

குஹன் குமாரிலராக, பூவுலகில் அவதரித்ததுமே தேவராஜனான இந்திரனும் பூவுலகில் மன்னனாக அவதரித்தான். சுதன்வன் என்ற பெயரில் இந்திரன் மன்னனாக ஆட்சி புரிந்தான்.

குமாரிலரின் புலமை நிகரற்றதாக விளங்கியது. பண்டிதர் உலகமும் பாமரர் உலகமும் குமாரிலரை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குமாரிலபட்டர் என்றே மரியாதையுடன் அழைத்து வந்தது. 'பட்டன்' என்றால் புலவர் என்று பொருள். மரியாதையுடன் 'பட்டர்' என்பதாக மொழிவார்கள். அந்நாளில் பட்டர் என்ற சிறப்புப் பெற்றவர்களில் குமாரிலர் பிரதானமானவராகத் திகழ்ந்தார்.

குமாரில பட்டரின் மகாபாண்டித்யத்தால் பிரஜை களிடம் பெறும் மாறுதல்கள் ஏற்பட்டன. அவருடைய அணுகுமுறைகள் அனைவருடைய உள்ளங்களையும் கவர்ந்தது.

பூவுலகில் குமாரில பட்டர் வேதமார்க்கத்திற்குப் புத்துயிர் ஊட்டி வந்தார். ஜைமினியின் சூத்திரங்களுக்கு பாஷ்யங்கள் எழுதினார்.

ஸ்கந்தனான குஹனின் மண்ணுலக அவதாரம் குமாரில பட்டராக, எல்லாத் திசைகளிலும், அவரது பாண்டித்யம் அறிவுக் கூர்மையுடன் ஒளிர்ந்தது.

குமாரில பட்டரின் ஆழ்ந்த நோக்குகளும், வாக்கு வன்மையும் வேத மார்க்கத்தில் உள்ள கர்ம காண்டத்தின் பான்மைகளைப் பரப்பும் திசையில் புகழ்க் கொடி நாட்டி வந்தது.

அருணன் சாரத்யம் புரியும் தேரினை உடைய சூரியனின் சுடரொளி போல், குமாரில பட்டரின் புகழும் பெருமையும் பிரகாசமாகிக் கொண்டே வந்தது.

வாதங்கள் புரிந்து, வெற்றி வாகை கொள்கிற திறம் குமாரில பட்டரிடம் நிறைந்திருந்ததைக் கண்டு மாந்தரும் பல நாட்டு மன்னர்களும் அவரை வியந்து போற்றினார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேதங்களின் எல்லாச் சாகைகளிலும் ஆழ்ந்த புலமை கொண்ட குமாரில பட்டரின் தெளிந்த விரிவுரைகள் எண்ணற்ற வேத பண்டிதர்களை ஈர்த்திழுத்தது.

ஸ்கந்தன், குமாரிலராகப் பிறந்ததைத் தொடர்ந்து, இந்திரன் சுதன்வனாகப் பிறந்து தேவலோகத்தை நிகர்த்த திருநாட்டிற்கு மன்னனாக விளங்கினான்.

மன்னர் சுதன்வா, புத்தமதக் கொள்கைகளைப் பின்பற்றுபவராக இருந்தார். புத்த மதத்தைப் போஷிக்கும் பணிகளையும் மேற்கொண்டார்.

அவ்வாறு இருந்தாலும், அம்மன்னன் குமாரில பட்டர் தம் நாட்டிற்கு வருகை புரிவதை மிகவும் ஆவலுடன் எதிர் பார்த்திருந்தார்.

குமாரிலரின் விஜயத்தால் தம் நாடு புதுமலர்ச்சி பெறும் திருநாளை இதயப்பூர்வமாக எதிர்பார்த்த வண்ணம் இருந்தார்.

தெளிவுபட தத்துவ விளக்கங்கள் தந்து வாத மெனில் வாக்குவன்மையுடன் நயம்பட வாதிட்டு, வெற்றிக் கொடி நாட்டி, புகழுடன் விளங்கி வந்த குமாரில பட்டர் சுதன்வனின் (இந்திரன்) அழைப்பினை ஏற்று அம்மன்னனின் நாட்டிற்குச் சென்றார். அவருடைய வருகையை அறிந்து உளம் பூரித்த மன்னன் சுதன்வன், அவரை வரவேற்று உபசரித்தான். தங்கச் சிம்மாசனத்தில் அமரச் செய்தான். தேவலோகம் போல் காட்சி தந்த சபையிலே, குமாரில பட்டர் அமர்ந்தார். அப்போது நந்தவனத்திலிருந்த மரக்கிளையில் ஒரு குயில் கூவிற்று.

இந்த இனிமையான குயிலின் குரலைக் கேட்ட, குமாரில பட்டர் மன்னன் சுதன்வனைப் பார்த்துச்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சொல்லலானார்: ''கோகிலம் போன்றவரே! உங்கள் குரல் எவ்வளவு இனிமையாக உள்ளது; ஆனால் உங்கள் இனிய குரலோடு, பல காகங்களின் கூச்சல் கலந்து விட்டதே! புத்த மதத்தினரின், வேதத்துக்குப் புறம்பான பேச்சுக்களையே நான் குறிப்பிடு கிறேன்.''

குமாரில பட்டரின் இவ்வார்த்தைகளைக் கேட்டு சபையில் வீற்றிருந்த பௌத்தர்கள் கொதித்தெழுந் தார்கள். மாலைச் சூரியனின் ஒளியில் சிவந்த தாமரை மலர்களைப் போல, கோபம் அவர்களின் முகங்களைச் சிவப்பாக்கியது. உறங்கிய புலியை இடறி விட்டதைப் போல, அவர்கள் சிலிர்த்து எழுந்தார்கள்., குமாரில பட்டரின் வார்த்தைகள் அவர்களுடைய கோபத் தீயினுக்கு நெய் வார்த்தன.

வாதங்களுக்கு எதிர்வாதம் செய்ய பௌத்தர்கள் முனைந்தார்கள். வாக்சாதுர்யம் நிறைந்த குமாரில பட்டரும் வாதத் திறமையால், சொற்போர் நிகழ்த்தினார். அவரது சொற் பெருக்குக்கு முன்பு பௌத்தர்களின் வாதங்கள் நிற்கத் திறனின்று தோற்றன. சிறகுகளை இழந்த பறவைகளைப் போல அவர்கள் செயலிழந்து நின்றார்கள். எல்லாம் அறிந்தவர்கள் என்ற பெருமையோடு தலை நிமிர்ந்து இருந்த பௌத்தர்களின் தலை தாழ்ந்தது.

வேத மார்க்கமே சிறந்தது என்பதை உணர்த்த வந்த குமாரில பட்டர், தொடர்ந்து அதன் சிறப்புக்களை, மந்திரங்களின் பெருமைகளைக் கூறத் துவங்கினார்.

அச்சமயம், மன்னன் சுதன்வன், குமாரில பட்டரை நோக்கிக் கூறலானான்: ''சிரேஷ்டமானவரே! தாங்கள் வாதம் செய்து, அந்தச் சொற்போரிலே வென்று

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விட்டதாக எண்ணியிருக்கிறீர்கள். ஆனால், அது மட்டும் போதுமான தாகாது. உண்மையிலேயே, உங்களுக்கும் பௌத்தர்களுக்கும் அவரவர் கொள்கை, தங்களைக் காக்கும் என்ற நம்பிக்கை இருக்குமானால், அதோ அந்த மலையின் உச்சியிலிருந்து குதித்து நிரூபிக்க வேண்டும்.''

மன்னனின் கட்டளையைக் கேட்டு, பௌத்தர்கள் கலங்கினார்கள். ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டு, தயங்கி நின்றார்கள். மலை மீதிருந்து விழுவதா? என்ற பயம் அவர்களைப் பிடித்தது. ஆனால் குமாரில பட்டர், சுதன்வனின் கூற்றை ஏற்றுக் கொண்டு மலை மீது ஏறலானார். உச்சிக்குச் சென்றார். அவருடைய செயலைக் காண மக்கள் திரண்டு நின்றார்கள்.

மலை உச்சியை அடைந்த குமாரில பட்டர், ''வேதம் என்பது உண்மையிலேயே தெய்வீகமானது என்றால், அது என்னை ரக்ஷிக்கட்டும்'' என்று கூறிவிட்டு, உச்சியிலிருந்து கீழே பாய்ந்தார்.

கூடியிருந்த மக்கள் 'ஹாஹா'காரம் செய்தார்கள். வானிலிருந்து கீழே வந்த யயாதியைப் போல காட்சியளிக்கும் குமாரில பட்டரைப் பார்த்தார்கள். மலை உச்சியிலிருந்து, ஒரு பூ பறந்து வந்தது போல வந்து கீழே விழுந்தார் குமாரில பட்டர்.

வேதம் தெய்வீகமானது; அது தன்னை ரக்ஷிப்பவர்களை, ரக்ஷிக்கும் என்ற வாசகங்களை உண்மையாக்கியதைக் கண்டு மன்னனும் நாட்டு மக்களும் மகிழ்ந்தார்கள்.

இதற்குப் பிறகும் பௌத்தர்கள் ஆக்ஷேபம் தெரிவித்தார்கள். ''இதில் ஏதோ சூழ்ச்சி உள்ளது. மாய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மந்திரத்தால், மலை உச்சியிலிருந்து அடிபடாமல் கீழே விழுந்தது ஒரு பெரும் செயலாக ஏற்க முடியாது'' என்றார்கள்.

மன்னன், மீண்டும் ஒரு சோதனை நிகழ்த்த விரும்பினான். அந்தச் சோதனையில் தோற்பவர்கள் கடுமையாக தண்டிக்கப்படுவார்கள் என்றும் எடுத்துரைத்தான்.

குமாரில பட்டரும் பௌத்தர்களும் ஒப்புக் கொண்ட பின்பு, மன்னன் ஒரு பானையைக் கொண்டு வந்தான். பானையின் வாய், மூடி உறையிடப் பட்டிருந்தது.

''மூடியுள்ள இந்தப் பானையினுள்ளே இருப்பதைச் சரியாகச் சொல்ல வேண்டும்'' - என்பதே மன்னன் விடுத்த சவால் ஆகும்.

மன்னனின் கேள்விக்கு, மறுநாள் விடையளிப்ப தாக, குமாரிலரும் பௌத்தர்களும் கூறிச் சென்றார்கள்.

மறுநாள், அவை கூடியது; உறையிட்ட பானை அவை நடுவே இருந்தது; பௌத்தர்களும் வந்தார்கள்; குமாரிலரும் வந்தார்.

மன்னனின் முன்னால், பௌத்தர்கள் எழுந்து, ''இந்த மண் பானையில் பாம்பு உள்ளது'' என்று கூறினார்கள்.

ஆனால் குமாரிலர், ''இப்பானையினுள்ளே ஆதி சேஷனின் மீது பள்ளி கொண்ட மகாவிஷ்ணு இருக்கிறார்'' என்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இச்சமயத்தில், அசரீரி எழுந்தது. ''மன்னனே! குமாரிலர் கூறுவதே சரியானது. உன் வார்த்தையைக் காப்பாற்று'' என்ற குரல் கேட்டு மன்னன் திகைத்தான்.

மூடியிருந்த பானையின் வாய் திறக்கப்பட்டது. என்ன ஆச்சர்யம், பானையினுள்ளே பாம்பணை மீது பெருமாள் பள்ளி கொண்டிருந்த காட்சியைக் கண்டார்கள்.

பானைக்குள் பாம்பை வைத்ததை மன்னன் அறிவான். ஆனால் இதென்ன விந்தை. தெய்வ தரிசனம், குமாரிலரின் பெருமையை அல்லவா உணர்த்தி விட்டது. வேத மார்க்கமே உலகின் சிறந்த மார்க்கம் என்று மக்களும் மன்னனும் முடிவு செய்தார்கள். நாடு, வேத மார்க்கத்தில் தழைத்து ஓங்கியது. மன்னனும் பௌத்த மதத்தைச் சார்வதை விடுத்து, வேத மதத்தைச் சார்ந்தான்.

குமாரிலர் என்ற சிங்கத்தின் கர்ஜனைக்கு முன்பு பௌத்த சமண மத யானைகள் ஓடி ஒளிந்தன.

உலகில் கர்ம மார்க்கமென்ற வேத சாகைக்கு புத்துயிர் ஊட்டியவர், குஹனின் அவதாரமாகப் பூவுலகில் பிறந்து, பண்டிதராகத் திகழ்ந்த குமாரில பட்டர் ஆவார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

4

விசுவரூபர் ஜனனம்

காம்போஜம் என்கிற காஷ்மீரத்தின் ஜீலம் நதி, லிந்துவின் பஞ்ச நதிகளில் ஒன்று. 'பிதாஸ்தா' (விடஸ்தா) என்று அழைக்கப்படும். ஜீலம் நதிக்கரையில் அமைந்த கிராமங்களும் நகரங்களும் பிரஸித்தி பெற்றுத் திகழ்ந்து, ஸனாதன தர்மமும் வேத நெறிகளும் தழைத்தோங்குகிற பிரதேசமாக விளங்கிற்று.

நூற்றைம்பது மைல் நீளமுள்ள ஜீலம் நதி காஷ்மீரத்தின் ஜீவநதி. அங்கே பாய்ந்தோடுகின்ற லிடார், வார்த்துவான், போரோ ஆறுகளும் 'கிஷன் கங்கை' என்கிற தெய்வீக நதியும் காஷ்மீரத்தை வளப்படுத்திக் கொண்டிருக்கும் நதிகளாகும். ராவி நதியை ப்ருஷிணி நதி என்றழைப்பார்கள்.

இமய மலைத் தொடர்களின் மையத்தில் அமைந்துள்ள பிரதேசமான காஷ்மீரம், மலை சூழ்ந்த எழிலார்ந்த நிலப்பரப்பு; கடல் மட்டத்திலிருந்து, ஐயாயிரம் அடி உயரத்தில் உள்ளது.

வடமேற்கில் இந்துகுஷ் மலைத் தொடர்களி லிருந்து, தென் கீழ்த் திசையில் டார்ஜிலிங் மலைத் தொடர் வரை, பரவிய பகுதி அது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வெண்பனி மூடிய காட்சி கவினுடையதாக இருக்கும்; புல்வெளியும் பூஞ்சோலைகளும் நிறைந்து பழத் தோட்டங்களுடன் காட்சி தரும்; காஷ்மீரத்தில் நீர் வாவிகளும் ஆங்காங்கே அமைந்திருக்கும்; மலைச் சிகர வனப்புகளுடன், நதி நீரின் ஓட்டம் பள்ளத்தாக்குகளின் வழியே பாய்கிறபோது ரம்மியமாக இருக்கும்.

காஷ்மீரத்தின் தொன்மை, இந்து மன்னர்களின் ஆட்சி நிகழ்ந்ததை எடுத்தியம்பும். பாரதத்தின் வட பகுதி முழுவதும் வட கோடியிலும் நிலவிய ராஜ்யங்கள் பல, காலப் போக்கில் கூணித்து வலுக்குன்றின.

கோசல, காசி, விதேக, மகத, சூரசேன, அவந்தி ராஜ்யங்கள் சிற்றரசுகளாக விளங்கின.

காஷ்மீர தேசத்தில் ராஜா தயாகரணன் ஆட்சிக் காலந் தொட்டே இந்துக்களின் தர்ம சாஸ்திர நெறிகள் கோலோச்சியிருக்கிறது. இந்து மன்னர்களின் மாட்சி மிகுந்த ஆட்சி செவ்வனே நடை பெற்ற பிரதேசம் காஷ்மீரம்.

வடபாரதம் முழுவதும், மகதம் மகோன்னதமாக வளர்ந்தோங்கி நின்றது.

மகோன்னதமான மகதத்தின் வரலாறு தொன்மை யானது.

மகதத்தின் முதல் அரசன் பிருகத்ரதன் என்று மகாபாரதத்தின் மூலம் அறியலாம். வசுவின் மகனும், ஜராசந்தனின் தந்தையுமான பிருகத்ரதன் அரசாண்ட பிரதேசம் மகதம்.

பிருகத்ரதன் காலத்தில் மகதத்தில் அந்த அரசன் உருவாக்கிய நகரம் பிருகத்ரதபுரம் என்ற பெயர் பெற்று

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விளங்கிற்று. பிருகத்ரதபுரமே மகதத்தின் தலை நகராகவும் திகழ்ந்தது.

இராமாயண காலத்தில் இதுவே வசுமதி என்ற பெயருடன் அழைக்கப்பட்ட நகரமாகும். யுகப் பெருமைகள் கொண்டது மகதம்.

மகத சாம்ராஜ்யத்தின் தலை நகரான பிருகத்ரதபுரம் ராஜக்ருஹம், பின்னாளில் பாடலிபுத்ரம் என்று சிறப்புப் பெற்றும் பிரசித்தியாயிற்று. சந்திரகுப்தமௌரியர், பிந்துசாரர், அசோகர் ஆண்ட பூப்பிரதேசமான மகதம், பாரத வர்ஷத்திற்குச் சிறப்புக்களை வழங்கிய நிலமாக காலங்காலமாக விளங்கி வந்தது.

பதினாறு நாடுகளைக் கொண்ட (மகாஜன பதங்கள்) (பெரிய அரசுகள்) மகதப் பேரரசு வரலாற்றின் முதல் பேரரசாக ஸ்தாபிதமாயிற்று.

அங்கம், வங்கம், கலிங்கம், காசி, கோசலம், விரிஜ்ஜி, (வஜ்ஜி) மல்லசேதி, குரு, பாஞ்சாலம், மத்சயம், (மச்ச), சூரசேனம், அஸ்வகம், (அஸ்ஸகா அஸ்து அஸ்மகா), காந்தாரம், காம்போஜம், அவந்தி, மகதம் என்பவையே அந்தப் பதினாறு நாடுகளுமாகும்.

இந்தப் பதினாறு நாடுகளுள் அவந்தி, கோசலம், காம்போஜம், (காஷ்மீரம்), மகதம் என்ற நான்கையும் குறிப்பிட்டுச் சொல்வார்கள். இந்நான்கும் பிரஸித்தி பெற்றிருந்தன.

அவற்றுள்ளும் மகதமும் காம்போஜமும் முன்னின்றதுடன் மிக நெருக்கமான தொடர்புகளுடன் பரிவர்த்தனைகள் செய்தும் நல்லுறவு கொண்டுமிருந்தன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மகதத்தின் தலை நகரமாக, ராஜகிரஹமும், பிறகு பாடலிபுத்திரமும் விளங்கி ஏற்றம் பெற்று ஒளிர்ந்தது.

பாடலிபுத்ரம் தவிர மகதத்தில் மாஹிஷ்மதி நகரம் தனிச்சிறப்புப் பெற்றிருந்தது. பாணினியும் பதஞ்சலி முனிவரும் வாழ்ந்து மகதத்திற்குப் பெருமை சேர்த்தவர்கள். வேதப் பொழிவுகளும் இலக்கண நியதிகளும் செழித்த இடம், மகதப் பேரரசின் மாஹிஷ்மதி நகரமாகும்.

மாஹிஷ்மதி நகரம் மகதத்தில் (இன்றைய பீஹார்) தர்ம மூலா நதிக்கரையில் அமைந்த நகரம். (தர்மமுலா நதியை நர்மதை என்றும் அழைப்பார்கள்)

நேபாளத்திலிருந்து பாய்ந்து வந்து கங்கையுடன் கலக்கிற கோசி நதியின் மேற்கு திசையில் பாய்கிற உபநதி தான் தர்மமூலா. இந்த தர்மமூலா நதி தீரத்தில், தொன்மைச் சிறப்புடன் பண்டைய வேதப் பாரம்பர்யமும் படைத்த மாஹிஷ்மதி என்னும் நகரம் அமைந்திருந்தது. மகதத்தின் சீர் மிகுந்த நகரம் மாஹிஷ்மதி.

மகத தேசத்தில் கங்கைக்கு வடக்கிலும் தெற்கிலுமாக இரண்டு கரைகளிலும் படர்ந்து, இமயமலைச் சாரல் வரை வியாபித்த பகுதியான தர்மமூலா நதிக்கரையில் மாஹிஷ்மதி பகுதியில் சாலவிருக்ஷங்கள் மிகுதியாகக் காணப்படும். சோலைகளும் பூந்தோட்டங்களும் மாஹிஷ்மதி நகரின் அழகைப் பன்மடங்காகப் பெருக்கிக் காட்டும்.

மகதப் பேரரசின் உள்ளடங்கிய மகத ராஜ்யமும் காம்போஜமும் தலைநிமிர்ந்து நின்ற தனிப் பெரும் ராஜ்யங்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கால ஓட்டத்தில் குப்தர்கள் ஹூனர்கள் என ஆட்சிகள் மாறின. தோராமான (தோரமானர்) என்கிற ஹூனவீரன் பேரரசனானான். அவனைத் தொடர்ந்து அவனுடைய மைந்தன் மிஹிரகுலர் அரசாண்டான். மிகுந்த பராக்ரமசாலியாக விளங்கினான். மிஹிர குலர் சிவனை வழிபட்டதாகத் தெரிகிறது.

காஷ்மீரத்தின் செல்வாக்கு அபரிமிதமாக ஓங்கியது. ஹர்ஷரை அடுத்து கனோஜின் அரசனாக, யசோவர்மன் ஆட்சி செலுத்தினான். வெற்றிகளைக் குவித்து வீரதிக்விஜயம் செய்த மன்னன் இவன்.

துர்பலவர்தன் ஆட்சிக் காலத்திலிருந்தே காஷ்மீரில் கோட வம்சத்தின் ஆட்சி தான். அவ்வழியில் வந்தவனே முக்தபீதா என்கிற லலிதாதித்யன். காஷ்மீரத்தில் லலிதாதித்யன் மாமன்னனாக ராஜ்ய பாரம் நிகழ்த்தினான்.

வடபாரதம் முழுவதும் புகழ் பெற்ற மாவீரனாக, ஆட்சியை அறம் தழுவி, நடத்திய மாமன்னன் லலிதாதித்யன்.

காஷ்மீர மாமன்னன் லலிதாதித்யன் சூரிய பகவானுக்கு சமர்ப்பிக்கப்பட்ட கோவிலை நிர்மாணித்தான். கட்டிடக் கலைச் சிறப்புடன் தெய்வீக எழிலும் இணைந்த மாபெரும் சூரியாலயமாக அக்கோவில் திகழ்ந்தது.

வேதங்கள், வேதாகமங்கள், புராணங்கள், ஸ்மிருதிகள், மீமாம்ஸை, நியாயம், தர்க்கம், தர்மம், இலக்கணம், இவற்றுடன் ஸம்ஸ்கிருதம், பிராக்ருத

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மொழிகளிலும், மருத்துவம், வானநூல் இவற்றிலும் நிகரற்று விளங்கிய காஷ்மீரத்துப் பண்டிதர்களும் மாஹிஷ்மதிப் பண்டிதர்களும் நெருக்கத்துடன் உறவாடி வாதங்களும் விசாரங்களும் புரிவதும் வழக்கம்.

லலிதாதித்யன் அரசவையில் முக்கிய பொறுப்பில் இருந்தவர் மித்ரசர்மா என்பவர். மகா பண்டிதரான மித்ரசர்மா, இந்து தர்ம சாஸ்திரக் கலையில் நிபுணர்.

மாஹிஷ்மதி நகரிலிருந்து (பீஹார்) வந்தவர்களின் மரபைச் சேர்ந்த அவர், காஷ்மீரத்து மன்னனின் நட்பிற்கு உகந்தவராகவும் காஷ்மீரப் பண்டிதர்களுக்கு நண்பராகவும் திகழ்ந்தார். மிஸ்ரசர்மா என்ற பெயரை விட மித்ர சர்மா என்ற பெயரே பிரபலமாகி விட்டது.

காஷ்மீரம் ஏறத்தாழ நாற்பது நகரங்களையும் எட்டாயிரத்து எழுநூற்று நாற்பது சிற்றூர் கிராமங்களையும் கொண்டிருந்ததாக வரலாறு கூறுகிறது. தலைநகரம் 'சூரிய நகரம்' என்ற பெயரில் அழைக்கப்பட்டு வந்தது.

வேத பண்டிதர்கள் பல்லோரும் கூடி வாழும் இடமாகவும் காஷ்மீரம் விளங்கியது. அண்டை ராஜ்யங்களின் விற்பன்னர்களும் குறிப்பாக, மித்ரசர்மாவின் செல்வாக்கால் மாஹிஷ்மதி பண்டிதர்களும் காஷ்மீருடன் பாண்டித்ய உறவுகள் கொண்டிருந்தனர். அங்கு குடியேறியும் வாழ்ந்தனர்.

காஷ்மீரத்தில், குன்றுபோல் ஓர் ஆலயத்தை கோபாதித்யன் நிர்மாணித்தான். கோபாத்ரி என்று அழைக்கப் படுவதே அந்த ஆலயமாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இருபெரும் பல்கலைக் கழகங்கள் அங்கே புகழுடன் விளங்கின. 'ஓம் மணிபத்மே ஓம்' என்ற மந்திரம் எழுதப்பட்ட சுவர்களுடன் திகழும் புத்த பல்கலைக் கழகமும் பிற தேசத்தவர்களும் வந்து பயிலும் இந்து பல்கலைக் கழகமும் சர்வ கலாசாலைகளாகத் திகழ்ந்தன.

வேத சாஸ்திரங்களுடன் இந்து பல்கலைக் கழகத்தில் காவிய ஓவியக் கலைகள், சிற்பம், இசை, நடனம், நாடகக் கலைகளும் கற்பிக்கப்பட்டு வந்தன.

அங்கே கற்று, புலமை பெற்றவர்களுக்கு காஷ்மீரப் பண்டிதர்கள் என்ற தனிச்சிறப்பு உண்டு.

புல்வெளிப் பகுதிகளான 'மர்குகள்' பல அங்கே உள்ளன. கிழான்மர்கு அருகே ஒரு சிற்றூர் இருந்ததாகவும் அங்கே வேதகால வித்தக மகா பண்டிதர்கள் வசித்து வந்ததாகவும் தெரிய வருகிறது. அந்தச் சிற்றூர், பாண்டிபுரம் என்ற பெயருடன் விளங்கி, பாண்டித்யபுரம் என்று பல்லோராலும் அழைக்கப்பட்டு வந்தது. ஜெயாபுரம், துவாரவதி என்று இரு நகரங்களும் இருந்தன.

லலிதாதித்யனின் பிள்ளை வயிற்றுப் பேரன் விநயாதித்யா (ஜெயாபீடர் - ஜய பீதா) காஷ்மீரில் ஆட்சி செலுத்தியகாலத்தில் மித்ரசர்மாவின் புத்திரன் தேவசர்மா அரசவையில் முக்கிய பொறுப்பு வகித்தார். தேவசர்மா மாஹிஷ்மதி நகரத்தில் மேதைமை மிகுந்து தர்ம ஆசாரங்கள் தழுவி வாழ்ந்து வரும் செல்வந்தருடன் அன்யோன்யத் தொடர்புடையவர்.

மாஹிஷ்மதியிலும் காஷ்மீரிலுமாக வாழ்ந்து வந்த அந்த சீலம் மிகுந்த மாமனிதர், வேதங்களில் சிறந்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உத்தமோத்தமராக மதிக்கப்பட்டு வந்தார். இரு இடங்களிலும் அவரது இல்லம் மாளிகை போன்று அமைந்திருக்கும்.

ஆண்டுகள் பல உருண்டோடின. காஷ்மீர தேசத்தில் இந்து தர்ம நெறி சற்றே க்ஷீணித்து விடுமோ என்பதற்கான அறிகுறிகள் தென்பட்டன. குடி மக்களின் மனோ பீஷ்டத்தை முழுதுமாகப் பிரதிபலிக்காத வகையில், ராஜ்யம் சென்று விடுமோ என்ற ஐயப்பாடுகள் எழும் சூழ்நிலைகள் உருவாயின.

மாஹிஷ்மதி, பாடலிபுத்ரம், மிதிலை, காசி நகரங்களைச் சேர்ந்த பண்டிதர்கள் காஷ்மீர தேசத்திற்கு வருகை புரிந்தார்கள். காஷ்மீர தேசத்தில் கல்விமான்கள் பலர் ஒன்று கூடலாயினர். அச்சீலம் மிகுந்த உத்தமோத்தமரின் குடியிற் பிறந்த ஹிமமித்ரர் என்னும் பண்டித சிரேஷ்டரும் மாஹிஷ்மதியிலும் காஷ்மீரிலும் வாழலானார். மாஹிஷ்மதியில் அவரது இல்லம் மாளிகை போன்றிருந்தது. காஷ்மீர் பண்டிதர்களின் விருப்பத்திற் கிணங்க, அவர் காஷ்மீரில் வாசம்செய்தார். அரசவைக் கவிஞரான ஹிமமித்ரருக்கு அங்கும் வளமான வாழ்வு அமைந்தது. மாளிகை போன்ற இல்லத்தில் வாழ்ந்து வந்தார்.

காஷ்மீரம் அமைந்துள்ள இமயமலை அடிவாரம், சமயங்களின் ஆதர்சங்களைக் கண்ட பிரதேசம். ஹரித்வாரத்திலிருந்து கைலாயகிரி வரை உள்ளடக்கிய 'உத்தரகண்ட்' என்ற பகுதி காஷ்மீரத்தையும் உள்ளடக்கியதே.

இப்பகுதியில், ஸ்மிருதிகள், தர்சனங்கள் இவற்றை ஆக்கிய ரிஷி புங்கவர்களின் ஆசிரமங்களும் ஆத்ம ஞானியர்களின் வாசஸ்தலங்களும் மிளிர்ந்துள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வியாஸ பகவான் வேதத்தை வகுத்ததும், புராணங்களை யாத்ததும், பிரம்ம சூத்திரங்களை உருவாக்கியதும், இங்கே தான், என மொழிவார்கள்.

கண்ணன் உத்தவருக்கு ஆத்ம ஞானம் போதித்த நல்லிடமும் இதுதான்.

புராண நிகழ்வுகளின் கேந்திரமான மாந்தாதா மலை, தக்ஷகுண்டம், கௌரீ குண்டம் கங்காத்வாரம் ஆகிய இடங்கள் உள்ளதே இமயமலைப் பிரதேசம். ராமாயணம், மகாபாரதம் ஆகியவற்றின் நிகழ்வுகளின் தடம் பற்றிய இடங்கள் பல உள்ள புண்ணிய இடம். இமயத்தோடு உறவுடையதே.

இப்புண்ணியப் பிரதேசம் மேலும் பொலிவு பெறும் வண்ணமாகக் காட்சி தந்தது. இயற்கையின் நிகழ்வுகள் புதிய படைப்புக்களாக மலர்ந்து, பிரம்ம தேவரின் வருகைபோல் இருந்தது.

ஸரஸ்வதி தேவியின் பொருட்டு சிவபெருமான் காலடியில் சங்கரராக அவதாரம் செய்யத் திருவுளம் கொண்டுள்ளார்.

சீரும் சிறப்பும் வாய்ந்த காஷ்மீர தேசமே தமது அவதாரத்துக்கு ஸ்ரேஷ்டமான ஸ்தலமாக இருக்கும் என்ற ஓர் எண்ணம் பிரம்மதேவனின் சிந்தையில் ஒளிக் கீற்றென மின்னியது.

பிரஜாபதியான பிரம்மதேவரின் பூவுலக அவதாரம் வேதம் ஓதும் ஓர் உயரிய நற்குடியில் நிகழும் வேளை சமீபித்து விட்டது.

மாஹிஷ்மதியிலும் காஷ்மீரிலும் வாழ்ந்த உத்தமோத்தமரான, அந்த செல்வந்தரின் குடியில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிறந்தவரே ஹிமமித்ரர் என்பவர். அவருடைய திருமகனாக பிரம்மதேவர் திரு அவதாரம் செய்தார்.

ஹிமமித்ரர், தமது அருமைச் செல்வனுக்கு விசுவரூபர் என்ற திரு நாமத்தைச் சூட்டினார்.

மாஹிஷ்மதியைச் (தந்தை வழியில்) சேர்ந்தவர் என்பதால் ஹிமமித்ரரை, ''ஹிமமிச்ரர்'' என்று அழைப்பவர்களும் உண்டு. காஷ்மீரத்துப் பண்டிதர்களின் பெருமதிப்பையும் பிரஜைகளின் பேரபிமானத்தையும் பெற்றிருந்த ஹிமமித்ரரின் புத்திரராகப் பிறந்த விசுவரூபரின் ஜனனத்தில் பாண்டித்யபுரம் மட்டுமின்றி காஷ்மீர தேசமும் பூரணமாக ஆனந்தக் கடலில் திளைத்தது.

மிச்ரர்கள் குடும்பத்தின் பெருமைக்கு விசுவரூபரை ஓர் அணிகலனாகக் கருதினார்கள்.

மிதிலைப் பண்டிதர்களான மிச்ரர்களின் பாண்டித்யம் பிரசித்தமானது. ராஜாங்கத்துடன் அவர்களின் தொடர்பும், பணிகளும் தேசத்தின் உயர்வுக்குப் பெரிதும் உதவி இருக்கின்றன.

விநயாதித்யா காலத்தில் அரசவையில் மித்ரசர்மா முக்கியப் பொறுப்பு வகித்ததைத் தொடர்ந்து, மிச்ரர்களின் அரசவைத் தொடர்புகள் நீடித்தன.

ஹிமமித்ரரும் அரசவையின் கவிஞராகப் பணிபுரிந்து வந்தார். அவரது புலமையும், பண்பாடும் ராஜாங்கத்துக்கும் மக்களுக்கும் வழிகாட்டுவதாக அமைந்திருந்தது. ஹிமமித்ரரின் வாழ்வும் வளம் நிறைந்து உன்னதமாக மதிக்கப்பட்டு வந்தது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அத்தகைய குடும்பத்தில் பிறந்த விசுவரூபரை அனைவரும் கொண்டாடினார்கள்.

தேஜஸ் பொருந்திய குழந்தையைக் கண்டு களி கொண்டார்கள்.

அரும்பும் பொழுதே அறிவுக் கொழுந்தாக இருக்கிற செல்வன் என்று விசுவரூபரை வியந்து சீர் பாராட்டினார்கள்.

விசுவரூபர், பாண்டித்யம் நிறைந்தவராகத் திகழ வேண்டும் என்பதற்காக, அவருடைய தந்தையார் மிகுந்த கவனம் எடுத்துக் கொண்டு கருத்துடன் வளர்த்து வந்தார்.

ஹிமமித்ரர் வடபாரத தேசத்தில் பிரஸித்தியுடன் விளங்கி வந்த மஹா பண்டிதர்களில் முன்னணியில் இருப்பவர். மகதமும் காம்போஜமும் பெற்றிருந்த பெருமைகளின் பிரதிநிதியாக ஸனாதன தர்ம நெறிகளின் அடியொற்றி வாழும் அவர், தம்முடைய புத்திரரும் அவ்வாறே திகழ்ந்தொளிர வேண்டுமென்று பேரவாக் கொண்டிருந்தார்.

சின்னஞ்சிறு பிராயத்திலேயே வேதசாகைகளை மனனம் செய்கிற பழக்கத்தை விசுவரூபர் பெற்றுத் திகழும்படிச் செய்தவர் அவரது தந்தை ஹிமமித்ரரே! மஹா பண்டிதர்கள் கூடும் சபைகளுக்கும் சிறு வயதே நிரம்பிய விசுவரூபர் சென்று நிகழ்வனவற்றை ஊன்றி கவனிக்கும் பாங்கினைப் பண்டிதர்கள் கண்டு மெச்சுவது வழக்கம்.

அகவைகள் கூடக்கூட விசுவரூபரிடம் தளிர் விட்டு அரும்பியிருந்த வேத சாஸ்திரப் புலமையும் தர்ம

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நெறிகளும் கப்பும் கிளையுமாகப் படர்ந்து வியாபித்த நிலையாகி உயர்ந்தோங்கியது.

''நியமங்கள் என்பவை விசுவரூபரின் எல்லா அம்சங்களிலும் ஒன்றியிருந்தன. கற்பதிலும் பாடப் பயிற்சிகள் பெறுவதிலும் சான்றோர்களிடம் சம்பாஷிப்பதிலும் நியமங்களின் வரையறை தெரிந்து உரையாடுவதை ஒரு கொள்கையாகக் கொண்டிருந்தார். அதுவே அவருக்கு பெரும் கீர்த்தியை ஏற்படுத்தியது.

இளம் வயதிலேயே ஆகார நியமங்களுடன் வாழ்ந்து அழகுடனும் ஆரோக்ய சீலத்துடனும் விளங்கினார். ஒளி பொருந்திய அவரது நயனங்கள் சுட்டும் விழிச்சுடர்கள், அறிவொளி வீசி பலரையும் ஆகர்ஷிக்கும் தன்மை படைத்ததாக இருந்தன.

நாளொரு கலையும் பொழுதொரு வித்தையுமாகக் கற்று முறையோடும் நிறைவோடும் விசுவரூபர் வளர்ந்து வந்தார்.

பாரத நாட்டின் பழம் பெருமைகளுக்கு ஒரு அணியாக வளர்ந்து வந்தார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

5

பூர்ணா நதிக்கரையில்

பாரதபூமி பழம்பெரும் பூமி. பக்தியும் வேதப் பண்புகளும் பயிர் போல் வளர்ந்து ஓங்கிய புண்ணிய பூமி, பாரத வர்ஷம். இங்கே மலைகளும் நதிகளும், நதிக்கரைகளும் தெய்வக்களி துலங்க, மானுட வாழ்வைப் பயன் உடையதாகச் செய்யும் திறம் கொண்டவை.

பூர்ணத்வம் என்கிற தன்மைக்கு அடிகோலுகிற சின்னங்கள் வழிகாட்டுபவைகளாக அமைந்த பாரத வர்ஷத்தின் தெற்கே கேரள தேசத்தில் பாய்ந்தோடும் நதி, பூர்ணா. பூர்ணா நதியை சூர்ணி, சூர்ணா என்றும் அழைப்பார்கள். பழந்தமிழ் நூல்கள், பெரியாறு (பேரியாறு) என்றும் போற்றுகிற நதி இது.

பூர்ணாநதியின் ஓட்டம், கோடைகாலத்தில் வளைந்து வளைந்து பள்ளங்களைத் தேடி ஓடும் காட்சி வித்யாசமானதாகத் தெரியும். பெருக்கெடுத்தோடும் பூர்ணாவின் எழிலைப் பருவகாலங்களில் பார்த்துப் பார்த்து மகிழ்ச்சி கொள்ளலாம்.

பூர்ணாநதி மாரிக்காலம் வந்ததுமே, பாய்ச்சலாக ஓடி வீறு கொள்ளும்; விசை மிகுந்த நீரோட்டம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிரமிப்பூட்டும்; இரு கரைகளையும் தழுவிக் கொண்டே செல்லும்; சில சமயங்களில் கரைகளை மீறியும் செல்லும்.

கரை புரண்டோடும் பூர்ணா நதி, கரைகளை உடைத்துப் பாய்ந்து செல்வதும் உண்டு. புல் தழைகளை தன்னோடு சேர்த்துக் கொண்டும், அவற்றைக் கரையோரப் பகுதிகளில் வீசி விடுவதும் போன்ற காட்சி ரம்மியமாக இருக்கும். அக்காட்சி, நதிக்கரை யோரமாக பசுங்குன்றுகளை அமைப்பது போல் காட்சிப்படும். பூர்ணாவின் பரவசம் அனைவருடைய நெஞ்சிலும் பதியும்.

பூர்ணா நதியின் பொலிவில் ஒரு சிற்றூர்; அந்தச் சிற்றூரில் பண்டிதர்கள் மிகுதியாக வாழ்ந்தார்கள். பண்டிதர்களின் இல்லங்கள் அடுத்தடுத்து அமைந்த அழகிய கிராமம் அது. அதுதான், ''காலடி'' என்னும் வேதம் தழைத்த அக்ரஹாரம். காலடிக் கிராமம், கவின்மிகு கலையழகு நிறைந்த இடமாகும்.

நம்பூதிரி பிராமணக் குடும்பங்கள் சீரோடும் செழிப்போடும் வாழ்ந்த காலடி, ஞானத் தலமாக விளங்கியது. பாண்டித்யபுரி என்று போற்றத்தக்க வகையில் திகழ்ந்த அந்த கிராமத்தில், சாந்தமும் சத்தியமும் கொண்ட மகானாக வித்யாதி ராஜா என்பவர் வாழ்ந்து வந்தார்.

பெயருக்கேற்ப, வித்யாதி ராஜா கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கிய ஞான பண்டிதராவார். அவர் செய்த தவப்பயனாக அவருக்குப் பிறந்த ஏகபுத்திரர் சிவகுரு; மிகுந்த ஆசார சீலர்.

வளமையும் புலமையும் சேர்க்கும் வண்ணம் காலடியில் அந்த அக்ரஹாரத்தில் சிவகுரு ''கைப்பள்ளி இல்லத்'' தலைமை பூண்டவராக வாழ்ந்து வந்தார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காலடியிலும் அதன் அருகாமையிலும் பத்து இல்லம் சார்ந்தவர்கள் வாழ்ந்து வந்தார்கள்.

மேல் பள்ளூர் இல்லத்தைச் சார்ந்த ஆர்யாம்பாள் என்னும் குணவதி, சிவகுருவின் பார்யை ஆனாள். இருவரும் கருத்தொருமித்து இல்லறத்தை நல்லறமாக நடத்தி வந்தார்கள். அவர்களது இல்லத்தில், அக்னி தேவனின் தேஜஸ் பொருந்தியிருந்தது.

ஹோம குண்டத்திலிருந்து எழுகின்ற புகை சிவகுருவின் வீட்டைச் சூழ்ந்திருந்தது. நெய் மணமும் மலர்களின் புது மணமும் மங்கலமாக காற்றோடு விரவிக் கலந்து வீசின.

கிரஹஸ்தன் செய்ய வேண்டிய கார்ஹ் யபத்யாக்னி, அவனியாக்னி, தக்ஷினாக்னி என்ற மூவகை அக்னியையும் வளர்த்து பெரும் பெரும் யாகங்களையும் செய்தார் சிவகுரு. ஆர்யா அவருக்கு உற்ற துணையாகி யாகங்களைச் செய்வதில் உவகை கொண்டாள்.

''பிரபோ! தாங்கள் தினந்தோறும் அளிக்கின்ற ஆகுதியை ஏற்று, தேவர்களுக்கு அம்ருதமே ருசியில்லாமல் போய் விட்டதாம்'' என்று, ஆர்யா அன்புக் கணவரிடம் கூறினாள்.

''ஆர்யா, அவ்விதம் யார் சொல்கின்றார்கள்?'' மறுநாள் செய்ய இருக்கின்ற பஞ்சமஹா யக்ஞத்திற்காகச் சமித்துக்களை எண்ணிய படியே சிவகுரு வினவினார்.

''வேறு யார்? பூர்ணா நதிக்கு ஸ்நானம் செய்யப் போயிருந்தபோது அங்கே இருந்தவர்கள் பேசிக் கொண்டார்கள்.''

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆர்யாவின் பேச்சில் லயித்து சிவகுரு புன்னகைத்துக் கொண்டார்.

யாக சாலைக்குத் தேவையானவற்றைச் சித்தம் செய்த வண்ணம் ஆர்யாவும் கணவரை நோக்கினாள்.

தேவர்களுக்கும் ரிஷிகளுக்கும் பித்ருக்களுக்கும் மனித உயிர்களுக்கும் யாவற்றையும் வழங்கும் காமதேனுவே அவதாரம் எடுத்து வந்தது போல் அல்லவா இவரும் அள்ளி வழங்குகிறார். வேதங்களில் சொல்லியபடி அணுவும் பிசகாமல் வாழ்க்கையை நடத்துவதால்தான் இவருக்கு இவ்வளவு தேஜஸா? அப்பப்பா! முகத்தில் எவ்வளவு ஒளி? ஞானமோ கரையற்றதாக இருக்கிறது. இவருடைய பொறுமைக்கு உவமை சொல்ல வேண்டுமானால் பூமா தேவியைத் தான் கூறவேண்டும்.

அளவில்லாத செல்வம், அள்ள அள்ளக் குறையாத நிதியம்... ஆனாலும்... ஏதோ ஒரு சிறு குறை இருப்பது போல அல்லவா தெரிகிறது?

''பிரபோ! தாங்கள் சற்று கலங்குவது போலத் தோன்றுகிறதே; காரணத்தை நான் அறிந்து கொள்ளலாமா?''

சமித்துக்களை அடுக்கி வைத்துவிட்டு மனைவியின் அருகில் வந்து நின்றார். அவருடைய ஒளி மிகுந்த கண்கள், பிரம்மாண்டமாக இருக்கும் தமது இல்லத்தை மேலும் கீழும் பார்க்கின்றன.

கொட்டிலில் பசுக்கள் 'ஹம்மா' என்று குரல் கொடுக்கின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''ஆர்யா, குறையாத நிதியம், ஒரு கோதில்லாத மனைவி, கூடி நிற்கின்ற உறவும் சுற்றமும் ஆனாலும் ஒரு மனிதனின் சந்தோஷத்தைப் பூர்ணமடையச் செய்வது.. அவன் பெறும் பிள்ளைச் செல்வம் தானே.''

ஆம். ஒரு மனிதனுக்குப் புகழைத் தர ஒரு பிள்ளை வேண்டுமே! பூக்காத செடியும் காய்க்காத மரமும் மனிதன் மதிப்பில் வீழ்ந்து தானே போகின்றன. தந்தையின் வழியில் சென்று, நின்று உலகம் புகழ ஒரு தனயன் வேண்டுமே! தனயன் இல்லாதது பெரும் குறை தானே.

''பிரபோ! தங்களுடைய மனக் குறையை நான் உணர்ந்து கொண்டேன். நாம் மணந்து கொண்ட பிறகு வஸந்தமும் கோடையும்பல வந்து போயின. ஆனாலும் நமது வாழ்விலே வஸந்தம் வரவில்லை. ஸ்வாமி! வேண்டுவதையெல்லாம் அளிக்கும் பரம்பொருளை நாம் சரணடைவோம். நம் குறையும் தீரும்.''

ஆர்யாவின் சொற்களில் பொதிந்த பொருளை சிவகுரு எண்ணிப் பார்க்கிறார்.

''யோசிக்க வேண்டாம். பிரபு, மஹா பாரதத்தில் உபமன்யுவின் சரித்திரத்தை, தாங்கள் படித்திருக் கிறீர்களே. சிவபெருமான் வரமளிக்கும் பெருமான். திருச்சிவப் பேரூர் சென்று, வடக்கு நாதனின் பாதங்களில் வீழ்ந்து, விரதம் இருப்போம். நம் எண்ணம் ஈடேறும் வரை விரதம் இருப்போம்.

''அப்படியே செய்யலாம்'' என்று சிவகுருவும் கூறினார். பஞ்சமஹாயக்ஞத்தை ஊரும் உலகமும் போற்றச் செய்து முடித்தார். பின்பு கணவனும் மனைவியுமாக விருஷபாசலரைத் தரிசிக்கச் சென்றார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கோவிலை அடைந்து, சிவலிங்க தரிசனம் செய்தார்கள். உமையொரு பாகனாய் சடையிலே கங்கையும் இளம் பிறையும் தரித்தவராக விருஷபாசலர் அவர்களின் நெஞ்சிலே நிலை பெற்றிருந்தார். சிவகுருவும் ஆர்யாவும் தூயமனத்தோடு விரதத்தைத் துவக்கினார்கள்.

பழங்களையும் கிழங்குகளையுமே புசித்து சிவசிந்தனையுடன் சந்நிதியில் தங்கியிருந்தார்கள். நாளெல்லாம் தியானத்திலே சென்றது.

விஸ்தாரமாக விளங்கிய கூத்தம்பலத்தில், சிவகுரு அமர்ந்து கொண்டதும் அவரருகே ஆர்யாம்பாளும் அமர்ந்து கொண்டாள்.

கோயிலின் மேற் கூரைகளையும் சுற்றுச் சுவர்களையும் சித்திரங்களையும் வியப்போடு பார்த்தாள். எத்தனையோ முறை வந்து கண்டுகளித்த கோவில்தான். ஆனால் இதுபோல நாட்கணக்கில் தங்கி இருந்த தில்லையே.

கோவிலைப் பற்றிய ஒவ்வொரு விஷயமும் அவளது மனத்திற்குள் தெய்வ சாந்நியத்தைப் பிறப்பித்தது. கோவிலில் ரிக்வேத முழக்கங்கள் கேட்ட வண்ணம் இருந்தன.

வேதங்களும் புராணங்களும் கற்று, ஞானச் செறிவுடன் விளங்கிய சிவகுரு, ஆர்யாம்பாளுக்கு விளக்கங்களை அளித்தார். பக்தியினால் மனம் கசிந்து, தம்பதிகள் விருஷபாத்ரியிடம் ஒன்றிப் போனார்கள்.

பிரம்மாண்டமான பிராகாரங்களைப் பிரதக்ஷணம் செய்யும் போதெல்லாம் கோவிலின் அருமை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெருமைகளைக் கூறுவதும், கணவர் கூறுவதை ஆர்யாம்பாள் மிகுந்த ஆவலுடனும் பக்தியுடனும் கேட்பதும் வழக்கமாயிற்று.

''பரசுராமர். சிவபக்தர் மட்டுமல்ல; சிவபெருமானின் சீடராக இருந்து தனுர்வேதத்தைக் கற்றுக் கொண்டவர். அவர், சிவபெருமானை, இந்த கேரளநாட்டில் எழுந்தருள வேண்டுமென்று, வேண்டிக் கொண்டாரம். பரசுராமனின் வேண்டுதலை ஏற்று பரமசிவன், பார்வதி, விநாயகர், தர்ம சாஸ்தா, ரிஷபம், பூதகணங்கள் இவர்களோடு இந்த க்ஷேத்திரத்திற்கு வந்தார். இந்த க்ஷேத்திரத்தில் சிவபெருமான் எழந்தருள ஒரு அருமையான இடத்தைத் தேர்ந்தெடுத்தார். அவ்விடத்தில் ஸ்வாமி கோவில் கொண்டார். சிவனும் விஷ்ணுவும் சேர்ந்து சங்கர நாராயணராகவும் காட்சி தருவதைப் பார்த்தாய் அல்லவா?''

''பார்த்தேன். சிவன் வேறு விஷ்ணு வேறு என்று பிரிக்க முடியாது என்ற தத்துவத்தை விளக்குகிறதே.''

''எடபம் (ரிஷபம்) குன்னு (குன்று) நாதன் (தலைவன்) என்பதுதான் 'வடக்கு நாதன்' என்று மருவிற்று.''

பரசுராம க்ஷேத்திரத்திலே வடக்கு நாதன் கோவிலிலே, சிவகுருவும் ஆர்யாம்பாளும் வந்து தங்கி விரதம் இருக்கத் துவங்கி பல தினங்கள் சென்றன. நாட்கள் சேர்ந்து மாதங்களும் ஆயிற்று.

நம்பூதிரிகள் நிகழ்த்தும் பூஜைகளில் தவறாது கலந்து கொண்டு மனம் கசிந்து நின்றார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''வடக்கு நாதா, வடக்கு நாதா, என் அப்பனே, எங்கள் மனம் குளிர வரம் தருவாய் அப்பா'' என்று நெஞ்சுருகி பிரார்த்தித்தார்கள்.

நீண்ட பிராகாரங்களிலும் உயர்ந்த தூண்களிலும் அவர் களுடைய பிரார்த்தனை எதிரொலித்தது. தூய பிரார்த்தனை காற்றில் ஒன்றியது.

கூத்தம்பலத்தில் நூற்றுக்கணக்கான பேர்கள் அமர்ந்து கூடியாட்டத்தைக் கண்டு ரசித்தார்கள். அதைக் கடந்து சென்று சிவகுருவும் ஆர்யாம்பாளும் கோவிலின் முன்வாயிலை அடைந்தார்கள். வாயிலுக்கு மேற்புறத்தில் அதியற்புதமாகத் திகழ்ந்த நடராஜப் பெருமானின் அழகிலே மெய்மறந்தார்கள்.

''ஆர்யா, பச்சிலை வர்ணத்தால் எழுதப் பெற்ற இந்த ஓவியத்தைப் பார்க்கப் பார்க்க மனத்தில் ஆனந்தம் பொங்குகிறதே.''

''ஆனந்தக் கூத்தனைக் காண ஆனந்தம் பொங்கத்தானே செய்யும்.''

நடராஜரின் தரிசனத்தைத் தொடர்ந்து நரசிம்மர், ராமர் என்று தரிசித்துப் பரவசமெய்தினார்கள். பக்தியில் திளைத்தார்கள்.

பூஜா காலங்கள் முடிந்து, ஜனங்களெல்லாரும் சென்ற பின்பு தம்பதிகள், பழமும் தீர்த்தமும் பிரஸாதமாக உட்கொண்டு 'சிவ சிவ' என்று ஜபம் செய்தவாறே உறங்கினார்கள்.

மிகப் பழமையான வடக்கு நாதன் கோவில் தக்ஷிண காசி என்று அழைக்கப்படுகின்றது. தென் கைலாசம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்று போற்றப்படுகிறது. சிவகுரு, ஆர்யாம்பாள் வணங்கி வழிபட்ட ஸ்தலம் இது.

நான்கு திக்குகளிலும் உள்ள நான்கு வாயில்களையும் கோவிலைச் சுற்றியுள்ள நீண்ட பிராகாரங்களையும் வலம் வந்து, வலம் வந்து, ஆர்யாம்பாளும் சிவகுருவும் தளர்ந்தார்கள். ஆயினும் அவர்களுடைய உள்ளங்கள் சிறிதளவும் தளரவில்லை. மெல்ல நடந்தார்கள்; மகாதேவனின் திருவருளை நினைத்து நினைத்து, நடந்து நடந்து, வலம் வந்தார்கள்.

பொழுது புலர்வதற்கு முன்பே, இருவரும் துயில் நீங்கி இறைவனை மனமுருகி விளித்த வண்ணம் மண்டபத்திலிருந்து எழுவார்கள்.

''மகாதேவ! மகாதேவ!''

வாய், ஓயாமல் இறைவனின் திவ்ய நாமத்தை உச்சரித்துக் கொண்டே இருக்க, நதியிலே உடலும் உள்ளமும் குளிர நீராடுவார்கள்.

நீர்மைக் குணம் கொண்ட இறைவனையே ஸ்பரிசிப்பது போல ஆனந்தமடைந்து நீராடி முடித்துத் தூய நினைவுகளோடு கரையேறுவார்கள்.

அருகிலே இருக்கும் நந்தவனத்திலிருந்து இரு கை நிறைய மலர்களும் வில்வ தளங்களும் பறித்து வருவார்கள். கருவறைக்குள் குனிந்து சென்றார்கள். இறைவனைப் பணிவோடு அணுக வேண்டும் என்பதற்காகக் கோவிலின் கருவறைக்குச் செல்லும் நிலைவாயிலை தாழ்வாக அமைத்திருக்கிறார்களோ என்று ஆர்யாம்பாள் எண்ணினாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மலர்கள், வில்வ தளம் இவற்றுடன் தங்களுடைய மனத்தையும் சமர்ப்பித்து, தண்டனிட்டு நின்றார்கள்.

நித்திய பூஜையும் நித்திய பாராயணமும் மானஸ வேள்வியும் பிரார்த்தனையும் இடையறாது நடைபெற்று வந்தன.

உண்ணுவதும் உறங்குவதும் அவன் சந்நிதியில் - வரம் பெற்ற பின்பே ஊர் செல்வது என்ற வைராக்யத்துடன் வாழ்ந்திருந்தார்கள்.

கருணா மூர்த்தியான வடக்கு நாதன் பக்தர்களைச் சோதித்த பிறகுதானே வரமளித்து மனமகிழ்ச்சியைத் தருவான்.

மண்டபத்திலே வெற்றுத் தரையிலே தம்பதியர் படுத்திருந்தார்கள். மாட மாளிகையில் பஞ்சணையில் சயனித்திருந்தவர்கள், விரதத்தால் வாடிச் சுருங்கி கல் தரையில் படுத்திருப்பதை சிவபெருமானின் கருணைக் கண்கள் கண்டன.

வாடிய பயிருக்கும் வாடிய மனிதருக்கும் வாட்டம் போக்கும் வள்ளல் அவனல்லவா? விருஷபாசலர் சிவகுருவின் கனவிலே தோன்றினார்.

''சிவகுரு, உன் விரதத்திற்கான காரணம் என்ன? உனக்கு என்ன வரம் வேண்டும் கேள்!'' என்றார். அவரது மதிவதனத்தில் மலர்ந்த மந்தஹாசப் புன்னகை சிவகுருவின் மதியிலே தெளிவைத் தந்தது.

கயிலை வாசனைக் கண்ணாரக் கண்டு களித்து, போற்றினார்; துதித்தார்; பின்பு தமது விரத நோக்கத்தைக் கூறினார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''உன் விரதத்திற்கான பலனாக, பிள்ளையைப் பெறுவாய்; ஆனால் யாம் கூறும் இரண்டில் ஒன்றை நீ தான் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும், ஞானமும் நற்குணங்களும் பொருந்தி, சிலகாலமே வாழும் பிள்ளை வேண்டுமா? அல்லது நீண்ட ஆயுளுடன் கூடிய ஒரு சாதாரண மகன் வேண்டுமா?

வித்யாதி ராஜரின் பிள்ளை சிவகுருவுக்கும் மஹா பண்டிதரின் மகள் ஆர்யாம்பாவுக்கும் பிறக்கும் மகன் ஸர்வஜ்ஞனாகத் தானே திகழ வேண்டும்?

''நல்ல கல்வியும், குணங்களும், நிறைந்த பிள்ளையே வேண்டும்!'' என்று சிவகுரு வணங்கிப் பிரார்த்திக்க பகவானும் அவ்வாறே அளிப்பதாக ஆசீர்வதித்து, தம்பதியரை இல்லம் செல்லுமாறு கூறி, மறைந்தார்.

கனவு கலைந்து விழிப்பு வந்ததும் சிவகுரு பரவசத்துடன் எழுந்திருக்கிறார். மனைவியை எழுப்பி, தாம் கண்ட கனவைக் கூறலானார். சிவபெருமான் தோன்றிய திவ்ய காட்சியைக் கூறி விட்டு பின்பு அவர் அளித்த வரத்தையும் அதன் விபரத்தையும் எடுத்துரைத்தார். ஆர்யாம்பாள் உள்ளம் நெக்குருகினாள்; வடக்கு நாதனின் அருளில் அவள் மனம் திளைத்தது; கண்கள் பனித்தன.

மறுநாள் இருவரும் காலடிக்குத் திரும்பி வந்தார்கள். கனவு பலிக்கும் காலமும் கை கூடியது. ஆர்யாம்பாள் கர்ப்பம் தரித்தாள். சிவகுருவின் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. பிராமணர்களுக் கெல்லாம் போஜனமிட்டு தானமும் அளித்து மகிழ்ந்தார் சிவகுரு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விருஷபாசலனே வந்து வரம் தந்த வைபவத்தைச் சொல்லிச் சொல்லி பூரித்துப் போனார்கள்.

ஞானப் பிழம்பைக் கருவாகச் சுமந்த ஆர்யாவின் உடலும் ஒளி பெற்றுப் பிரகாசித்தது, உலகத்தை உண்டாக்குபவனையே அவள் தன்னுள் உண்டாகி இருந்தாள்.

அண்ட பகிரண்டங்களையும் விட பெரியதான பரம் பொருளையே தன்னுள் சுமப்பதாலோ என்னவோ அவளுடைய மெல்லுடல் பாரம் தாங்காமல் தள்ளாடியது. காற்றும் மெல்லிய பூவும் கூட அவளுக்கு கனமாகத் தோன்றின.

நாட்கள் பல சென்றன. திருவுடன் கூடிய கருவும் வளர்ந்தது. ஆர்யா கருவுற்றிருந்த காலத்திலே பல விதமான இனிய நிகழ்ச்சிகளை அனுபவித்தாள். சிவத்தையே சுமந்து அவனை வளர்க்கும் ஸேவையில் அவள் உடல் இளைத்தாலும் மனம் இன்பத்திலே திளைத்தது. அவளுடைய காதுகளில் சதா வித்யாதரர் களின் இனிய இசையொலியும் வாழ்த்தொலியும் ஒலித்துக் கொண்டே இருந்தன. வெண்ணிற ரிஷபத்திலே ஏறி மேகங்களினூடே செல்வது போன்ற கனவுகளைக் கண்டாள்.

ஆர்யாம்பாளின் உடல் பொலிவையும் முகத்தின் ஆபூர்வமான காந்தியையும் கண்டு சிவகுரு வியந்தார். ''எல்லாம் ஈசனருள்'' என்ற எண்ணத்துடன் விருஷபாசலரை நமஸ்கரித்தார். விருஷபாசலரே ஆர்யாம்பாளின் வயிற்றில் உதிக்கப் போகிறார் என்று திடமாக நம்பினார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவகுருவின் விருப்பம் நிறைவேறும் நன்னாளும் வந்தது.

வைகாசி மாதம். சுக்ல பக்ஷ பஞ்சமி தினம். சிவபெருமானுக்குரிய திருவாதிரை நக்ஷத்திரம். ஆர்யாம்பாள் பிள்ளையைப் பெற்றாள். மதலையின் சோபை நிறைந்த முகத்தையும் பொற்குரலையும் கண்டும் கேட்டும் சிவகுரு மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைத்தார்.

சிவகுரு, குழந்தை பிறந்தால் என்னென்ன செய்ய வேண்டுமோ அவற்றைச் செய்தார். பிராமணோத்த மர்களை அழைத்து அவர்கள் மனம் குளிர, பொன்னும் பொருளும் கொடுத்தார்.

சுபயோக சுபவேளையில் ஜனித்த குழந்தையைக் கண்ட சிவகுருவும் ஆர்யாம்பாளும் வடக்கு நாதரே தமக்குப் பிள்ளையாக வந்து அவதரித்ததாக பூரித்தார்கள்.

கானகத்தில் மானும் புலியும் யானையும் சிங்கமும் தவளையும் பாம்பும் பகை மறந்து ஒன்றாக உலவிய அதிசயங்கள் நிகழ்ந்தன, அப்போது,

தெய்வக் குழந்தையாக, கைலயங்கிரியை விட்டு காலடி க்ஷேத்திரத்தில் சங்கரர் அவதரித்தார். ஸர்வஞ்ராகத் திகழ இருப்பதை உணர்த்தும் வகையில் பூமண்டலமே சிலிர்த்தது. பசுங் கொடிகளிலும் மரம் செடிகளிலும் பூக்கள் மலர்ந்து மணம் வீசின.

மகாதேவர் மண்ணில் பிறந்தார். ஆம். காலடி மண்ணில் பிறந்தார். பூவுலகில் பரமேஸ்வரன், சங்கரராய் அவதரித்தார். குழந்தையின் தெய்வீகத் தன்மையை, பெற்றோர் உணர்ந்து சீராட்டி வளர்த்தார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிறந்த ஒராண்டிலேயே பல மொழிகளைப் பேசி சங்கரர் பெற்றோரை மகிழ்வித்தார். இரண்டு வயதில் காவியங்களும் புராணங்களும் இசைக்கும் வல்லமை பெற்றார். வாக்கு வன்மையும் புத்தி சாதுர்யமும் நிறைந்த சங்கரருக்கு போதிக்க அவருடைய ஆசிரியர் நிறைய கற்கலானார். சங்கரர் நான்கு வேதங்களையும் கற்றார்.

சங்கரருக்கு மூன்று வயதாகும் போது அவரது தந்தை சிவகுரு, சிவலோகப்ராப்தியை அடைந்தார்.

ஆர்யாம்பாளின் அன்பிலும் அரவணைப்பிலும் சங்கரர் வளர்பிறையென வளர்ந்து வந்தார். அவருக்கு ஐந்து வயதாகும் போது உற்றாரும் உறவினரும் சூழ உபநயன வைபவம் செய்து வைக்கப்பட்டது. பிரம்மசர்ய விரதம் பூண்டு, சங்கரர் குருகுல வாஸம் செய்தார். வேதத்தை நன்கறிந்த பிரம்மாவைப் போலவும் கர்மத்தை வகுத்த ஜைமினி போலவும் அறிவிலே பிரஹஸ்பதி யாகவும் தத்துவஞானத்தில் பாதராயணருக்கு நிகரானவ ராகவும் சங்கரர் விளங்கினார். உபநிஷதங்களில் தோய்ந்து மகிழ்ந்தார்.

குருகுலவாஸம் செய்யும் காலத்தில் சங்கரர், பிக்ஷைக்காக ஒரு வீட்டிற்குச் சென்றார். மிகவும் ஏழ்மையானவர்கள் வசிக்கும் இடம் என்பதை வீட்டின் சிதிலமான நிலையே பறை சாற்றியது. இளம் பாலகனான சங்கரர் ''பவதி பிக்ஷாந்தேஹி'' என்று குரல் கொடுத்தார். அக்குரலைக் கேட்டு வீட்டினுள்ளே இருந்து ஒரு பெண்மணி வந்தாள்.

மெலிந்த வாடிய தோற்றம்; பல நாட்கள் அன்ன ஆகாரமில்லாமல் இருந்ததால் தளர்ந்த நடை; பஞ்சடைந்த கண்கள்; ஆயினும் வீடு தேடி வந்து பிக்ஷை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கேட்பவர்க்கு, ஏதேனும் கொடுக்க வேண்டும் என்ற தாபம்; கிடைத்த நெல்லிக்கனியைக் கொண்டு வந்தாள்.

''வீடு தேடி வந்து பிக்ஷை கேட்கும் தங்களுக்கு இல்லையென்று சொல்லாமல் அளிக்க முடிந்தது, இந்த நெல்லிக்கனி ஒன்றுதான். இதனை ஏற்றுக் கொள்ளுங்கள்.'' என்று மிகுந்த வினயமும் பக்தியும் கலந்த குரலில் கூறி, சங்கரரின் பிக்ஷைப் பாத்திரத்தில் அக்கனியை இட்டாள். அவளது சொற்களும் தோற்றமும் சங்கரரின் மனத்தில் அவள்பால் கருணை கொள்ள வைத்தன.

சங்கரர், மஹாலக்ஷ்மியை ஸ்தோத்திரம் செய்தார். கனக தாரா ஸ்தோத்திரத்தைக் கேட்டு ஒளி மயமாக அவர் முன்னே மஹாலக்ஷ்மி காட்சி தந்தாள்.

''தேவி, எனது ஸ்தோத்திரத்தில் மகிழ்ந்து பிரத்யக்ஷமாகியதற்கு வந்தனம். இந்த ஏழைப் பெண்மணியின் குடிலில் உன்னுடைய அருட் கடாக்ஷம் நிறைந்த பார்வையைச் செலுத்த வேண்டும் தாயே!''

சங்கரரின் வேண்டுகோளை மஹாலக்ஷ்மி ஏற்றாள். நெல்லிக்கனி கொடுத்த பெண்மணியின் குடிலில் தங்க நெல்லிக்கனிகள் மழையாகப் பொழிந்தன. கனக தாரையாகப் பொழிந்ததைக் கண்டு, ஊராரும் உலகத்தாரும் பொன்மழை வர்ஷித்த சங்கரரின் பெருமையை உணர்ந்து போற்றினார்கள்.

''கற்பக விருக்ஷம்'' என்று அவரைக் கொண்டாடினார்கள்.

சங்கரரின் குருகுல வாஸம் முடிந்ததும், அவர் மீண்டும் காலடியில் அன்னையிடம் வந்து சேர்ந்தார். ஒளி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மிகுந்த பிரம்மச்சாரியாகத் திகழ்ந்த சங்கரரின் பேரறிவையும் பெரும் குணங்களையும் அன்னை பெருமையுடன் பார்த்திருந்தாள்.

ஆர்யாம்பாள், தினமும் பூர்ணாநதிக்குச் சென்று ஸ்நானம் செய்து வருவது வழக்கம். உபவாசங்களும் விரதங்களும் மேற்கொண்டு மெலிந்திருந்த ஆர்யாம்பாள், ஒரு நாள் ஸ்நானம் செய்துவிட்டு வரும்போது வழியில் மயங்கி வீழ்ந்து விட்டாள்.

தாயின் உடல் நலம் கருதி, சங்கரர் பூர்ணாநதியை வேண்டிக் கொள்ள, உடனே அந்நதி, பூரண பிரவாஹத்துடன் ஆர்யாம்பாளின் வீட்டினருகே பாய்ந்து ஓடத்துவங்கியது. இந்த அதிசயத்தை, சங்கரர் எனும் தெய்வக் குழந்தையின் அருட் செயலை, ஊரே கண்டு வியந்தது. பூர்ணா நதியை 'அம்பா நதி' என்றும் சொல்லுவார்கள்.

இந்த அரிய சம்பவம் கேரள மன்னரின் காதுகளில் விழுந்தது. சங்கரரைக் காணும் ஆவலும் அவரைப் பெருமைப் படுத்தவேண்டும் என்ற எண்ணமும் தோன்றின. சங்கரரைத் தகுந்த மரியாதைகளுடன் அரசவைக்கு அழைத்துவர ஆட்களை அனுப்பினார். ஆனால் சங்கரர் பணிவோடு, அவற்றை மறுத்தார்.

ஆனால் மன்னர் சங்கரரை தரிசிக்க வேண்டுமென்ற ஆவலுடன் அவரைத் தேடி காலடி க்ஷேத்திரத்திற்கு வந்து வணங்கிச் சென்றார்.

ஆர்யாம்பாள், சங்கரருக்கு உரிய வயதாகிவிட்டது என்று தகுந்த பெண் தேடத்துவங்கினார். மகனை மணக் கோலத்தில் காண அந்தத் தாயின் நெஞ்சம் துடித்தது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சங்கரர் இதனை உணர்ந்தார். அன்பிற்குரிய தாயின் மனம் புண்படாமல், அவளைப் பிரிந்து துறவு வாழ்வை மேற் கொள்ள வேண்டும் என்று, அதற்கான வழியைத் தேடினார்.

ஒருநாள் நதியிலே சங்கரர் ஸ்நானம் செய்து கொண்டிருந்த போது முதலை ஒன்று அவருடைய காலைப் பற்றிக் கவ்வி இழுத்தது. சங்கரர் ''அம்மா'' என்று அலறினார்.

ஆர்யாம்பாள் மகனின் அலறலைக் கேட்டு ஓடிவந்தார். நிலைமையைப் புரிந்து கொண்டாள். மனம் வேதனையில் துடித்தது.

''கொண்ட கணவனையும் இழந்தேன். அருமையாக வளர்த்த மகனையும் இழந்து எங்ஙனம் வாழ்வேன்?'' - என்று அழுது புலம்பினாள்.

''தாயே, இந்த முதலை, தன் பிடியை விட்டுவிட ஒரு வழி உள்ளது.'' என்றார், சங்கரர்.

''சொல், சங்கரா, என்ன வழி என்று சொல்'' என்று அம்மா அவசரப்படுத்த...

''நான் சந்யாசியாக, தாங்கள் அனுமதி அளித்தால் போதும். இந்த முதலை விட்டுவிடும்.''

தான் பெற்ற பிள்ளை எங்கேனும் உயிரோடு இருந்தால் போதும் என்று எண்ணியது தாயுள்ளம். சங்கரர் சந்யாசியாக உத்தரவு கொடுத்தாள். பிள்ளையை முதலையின் பிடியிலிருந்து காப்பாற்றினாள்.

''சங்கரா. சந்யாசியாகப் போய் விட்டால், என் இறுதிக் காலத்தில் எனக்குச் செய்ய வேண்டிய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கர்மாக்களை யார் செய்வார்? எனக்கிருப்பது நீ ஒரே மைந்தன் தானே!''

''தாயே! நீ, எப்போது விரும்புகிறாயோ, அப்போது நான் உன்னருகே வருவேன். உன் அந்திம காலத்தில் உன்னருகே இருப்பேன்'' என்று சங்கரர் தாய்க்கு வாக்களித்தார்.

சங்கரர், சந்யாசியாகி, காலடியை விட்டுக் கிளம்பினார். காஷாயம் தரித்து குருவைத் தேடி நடந்து சென்றார். நெடு நாட்கள் பயணம் செய்தார். கானகத்தின் நடுவிலே கோவிந்த பகவத் பாதரின் ஆசிரமத்தை அடைய சமவெளிகள், மலைப் பாங்கான பகுதிகள், நதி தீரங்கள் எனப் பயணம்செய்து கொண்டிருந்தார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

6

காஷ்மீரத்திலும் மாஹிஷ்மதியிலும்

காஷ்மீரத்துப் பண்டிதர்களும், மகதத்தின் மாஹிஷ்மதிப் பண்டிதர்களும் பல்வேறு துறைகளில் ஒன்றிய சிந்தனையும் ஈடுபாடும் கொண்டிருந்தார்கள். குறிப்பாக, வியா கரணம், தர்க்கம், மீமாம்ஸை, போன்றவற்றில் கருத்துப் பரிவர்த்தனைகளில் ஐக்கியப்பட்ட தன்மை மிகுதியாக நிலவியது.

முந்தைய நூற்றாண்டுகளில் அப்பிரதேசங்களில் ஆட்சி புரிந்த மன்னர்களின் நிலைகளால் குடிமக்களிடம் நிலவி வந்த சமயநெறி திசைகள் மாறிக் கொண்டிருந்தன.

அநாதியான வேதங்களின் தர்ம சாஸன நெறிகள் தழைத்தோங்கும் மகத்தான பணிகளில் காஷ்மீரத்துப் பண்டிதர்கள், மாஹிஷ்மதிப் பண்டிதர்களுடன் அணி சேர்ந்து ஒருமையாக இருந்தார்கள். ஆழமான சிந்தனைகளில் ஈடுபட்டு, பரஸ்பரம் கருத்து மாறுபாடுகளைக் களைந்து கொண்டு, விசாரங்கள், விவாதங்கள் புரிந்து வேதமார்க்கப் பரிபாலனத்தில் தீவிரமாக இருந்தார்கள்.

விசுவரூபர் தம் சிறுவயதிலேயே தந்தையுடன் பயணம் செய்வதில் விருப்பம் கொண்டு, தத்துவங்களில் நுண்ணறிவு பெறுவதில் ஆர்வமுடன் இருந்தார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காஷ்மீரத்திலிருந்து மாஹிஷ்மதி நகரம் சென்றுவரும் தந்தையுடன் விசுவரூபரும் பல முறை அந்நகரம் சென்றிருக்கிறார். சில காலம் அந்நகரில் வாசம் செய்த விசுவரூபரிடம் மாஹிஷ்மதி நகரத்துப் பண்டிதர்கள் பெருமதிப்பும் பேரன்பும் கொண்டிருந்தார்கள்.

வேதவாழ்வினைக் கைப் பிடிப்போம் என்ற இலட்சிய வேட்கை விசுவரூபரின் வாழ்க்கையுடன் இணைந்திருந்தது. அந்த வேட்கை நடைமுறைப்பட்டும் அவருக்குப் பெருந்துணை புரிந்தது.

வேதம் அறிவைத் தரும் நூல் என்பதே அவர் வாக்கு.

'விதஞானே' என்ற வேர்ச் சொல்லிலிருந்து வந்ததல்லவா, இந்த ''வேதம்'' என்ற சொல்!

ஒன்றாக இருந்த வேதத்தை, வியாசர் வேத ராசி பிரித்து ரிக் வேதத்தை பைலருக்கு அருளி, யஜுர் வேதத்தை வைசம்பாயனருக்குத் தந்து, ஸாம வேதத்தை ஜைமினிக்குக் கொடுத்து, அதர்வத்தை ஸுமந்துவிடம் வழங்கி உலகுக்கு உபதேசிக்குமாறு செய்தருளினார். மேலும், ஸம்ஹிதா, ப்ராம்ஹணம், ஆரண்யகம், உபநிஷத் என நான்கு உட்பிரிவுகளாக்கியும் உபதேசித்தார், வேதவியாசர். அவரே வியாச பகவான் என்றும் போற்றப்படுபவர்.

நான்கு வேதங்கள்; ரிக் என்றால் சந்தத்துடன் கூடிய செய்யுள் என்று அர்த்தம், அது செய்யுள் வடிவானது.

யஜுர் என்பதன் பொருள் உரை நடை; உரை நடையில் அமைந்த இந்த வேதத்தில் செய்யுளும் உண்டு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸாமம் என்றால் இசை; இது ஸப்தஸ்வரங்களுடன் கானம் செய்யப்படுவது; நான்கு ஸ்வரங்களாக உதாத்தம், அனுதாத்தம், ஸ்வரிதம், பிரசயம் என்றும் இசைக்கப்படும்.

அதர்வ வேத மந்திரங்கள் நன்மை தரவும், கேடுகளை அகற்றவும் சத்ருக்களை ஒழிக்கவும் பயனளிக்கும்; அதர்வ வேதம் ஒன்பது சாகைகளைக் கொண்டது; சாமத்தில் ஆயிரம் சாகைகளும் ரிக்வேதத்தில் இருபத்தியோறு சாகைகளும் உள்ளன. யஜுர் வேதத்தில் நூற்றியோரு சாகைகள் உள்ளன.

சாகை என்றால் கிளை.

வேதம் என்கிற பெருவிருக்ஷம் நான்கு வேத விருக்ஷங்களாகி, சாகைகள் என்னும் கிளைகளுடன் வேத ஆரண்யமாகவே தழைத்தோங்கியது.

யஜுர் வேதத்தை வைசம்பாயனரிடம் கற்ற அவரது சிஷ்யர் யாஜ்ஞவல்கியர் கருத்து வேறுபாடு காரணமாக, கற்றதை அவரிடமே கக்கிவிட்டார். தித்திரி பக்ஷி வடிவில் அவற்றைக் கிரஹித்துக் கொண்டார்கள் சிஷ்யர்கள். அது தைத்ரீய ஸம்ஹிதை. கிருஷ்ண (கறுப்பு) யஜுர் வேதமாகும்.

யாஜ்ஞவல்கியர் சூரியனை உபாசித்து, அயாத யாமங்கள் என்ற யஜுர் வேத மந்திரங்களை உபாசிக்கப் பெற்றார். வாஜம் என்ற குதிரை வடிவில் சூர்யனால் உபதேசிக்கப் பட்ட இம்மந்திரங்களை சுக்ல (வெண்மை) யஜுர் வேதம் என்றழைத்தார்கள்.

ரிக், ஸாமம், அதர்வ வேதங்களும் பல சாகைகளுடன் ரிஷிகள் மூலம் உபதேசிக்கப்பட்டு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பரவின. எல்லாவற்றிலும் விசுவரூபர் ஆழ்ந்து, கற்றறிந்தார்.

தெளிவின் ஸ்வரூபமாக வளர்ந்தார். தேஜஸுடன் திகழ்ந்தார் விசுவரூபர். வேதங்களின் சாகைகளில் பாண்டித்யம் பெற்றதையும் அவற்றை உச்சரிப்பதில் தேர்ந்த கலைஞானம் கொண்டிருந்த மகனைக் கண்டு, தந்தை ஹிமமித்ரர் பெருமகிழ்வு எய்துவார்.

அத்யயனம் என்பது மிகவும் அறிந்து உணர்ந்து தெளிந்து செய்யப்படும் ஒன்றாகும்.

வேதமந்திரங்களை உச்சாரணம் செய்யும்போது அதனைக் கண்டறிந்த ரிஷி, அதன் அமைப்புச் சந்தம், அதனால் போற்றப்படும் தேவதை ஆகியவற்றையும் மனத்தில் இருத்தி வேதம் ஓதுதல் மரபு. இவ்வாறு மரபு வழுவாமல் ஓதுகின்ற விசுவரூபரின் பாங்கு, அனைவரையும் குறிப்பாகப் பண்டிதர்களையும் வியப்பிலாழ்த்தும்.

வேதத்தில் ஆறு அங்கங்கள்: சிஷா என்பது உச்சரிக்கும் முறை இலக்கணம் (வேதத்தின் மூக்கு). விசுவரூபர் ஸ்வரம் மாறாது சொல்லும் தொனி பலரையும் கவர்ந்தது.

வியாகரணம் என்பது மொழி இலக்கணம். (வேதத்தின் வாய்); சந்தஸ் என்பது யாப்பிலக்கணம் (வேதத்தின் கால்); நிருக்தம் என்பது அரும்பதவுரை (வேதத்தின் காது); ஜியோதிஷம் என்பது நக்ஷத்திர, கிரஹம் பற்றியது (வேதத்தின் கண்); கல்பம் என்பது வேள்விகளின் செய்முறை (வேதத்தின் கை).

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேதம் தான் மூலப்ரமாணம். மஹான்கள் ரக்ஷித்த வேதங்களில் விசுவரூபர் பெற்ற பாண்டித்யத்தைக் கண்டு ஹிமமித்ரர் பெரிதும் உவகையடைந்தார்.

நான்கு வேதங்கள், ஆறு உபாங்கங்களுடன் மீமாம்ஸா, ந்யாயம், தர்ம சாஸ்திரம், புராணங்கள் ஆகியவையும் சேர்ந்திட பதினான்கு வித்யா ஸ்தானங்கள் என்பர். இவற்றோடு ஆயுர் வேதம், தனுர்வேதம், காந்தர்வம் (சங்கீதம், நாட்டியம்), அர்த்த சாஸ்திரம் என்ற நான்கும் கற்றறிய வேண்டியவை. ஆக, பதினெட்டு வித்யைகள்.

ரிஷிகளால் ஆக்கப்பட்ட இப்பதினெட்டு வித்யை களிலும், ஈடுபாடு கொண்டு, விசுவரூபர் கற்றுத் தேர்ந்தார்.

காஷ்மீரிலும் மாஹிஷ்மதியிலும் தம் விநயத்தாலும் விவேகத்துடன் கூடிய கலை வித்தைகளாலும் ஒருமுகமாகப் பாராட்டப் பெற்று வந்த விசுவரூபரை ஹிமமித்ரரும் அவரது பத்தினியும் கொண்டாடி மகிழ்ந்தார்கள்.

தாயும் தந்தையும் விசுவரூபரின் வளர்ச்சியை ஒரு வேள்வியாகக் கருதி நாள்தோறும் கணந்தோறும் கரிசனம் காட்டி வாத்ஸல்யத்துடன் வளர்த்து வந்தார்கள்.

வேதப் புலமையும் சமத்காரமும் சிறுவயதிலேயே விசுவரூபரை வந்தடைந்தது. புதிது புதிதாக சாஸ்திர விளக்கங்கள் படைக்கும் விசுவரூபரைக் கண்டு பண்டிதர்கள் வியப்பும் உவகையும் ஒருசேர அடைந்தார்கள்.

எல்லா சாஸ்திரங்களிலும் பண்டிதரானார். சர்வகலைகளிலும் உள்ளார்ந்த அறிவும் தெளிவும் பெற்றார். நுண்மாண் நுழைபுலம் மிக்கவராக ஒளிர்ந்தார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாரத தேசப் பண்டிதர்களிடையே இளம் விசுவரூபர், பெயர் பெற்று பிரதானமான பண்டிதர்களில் இவரும் ஒருவர் என்ற நிலைக்கு உயர்ந்தார். தூர தேசங்களில் வாழ்ந்தவர்களும் விசுவரூபரின் புலமையையும் சாஸ்திரஞானத்தையும் அறிந்து, அவரது புகழைப் பாடினர்.

மாஹிஷ்மதி காஷ்மீர் இரு நிலத்து அடிச்சுவடுகளின் ஒன்றிணைந்த புதுவடிவமாக விசுவரூபரை மதித்துப் பெரிதும் வரவேற்று, பல இடங்களில் சதஸ்கள், வேத விசார நிகழ்வுகள் ஆகியவற்றில் பாராட்டுப் பட்டயம் வழங்கினார்கள்.

காஷ்மீரிலும் செல்வாக்கு; முன்னோர்களின் வழி சார்ந்த மாஹிஷ்மதியிலும் பெருமதிப்பு; ஹிமமித்ரரின் பாங்கான அணுகுமுறைகளும் விசுவரூபரின் அன்பு தழுவிய அறப் பணிகளின் ஈடுபாடும் காஷ்மீரில் அவர்களின் வாசத்தை செழப்புடையதாக்கியது.

ராஜாங்கக் கவிஞராகத் திகழ்ந்து, அரசுக்குப் பெருமை சேர்த்த அவரது இல்லம், ஒரு மாளிகை போன்று அமைந்து விருக்ஷங்களும் மலர்ச் சோலைகளும் நிறைந்து காணப்பட்டது.

எல்லா நிலைகளிலும் தந்தையின் சொல்லுக்குப் பணிந்து, செயலாற்றும் தவப்புதல்வராக விசுவரூபர் இருந்ததைப் புகழாதவர்களே இல்லை.

பாண்டித்யம் நிறைந்து அறிவின் சிகரமாக விளங்கினார். சான்றோர்களிடமும் ஆன்றோர்களிடமும் சக பண்டிதர்களிடமும் பவ்யப் பாங்குடன் பணிவே உருவாக அனுசரித்து நடக்கும் விசுவரூபருக்கு நிகர் அவரே என்று பிரஜைகள் கூறுவார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஹிமமித்ரரின் மாளிகையில் யாகங்களும் வேள்விகளும் நிகழ்ந்த வண்ணமாக இருக்கும். பசுவின் நெய்வார்த்து வளர்க்கும் வேள்வித்தீயின் அக்னி ஜ்வாலையின் வேதப்ரகாசம் ஹிமமித்ரரின் மாளிகைக்கு அப்பாலும் இறை ஒளி பரப்பியது; வியாபித்தது.

செல்வந்தராயினும் சரி, சாமான்யராயினும் சரி, கேட்டுக் கொண்டார்களாயின், தர்மச் செயல்களாக இருப்பின், விசுவரூபரின் மனம் உடனே அதற்கு ஆட்படும்; அவர்களின் எண்ணத்தை ஈடேற்றி வைப்பதில், முனைப்புக் காட்டும்; சுபிட்சமும் சாந்தியும் நிலவிடச் செய்த, விசுவரூபரின் எண்ணற்ற நற்பணிகளால், காஷ்மீர தேசத்து ஹிமமித்ரரின் புதல்வர் விசுவரூபர் தேசம் முழுவதும் மிகவும் போற்றப்பட்ட உன்னதமான மகா பண்டிதராகக் கருதப்பட்டு வந்தார்.

புலமையோடு பொருளும் விசுவரூபரிடம் கைகோர்த்துக் கொண்டு களிநடம் புரிந்தன.

காஷ்மீரத்தில் பல்வேறு சதஸ்கள் நிகழும். அவை அனைத்திலும் விசுவரூபரின் பாண்டித்யமே கொடி கட்டிப் பறக்கும். காஷ்மீரத்தில் நூறாண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து வரும் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இளம் வயதுடைய விசுவரூபரின் முதிர்ந்த அறிவுக் கூர்மையில் மகிழ்ந்து திளைப்பார்கள்.

''இந்த விசுவரூபரின் தந்தை ஹிமமித்ரரும் அவர்களின் முன்னோர்களும் காஷ்மீரத்துப் பண்டிதர்கள் தான். காஷ்மீர தேசம் அவர்களது சொந்த பிரதேசம்தான். அதே போன்று மாஹிஷ்மதியும் ஹிமமித்ரரின் குடும்பத்தோடு ஒன்றியது தானே,'' என காஷ்மீரத்தின்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பழம் பெரும்பண்டிதர்கள் தங்களுக்குள்ளாகக் கூறிக் கொண்டு பெருமிதம் அடைவார்கள்.

மகததேசத்தில் உள்ள மாஹிஷ்மதியும் சோணாபுரியும் அதிக தூரமுள்ள இடங்களல்ல. மேலும் வேதங்கள் சாற்றியுள்ள தர்ம சாஸ்திரங்களில் மேம்பட்ட பல்லோர், மாஹிஷ்மதியிலும் சோணாபுரியிலும் வாழ்ந்து வருகிறார்கள்.

வேதகால முனி சிரேஷ்டர்கள் வாழ்ந்ததாக வரலாறு கூறும் இடமான வேதகர்பா (இன்றைய பக்சார்) இதனருகே தான் இருக்கிறது. புராதனப் பெருமையும், சரித்திரப் பிரசித்தியும் பெற்ற இடம் இது.

வேதகர்பா, மாஹிஷ்மதி, சோணாபுரி ஆகிய இடங்கள் பாண்டித்யம் மிகுந்த விற்பன்னர்கள், காலங்காலமாக வாழ்ந்து பெருமை சேர்த்த பாரத ஸம்ஸ்கிருதி உறைந்த இடங்கள்.

மாஹிஷ்மதியும் சோணாபுரியும் இன்றும் அத்தகைய சீருடன் திகழ்கின்றன.

கங்காநதியின் வலக்கரம் என்று வர்ணிக்கப்படுகிற சோணாநதியும் சோணாபுரியும் தொன்மைக்கும் தொன்மையான விசேஷத்துவம் நிறைந்த ஒரு புண்ணிய நதியும் புனிதப் பதியுமாகும்.



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

7

சோணா நதிக் கரையில்

சோணா நதி. யுக யுகாந்திரங்களாகப் பாய்ந்தோடிக் கொண்டிருக்கும் நதி; சுந்தரமான சோணா நதி, சிந்தூரமான தெய்வீக நதி; உத்வேகம் கொண்ட நதி. இமயமலைக் கொடுமுடிகளில் உற்பத்தியாகி, பிரவாஹித்து, பாய்ந்து வரும் கங்கை நதியின் உபநதியாக இருப்பது சோணா நதி.

ஜீவ கங்கையின் பவனி பவித்ரமானதாகும்.

பனி உருகி, நீராகி, ஆடிப்பாடிக் களிப்புடன் பாய்ந்தோடி கங்கோத்ரியின் வழிவந்து, புனித கங்கை மலைகள், காடுகள், இவற்றினூடே பாய்ந்து எண்ணற்ற சிற்றாறுகளுடன் கலக்கிறது.

கங்கை நதியுடன் தேவப்ரயாகை, கேதாரிநாத், பத்ரிநாத் போன்ற தலங்களின் சமீபமாக உற்பத்தியாகிற மந்தாகினி, அலகநந்தா நதிகள் இணைகின்றன. ரிஷிகேசம், ஹரித்வார் ஆகிய இடங்களில் பிரவாஹித்தோடி கங்கை நதி விசாலமடைந்து, பிரயாகையில் யமுனையுடனும் ஸரஸ்வதியுடனும் சங்கமமாகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புண்ணிய நதிகளின் புனித நீர்ச் சங்கமம் நிகழ்கிற பிரயாகை, திரிவேணி சங்கம ஸ்தலமாகிறது.

கங்கா நதியின் பயணம், வருணை, அஸிநதி சேருமிடம் வந்தடைந்ததும், காசிமாநகரத்தில் பாய்ந்து, காசி க்ஷேத்திரத்திற்கு மேலும் புனிதத்தை ஏற்படுத்து கிறது.

கங்கையின் இடதுபக்கக் கரையில் அமைந்த நதி கோமதி; இன்னொரு துணைநதி, மானஸரோவரிலிருந்து வருகிற கோக்ரா நதி; மற்றொரு துணைநதி, கண்டகி நதியாகும். இந்நதி பாடலிபுரத்தில் (பாட்னா) கங்கையுடன் சேர்கிறது.

நேபாளத்திலிருந்து பாய்ந்து வந்து கங்கையுடன் கலக்கும் நதி கோசி நதியாகும். கோசிநதியின் மேற்கில் பாய்கிற உபநதி தர்மமூலா ஆகும்.

கங்கை தன்னிடமிருந்து கிளை நதியாக மாதா பெஸ்க் நதியாகி, இராஜஷாஹி அருகில் பாய்ந் தோடுகிறது.

நேபாளத்தில் பாயும் கர்க்கிரா, பாரத மண்ணில் கங்கையுடன் கலக்கிறது. அருகிலேயே சரயுநதி சேர்கிறது; சாரதா என்னும் நதியும் அங்கே கலக்கிறது.

கங்கையின் தென்கிளை நதிகளில் ஒன்று பல்குனி நதி. அந்நதிக் கரையே கயா. பல்குனியின் அழகு தனியழகு. விஷ்ணுபாதமும் அக்ஷய வடமும் இங்கு பிரசித்தம், நெடுங்காலமாக உள்ள ஓர் ஆலமரமே அக்ஷயவடம் என்பது

கங்கையிலிருந்து அங்கே பல கிளை நதிகள் பிரிகின்றன. பத்மா என்னும் பெயருடன் கீழ்த்திசைப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பக்கமாகப் பாய்ந்து கோவாலுந்தா என்ற இடத்தை அடைகிறது.

கைலாஸ மலையில் உள்ள 'லோஹிதம்' என்ற ஸரஸிலிருந்து (ஏரி) தோன்றியதால் பிரம்மபுத்ராவை லௌஹித்யா நதி என்று அழைப்பார்கள். பிரம்மபுத்ரா நதியுடன் கங்கை சேர்கிற இடம் அதி அற்புதமான பிரதேசம். கங்கை, பிரம்ம புத்ராவுடன் இணைந்த பின்னர் அது மேகனா என்றழைக்கப்படுகிறது.

கங்கையுடன் ரூபநாராயண நதி கலக்குமிடம் (இன்றைய கல்கத்தாவிலிருந்து ஏறத்தாழ 50 மைல் தொலைவில்) ரம்மியமான இயற்கைச் சூழல் நிறைந்த பகுதி.

மங்காப் புகழுடைய இமயத்தில் பசுவின் வாய் போன்று கோமுகமாக உற்பத்தியாகும், கங்கை பாரதத்தின் ஜீவிதத்துடன், ஒன்றியது. தேவ நதி, திரிபாதிகை என்ற பெயர் களுடனும் சிறப்புப் பெற்றது. பாரதத்தின் ஜீவிதமான கங்கா நதியின் வலதுபுறம் உபநதியாகப் பாய்ந்தோடும் சோணா நதி தொன்மைச் சிறப்பும் காவியப் பெருமையும் படைத்ததாகும்.

சோணா நதியைப் போன்றே அந்நதிக் கரையில் அமைந்த சோணாபுரியும் பண்டைய, பிரஸித்தி பெற்ற இடமாகும்.

அக்னி தேவனின் அரும் சக்தி பொருந்திய பிரதேசம் சோணா நதியும் சோணாபுரியுமாகும். வருண தேவனின் சபையில் சோணாநதியின் தோத்திரம் வரலாற்றுச் சிறப்புடையது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சோணாநதி பாயும் பிரதேசம் ஒரு காலத்தில், தபஸ்வியாகவும் தர்மாத்மாவாகவும் சத்யவானாகவும் திகழ்ந்த வஸு என்பவரால் ஆளப்பெற்ற பிரதேசமாகும்.

பிரம்மாவின் மானஸ புத்திரர்களுள் ஒருவர் குசர் என்பவர். பூவுலகில் வந்து ஆட்சி புரிய விரும்பினார். தர்ம சாஸ்திரங்களை அறிந்து, நியமங்கள், விரதங்களை அனுஷ்டித்தவர். விதர்ப்ப ராஜகுமாரியை விவாஹம் செய்து கொண்டு, ராஜ்யபரிபாலனம் செய்தார்.

'குசர்' என்னும் அரசருக்கு குசாம்பர், குசநாபர், அஸூர்த்த ரஜஸ், வஸு என நான்கு புதல்வர்கள். அந்நால்வரும் முறையே கௌசாம்பி, மஹோதயம், தர்மாரண்யம், கிரிவிரஜம் என்னும் ராஜதானிகளை ஆண்டு வந்தார்கள்.

கிரிவிரஜம் என்ற தேசம் சோணாநதிக் கரைப் பிரதேசம் ஆகும். ஐந்து மலைகள் இருப்பதால் இது 'கிரிவிரஜம்' என்று பெயர் பெற்றது.

மலைகளின் மத்தியில் ஒரு மாலை போன்று அமைந்துள்ள சோணா நதியின் இரு கரைகளிலும் உள்ள நிலங்கள் வளம் நிறைந்தவை.

மகதத்திலிருந்து பாய்ந்தோடி வரும் சோணாநதி, கிழக்கு திசையிலிருந்து மேற்கே செல்லும் நதி என்பதால் ''சோணாநதம்'' என்றும் அந்நதியை அழைப்பார்கள்.

இந்த நதிக்கரைக்கு, கௌசிக முனிவருடன் ராம லக்ஷ்மணர்கள் ஓர் இரவு தங்கியிருந்த விசேஷத்வம் உண்டு.

மிதிலைக்கு ராஜ குமாரர்களுடன் பயணம் செல்லும் வழியில் கௌசிக முனிவர் சோணா

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நதிக்கரையைக் கண்டதும், அந்த நதிக்கரையிலே தங்க உத்தேசித்தார்.

அங்கிருந்த முனிவர்கள் பலர், கௌசிக முனிவரிடம், ஜனக மஹாராஜாவின் யாகத்தைப் பற்றிக் கூறினார்கள்.

''ஜனக மஹாராஜனின் முன்னோர்களின் யாகத்தில், தேவர்கள் மகிழ்ந்து அவருக்கு ஒரு வில் ஒன்றை வழங்கினார்கள். அந்த வில் மிகவும் அற்புதமானது. யாராலும் நாண் ஏற்ற முடியாத சிவதனுசு அது. வீர்யமான, ஒளி பொருந்தியது அந்த வில். ஜனகமஹாராஜனின் யாகத்தைக் காணச் செல்லும் போது, அந்த அற்புத வில்லையும் பார்க்கலாம்.'' என்று ரிஷி புங்கவர்கள் கூறினார்கள்.

எல்லாவற்றையும் கௌசிகர் செவிமடுத்தார். மிதிலையை நோக்கிய பயணத்தின் போது அவர்கள் கிரிவிரஜ தேசத்தை அடைந்தார்கள். சோணா நதியின் அழகில் வசீகரிக்கப்பட்ட, கௌசிகரும் ராம லக்ஷ்மணர்களும் ஸித்தாஸ்ரமத்தை வலம் வந்து, நதிக்கரைக்கு வந்து சேர்ந்தார்கள்.

சோணாநதியில் ஸ்நானம் செய்தார்கள். நித்யகர்ம அனுஷ்டானங்களைச் செய்து முடித்து, கௌசிகரை நமஸ்கரித்தார்கள்.

''முனிசிரேஷ்டரே! இந்த நதியின் பிரபாவத்தைக் கூற வேண்டும்!'' என்று ஆர்வமுடன் வினவினார்கள்.

மலைமுகடுகளின் பின்னே பகலவன் மெல்ல இறங்கும் அஸ்தமனப் பொழுதில் அவர்கள் நதிகரைக்கு வந்தார்கள். மாலை மயங்கி இரவுப் பொழுதை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வரவேற்கும் நேரம்; அந்த அந்திமாலைப் பொழுது அற்புதமான நேரமாகும். சந்தியா காலக்கன்னி ஒளிரும் ஆரஞ்சுச் சிவப்பாடையைப் போர்த்துக் கொண்டு காட்சிதரும் நேரம்; அந்த வனப்பான நேரத்திலே, நதி தீரமும் மலைமுகடும் கண் கொள்ளாக் காட்சியாகி, இயற்கையன்னை உன்னத கோலத்துடன் சித்தத்தை நெகிழ்ச்சியில் மிதக்கச் செய்தாள்.

மஹாதபஸ்விகள், இறைமையை இயற்கையின் அழகுக் கோலங்களில் கண்டு அனுபவித்து, அதில் ஒன்றி விடுகிற தவக் கோலப் பொழுது, அந்தி மாலைப் பொழுது.

அந்தி மாலைப் பொழுதில் அம்பிகையைத் துதி செய்தால் அதிகவரம் பெறலாம்.

அந்தி மாலைப் பொழுதினிலே, கௌசிகர் கூறிய சோணா நதியின் பிரபாவத்தை, ராமலக்ஷ்மணர்கள் கேட்டு மகிழ்ந்தார்கள்.

''பிரம்மாவின் மானஸ புத்ரர் குசரின் மைந்தன் குசநாபர். அவர் புத்திரகாமேஷ்டியாகம் செய்தார். யாகவேள்வியில் குசர் தோன்றி, ''தர்மாத்வாக ஒரு மைந்தன் பிறப்பான் அவனால் அகில லோகங்களும் பரமக்ஷேமத்தை அடையும்.'' என மொழிந்தார். அவர் வாக்குரைத்தது போல, குசநாபருக்கு காதி பிறந்தார். காதி எனது பிதா, குசவம்சத்தில் தோன்றியதால் ''கௌசிகன் என்ற பெயரும் பெற்றேன்''

என்று கௌசிகர் கூறி முடித்தார்.

குருவின் வாக்கினால் புண்ணிய சரித்திரங்களைக் கேட்டுக் கொண்டே ராமலக்ஷ்மணர்கள் இரவு முழுவதும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சோணாநதிகரையில் தங்கியிருந்து பொழுது புலர்ந்ததும் பிரயாணத்திற்குத் தயாரானார்கள்.

சோணா நதியின் ஜலம் விசேஷ ஈர்ப்பு சக்தி நிறைந்தது. ஆழமில்லாத இடங்களில், ஆங்காங்கே மணல் திட்டுக்கள் இருக்கும். முனிவரின் வழியிலே, அவர்கள் இருவரும் நதியைக் கடந்தார்கள். அந்தப் புண்ணிய நதியின் பிரபாவமும், பிரவாஹமும் அந்நதி தீரத்திலே தோன்றிய கௌசிக முனிவரின் பூர்வ சரித்திரமும் அவர்களுடைய நெஞ்சங்களிலே நிறைந் திருந்தது.

நதியைக் கடந்து நடுப்பகல் நெருங்கும் போது, கங்கைக் கரையை அடையும் வரை, ராமலக்ஷ்மணர்கள், சோணா நதியைப் பற்றிய நினைவலைகளிலேயே நீந்திக் களித்தார்கள்.

திரேதாயுகத்து புருஷோத்தமனான ஸ்ரீராமரின் பாதங்கள் பதிந்தது சோணாநதி தீரம்; அந்தப் பாதச் சுவடுகளின் புனிதத் தோடும் சீரோடும் இன்றும் புண்ணிய நதி தீரமாகத் திகழ்கின்றது.

சோணாநதிக்கு துவாபரயுகச் சிறப்பும் உண்டு. யமுனை நதியின் இடது பக்கக் கரையில் அமைந்துள்ளது இந்திரப்ரஸ்தம். பகவான் ஸ்ரீகிருஷ்ணர், இந்திரப் பிரஸ்தத்தி லிருந்து ராஜக்ரஹம் செல்லும் போது, சோணா நதியைக் கடந்து சென்றார்.

சோணா நதியில் ஸ்நானம் செய்தவர்களுக்கு அஸ்வ மேதயாகம் செய்த பலன் கிட்டும் என்று இதிகாச காவியங்கள் செப்புகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இங்குள்ள பல ஸ்நான கட்டங்களில் வம்சகுல்ம தீர்த்தம், மிகவும் புண்ணியம் நல்கும் ஸ்நான கட்டமாகும்.

ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியின் திருப்பாதச் சுவடுகளும் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் கமல பாதங்களும் பதிந்த சோணாபுரி எழிலைப் பார்த்த வண்ணம், சோணா நதி, இப்போதும் பிரவாஹித்துக் கொண்டிருக்கிறது.

சோணாநதியின் புனித வரலாறு மகத்துவம் கொண்டதாகும். இதிகாச, புராண மகிமைகளுடன் சரித்திரச் சீர்மையுடன் நடை போடும் நளின நதி சோணா.

கனோஜை ஆண்ட மன்னன் யசோவர்மன் பல பிரதேசங்களை வென்று மாமன்னராகத் திகழ்ந்த பெருமைகளைக் காவியங்களும் சரித்திரமும் புகழ் கின்றன. வெற்றி மேல் வெற்றி கண்டு திக்விஜயங்கள் புரிந்த அந்த மாமன்னன், யசோவர்மன் முதலில் சோணாநதி பாயும் பள்ளத்தாக்கு வழியாகச் சென்றே தொடர்ந்து வீரதீரம் நிகழ்த்தி ஜெயக்கொடி நாட்டினான்.

சோணாநதியை வணங்கி, அமுத தாரையான சோணாவின் திவ்ய அருளினைப் பருகியபின், விந்திய மலையில் உள்ள விந்தியா-வாசினி தெய்வத்திடம் பிரார்த்தித்துக் கொண்டு, சயாத்ரி மலைகளைத் தாண்டி தக்ஷிணப்பிரதேசம் வரை வென்ற வீரவரலாறு சோணாநதியின் சிறப்பினைச் சந்ததமும் மொழிந்து கொண்டே இருக்கும்.

புனிதம் நிறைந்து புண்ணியம் நல்கியவாறே பாயும் நதி மாத்திரமல்ல. சோணா வீரதீர உணர்வுகளுடன் பிரவாஹித்தோடும் கம்பீரமான ஒரு நதியுமாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவ்வாறு பிரவாஹித்தோடும் சோணாநதியின் ஜலம், மணல்களில் ஸ்வர்ணத்தின் தொடர்பினால் தங்கரேக்காக ஒளிர்ந்து கொண்டிருக்கிறது.

இமயமலையில் உற்பத்தியாகி கிழக்கு திசையை நோக்கிப் பாயும் கங்கைநதி வெண்மை நிறமுடையது; கங்கா தீர்த்தம் ஸ்படிகமான நிர்மலமானது. சூர்ய பகவானால் தோற்றுவிக்கப்பட்ட யமுனைநதி கிழக்கு முகமாகப் பாய்கிறது. மேற்குதிசை நோக்கி பாயும் சோணாநதியின் நீர் சிறப்பு வண்ணமானது.

இம்மூன்று நதிகளும் மிகவும் சிறப்புடைய நதிகளாகும். கங்கை, யமுனை, சோணா மூன்று நதிகள், ஒவ்வொன்றும் ஸுராபானம், ஸ்வர்ணஸ்தேயம், ப்ரம்மஹத்தி, குருதல்பகமனம், தத்ஸம்ஸர்கம் என்கிற ஐந்து வகைப்பட்ட மகா பாபங்களைச் செய்தவர்களை, பாபங்களிலிருந்து விமுக்தர்களாக்கி, பரிசுத்தர்களாக்கும் குணமுடைய நதிகளாகும்.

சோணாநதி, புருஷஸ்வரூபம் என்று புராணங்கள் சிறப்பிக்கின்றன. வீறுடன் பாய்ந்தோடும் இந்நதி வீரத்திரு நதியாகும்.

சோணாநதியின் பிரவாஹம், சில சமயங்களில் கட்டுமீறி, கரைகளைக் கூட உடைத்தெறியும். கரைகளைத் தகர்த்திடும் வகையில் பாய்ந்தோடும் வெள்ளப் பெருக்குடைய நதி, சோணா.

அமரகண்டக் மலையில் பிறந்து, பல சிறிய ஆறுகள், கலக்கப் பெற்று, பாய்ந்தோடும் சோணாநதி, மலைப் பாங்கான இடங்களில் அமைந்துள்ள மேடுகளிலும், பள்ளங்களிலும் செல்லும்போது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

துள்ளியும் குதித்தும் கம்பீர நடையுடன் வேகமாகப் பாயும் காட்சி அற்புதமாக இருக்கும்.

மலைத் தொடர்களின் நடுவே, சற்றே சீரான பூ வெளிகளில் பயணம் செய்கையில் சோணா அமைதியாக அபிநயம் செய்வதுபோல் நளினமாக ஆடி அசைந்து செல்லும் காட்சி கண்களுக்கு ஒரு கலைவிருந்து போல் அமைந்திருக்கும்.

அகலமும் ஆழமும் அதிகமான இடங்களில் கொள்ளை இன்பம் குலவிடக் குதூகலத்துடன் பாய்ந்தோடி, பரவசமூட்டிச் செல்லும் சோணாநதியின் போக்கு, பருவகாலங்களில் மாறும். அந்த மாறுதல்கள் மனத்தை ஈர்க்கும்.

கார்காலம் வந்துவிட்டால், சோணாநதியின் பாய்ச்சலில், புதுவேகம் ஏற்படும். கார்காலக் கோலத்தில், சோணாநதியைப் பார்த்தாலே பிரமிப்பாக இருக்கும். அதன் வேகம், வீச்சுக் காற்றினோடு ஒன்றி, சுழற்சிகளோடும், பின்னிப் பிணைந்து, பொங்கிப் புனலாக ஓடும் வீர்யசக்தியும் பெற்று ஆர்ப்பரிக்கும்.

அபிநயம் செய்த சோணாவா, மான்போல் துள்ளிக் குதித்த சோணாவா, இவ்வாறு ஆர்ப்பரித்தவாறு செல்கிறாளே என்று எண்ணி வியந்திடச் செய்யும்.

ஆம்; அதே சோணா நதிதான்; கட்டுக் கடங்காமல் பாய்ந்தோடும் வீர்யசோணாவும், கரைகளை மெல்லத் தழுவி சாந்தமுடன் செல்லும் பரிவுசோணாவும் அதே சோணா நதி தான்.

சோணா நதியின் படுகையில் உள்ள மணல் பொன் வண்ணமானது. அதனாலேயே 'ஸோனா' என்று

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அழைக்கலாயினர். சோணாநதி, மகத தேசத்தில் பாய்ந்தோடுவதால், இந்நதி 'மாகதி' என்ற பெயரிலும் அழைக்கப்படுவதுண்டு.

சோணா நதிக்கு 'பத்ரஸோனா' என்ற புராதனப் பெயரும் உண்டு. அதையே, ஸோணபத்திரை, சோணபத்திரை என்றும் சொல்வார்கள். பொதுவாக சோணாநதி என்றே அழைப்பார்கள். சொன்னம், சுவணம் என்பவை பொன்னைக் குறிப்பவை.

சோணா நதி மகிழ்ச்சி தருவது; நலம் நல்கும் நதி; செழிப்பூட்டும் சோண ஆறு இது; மங்களகரமான மாகதி சோணாநதி; அருள்வழங்கும் ஆறு இது; பிரதானமானது; புண்ணியநதி; எல்லாவற்றிற்கும் மேலாக, புனிதம் நிறைந்த பொன் நதியே சோணா என்கிற ஸோன் நதி.

அவ்வாறான எல்லாத் தன்மைகளையும் உண்மையாகவே ஒரு சேர உள்ளடக்கிய ஒரே வார்த்தை கொண்ட அடை மொழியுடன் 'பத்ரஸோனா' என்று இந்நதியை, பண்டைய காலம் தொட்டே போற்றி வந்திருக்கிறார்கள்.

கங்கையின் புனிதம் தெய்வீகமானது; கங்கையின் உபநதிகளான காக்கிரா, கண்டகி, கோசி, சோணா, ஆகியவை மகத தேசத்தின் முக்கிய நதிகள். அவற்றுள்ளும் கண்டகியும் சோணா நதியும் கங்கை போல் புனிதமான இருநதிகள்.

இவ்விரண்டு நதிகளுள்ளும் சோணாநதி அமுதத்தாரை அருளும் நதி என்று போற்றப்படுகிற ஏற்றம் பெற்ற பொன் நதி.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நேபாளத்தில் பாயும் கண்டகி நதியில் கிடைக்கும் ஒருவித பூச்சியின் கூட்டினை - சாலிக்கிராமமாக - பல உருவங்களாக பாவித்து, பூஜை பண்ணுவது போன்று, சோணா நதியில் கிடைக்கும் ஒருவித சிவப்புநிற (கபில) கற்களைக் கொண்டுவந்து, பஞ்சாயதன பூஜையில் வைத்து, நாள்தோறும் அதனை கணபதிபூஜை செய்வது நீண்டகால மரபு. சோணம் விநாயகர் மிக பிரசித்தமானதும் புனிதமானதும் ஆகும்.

யுக அவதார மஹா புருஷர்களின் பாதங்களைத் தழுவிச் சென்ற சோணா நதிக்கரை பூநிலத்திற்கு, ஏதோ ஒரு புதிய அவதாரம் - மகத்தான ஜனனம் நிகழப் போவதை எதிர்நோக்கிப் பெருமிதம் துள்ள, அதன் காரணமாக சோணா நதியின் நீரும் பொங்கிப் பொங்கி, சிற்றலைகளை எழுப்பிக் கொண்டே வெண்முத்துக்களை ஒத்த நீர்த்திவலைகளை மேலோங்கச் செய்த வண்ணம் பாய்ந்து கொண்டிருந்தது.

கிழக்கு வெளுக்கும் முன்னே கீழ்வானில் ஜொலிக்கும் அந்த செம்மஞ்சள் குழம்பு, சோணா நதியின் உதயகாலப் பொலிவைக் கண்ட பின்பு தோன்றியதோ என்று மொழிவார்கள்.

சோணா நதிக்கரையில் எண்ணும் எண்ணங்கள் யாவும், காலையிளம் பரிதியின் அழகில் சங்கமிக்கும் இயற்கையின் சோபிதத்தில் சங்கல்பிக்கப்படும்போது, சாஸ்வத நன்மைகளைப் பயக்கும் என்பது நம்பிக்கை. ஸௌந்தர்யங்களின் எழிற்காட்சி, அங்கே பொழுதுகள் தோறும் புதுப்புது வண்ணங்களின் மலர்ச்சியாகப் பரிணமித்துக் கொண்டிருக்கும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பளிங்கு போன்ற படித்துறைகள்; நீள அகலங்களும் பரப்பும் கொண்ட அப்படிகளில் ஏறுவதும் இறங்குவதும் மிக எளிய செயலாக இருக்கும்.

எத்திசையினின்று நோக்கினாலும், நோக்குபவர் களை வசீகரிக்கும் ஆற்றலும் கூர்த்தியும் கொண்டது சோணா நதி.

சிந்தையில், சந்தோஷ ஆரவாரங்கள் — சலனங்களைத் தோற்றுவித்து, காண்பவர் இதயத்தை வருடியவாறே, மென்னடை பயிலும் சோணா நதி, ஸரஸ்வதி தேவியின் அவதார ஜனனத்தை வரவேற்றுக் குதூகலத்துடன் கொண்டாடப் புறப்பட்டது போல், எப்போதையும்விட, சற்று துரித நடை போட்டு, ஓடிக் கொண்டிருந்தது, மனோரம்மியமான காட்சியாக இருந்தது.



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

8

சோணா புரியில் பாரதீ

பொன் உஷஸ் எனப்படும் அந்தப் புண்ணிய வைகறைப் பொழுதை, சோணா நதிக்கரையில் தான் தரிசனம் செய்ய வேண்டும். பூரண அழகு பொலியும் வைகறையைத் தொடர்ந்த விடியலில், சோணாநதியின் நீரில் பிரதிபலிக்கும் இளம் பரிதியின் வண்ண ஜாலங்கள், அனைவரையும் வசீகரிக்கும்.

காற்றலைகள் வீசும் பொழுது நீரில் அலைகள் எழுந்து நிமிஷத்திற்கு நிமிஷம் புத்தம் புதிய ஜீவ வடிவங்களாக் அவை தோற்றமளிக்கும்.

சோணா நதி பெயருக்கேற்ப, கதிரொளியில் தங்க வார்ப்பாக பிரவாஹித்துக் கொண்டிருக்கிறது. பனி உருகி, ஆறாகப் பெருகி தெளிந்தோடுகின்றது.

சோணா நதிக்கரையில் அமைந்துள்ள சோணாபுரி, ஒரு கிராமம்தானா? சோணாபுரியை கிராமத்திற்கு கிராமம் என்றும் கூறலாம்; சிற்றூரா பேரூரா என்றால், இரண்டும் தான் என்பார்கள்; நகரமாக வெளித் தோற்றத்துக்குத் தெரியாவிட்டாலும், நகரில் உள்ள நலவளம் எல்லாம் உள்ள இடமே சோணாபுரி.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸோன்பூர் என்றும், ஸோனேப்பூர் என்றும் சொல்வார்கள். ஆனாலும் சோணாபுரி என்றே பண்டைய காவியப் பெருமை மிளிரும் வண்ணம் பல்லோராலும் அழைக்கப்பட்டு வந்தது.

பாண்டித்யமும் பண்டைய பண்பாடுகளும் அஸ்திவாரம் போல் உள்ளடங்கிய சுந்தரச் சீர் நகரம், சோணாபுரி; ஜனங்களின் உதாரகுணமும் கற்றோரின் மேதமையும் அடிநாதமாக அமைந்து, செயல்கள் பரிமளிக்க, தர்ம நிகழ்வுகள் கோலோச்சும் சோணாபுரி, அன்று ஆனந்த மயமாகக் காட்சி தந்தது.

பசுமை கொஞ்சும் சோணாபுரியில் வாழும் பிரஜைகள் மகிழ்ச்சி பொங்கி ஒருவரையொருவர் குசலம் விசாரித்துக் கொண்டார்கள்.

சோணாபுரியில் எல்லா இடங்களும் இதே போன்று காட்சி தந்தன. உள்ளம் குதூகலிக்க, குசலம் விசாரித்துக் கொண்டே ஊர் மக்கள் சென்று கொண்டிருந்தார்கள்.

எல்லோருக்குமே எல்லை மீறிய மகிழ்ச்சி; இதயம் நிறைக்கும் வண்ணம் வாய்நிறைய வளமான வார்த்தைகளில் உரையாடல்கள்:

''விஷ்ணுமித்ரருக்கு பெண் குழந்தை ஜனனமாமே!''

''ஆம், ஆம்; மிச்ரரின் பெண் குழந்தை பார்ப்பதற்கு எவ்வளவு அழகு தெரியுமோ?''

''விஷ்ணு மித்ரரின் குலக் கொழுந்தல்லவா? அழகுக்கு என்ன குறை?''

''பொன்னை உருக்கி வார்த்தது போல, அழகுச்சிலை போல இருக்கின்றாளாம். பார்த்தவர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கண்பட்டுவிடும் போன்ற அழகு. விஷ்ணு மித்ரருக்கு தன் பெண்ணைப் பார்த்துப் பார்த்து பூரித்து நிற்பதற்கே நேரம் போதவில்லை என்று கேள்வி.''

மூச்சிரைக்க ஓடிவந்த ஒருவர், இவர்களை நெருங்கி வந்தார்.

''நீங்கள் இந்த அதிசயத்தைப் பார்க்கவில்லையே?'' என்றார்.

''அதிசயமா? என்ன அதிசயம்?''

''அதை என் கண்களால் கண்டேன். இல்லை எனில் நம்பியிருக்கவே மாட்டேன். நேற்று விஷ்ணுமித்ரரின் இல்லத்திற்குச் சென்றிருந்தேன். தப்பு, தப்பு; இல்லமா அது, மாளிகை. அங்கே, அவருடைய குழந்தையைக் காணச் சென்றேன். நான் போன போது குழந்தை அழுது கொண்டிருந்தது. அதனுடைய அழுகையைப்போக்க, விஷ்ணுமித்ரரின் பத்தினி முயற்சி செய்து கொண்டிருந்தாள். என்ன செய்தும் குழந்தையின் அழுகை அடங்கவில்லை. நான் என் கையில் வைத்திருந்த வேதச் சுவடியை நீட்டியதும் குழந்தை அதைப் பற்றிக் கொண்டது. அதன் அழுகை போன இடம் தெரிய வில்லை.''

''கலையின் ஆகர்ஷணக் காந்த சக்தியாக இருக்குமோ?''

''விஷ்ணுமித்ரரின் மாளிகையில் இல்லாத விளையாட்டுப் பொருளா? பண்டிதரே! இதில் ஏதோ சூட்சுமம் இருக்கிறது. குழந்தை சுவடியைக் கீழே வைக்கவே இல்லை. சுவடியைப் பார்த்துப் பார்த்து அதன் முகத்தில் எழுந்த ஆனந்த அலையை விவரிக்க நான்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கவிஞனாக இல்லையே என்று தோன்றியது'' என்று கூறியவர், தனது உள்ளக் கருத்தைத் தெரிவித்தார்.

''ஆய கலைகள் அறுபத்து நான்கினையும் ஏய உணர்விக்கும் அம்மை, அந்த ஸரஸ்வதியே பூதலம் வந்து பிறந்தனளோ?''

''தூய வெண்பளிங்கு வண்ணத் திருமேனியும் செம்பவழமெனச் சிவந்த வண்ணத்திருவாயும் தாமரைப் பூவளர் திருக்கரங்களும் உடுக்கை போன்றதான மெல்லிய இடையும் உடைய ஸரஸ்வதியைப் போலல்லவா குழந்தை தோற்றமளிக்கிறது.''

''அதிலென்ன சந்தேகம், உங்களுக்கு?'' என்று சம்பாஷணையின் இடையில் புகுந்த, கவித்வம் நிறைந்த ஒருவர் தமது மன நிலையைச் சொல்லாக வடித்தார்.

''உரைப்பார் உரைக்கும் கலைகள் எல்லாம் ஒன்றாய் உருவான திருவடிவின் மழலைதான் இக்குழந்தை.''

''உதய ஞாயிற்றின் பொன் வண்ணப் பேரழகும் பூர்ண சந்திரனின் தண்ணொளிச் சீரும் கொண்ட வேதஞான வித்தகியாக இக்குழந்தை ஜொலிக்குமோ?''

''அதிலென்ன ஐயப்பாடு? கவிவாணரே'' என்று நவின்ற ஒரு பண்டிதரை இடைமறித்து இன்னொரு வேத விற்பன்னர் கூறினார்.

''வேதமும் வேதத்தின் அந்தமும், அந்தத்தின் மெய்ப் பொருளாம் பேதமும், பேதத்தின் மார்க்கமும் மார்க்கப் பிணக்கறுக்கும் போதமும், போத உருவாகி எங்கும் பொதிந்து நாதமும், நாத வண்டார்க்கும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வெண்தாமரை நாயகி, விஷ்ணுமித்ரர் பெற்ற செல்வக் கொடி.''

சொல்லடுக்கிச் சொன்ன வேத பண்டிதரை நெருங்கியவராக கவிவாணர், ''ஆம், ஆம்; செஞ்சொற் கலை மங்கையெனத் திகழ்ந்திடும் இம்மழலை'' என ஆருடம் போல் அற்புதமாகச் சொன்னார்.

கவிஞர்களும் புலவர்களும் பண்டிதர்களும் வித்வான்களும் ஒன்று கூடி விட்டால் கேட்கவா வேண்டும்? குழந்தைப் பேறு என்பது கொண்டாடப்பட வேண்டிய ஒன்றல்லவா?

விஷ்ணுமித்ரரின் மாளிகைக்கு வந்த ஒருவர் அழகான அந்தப் பெண் மதலையை பரிவுடன் நோக்கியதுமே பிஞ்சு மழலையின் பார்வையினால் கவிவாணராகி,

''நீ ஒரு ஞானமயில்; துவள்கின்ற கொடி நீ; அறிவின் திரு வடிவமம்மா! துள்ளுகின்ற புள்ளி மானன்றோ நீ; பச்சிளம் குழந்தாய், நீ ஒரு பச்சிளம் கிளி; அன்புமிகு பாலகியே, நீ ஒரு பாடும் குயில்; நீரினைத்தள்ளி, பாலினைப் பருகும் தன்மையுள்ள அன்னத்தை ஒப்பவளே! ஞாயிறே! பூரணப் புது நிலவே.'' என்று கொஞ்சிக் கொஞ்சி,

''பொற்கொடி மின்னல் நீ; சோணாபுரியின் செல்வமகளே, அன்பு மகளே,'' அன்று அகமகிழ வர்ணித்து விட்டு, குழந்தையை நோக்கினார். பிறந்து சின்னாட்களே ஆன இளம் மழலைக்கு எல்லாம் புரியும் என்றே அவர் எண்ணினார் போலும்.

குழந்தையும் கையை அசைத்து தலையை ஆட்டியதும் கவிவாணருக்கு உள்ளம் பூரித்தது. தாம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கூறியதை அக்குழந்தை ஏற்றுக்கொண்டு விட்டதாகவே எண்ணி மகிழ்ந்தார்.

விஷ்ணு மித்ரர் மாளிகையில் ஒரு தெய்வக் குழந்தை பிறந்தது போலவே இருந்தது என்று சொன்னால் 'போலவே'' எதற்கு, தெய்வக்குழந்தையேதான் என்று உறுதியாக நம்பினார்கள்.

பாவும் தொடையும் பதங்களொடு சீரும் பலவிதமாய் மேவும் கலைகளின் நாயகியை தரிசிப்பது போல் குழந்தையைப் பார்த்து மகிழ்வுடன் கவிவாணர்கள், விஷ்ணு மித்ரரிடம் விடை பெற்றார்கள். அவர், அவர்களுக்கு அன்பளிப்புக்களையும் இனிப்பை யும் வழங்கினார்.

தேவரும் தெய்வப் பெருமானும் மூவரும் தானவராகி உள்ளோரும், முனிவரும் யாவரும் ஏனைய எல்லோரும் பணிந்தேத்தும் தாமரைச் செல்வியாம் ஆரணப் பாவை போன்று இந்தத் தாரணியில் பிறந்திருக்கின்ற இம்மதலை, சோணாபுரிக்கே சிறப்புத் தரும் பெண்ணரசியாவாள் என்றெல்லாம் தெய்வீகச் சிந்தனை கலந்தவாறே பெருமிதப்பட்டுக் கொண்டார்கள், அனைவரும்.

சோணாபுரிச் சிற்றூரில் விஷ்ணுமித்ரருக்குப் பிறந்த பெண் குழந்தை பற்றி நாள்தோறும் இவ்வாறான கருத்துக்கள் ஊரிலுள்ள பிரஜைகளின் எண்ணங்களாக மலர்ந்தன.

பாடலிபுரத்து மீமாம்ஸைப் பண்டிதர் விஷ்ணுமித்ரர்; அவர் கற்ற கலைகள் அனந்தம், அனந்தம்; பார்ப்போரை ஆகர்ஷிக்கும் ஒளி அவரது நயனங்களில் மின்னும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாடலிபுரத்துப் பண்பாட்டுச் சிகரங்களுக்கு சோணாபுரி ஒரு மகுடம் என்று வரலாறு அறிந்தவர்கள் கூறுவார்கள். கலா விருக்ஷங்களாக மிளிர்ந்த துறைகள் பலவற்றிற்கும் சோணாபுரிதான் விளைநிலமாக இருந்திருக்கிறது.

நாளந்தா பல்கலைக் கழகம் நயந்த எத்தனையோ கலைகளின் பிறப்பிடம் பண்டைய சோணாபுரி.

விஷ்ணுமித்ரரின் முன்னோர்களில் ஒருவர் நாளந்தா பல்கலைக் கழகத்தில் தலைமைத் துறையில் பணிபுரிந்தவர் ஆவர்.

மகதப் பேரரசின் தலைநகராகத் திகழ்ந்த பாடலிபுரம் (பாட்னா) முழுமதி போன்றது. அந்நகரம் ஆதியில் புஷ்பபுரம் என்று அழைக்கப்பட்ட திருநகரமாகும்.

புஷ்ப புரம் என்ற பெயருக்கேற்ப பாடலிபுரத்தின் மாந்தர் அனைவரும் மலர்ச்சியோடு காணப்படுவார்கள். அவர்கள் அகத்தில் விநயம் குடி கொண்டிருக்கும். பணிவின் காரணமாக அகந்தையற்ற அவர்களது வதனங்கள் புஷ்பித்த மலர்கள் போல விளங்கின. அவர்களின் பாண்டித்யம் நறுமணம் வீசி எங்கும் வியாபித்தது.

முழுமதி போன்ற நிறைவான பாண்டித்யம் பெற்ற விஷ்ணுமித்ரரின் பூர்வீகப் பெருமை பாடலிபுரத்துடன் ஒன்றியது.

மௌரியர் காலந்தொட்டே பாடலிபுத்ரம் கீர்த்தி மிக்கதாகத் திகழ்ந்துள்ளது. 'பாடலி' என்ற அரசியும் 'புத்ரக' என்ற அரசனும் செங்கோலோச்சிய இடமே பாடலிபுத்ர என்பார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாடலிபுரம் பல பெயர்களால் அழைக்கப் பட்டுள்ளது. குஸும் பூரா, புஷ்ப புரா, குஸும் துவஜ, பத்மாவதி, அஸுமாபாத் என்றெல்லாம் அழைக்கப் பட்டு வந்தது, பாடலிபுரம்.

சாஸ்திர விற்பன்னர்களின் தொடர்புடைய இடம் பாடலி புத்ரம். பதஞ்சலியும் ஆர்யபட்டாவும் அஸ்வகோஷும் சாணக்யா, பாணினி, ஸத்லபத்ரா வாத்ஸ்யாயனர் என பண்டிதர்களுடனும் சாஸ்திர விற்பன்னர்களுடனும் தொடர்புடைய பாடலியில் பின்னாளில் பண்டித திலகமாக விளங்கியவரே விஷ்ணுமித்திரர்.

பல நூற்றாண்டுகளாக, பாண்டித்யம் பொலிந்த பாடலி புரத்துப்பரம்பரையின் பெருமைக்குப் பெருமை சேர்க்கும் வண்ணம் திகழ்ந்த விஷ்ணுமித்ரரின் தவப்புதல்வியாகப் பிறந்தவளே பாரதீ! தலை சிறந்த சாஸ்திர நிபுணரும் மிக முக்கியமானவர்களில் முதன்மையானவருமாகிய விஷ்ணு மித்ரர் அடக்கத்தின் உருவம், அறிவாற்றலின் பிரதிபிம்பம்; வித்தைகளின் வடிவம்.

சோணாபுரியில் விஷ்ணுமித்ரரின் தவப்புதல்வி வளர்ந்து கல்வி கேள்வி ஞானங்களில் தலை சிறந்து விளங்கலானாள்.

ஆடவரும் பெண்டிரும் சிறியவர்களும் பெரியவர்களுமாக சோணாபுரிச் சிற்றூரிலிருந்து நதிக்கரை சென்று வருவதிலேயே தனி அழகு மிளிரும். நதி நீரில் நீந்தி விளையாடிய பின்பு நீராடிவிட்டு, மன மகிழ்வோடு உடலும் உள்ளமும் குளிர இல்லங்கள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நோக்கி வருகின்ற சோபை மிகுந்த அக்காட்சி, காண அழகாக இருக்கும்.

ஆடவரும் பெண்டிரும் ஸ்நானம் செய்து ஈரமான ஆடைகளைப் போர்த்திக் கொண்டு வருவார்கள்; அவர்கள் உடலைப் போர்த்தியிருக்கும் பாங்கில் பண்பும் நயமும் மிளிரும்; சோணாபுரி மக்களின் செம்மையான வாழ்வை வெளிப்படுத்துவதாக, அது அமைந்திருக்கும்.

சோணாநதி சிவப்பு வண்ண முடையது. பொன் மண்ணும் செம்மண்ணும் கலந்தாற் போன்று நீர் பாய்ந்தோடும். சோணம் என்றால் சிவப்பு; தனியழகு படைத்த சிவப்பு நிற நதிநீரில் செங்கதிரோனின் காலை இள மஞ்சள் கதிரொளி சேரும்போது அஃதொரு தனி வண்ணமாகப் பேரெழிலுடன் தோன்றும். அந்தச் செம்பொன் வண்ணத்தின் தெய்வீகக்கோலம் நெஞ்சையள்ளும்.

அந்த வண்ணத்தை ''சிந்தூரம், சிந்தூரம்'' என்று பாடி மகிழ்ந்து சோணாபுரி மக்கள் ஆடிக் களிப்பார்கள்.

''யானைகளின் துதிக்கை நுனியில் சிவப்புப் புள்ளிகள் இருக்குமே, அதுவும் சிந்தூர வண்ண மல்லவா?'' என்று மொழிவாள் ஒரு பெண்.

''அம்பாளின் வண்ணம் சிந்தூரமன்றோ?'' என்று இன்னொரு பெண் செப்புவாள்.

தோழிகளுடன் பாரதியும் நதிக்கரைக்குச் சென்று வருவது வழக்கம். கிராமத்தின் இயற்கை ஒலிகளும், பெண்களின் காற்சிலம்பின் ஒலியும் வண்டுகளின் ரீங்காரமும் பக்ஷிகளின் கலகலத்வனியும் நல்லிசையாகக் கேட்கும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சின்னஞ்சிறிய பெண்கள் அகவை சிறிதே என்றாலும் அவர்களின் அர்த்தமுள்ள சம்பாஷணைகளில் சமத்காரம் நிறைந்திருக்கும்.

தினந்தோறும் பாரதியுடன் நதிக்கரை சென்று வருவதும் கிராமத்தில் ஒன்றிப் பழகி வருவதும் அவர்களுக்கு புதிய புதிய பாடங்களைக் கற்றுத் தருவதாக அப்பெண்களே தங்களுக்குள் சம்பாஷித்துக் கொள்வார்கள்.

பாரதியின் ஆகர்ஷணம், அப்பெண்களிடம் மதிஞானத்தை உருவாக்கியிருப்பதாக அவர்களுக்கு ஓர் உள்ளுணர்வு ஏற்பட்டது.

பாரதியுடன் கைகோத்துச் செல்லும் போது புதுச்சிலிர்ப்பு ஏற்படுவதாக உணர்ந்து அகமகிழ்வார்கள். தோளோடு தோள்சேர்ந்து, சிந்தை களி துள்ள, பாரதீ மொழியும் வார்த்தைகளில் நர்த்தனம் புரியும் நல்ல கருத்துக்களில் தோய்ந்து விடுவார்கள்.

அந்தப் பேதைப் பருவத்துப் பெண்களுடன் பாரதீ நெருக்கமுடன், இதயம் கலந்த சினேகமுடன் உறவு கொண்டாடுவாள். அந்த உறவு, அப்பெண்களைப் பண்டிதைகளாக மலரச் செய்ததை, அப்பெண்களே உணர்ந்து மகிழ்ந்தார்கள்.

காலச்சக்கரம் சுழன்று கொண்டே இருந்தது.

பாரதீ பேதைப் பருவம் எய்தும் முன் வேத வேதாந்தங்களைக் கற்றாள்; பெதும்பையான போது அறுபத்து நான்கு கலைகளிலும் செறிவான ஞானம் பெற்றாள்; கல்வியிலே கடலாக, ஸரஸ்வதியாகத் திகழ்ந்தாள்.

In Public domain. Digitization: Muthulakshmi Research Academy

மங்கையான போது, அவள் செவிவழிச் செய்தியாகக் கேட்ட ஒன்று அவளுடைய மலர் மனத்தை வண்டாகக் குடையத் துவங்கியது.

தோழிகளுடன், ஆற்றுக்கு நீராடச் சென்றிருந்த வேளையில், யாரோ இருவர் பேசுவதை பாரதீ செவி மடுத்தாள்.

''மாதவரே, எங்கே உம்மைச் சில நாட்களாகக் காணவில்லையே!''

''காஷ்மீர் நகரம் சென்றிருந்தேன். குமாரா, காஷ்மீரில் ஹிமமித்ரரின் புதல்வன் விசுவரூபன் என்று ஒருவன் இருக்கிறான். அவனுடைய சாஸ்திர ஞானத்தை என்னென்பேன். ஸதஸில் அவனுடைய வாதமும் எல்லோரையும் அவன் எளிதாக வென்ற அழகும் நேரில் பார்த்தால் தான் புரியும். விசுவரூபன் அறிவுக் கடலாக மன்மத ரூபமாக இருக்கிறான். அறிவும் அழகும் இணைவது அபூர்வமாயிற்றே.''

மாதவர் கூறிய விசுவரூபரை பாரதீ மனத்தில் வரிக்கத் துவங்கினாள். விசுவரூபருடன் பேசுவது போன்றும் பழகுவது போன்றும் கனவிலும் நனவிலும் கலந்தாள்.

அன்பு மகளைப் போற்றி வளர்த்து வரும் விஷ்ணுமித்ரர், சிலகாலமாக மகளிடம் ஏற்பட்ட மாற்றங்களைக் கவனித்தார். உரிய காலம் வரும்போது கேட்கலாம் என்று காத்திருந்தார்.

பாரதீ விசுவரூபரைப் பற்றிக் கேள்வியுற்றது போலவே காஷ்மீரத்துக்கு வந்த சோணாபுரிப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பண்டிதர்கள் மூலம் பாரதியைப்பற்றி விசுவரூபரும் அறிந்தார்.

அபாரமான அறிவும் அழகும் அருங்குணங்களும் பெற்றிருந்த பாரதியை நினைவாலே போற்றினார். அவருடைய நெஞ்சத் தடாகத்திலே பாரதீ மலராக மணம் பரப்பினாள்.

வளர் பிறையாக விசுவரூபருடைய அன்பும் வளரத் துவங்கியது; நெஞ்சிலே கலந்து நினைவிலே ஒன்றிய நங்கையைக் கண்களால் காணவேண்டும்; அவளுடைய அறிவார்ந்த மணி மொழிகளைக் கேட்க வேண்டும் என்று விசுவரூபர் விரும்பினார். விசுவரூபருடைய தந்தை ஹிமமித்ரர் மகனுடைய உடல் மெலிவைக் கண்டு துணுக்குற்றார். மகன் தனிமையில் சென்று அமர்ந்து எங்கோ வெறித்த பார்வையும் ஏக்கப் பெருமூச்சுமாக இருப்பைதக் கண்டு அவருடைய மனத்தில் கலக்கம் எழுந்தது.

''குழந்தாய்! விசுவரூபா! ஏனப்பா இங்கே தனித்து அமர்ந்திருக்கிறாய்?'' என்று வாஞ்சை பொங்கக் கேட்டு, மகனின் சுருண்ட சிகையைக் கோதினார்.

விசுவரூபர் தந்தையை ஏறிட்டு நோக்கினார். அந்தப் பார்வையில் தெரிந்த ஏக்கமும் வேதனையும் தந்தைக்கு வருத்தமளித்தன.

''விசுவரூபா, உனக்கு என்ன குறை கண்ணே! என்னிடம் சொல்லக் கூடாதா? எவ்வளவு மெலிந்து விட்டாய்? உன் உடல் நலம் சரியாக இல்லையா? சொல் விசுவரூபா?'' ஓ. உன் மனத்தில்தான் குறை இருக்கிறது. நான் கூறுவது சரிதானே! விசுவரூபா, உன் குறை எனக்குப் புரிந்து விட்டது.''

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விசுவரூபர், ''என்ன புரிந்தது தந்தையே?'' என்றார்.

''உன்னுடைய உடல் மெலிவுக்கான காரணம் புரிந்து விட்டது. நோயோ, குடும்பச்சுமையோ, தோல்விகளோ எதுவும் காரணமாக இருக்க முடியாது. ஆனால், அன்பினால் பிணைந்து அகத்திலே நெருங்கிய யாரோ ஒருவரின் பிரிவுதான் உன் முகத்தின் சோபையை இழக்கச் செய்திருக்கிறது; உன்னை மெலிய வைத்திருக்கிறது; என்ன, நான் கூறும் காரணம் சரியானதுதானா?''மகனின் பதிலுக்காக ஹிமமித்ரர் ஆவலுடன் காத்திருந்தார்.

பதிலைக் கூறத் தயங்கிய விசுவரூபர் தலை குனிந்திருந்தார்.

''தந்தையே! தாங்கள் கூறிய காரணம் சரியானதுதான். என் மன நிலையைத் தங்களிடம் வெளிப்படுத்த வேண்டிய காலம் வந்துவிட்டது. சோணா நதிக்கரையில் உள்ள சோணா புரியில் வசிக்கும் விஷ்ணுமித்ரரின் மகள் பாரதியைப் பற்றிக் கேள்விப்பட்டது முதல் என்மனம் அவள் பால் சென்று விட்டது. அவளுடன் நான் மானசீகமாக வாழ்ந்து வருகிறேன். அவளைக் காண வேண்டும் என்ற ஏக்கமும் அவளுடைய பிரிவும் எனக்குத் துன்பத்தைத் தருகின்றன.''

மகனின் உள்ளத்தில் உருவாகிய தெய்வீக அன்பைப் புரிந்து கொண்டு, பெற்றவர் மனதார வரவேற்றார்.

''இவ்விஷயத்தை முன்பே என்னிடம் கூறியிருக்க லாகாதா? விசுவரூபா. உடனே நான் சோணாபுரிக்கு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தூதர்களை அனுப்பி, திருமணம் பேசுகிறேன். இனி, நீ சந்தோஷமாக இருக்க வேண்டும், என்ன?''

தந்தையின் பாசம் பொங்கும் வார்த்தைகள் பிள்ளையின் நெஞ்சிலே பால் வார்த்ததோ? விசுவரூபருடைய முகத்திலே பிரகாசம்; கண்களிலே மகிழ்ச்சி மின்னல்கள்.

''தந்தையே!'' என்று குரல் தழதழக்க அவரது கரங்களைப் பற்றினார்.

விசுவரூபரின் தந்தை தூதர்களை வரவழைத்தார். அவர்களிடம் விஷயத்தை சாங்கோ பாங்கமாக விளக்கினார். பின்பு அவர்களை விஷ்ணுமித்ரரிடம் அனுப்பி வைத்தார்.

காஷ்மீர தேசத்திலிருந்து புறப்பட்ட தூதர்கள் பல நாட்கள் பயணம் செய்து சோணாபுரியை வந்தடைந்தார் கள்.

தூரதேசத்திலிருந்து வந்த தூதர்களை சோணாபுரிக் குடிமக்கள் அன்புடன் வரவேற்று உபசரித்தார்கள். சோணாபுரி மக்களின் விருந்துபசாரத்தில் தூதர்கள் களிப்படைந்தார்கள். நல்ல வளம் நிறைந்த ஊர் போலும் என்று அவர்கள் சோணாபுரியைப்பற்றி எண்ணினார்கள். பின்பு, தாங்கள் வந்த விபரம் எடுத்துரைத்தார்கள்.

''பெரியோரே! நாங்கள் காஷ்மீர தேசத்து ஹிமமித்ரர் என்பவரால் அனுப்பப்பட்ட தூதர்கள். இவ்வூரில் விஷ்ணு மித்ரர் எனும் பண்பாளரைச் சந்திக்க வேண்டும் என்பதே எங்கள் வருகையின் நோக்கம்'' - என்றார்கள் அத்தூதர்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விநயம் ததும்பிய அவர்தம் பேச்சு சோணாபுரி வாசிகளை மிகவும் கவர்ந்தது. உடனே, ''வாருங்கள். தங்களுக்கு வழி காட்டுகிறோம்.'' என்று கூறி, சிலர் தூதர்களை விஷ்ணுமித்ரரின் கிருஹத்துக்கு அழைத்துச் சென்றார்கள்.

தூதர்கள் மாளிகையின் முன் நின்று, அதனை ஏறிட்டு நோக்கினார்கள். கலைக்கோயில் போலத் திகழ்ந்த மாளிகையின் முன்புறத்தில் வண்ணமயமான நந்தவனம் சூழ்ந்திருந்தது.

மலர்கள் காற்றில் மெல்லத் தலையசைத்து அவர்களை வரவேற்றன; அகிலும் சந்தனமும் மணந்து சூழலை ரம்மியமாக ஆக்கின;. தெய்வ சந்நிதியில் நிற்பது போன்ற ஒரு புனித உணர்வு தூதர்களை ஆட் கொண்டது.

தாங்கள் வந்திருக்கும் செய்தியை ஒரு ஏவலாளிடம் சொல்லி அனுப்பினார்கள். ஏவலாளன் மாளிகையில் தனது எஜமானரைத் தேடிச் சென்ற போது பாரதியுடன் விஷ்ணுமித்ரர் சம்பாஷித்துக் கொண்டிருந்தார். பாரதீ தூய வெண்பட்டு ஆடை அணிந்து பொன்மேனியில் முத்து மாலை ஒளிர நின்றிருந்தாள். வாட்டமுற்ற மலர்க் கொடியாக இருந்த மகளை நோக்கி, ''சில காலமாகவே ஒருவிஷயம் பற்றி கேட்க வேண்டுமென்ற விருப்பம். கேட்கலாமா மகளே?'' என்றார்.

மகளை, கலைமகளாக வளர்த்த தந்தை அவளிடம் அனுமதி கேட்கிறார்.

''தந்தையே, தாங்கள் உரிமையுடன் எதை வேண்டுமானாலும் கேட்கலாம். சொல்லுங்கள்.'' தவிப்பு அவள் வதனத்தில் தெரிந்தது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''வளர்பிறைச் சந்திரன் போல் வளர்ந்து முழுநிலவாகப் பிரகாசிக்கும் உன்னிடம்... இப்போது ஒரு மாற்றம் காணப்படுகிறதே. அது ஏனம்மா?''

''வளர்பிறை இருந்தால் தேய்பிறை இருக்காதா, தந்தையே.''

''வாதத்திலே உன்னை என்னால் வெல்ல முடியாது மகளே. ஆனாலும் உனக்கு ஏதோ வருத்தம் இருக்கிறது, என்பதை இவ்வார்த்தைகள் சொல்லாமல் சொல் கின்றனவே. என் ஊகம் சரிதானா?''

பாரதீ, கருங்குவளை மலர்க் கண்களால் தந்தையைப் பார்த்துவிட்டு, அக்கணமே தலை கவிழ்கிறாள். வலக்கரத்து விரல்களைக் குவித்த வண்ணமாக்கி அதன்மீது இடக்கரத்தைப் பதிய வைத்து நின்றாள். அது வீணையொன்றை மேனியில் தாங்கிக் கொண்டிருப்பது போலக் காட்சியளித்தது. நாணத்தால் பெருவிரல் கோலமிட மனத்தினை வெளிப்படுத்து கிறாள்.

விசுவரூபரிடம் தான் கொண்டுள்ள அன்பை தந்தைக்குப் புரியவைக்கிறாள்;தன் எண்ணம் ஈடேற உதவுங்கள் என்று வேண்டினாள்; அந்த வார்த்தை தெய்வகீதமாக ஒலித்தது.

இத்தருணத்தில், தூதுவர்கள் வந்துள்ள செய்தியைக் கேட்டு மகளிடம் விடைபெற்று விஷ்ணுமித்ரர், தூதர்களைக்காண விரைந்தார்.

''வாருங்கள்'' என்று வரவேற்று அமரச் சொல்லிய பிறகு விஷயத்தைக் கேட்கிறார். தூதர்கள், அவர்களை வணங்கி விட்டுக் கூறினார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''பெரியீர். காஷ்மீர் தேசத்தில் வாழும் ஹிமமித்ரரின் தூதர் நாங்கள். ஹிமமித்ரருக்கு அருமை மகனாகப் பிறந்த விசுவரூபர் சகல சாஸ்திரங்களையும் கற்றுத் தேர்ந்தவர். அவருடைய அறிவும் அழகும் சதுர்முக பிரம்மாவுக்கு நிகரானது என்று பலரும் கூறுவதுண்டு. ஹிமமித்ரர், தமது திருமகனுக்கு, தங்களுடைய திருக்குமாரியை மணமுடிக்க விரும்புகிறார். இச்செய்தியை, தங்களுக்கு அறிவித்து, தங்களுடைய விருப்பத்தையும் அறியவே நாங்கள் வந்துள்ளோம்.''

மேலும் பல விபரங்களை அவர்கள் கூறக் கேட்டு, விஷ்ணுமித்திரர் ஆனந்தப்பரவசம் எய்தினார்.

''என் மகள் பாரதீ, ஸரஸ்வதிதேவி போன்றவள். அவளை சதுர்முக பிரம்மாவுக்கு நிகரான விசுவரூபருக்கு மணம் முடிக்க எனக்கும் விருப்பம்தான். ஆயினும் மகளின் மணவிஷயத்தில் அவளைப் பெற்றவளின் கருத்தும் தீர்ப்புமே முடிவானது அல்லவா? எனவே சற்று பொறுத்திருங்கள். என் துணைவியிடம் கலந்தாலோசித்து விட்டு உங்களைச் சந்திக்கிறேன்.'' என்றார்.

விஷ்ணுமித்ரர், மனைவியிடம் சென்று நடந்த தனைத்தையும் கூறினார். தம்முடைய விருப்பத்தையும் எடுத்துச் சொன்னார். பாரதியைப் பெற்றெடுத்த அன்னை சற்று கவலையுடன் நோக்கினாள்.

''கண்ணின் மணிபோல நாம் வளர்த்து வரும் மகளை எங்கோ காஷ்மீர் தேசத்தைச் சேர்ந்த ஒருவருக்குமணமுடித்துக் கொடுத்து விட முடியுமா? சாஸ்திர விதிப்படிமணம் முடிக்க ஏழு பொருத்தங்கள் பார்க்க வேண்டும். அவற்றைக் கருத்தில் கொண்டு நன்கு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆலோசித்த பிறகே பெண்ணைக் கொடுக்க வேண்டும்'' என்று நவின்றாள்.

தாயும் தந்தையும் இவ்விதம் உரையாடிக் கொண்டிருந்ததைக் கேட்டு, பாரதியின் மனம் துயருற்றது. கணந்தோறும், அவளது செவிகளிலே ஒலிக்கும் தேவகான வீணையொலியில் சோகம் கலந்ததுபோல் கலங்கினாள். விசுவரூபரை, தான் பதியாக அடைவோமா என்ற தாபத்தோடு காத்திருந்தாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

9

விவாஹப் பொருத்தங்கள்

பிரஹ்மம், தைவம், ஆர்ஷம், ப்ராஜாபத்யம், ஆஸுரம், காந்தர்வம், ராக்ஷஸம், பைசாசம் என விவாஹங்கள் எட்டு வகைப்படும். ''விவாஹம்'' என்ற சொல்லை உச்சரிக்கும் போது ஆயிரமாயிரமாய் பிறக்கும் உணர்வுகளில் - உள் மனத்தில் எழுகின்ற ஆயிரமாயிரம் எண்ண அதிர்வுகளில், இன்பம் தோய்ந்திருக்கும்.

எதிர்கால ஒளிப் பிரகாசம் பற்றிய சிந்தனையின் தீர்க்கமான திருஷ்டிகள் விவாஹம் என்கிறபோது உள்மனத்தில் கலந்திருக்கும். நம்பிக்கைகள் நெஞ்சில் மையம் கொள்ள, மெய்ச் சிலிர்த்து, உலாவந்து கொண்டிருப்பதும் இயற்கையே.

''விவாஹத்திற்கு ஏழு பொருத்தங்கள் பார்க்க வேண்டுமா? மனம் ஒன்றி, உணர்வில் கலந்த விசுவரூபருக்கும் தனக்கும் விவாஹம் தடையின்றி நடைபெறுமா?'' என்று மனம் கலங்கிய பாரதீ, தாய் கூறுவதைச் செவிமடுத்தாள்.

விஷ்ணு மித்ரரை நோக்கி அவரது மனைவி கூறத்துவங்கினாள். ''முதலில் வரனுக்கு, நல்ல குடும்பப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாரம்பர்யம் இருக்கவேண்டும். குடும்பத்தின் தன்மையை - வம்சாவளியைப் பொறுத்துத்தான் - வரனின் இயல்புகள் அமையுமல்லவா?

தூதர்களில் ஒருவர், ''தாங்கள் கூறுவது முற்றிலும் சரியே, ஹிமமித்ரரின் வம்சம் பண்பின் சிகரமாகும்.'' என்று கூறி பரம்பரைப் பெருமைகளை விளக்கமாக எடுத்துரைத்தார்.

''சரி. வரனின் குணநலன்களை அறிய வேண்டுமே, மனோபாவங்கள், இயல்புகள், பழக்கங்கள் இவை யெல்லாம் மனிதருக்கு மனிதர் வேறுபடுவதாயிற்றே!''

விஷ்ணுமித்ரர், ''ஆமாம். வரனுக்கு அற்புதமான குணநலன்கள் இருக்கவேண்டும். அப்போதுதான் பாரதியின் கரம் பற்றும் பாக்யம் அவருக்குக் கிடைக்கும்.'' என்றார்.

''இதில் தங்களுக்கு எவ்விதமான ஐயமும் வேண்டாம். விசுவரூபரின் குண விசேஷங்கள் சிறப்பானவை, சிலாக்யமானவை. வேத சாஸ்திர படனங்களிலும் அனுஷ்டானங்களிலும் தேர்ந்தவர். எண்டிசை புகழும் பண்டிதர் அவர்,'' என்று தூதுவரில் மூத்தவர் மொழிய, அதனைத் தொடர்ந்து இளையவர் கூறலானார். ''செந்தண்மை மிக்க அவர் பத்தரை மாற்றுத் தங்கம்'' என்று முடித்தார்.

''எங்கள் பெண் பாரதீ எழிலார்ந்த தோற்றத்தோடு திகழ்பவள். அவளை மணம் செய்து கொள்பவர் அவளைப் போன்ற வடிவழகும் தோற்றமும் பெற்றிருக்க வேண்டும்.''

''தாய்மை ததும்பிய தங்களுடயை உள்ளக் கிடக்கையை நாங்கள் அறிந்து கொண்டோம். இனி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விசுவரூபரைப் பற்றி நான் கூறுவதையும் தாங்கள் தயவு செய்து கேட்கவேண்டும்.''

''கூறுங்கள்'' - என்றாள் பாரதியின் தாய்.

''விசுவரூபர் சாமுத்ரிகா லக்ஷணங்கள் பொருந்திய வடிவழகர்; பொன்னை நிகர்த்த நிறமுடையவர்; ஆஜானுபாகு; கண்கள், தாமரைத் தடங்கண்கள்; மென்னகை தவழும் இதழ்கள், ஏறு போன்ற தோற்றம் உடையவர்.''

தூதர்கள் செய்த வர்ணனையைக் கேட்ட விஷ்ணு மித்ரருக்கும் அவரது மனைவிக்கும், கண்முன்னே விசுவரூபரையே காண்பது போல இருந்தது.

''இவையனைத்தும் சரியே. ஆயினும் வயது என்ற ஒன்றினையும் கருத்தில் கொள்ள வேண்டுமே. சகல சாஸ்திரங்களும் கற்றறிந்த அவருக்கு வயது சற்று அதிகமாக இருக்குமே. பாரதீ இளம்கொடி. அவளுக்கு, அவளைப் போல இளமையான வயதுடையவரே வாய்க்க வேண்டும் என்பதே எங்கள் எண்ணம்.''

''அறிவுக்கும் அகவைக்கும் (வயதிற்கும்) தொடர்பு படுத்திக் கொள்வது சரியல்ல, எங்கள் விசுவரூபர் இளய பிராயத்தினர். மணம் புரிந்து கொள்ளத்தக்க வயதினர். இளஞ் சூரியனைப் போன்றவர். தங்களுடைய புதல்வி, இவ்வளவு இளம் வயதில், வித்யாஸ்வரூபிணியாகக் காட்சியளிக்க வில்லையா?'' தூதர்கள் உள்ளதை உள்ளபடி உரைத்தார்கள்.

''ஆம், ஆம்; பாரதீ, வித்தைக்கு இருப்பிடம்; அதனாலேயே நாங்கள் மிகுந்த பொறுப்போடு, அவளுக்கு ஏற்ற வரனைத் தேர்ந்தெடுக்க விரும்பு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கிறோம்; அவளுக்கு ஏற்ற கல்வியறிவு உடையவராக இருக்கவேண்டும்.''

''குமாரில பட்டரின் ஞானமும் கல்வியும் நாடறிந்த ஒன்று. அத்தகைய பேரறிவாளரின் பெருமைக்குரிய சீடராக விளங்குபவர் விசுவரூபர். இதை விட வேறு சான்றும் வேண்டுமோ? கள்வரால் கவர முடியாத, கனலாலும் புனலாலும் அழிக்க இயலாத கல்விச் செல்வம் நிறைந்தவர் விசுவரூபர்.''

பாரதியின் தாய் ஆறாவது பொருத்தம் பற்றிக் கூறத் துவங்கினாள்.

''அழகு, அறிவு, அருங்குணங்கள் அனைத்தும் இருந்தாலும் இவ்வுலக வாழ்வுக்கு 'செல்வம்' வேண்டுமே. அது.. அது.. பற்றி-'' என்று தயக்கத்துடன் வினவினாள்.

தூதர்கள் பெருமிதச் சிரிப்பொன்றைச் சிந்தினார்கள்.

''கலைமகள் வாஸம் செய்யும் இடத்தில் அலைமகள் வாஸம், செய்யமாட்டாள் என்றொரு வழக்கு உண்டு. ஆனால் ராஜாங்கக் கவிஞரான ஹிமமித்ரரின் மாளிகையிலே அலைமகளும் கலைமகளும் கைகோத்து வாஸம் புரிவதை நீங்கள் காணலாம். வானுயர்ந்த மாளிகை, முத்தும் இரத்தினமும் இழைத்த வாசல்கள். விசாலமான கூடங்கள், முற்றங்கள். விதம்விதமான மலர்கள் பூத்துக் குலுங்கும் நந்தவனங்கள். கொட்டில் நிறைய பசுக்கள், குதிரைகள்... இன்னும் புகழ் என்னும் செல்வமும் நிறைந்தவர்.''

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''இவ்வளவு போதும். அவருடைய பெற்றோரும் உற்றாரும் எத்தகையவர் என்பதையும் கூறிவிடுங்களேன்.''

ஹிமமித்ரரின் தூதர்கள், ஹிமமித்ரரைப் பற்றியும் அவருடைய உற்றார்களைப் பற்றியும் சொல்ல வேண்டியதனைத்தையும் சொல்லி முடித்தார்கள்.

''ராஜ வம்சத்தில் பிறந்த ருக்மணியை, யார் எவர் என்று ஆராயாமலே கிருஷ்ணருக்கு மணமுடித்துக் கொடுத்ததை நீங்கள் அறியாதவரா''?

இவற்றையெல்லாம் பாரதியின் தாய் கவனமாகக் கேட்டாள். மருமகனாக வர இருப்பவர் திருமகன் என்ற நிறைவு தாய் உள்ளத்தைக் குளிரச் செய்தது.

''இனி எனக்கொன்றுமில்லை; மகளைக் கேட்டு, அவளும் சம்மதித்தால்... சந்தோஷமாக திருமணத்தை நடத்தி விடலாம்.'' என்றுரைத்தார். இதயத்தின் சந்தோஷச் சிலிர்ப்பு, குரலில் இழைந்திருந்தது.

விஷ்ணுமித்ரர், பத்தினியுடன் மகளிடம் சென்றார்.

''குழந்தாய், பாரதீ! விசுவரூபர் என்றொருவர் காஷ்மீர தேசத்திலே,'' என்று மகளிடம் விளக்கமாகப் பேசத்துவங்கியதும்-

''நான் அவரை மணக்கச் சம்மதிக்கிறேன், தந்தையே''- என்று மனத்தில் வரித்தவரை மணம் புரிய, தன் உள்ளத்தின் விருப்பத்தை வெளிப்படுத்தினாள், பாரதீ.

மகளின் வாக்சாதுர்யம், அவர்களுக்கு புதிதல்ல தான். ஆயினும், நாணம் மிதக்கும் விழிகளும் பிரகாசமாக விளங்கும் முகமும் புதிதாக இருந்தனவே!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவர்கள் திகைத்து நிற்கும் போதே மற்றுமொரு ஆனந்த அதிர்ச்சியை அன்புமகள் அளித்தாள்.

''தந்தையே! விவாஹத்திற்குரிய சிறந்த நாள் எதுவென்று நான் குறித்துத் தருகிறேன். அதை அவர்களிடம் கூறிவிடுங்கள்.''

விஷ்ணுமித்ரர் பெருமை பொங்க மனைவியைப் பார்த்தார்.

ஜோதிஷ சாஸ்திரத்திலும் பாரதீ பண்டிதை அல்லவா? விவாஹநாள் குறிக்கப்பட்டது. அதனை ஒரு லிகிதத்திலே எழுதி, விஷ்ணுமித்ரர், தூதர்களிடம் அளித்தார். அவர்கள் கிளம்பும்போது, தம்முடைய தூதர் ஒருவரையும் விஷ்ணுமித்திரர் அவர்களோடு அனுப்பி வைத்தார்.

தூதர்கள் மூவரும், வனம், சமவெளி, நதிக்கரைகள், பள்ளத்தாக்குகள் பலவற்றைக் கடந்து பல நாட்கள் பயணம் செய்து காஷ்மீர தேசம் வந்தடைந்தார்கள்.

ஹிமமித்ரர் தூதர்களை வரவேற்றார்; தூதர்களின் முகங்களில் தெரிந்த மகிழ்ச்சியும் நடையில் இருந்த உற்சாகமும், அவர்கள் சென்ற பணியில் வெற்றி பெற்று விட்டார்கள் என்பதைச் சொல்லாமல் சொல்லிற்று.

விஷ்ணுமித்ரர் அளித்த லிகிதத்தை சமர்ப்பித்தார்கள்.

''இன்றைக்கு பதினான்காம் நாள் ஒரு நிறைவான நாள். தாங்கள் தங்கள் உற்றார் உறவினரோடு விவாஹத்திற்கு வரவேண்டுமென்று அழைப்பு விடுத்துள்ளார்.''

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஹிமமித்ரர், லிகிதத்தைப் படித்தார். வாக் சாதுர்யத்துடனும் நளினமாகவும் எழுதப் பெற்ற லிகிதத்தைக் கண்டு ஹிமமித்ரரின் மகிழ்ச்சி கரை புரண்டது. தூதர்களை பரிசு மழையில் நனைவித்தார். உறவினர்களுக்கு விவாஹ நாளைக் குறிப்பிட்டு அழைப்பு விடுத்தார்.

விவாஹ தினம் நெருங்கியது. மணநாளுக்கு முதல் நாளே விசுவரூபர் அழகாக அலங்கரித்துக் கொண்டு பெற்றோரும் மற்றோரும் புடைசூழ சோணாபுரியை வந்தடைந்தார்.

அவர்களை வரவேற்பது போல மந்தமாருதம் இதமாக வீசியது. சோணாநதி தனது தங்க அலைக்கரங்களை நீட்டி, ''வருக, வருக'' என்று முகமன் கூறியவண்ணம் பாய்ந்தோடியது.

மலர்கள் மலர்ந்து மணம் பரப்பின, சூர்யதேவனும் விசுவரூபரின் எழிற் கோலம் கண்டு வியந்திருந்தான்.

விஷ்ணுமித்ரர், மருகரையும், ஹிமமித்ரரையும் அவரது பத்தினியையும் உடன் வந்த அனைவரையும் முகமன் கூறி வரவேற்றார். அவரது கண்களிலே ஆனந்த பாஷ்பம் பெருகியது.

''ஸ்வாகதம்! ஸ்வாகதம்! தங்களுக்குச் சேவை செய்ய நாங்கள் காத்திருக்கின்றோம்.'' என்று கூப்பிய கையும் குழைந்த நெஞ்சமும் கொண்டு விஷ்ணுமித்ரர் மிக்க வினயமுடன் உரைத்தார்.

''நானே பாக்யவான். கலைகளிலும் கல்வியிலும் சிறந்த தங்களுடைய சம்பந்தம் எங்களைப் புனித

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மடையச் செய்கிறது.'' - ஹிமமித்ரர் நெகிழ்ந்து கூறி, விஷ்ணுமித்ரரின் கைகளை அன்புடன் பற்றினார்.

கலைநயம் ததும்ப, மகர தோரணங்களால் அழகுற அலங்கரிக்கப் பெற்ற மாளிகையினுள்ளே தாராகணங்களால் சூழப்பட்ட பூர்ண சந்திரனைப்போல் பாரதீ சர்வ அலங்கார பூஷிதையாக வீற்றிருந்தாள்.

மணமகனாக விசுவரூபர், விஷ்ணுமித்ரரின் மாளிகைக்கு அழைத்து வரப்பட்டார். விவாஹத்திற்கு முன்பாக நடைபெறும் நிச்சயதார்த்த வைபவத்திற்கான ஏற்பாடுகள் மண மண்டபத்திலே தயாராக இருந்தன.

மல்லிகையும் முல்லையும் மணம் பரப்ப, சந்தனமும் அத்தரும் இதமாக வாஸனை வீசின. மணமண்டபத்திலே உற்றாரும் உறவினரும் ஊராரும் கூடியிருந்தார்கள். களிப்பும் குதூகலமும் நிறைந்திருந்தது.

தெய்வீக மணவினையைக் காண அனைவரும் ஆவலுடன் இருந்தார்கள்.

வேதச் சடங்குகளைக் குறையின்றிச் செய்ய புரோகிதர்கள் சித்தமாக இருந்தார்கள். விசுவரூபர் மணமேடையிலே அமர்ந்தார்; கம்பீரமாக வீற்றிருந்த மணமகனைச் சூழ்ந்து உறவினர்களும் வந்து அமர்ந்தனர்.

விவாஹச் சடங்குகளும் நல்ல நேரத்தில் துவங்கியது.

விஷ்ணுமித்ரரின் பெண் பாரதியை, ஹிமமித்ரரின் திருமகன் விசுவரூபருக்கு விவாஹம் செய்து கொடுப்பதாகப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''கன்யாம் ததாமி '' - என்று விஷ்ணுமித்ரரும் அவருடைய உறவினர்களும் கூற...

''கன்யாம் ப்ரதிக்ரஹ்நாமி'' என்று ஹிமமித்ரர் அழுத்தமாகச் சொல்ல..

''ஏதத்வஹ்சத்யம்'' என்று புரோகிதர்கள் உறுதி செய்தார்கள்.

விசுவரூபர் நிச்சயதார்த்த வைபவத்தின் பொழுது அக்னி வளர்த்தார்; நெய் வார்த்து, மந்திரங்களை ஓதினார்; மந்திரங்களை உச்சாரணம் செய்து அக்னி, சோமன், பூசா ஆகிய தேவதைகளை வழிபட்டார். விவாஹ நிச்சய தார்த்த வைபவத்தை நல்ல முறையில் நிறைவேற்று கையில் மங்கல வாத்யங்கள் முழங்கின.

''வெவ்வேறு எண்ணங்கள், சிந்தனைகள், விருப்பு, வெறுப்புக்கள், கொண்ட உங்கள் இருவரையும் இல்லறம் என்ற இந்த இனிய பந்தத்தில் இணைக்கிறேன். நீங்கள் இருவரும் ஒரே வழியில் இணைந்து, ஒருவரையொருவர் அறிந்து நடப்பீராக.'' என்ற பொருள்படும் வேத மந்திரங்களை புரோகிதர்கள் உச்சாரணம் செய்து, விசுவரூபருக்கும் பாரதிக்கும் விவாஹ நிச்சயதார்த்த வைபவத்தை நிகழ்த்தி நிறைவு செய்தார்கள்.

விவாஹத்திற்கு முன்பு செய்யத்தக்க சடங்குகளை, விசுவரூபர் கிரமமாகச் செய்து முடித்தார். பின்பு, விருந்துண்பதற்காக அனைவரும் சென்றார்கள்.

வகைவகையான உணவுகள், இனிப்புகள், பழச்சாறுகள், பச்சடிகள், அமிழ்தினும் இனிய பானங்கள், பாயசம்,... என்று அறுசுவை அமுதமெனத் திகழ்ந்தது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

10

பாரதீ-விசுவரூபர் விவாஹம்

விவாஹ நாளன்று கீழ்வானம் வெளுத்தது. காலை இளம் கதிர்களை வீசி அருணன் எழுந்தான். எங்கும் சுடர் கிரணங்களின் சுந்தர ஒளி பரவியது. விவாஹத்திற்கான முகூர்த்த காலத்தை பல ஜோதிடர்களும் புரோகிதர்களும் பாரதியைக் கலந்து கொண்டு கணித்திருந்தார்கள்.

குலதெய்வங்களையும் முனிவர்களையும் முன்னிட்ட வண்ணமாக விவாஹ சாலைக்கு விஷ்ணு மித்ரர், அவரது பத்தினி, பந்துக்கள் புரோகிதர் பரிவாரங்களுடன் வந்தார்.

அது போன்று ஹிமமித்ரர், அவரது பத்தினி புத்திர மித்திரர் பந்துக்களுடனும் பரிவாரங்களுடனும் வந்தார்.

விவாஹ மண்டபம் கவினுறக் காட்சி தந்தது. மண்டபத்தின் நடுவில் விதிப்படி வேதியை அமைத்திருந் தார்கள். சந்தனம், புஷ்பம், தங்கப் பாலிகைகள், சங்கினால் செய்யப்பட்ட வெண்மையான பாத்திரங்கள் இவற்றை வைத்து வேதியை அழகுபடுத்தியிருந்தார்கள்.

முளைவிட்ட நவதானியங்கள் நிறைந்த மடக்குகள் காணப்பட்டன. இனிய மணம் பரப்பிய தூபங்கள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நிறைந்த பாத்திரங்கள் மண்டபத்தை நறுமணமுள்ள தாக்கின.

மஞ்சள் பொடி கலந்த மங்கல அக்ஷதை நிறைந்த தாம்பாளங்களும் நெல் பொரி வைக்கப்பட்டிருந்த வெள்ளிக் கும்பாக்களும் அர்க்ய ஜலம் நிறைந்த பொற் பாத்திரங்களும் விஷ்ணு மித்ரரின் செல்வ வளத்தை வெளிப்படுத்தும் விதமாக விவாஹ மண்டபத்தில் மின்னி ஒளிர்ந்தன.

வேதியின் மீது ஒரே அளவாக தர்ப்பங்களைப் பரப்பி மந்திரங்களை உச்சாரணம் செய்த வண்ணம் புரோகிதர்கள் அக்னி ப்ரதிஷ்டை செய்தார்கள்.

வகை வகையான வாத்யக் கருவிகளின் விதவிதமான ஒலி மங்கல நாதமாக ஒலிக்க ஆரம்பித்தது.

''பெண்ணைக் கொடுக்கிறவரும் பெற்றுக் கொள்கிறவரும் எல்லா விதத்திலும் மிகவும் உத்தமமானவர்கள். ஆகையால் சகல க்ஷேமங்களும் உண்டாகும்'' என்றார் பிரதான புரோகிதர்.

விஷ்ணுமித்ரர், ஹிமமித்ரரையும் அவரது பந்து பரிவாரத்தினரையும் முறைப்படி வரவேற்று உபசரித்து, தகுந்த ஆஸனங்கள் அளித்து அமரச் செய்தார். பந்துக்களுக்கு வஸ்திரங்கள், மரியாதைகள் நிகழ்ந்தன.

''விவாஹ மஹோத்ஸவத்தை உத்தமோத்தமர் களான தாங்களும் பெரியவர்களும் நடத்தித் தரும்படிக் கேட்டுக் கொள்கிறேன்'' என்ற விஷ்ணு மித்ரர் கூறிய வார்த்தைகளில் ஹிமமித்ரர் மகிழ்ந்தார். பின்பு அவரும், பெரியோர்களைப் பார்த்து, விஷ்ணு மித்ரரைப் போன்றே வேண்டிக் கொண்டார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விஷ்ணுமித்ரர், அவரது பத்தினியும், குடும்ப பந்து மித்திரர்களும் சூழ ஸர்வாபரணங்களால் அலங்கரிக்கப் பட்ட பாரதியை அழைத்து வந்து, அக்னிக்கு சமீபமாக விசுவரூபருக்கு எதிரில் நிறுத்தினார்கள்.

விசுவரூபர் பட்டாடை புனைந்து உத்தரீயம் தரித்து தங்க நிற மேனியராய் மணக்கோலத்துடன் மணமகளை நாடி, கிழக்கு திசை நோக்கி, மண மண்டபத்திலே வீற்றிருந்தார்.

அவரது கம்பீரமான எழில் அழகில் லயித்து சோணாபுரி மக்கள் மதிமயங்கி, 'ஆஹா' ஹாரம் செய்தார்கள். ''என்னே அழகு'', ''என்னே அழகு'' என வியந்தார்கள்.

பேரிகைகள் முழங்கின; மெல்லிய பூங்காற்று வீசி, அங்கு கூடியிருந்தவர்களை மகிழச் செய்தது.

மணமகனான விசுவரூபரை, விஷ்ணுமித்ரர் உபசரித்தார்; விஷ்ணுவாக வரித்து, நீரால் அவரது கால்களைத் தூய்மை செய்தார்.

''செல்வமும் வளமும் பெருக வாழ்த்துகிறேன்'' என்று ஆசியுரைத்தார்.

ஹிமமித்ரரும் அவருடன் வந்திருந்த காஷ்மீரத்துப் பண்டிதர்களும் மணமகளான பாரதிக்கு அளிக்க விசேஷமான ஆடையொன்றைக் கொண்டு வந்து மண மேடையிலிருந்த புரோகிதர்களிடம் அளித்தனர்.

அழகிய வேலைப்பாடும் மங்களகரமான வண்ணமும் கொண்ட அந்த எழில் நிறைந்த வஸ்திரத்தை பாரதிக்கு அளித்தார்கள்.

''நீண்ட ஆயுளும் ஆரோக்யமும் பெற்று வாழ வேண்டும்'' என்று வாழ்த்தும் மந்திரங்களை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காஷ்மீரத்துப் பண்டிதர்களும் புரோகிதர்களும் ஏகோபித்த குரலில் உச்சாரணம் செய்தார்கள்.

வஸ்திரத்தின் அழகு பெரிதா, இல்லை அதை அணிய விருக்கும் மங்கை நல்லாள் பாரதியின் அழகு பெரிதா என்று மக்கள் வாத விவாதம் செய்வதில் ஈடுபட்டனர்.

கோலாகலமாக வைபவங்கள் ஒன்றன்பின் ஒன்றாக நிகழ்ந்தன.

பாரதீ வஸ்திரத்தைப் பெற்றுக் கொண்டாள். பெரியோர்களை நமஸ்கரித்தாள். பின்பு புத்தாடையை அணிந்து வருவதற்காகச் சென்றாள்.

ஒளி வீசும் தங்க ஆபரணங்கள், வைரமாலைகள், குண்டலங்கள், நெற்றிச் சுட்டி, தாடங்கங்கள் மின்ன, புத்தாடை புனைந்து, மலர் மாலை சூடி, அன்னமென மென்னடை நடந்து, பாரதீ மண மேடைக்கு வந்தாள். அவளுடன் தோழியர் பலரும் பின் தொடர்ந்து வந்தார்கள்.

பாரதியும் விசுவரூபரும் அமர்ந்திருந்த மண்டபம் தேவலோகத்து மண்டபம் போல் காட்சியளித்தது.

''தவளச் சத்ர மகுடம்'' பார்த்தீர்களா? எத்தனை வசீகரமாக உள்ளது?'' என்று மணமக்களின் அருகாமையில் இருந்த உறவினர் ஒருவர் வினவ...

''வசீகரமான அந்த வெண்குடை மகுடத்தைத் தானே சொல்கிறீர்கள்'' என்று தானும் அதனைக் கண்டு வியந்த தோரணையை வெளிப்படுத்தினார் மற்றவர்.

''திருப்பள்ளித் தொங்கல்'' என்றழைக்கப்படும் மகர தோரணம் முதலியவை மங்களகரமாகக் காட்சி தந்தன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''தாமரைச் செயலைப் பார்! எத்தனை அற்புதமாக உள்ளது'' என்று பெண்மணி ஒருத்தி மொழிந்தாள். அவளது கணவர் அதனை ஆமோதிப்பது போன்று தலையசைத்து, ''தாமரை மலர் போன்று பொன்னால் செய்து அதனை ஓர் அணியாகச் சுற்றிலும் அமைக்கிற ''தாமரைச் செயல்'' சோணாபுரிக்கு புதிதில்லையே'' என்று பெருமிதம் பொங்கக் கூறினார்.

மணமண்டபத்தின் உள்ளும் புறமும் ஊராரும் உறவினர்களும் பல ஊர்களிலிருந்து விவாஹ வைபவத் திற்காக வந்திருந்தவர்களுமாக நிறைந்திருந்தது.

நிறைந்த அளவில் பண்டிதர்களும் குழுமியிருந் தார்கள். மிக விசாலமான, வெளிச்சமும் காற்றும் போதுமான அளவு நிறைந்த மண்டபத்திலே தான் விவாஹம் நடைபெற்றாலும் வந்தவர்க்கெல்லாம் பல வண்ணக் குஞ்சலங்கள் தொங்கவிடப் பட்ட பீலி (மயிற்தோகை விசிறி) வழங்கப்பட்டது.

ஆங்காங்கே, வண்ணச் சுண்ணமும் துளிர் வெற்றிலையும் களிப் பாக்கும் நிறைந்த ''இலைச் செப்புக்கள்'' வைக்கப் பெற்றிருந்தன. தாம்பூலம் தரிக்க விரும்பியவர்கள் இலைச் செப்புகளைச் சூழ்ந்து நின்று, தரித்தார்கள்.

விவாஹ மண்டபத்தில் அமர்ந்திருந்த ஒரு சிலர், அங்கே வீசிய கோரோசனை அத்தர், பன்னீர் இவற்றின் நறுமணத்தை நுகர்ந்து ''என்ன சுகம், என்ன சுகம்'' என்று சம்பாஷித்தார்கள்.

'மாநவட்டில்' மணத்தை தனித்து நுகர முடிகிறதே...'' என்றார் ஒருவர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''கஸ்தூரிக் கிண்ணம்'' என்பதைத்தான் இவர், ''மாநவட்டில்'' என்கிறார், என்று மற்றொருவர் விளக்கம் கூறினார். இது போன்ற உரையாடல்கள், விசுவரூபர்-பாரதீ விவாஹத்தின் சிறப்புக்களைக் கூறலாயின.

உத்தமமான நேரம் கூடி வந்தது.

''மிகுந்த ப்ரீதியுடன் என் பெண் பாரதியை வளர்த்து வந்துள்ளேன். சகல சாஸ்திரங்களும் தர்மங்களும் கலைகளும் கற்றறிந்தவள் பாரதீ. நீர் எந்த தர்மத்தை அனுஷ்டிக்க விரும்புகிறீரோ, அதையே தானும் மனமொப்பி உடனிருந்து இவளும் அனுஷ்டிப்பாள். என் பெண்ணாகிற பாரதியை உமக்கு பார்யை ஆகக் கொடுக்கிறேன். ஏற்றுக் கொள்ளவும். உமது சகதர்மிணியாக இவள் உடனிருந்து நிறைவேற்ற, இவளை நான் உமக்கு தானமாக அளிக்கிறேன். ஏற்றுக் கொள்ளவும்.''

''இதோ, அவளுடைய வலது கையை உமது வலது கையால் பற்றும். இவள் மஹா பதிவ்ரதையாக இருப்பாள். உம்மை, நிழல் போலத் தொடர்ந்து வரும் மஹா பாக்யசாலியாக உம்மைப் பிரியாதிருப்பாள்.''

என்று விஷ்ணு மித்ரர் மந்திர உச்சாரணங்களுடன் பரிசுத்தமான ஜலத்தை விசுவரூபரின் கரத்தில் வார்த்தார்.

''நன்று, நன்று'' என்று தேவர்களும் மஹரிஷிகளும் முனிபுங்கவர்களும் ஆசியுரை மொழிந்தார்கள். துந்துபியின் இன்னொலி எங்கும் பரவியது.

ஹோமகுண்டத்தில் அக்னி செங்கதிர் வீசியது. விசுவரூபர் நெய் வார்த்து, அக்னி வளர்த்தார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மந்திரங்களைக் கிரமமாகவும் சிரத்தையுடனும் உச்சாரணம் செய்தார். அவ்வாறு அவர் உச்சாரணம் செய்யும் போது சப்தங்களின் ஏற்ற இறக்கங்கள் ஏழிசையாக அமைந்து ஒலித்தன.

''எனது கடமைகளை நிறைவேற்ற நான் இவளது துணையை நாடுகிறேன். இதன் பொருட்டே இவளை மணம் புரிந்து கொள்கிறேன்.''

மந்திரத்தின் பொருள் மனத்தில் பதியும் வண்ணம் உணர்ந்து விசுவரூபர் கூற, அது கேட்டு பாரதீ மென் முறுவல் பூத்து, அதனை அங்கீகரித்தாள்.

அக்னியின் முன்னே, அதற்கு வடப்புறத்தே பாரதீ அமர்ந்திருந்தாள்; அருகிலே விசுவரூபர்.

''மமே ஹ்ருதயே ஹிருதயம்...'' என்ற மந்திரங்களை ஹ்ருதயப்பூர்வமாகச் சொல்லியவாறே விசுவரூபர், தமது வலக்கரத்தை பாரதியின் தோளில் பதித்து அவளது நெஞ்சைத் தொடுகிறார்.

''உன்னுடைய ஹ்ருதயம் என்னுடைய ஹ்ருதயமாக இருக்கட்டும். உன்னுடைய மனம் என்னுடைய மனத்தில் இருக்கட்டும். எனது வார்த்தைகளை நீ கவனமுடன் கேட்பாயாக! என்னையே பின்பற்றி நடப்பதென்று சபதம் எடுத்துக் கொள். என்றும் என்னைப் பிரியாமல் இருப்பவளாக இரு.''

இவ்வாறான மந்திரங்களை விசுவரூபர் உச்சாரணம் செய்து கொண்டே பாரதியின் நெஞ்சைத் தொடும் போது, பாரதீ விசுவரூபரின் சுந்தரவதனத்தை கருத்தோடு ஊன்றிப் பார்த்தாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விசுவரூபர் பாரதிக்கு அணிவித்த பொன்மாலை மங்களச் சின்னமாகப் பிரகாசித்தது.

விஷ்ணுமித்ரர் கண் பனித்தார். மணமக்கள் நெஞ்சோடு நெஞ்சம் சேர்கிற மங்களகரமான காட்சி அவரது நயனங்களை ஆனந்த அருவியாக்கிற்று. தோளில் தவழ்ந்த பட்டு உத்தரீயத்தால், ஆனந்த பாஷ்பத்தை இரு கரங்களாலும் ஒற்றினார். பட்டாடையிலே ஆனந்த பாஷ்பம் முத்துப் போல தாவள்யமாகப் பிரகாசித்தது.

அடுத்தடுத்து, சடங்குகள் நடந்து கொண்டே இருந்தன.

விசுவரூபர் பாரதியின் கரம் பற்றியபடி, அக்னியை வலம் வந்தார்.

பாரதீ அம்மி மிதித்தாள். அதற்கான மந்திரங்கள் சொல்லப்பட்டன. வானத்து விண்மீன்களைக் கருத்தூன்றிப் பார்க்கும் நிகழ்வுகள் நடந்தேறின.

''துருவம் பஸ்யாமி...'' மணமகன், மணமகளுக்கு நிலவுலக முனைக் கோடிக்கருகே உள்ள துருவ நக்ஷத்திரத்தைக் காட்டுகிற துருவ தரிசனம் நிகழ்ந்தது. ஸப்தரிஷி மண்டலத்தைக் கண்டார்கள்.

ஸப்தரிஷிகள் எனப்படுகிற கஸ்யபர், அத்ரி, பரத்வாஜர், விஸ்வாமித்ரர், கௌதமர், ஜமதக்னி, வசிஷ்டர் ஆகியோரை தியானித்துப் பிரார்த்தித்துக் கொண்டார்கள். வசிஷ்டரின் பத்தினி அருந்ததி, பதிவிரதாசிரோமணி.

விசுவரூபர், பாரதிக்கு அருந்ததி நக்ஷத்திரத்தைக் காட்டினார். மந்திரங்கள் மங்கலமாய் ஒலிக்க, பாரதீ அருந்ததியை நோக்கினாள். அருந்ததியின் ஒளியை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நோக்கிய வண்ணம் ''ஸப்தரிஷயஶ் ப்ரதமாம் கிருத்திகா நாமருந்ததீம் யத்துருவதாம் ஹ நிந்யுஶ்...'' என்று மந்திர உச்சாரணம் தொடர்ந்தது.

'' பாரதீ, அருந்ததி பார்த்தாயா?'' என்று விசுவரூபர் தன்னிடம் கேட்பது போல் ஒரு ஒலி கேட்டது.

அருந்ததியைப் பார்த்தாள். பார்த்ததன் அடையாள மாக, சிரகம்பம் செய்தாள், மந்திரங்கள் கானம்போல் ஒலித்தன. மந்திர சப்தங்களின் ஒலி, மணமக்களின் ஹ்ருதயங்களில் புதிய ஒளியைத் தோற்றுவிக்கும் மஹிமை பொருந்தியதாக இருந்தது.

இருவரின் முகங்களும் பொலிந்து தேஜஸுடன் விளங்கின.

வானம், ஆகாசம், அண்டம், பிரகிருதி அண்டம், சாக்தாண்டம், மாயாண்டம், அனந்த மாயாண்டம், ஜோதிராஷம், சிதாகாசம் முதலிய ஆகாசத்தின் பதினெட்டு நிலைகளையும் தாண்டி, ஆதிசக்தியின் சுடர்ப்ரகாசம் இருவர் கண்களிலும் ஒளி வீசிற்று.

பாரதீ, விசுவரூபரின் கரம்பற்றி நடந்தாள். தர்மசாஸ்திரப்படி வேதச்சடங்குகள் தொடர்ந்து நடை பெற்றன.

கைவளைகளைத் திருத்துவது போல பாரதீ, கடைக்கண்ணால் விசுவரூபரைக் கண்டு உவகை யடைந்தாள். அப்போது, அவளது கரங்களிலிருந்த கங்கணங்கள், கணையாழி இவைகளில் பதிக்கப்பெற்ற ரத்னங்களிலிருந்து ஒளி வீசியது; வண்ணங்களை வாரி இறைத்து ஜ்வலித்தது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''ஒருவரையொருவர் விரும்பி, இதயம் ஒன்றி, ஒருவருக்கு மற்றவர் பிரகாசமாகி, அன்பால் பிணைந்து நூறாண்டு வாழ்வோம்.''

மந்திரங்கள் சொல்லி அக்னியில் பொரி இட்டார்கள். அக்னியில் பொரி இடுதல் என்ற 'லாஜஹோமம்' கரங்கள் இணைந்து கருத்தொன்றிச் செய்யும் நிகழ்வாகும். பாரதியின் குடியில் பிறந்த சகோதரன் அவளது, இணைந்து விரிந்த கரங்களிலே பொரியை இட்டு ''லாஜஹோமம்'' செய்தார்கள்.

இவ்வாறு இணைந்த கரங்களுடன் மூன்று முறை அக்னியில் பொரியிட்டார்கள். நலம் விழைய வேண்டும் என்று மனத்திற்குள் சங்கல்பித்துக் கொண்டார்கள்.

சுபிக்ஷமும் ஹ்ருதயத்தில் நல்லெண்ணமும் வேண்டி அக்னிதேவனுக்கு பொரி இட்டு லாஜ ஹோமம் செய்யப்படுகிறது.

'லாஜம்' என்கிற நெல்பொரி மங்கள திரவியமாகக் கருதப்படுகிறது.

பார்வதி தேவி - பரமேஸ்வரன் விவாஹத்தன்று லாஜஹோமம் நிகழ்கின்ற தருணம்...

''அந்யோந்யமாக பார்வதி பரமேஸ்வரன் இருவரும் கரங்களைத் தொட்டுக்கொள்ள, ஸ்பரிஸ உணர்வு ஏற்பட்டு ஆனந்தமயமாக்கியது. அந்த ஆனந்தமயம் நிறைந்த புது அனுபவத்தில் அவர்கள் இருவருமே கண்களை மூடிக்கொண்டு, அந்த ஸ்பரிஸ உணர்வில் தங்களையே மறந்திருந்தது போலவே...''

பாரதியும் விசுவரூபரும் லாஜஹோம நிகழ்வின் போது, தங்களை மறந்து, ஒன்றி, ஆனந்தக் கடலில் திளைத்திருந்தார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கணவர் நீடூழி வாழ்ந்து வளம் பெறப் பிரார்த்தனை செய்தபடியே மணமகளால் லாஜஹோமம் செய்யப் படுகிறது என்பதை, முறைப்படி அறிந்திருப்பவள் அல்லவா பாரதீ!

உணர்ந்து, தெளிந்து உளப்பூர்வமாக வேண்டிப் பிரார்த்தித்தாள்.

விசுவரூபர் முன்நடக்க, அவரது வலக்கரம் பற்றிய வண்ணம் பாரதீ, பின் தொடர்ந்து நடந்து, அக்னியை வலம் வந்தார்கள்.

ஞானச்சுடரும் வேதச்சுடரும் அக்னியை வலம் வருவதுபோல இருந்தது, அக்காட்சி.

வந்திருந்தவர்கள் அனைவரும் அக மகிழ்வுடன் அந்த வைபவத்தைப் பார்த்துக் களித்தார்கள். விசுவரூபர் முன் நடக்க, பாரதீ அவரைப் பின்பற்றி நடந்தாள். விசுவரூபர் முதுகுப் புறத்திலே அணிந்திருந்த ''திருப்புறக்குடை''யின் அழகு பாரதியை ஆகர்ஷித்தது. அந்த அணியங்கியில் பதிக்கப்பட்டிருந்த பலவகை ரத்னங்களும் மின்னி ஒளிர்ந்தன.

பாரதீ மெல்ல மெல்ல, காலடி வைத்து நடந்தாள்; இருப்பினும் அவளது பாதச்சிலம்பிலிருந்து மணியொலி 'கிணு கிணு'த்தது. அவ்வொலியானது, மங்கல வாத்ய இசையுடன் ஒன்றிக் கலந்து ஒலித்தது. அவளுடைய கழுத்திலிருந்த 'கண்டிகை'யின் ரத்தினக் கற்கள் ஜ்வலித்தன. பொத்தி, சக்கரம் என்கிற இருவகையான ரத்னங்கள் இருபக்கங்களிலும் இருக்க நடுவில் பொற்பதக்கத்தில் ''ரத்தினங்களின் ரத்னம்'' என்று கூறப்படும் ''ராஜவர்த்தம்'' ஜ்வலித்துக் கொண்டிருக்க, கண்டஹாரம் அழகுடன் திகழ்ந்தது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாரதீ காலடி எடுத்து வைக்கும் மெலிதான அசைவிலும் இரு வகை ரத்னங்களுடன் ராஜவர்த்தமும் திசைகளெல்லாம் ஒளிவீசிப் பளிச்சிட்டது.

இளம் பச்சை மணியான ''நிம்பொளம்'' பதிக்கப் பெற்ற காதணிகளை பாரதீ அணிந்திருந்தது அழகுக்கு அழகு சேர்த்தது.

'ஹளஹளம்' என்னும் ஒளிமணி பதித்த தொடி எனப்படும் ஆபரணத்தை அவள் தோளிலே சூடியிருந்த வண்ணம் நடந்தாள்.

அணியும் அலங்காரமும் அழகும் கூடி, பாரதியும் விசுவரூபரும் காண்போர் பரவசமடையும் வண்ணம் பேரழகுடன் திகழ்ந்தார்கள்.

விசுவரூபர் ஆணழகர்; அவரும் விவாஹ தினத்தன்று அணியாரங்களும் மணியாரங்களும் புனைந்திருந்தார்;

அவரது நடை மத்தகஜத்தை ஒத்த கம்பீரமான நடை; அடி எடுத்து வைக்கும் போது, கரங்கள் முன்னும் பின்னும் அசையும் அளவும் தோள்களின் எடுப்பான தோற்றமும் வசீகரமானவை.

அவர் அணிந்துள்ள 'ஸ்ரீ பாகு வளையம்' மெல்ல ஆடி அசையும். அந்தத் தோளணியில், 'சப்பத்தி' என்கிற தட்டையான முத்தும் 'அனுவட்டம்' என்னும் நீண்டு உருண்ட முத்தும் ஸ்ரீ பாகுவளையத்தில் புதுப் பொலிவை உண்டாக்கின.

'அட்டிகையுடனும் பட்டிகையுடனும் அவள் வந்தாள்' என்று காவியங்கள் கூறுவதைப் போல் 'தானைத் திருப்பட்டிகை' பாரதியின் மெல்லிய இடைக்குப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொருத்தமான அணியாக விளங்கிற்று. இடுப்பில் அணிகின்ற திருப்பட்டிகையில் 'ஆகாசவிசாதி' என்ற அற்புத மணிக்கல், மிக அரிதாகவே கிடைக்கக் கூடிய 'சக்கம்', தொன்மை மிகுந்த பழமுத்து, பயிட்டம் ஆகியவைகள் பதிக்கப் பெற்றிருந்தது. முத்து மணிகளுடன் இரண்டாகப் பதிக்கப் பெற்றதே, 'தானைத்திருப்பட்டிகை'.

பூவுடன் மணம் சேர்ந்தது போல அறிவு ஒளி பொருந்திய பாரதீ அணிகலன்களை அணிந்து பேரொளி வீசி நின்றாள். அழகே ஒரு வடிவெடுத்தது போன்று காட்சி தந்தாள்.

உத்தம ஸ்திரீகளுக்குரிய அழகுகள் அனைத்தையும் பெற்றுத் திகழ்ந்த பாரதியின் நடையழகும் உடையழகும் மேனியழகும் வர்ணனைகளுக்கப்பாற்பட்டதாக விளங்கின.

பாரதியின் நெற்றித்திலகம் பால சூர்யனைப் போல் ஒளிர்ந்தது. 'உதிக்கின்ற செங்கதிர் உச்சித்திலகம்' மாணிக்கம் போல், மலர்க்கமலை போல் பிரகாசித்தது.

பிச்சி மொய்த்த கன்னங்கரிய பூங்குழலாள் பாரதீ; அவளது நெற்றியைக் காணும்தொறும் கீழ்முகமாக நோக்கியிருக்கும் சந்திரகலையோ என்ற எண்ணம் தோன்றும்.

சிரசில் புருவத்திற்கு நடுவே நெற்றிக்கு மேலே கேசபாகங்களை இருபுறமும் வாரி, நடுவில் வழிபோல் அலங்கரித்து, அந்த வழியிலே நெற்றிச் சுட்டியை பாரதீ தரித்துக் கொண்டிருந்தாள். கேசத்தின் நடுவழியை ஸீமந்தஸரணி -மஹிடு - வகிடு என்றும் கூறப்படுகின்ற இடத்திலே சிவப்பாயும் வர்துளமாயும் திகழ்ந்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸீமந்தஸிந்தூரம், பாரதியின் பேரழகுக்கு பொலிவு தந்தது, தேஜஸாக இருந்தது.

சௌந்தர்ய தேவதையாகக் காட்சி தரும் பாரதியின் மேகலை (ஒட்யாணம்) அவளது சின்னஞ்சிறு மருங்கினில் பாங்குடன் அமைந்து, அதன் நடுவினில் நானாவித ரத்னக் கற்கள் ஒளிவீச, மேகலையின் மத்ய வர்துளம் ஜொலித்தது.

தங்க ஒட்யாணத்தில், தங்க சலங்கைகள் கட்டப்பட்டிருந்தன. பாரதீ மெல்ல, தன் காலடி வைத்து நடக்கும் சமயங்களில், ஒட்யாணச் சலங்கைகள் 'கண கண' என்று எழுப்பிய ஒலி சங்கீத ரஸத்துடன் சப்தித்தது.

மின்னாயிரம் ஒரு மெய்வடிவாக பாரதியும், தன்னிகரில்லாத தனியழகுடன் விசுவரூபரும் காண்போருக்கு எல்லாம் பரவச சுகானந்தத்தைத் தந்து கொண்டிருந்தார்கள்.

வேதங்கள் சாற்றியுள்ள பிரகாரம் விவாஹச் சடங்குகள் கிரமமாக நிகழ்ந்து கொண்டிருந்தன.

மணமண்டபத்தின் பக்கவாட்டில் இன்னொரு பகுதியில் அமைந்திருந்த கானமண்டபத்தில் வதூவின் கிரஹத்தைச் சேர்ந்த பெரியவர், ''வேதங்களில் விவாஹகாலத்தில் ஸங்கீதகானம் விதிக்கப் பட்டிருக்கிறது'' என்று உரத்தகுரலில் கூறிக்கொண்டே ஸங்கீத நிகழ்ச்சிக்கான பூர்வாங்கச் செயலுக்கு ஆயத்தமானார்.

வரனின் கிரஹத்தைச் சேர்ந்தவர்கள் உற்சாகத்துடன் இருந்தனர். மாஹிஷ்மதி பண்டிதர் ஒருவர், கர்மாக்களைச் செய்வது போன்று கானத்தையும் இசைக்க வேண்டும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்று வேதம் சொல்கிற சிந்தனையைப் பாராட்டிய படியே, ''தஸ்மாத் விவாஹே காதா கீயதே'' என்று சதபதப்ராஹ்மண வாசகத்தை மேற்கோள் காட்டினார். கர்மாவின் அங்கமில்லை என்றாலும் கானம் நிகழ்த்துவதின் அவசியத்தை வரவேற்றார்.

வேத சங்கீத முறைப்படி பெண்கள் கீதமிசைத்தனர். பாட்டினைப் போல் ஆச்சரியம் பாரின் மிசை இல்லை என்பார்கள். பாட்டுப் பரவசத்தில் அனைவரும் திளைத்தார்கள்.

வாய்ப்பாட்டு என்கிற கீதத்துடன் இசைக்கருவி களினால் பாடுகிற 'வாதித்ர'மும் சேர்ந்திட 'கீத-வாதித்ரம்' என்றே சாந்தோக்ய உபநிஷத் சொல்வதை நினைப்பூட்டிடும் வகையில் நான்கு சுமங்கலிகள் 'நாடீ' என்ற வாத்யத்துடன் கீதமிசைத்தார்கள்.

பாரதீ-விசுவரூபர் இருவரும் ஸங்கீதத்தின் நல் லின்பத்தைக் கேட்டுக் கொண்டிருந்த போது, நுகத்தடியை பாரதியின் சிரமீது வைத்து புரோக்ஷணம் செய்த சமயத்தில் 'வாணம்' என்ற வீணை போன்ற கருவியை இயக்கினார்கள்; இசை பரவியது.

வீணா கானம் விவாஹத்தில் முக்ய பங்கு வகிக்கிற வழக்கு வேதகாலம் தொட்டே நிகழ்வதாகும்.

ஐசுவரியம், சந்தோஷம் இவைகளின் அடையாளமாக வீணை இருப்பதால், வீணாகானம் நிகழ்கிறது என்று வேதம் கூறுகிறது. அத்தகைய வேதம் சாற்றுகிற வீணாகானம் சிறப்பாக நடந்தது.

மண்டபத்தின் மற்றொரு பக்கத்தில் கீதத்திற்கு பக்க வாத்தியமாக வீணாவாதன் வீணையை வாசித்துக் கொண்டிருந்தான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இன்னொரு பக்கத்தில் வீணாகானமே தனியாக நிகழ்ந்து கொண்டிருந்தது.

சடங்குகளில் வேத மந்திரங்கள் ஒலிக்கும் நயங்கள்; அதே சமயம் வேத ஸங்கீதம் எழுப்புகிற நாத நயங்கள்; விவாஹ மண்டபத்தில் உற்சாகமும் சந்தோஷமும் கொண்டு எல்லோரும் மணமக்களைக் கண்டு மகிழ்ச்சியுடன் காணப்பட்டார்கள்.

ஸப்தபதி நடக்கலாயிற்று.

அழகே உருவாக, ஒருவரையொருவர் மிஞ்சும் பேரழகை பாரதியும் விசுவரூபரும் காலடி வைத்து நடந்து செல்லும் ஸப்தபதியின் ஸௌந்தர்யக் காட்சியை, கூடியிருந்தோர் கண்டு பரவசமடைந்தார்கள்.

மந்திரப்பூர்வமாகக் காலடி எடுத்து வைப்பது பற்றி கூறப்பட்டுள்ளது. வலது காலை முன்னே எடுத்து வைத்ததும் அதன் வழியே இடது காலை எடுத்து வைக்க வேண்டும். வலது காலுக்கு முன்பாக இடது காலை எடுத்து வைப்பது கூடாது.

‘‘ இஸ ஏகபதி’’

‘‘ஊர்ஜே த்விபதி’’

‘‘ராயாஸ் போஷாய த்ரிபதி’’

‘‘மாயோ பவ்யாய சதுஷ்பதி’’

‘‘ப்ரஜாப்யஹ் பஞ்சபதி’’

‘‘ருதுப்யஹ் ஷத்பதி’’

‘‘சகா சப்தபதி பவ.’’

உலக விஷயங்களை அறிந்து கொள்வதில் முனைப்போடிருக்க முதலடியை முன்னே வைத்தல்..

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உயிர்க் கூறுகளின் நுட்பம் காண இரண்டாவது அடி...செல்வத்தைப் பெருக்கிக் கொள் என்பதைக் குறிக்க மூன்றாவது அடி...

இன்ப வாய்ப்பு நல்கி துணை புரிவதற்காக நான்காவது அடி...

சந்ததி வழித் தோன்றலுக்காக ஐந்தாவது அடி...

கால நிலைக்கேற்ப இசைந்து வாழும் திறம்பெற ஆறாவது அடி...

உற்றுழி உதவி ஸ்னேகிதமாக இருக்க ஏழாவதுஅடி... என்ற அர்த்தங்களைக் கொண்ட ஏழு மந்திரங்களைச் சொல்லி ஏழு அடிகளை எடுத்து வைத்தார்கள். ஏழு அடி (ஸப்தபதி) எடுத்து வைத்ததன் மூலம் நாம் ஸ்நேகிதர்களானோம். உன்னுடைய ஸ்நேகிதத்தை அடைந்தவனானேன். என்றும் நாம் இணை பிரியாமல் இருப்போம்'' என்று பொருள் படும் மந்திரங்களை விசுவரூபர் கூறினார்.

ஸப்தபதி-ஏழடி எடுத்து வைத்தபின்பு, மணமகன் மந்திரத்தைக் கூற, மணமகள் சூரியனைப் பார்க்கிறாள். மணமகன் மந்திர உச்சாரணம் செய்கிறார்.

''கீழ் வானில் தெய்வ ஒளிப் பிரகாசத்தின் உதயம், நாம் நூறு சரத்ருதுக்களைப் பார்த்துக் கொண்டிருப் போமாக! நாம் நூறு சரத்ருதுக்கள் வாழ்வோமாக! நாம் நூறு சரத்ருதுக்கள் சந்தோஷமாக வாழ்வோமாக! மேலும், ஒரு நூறு சரத்ருதுக்களுக்கு அப்பாலுமாக...''

சரத்ருது அனைவருக்கும் களிப்பை அளிக்கும் ஒரு பருவகாலம். அகஸ்திய நக்ஷத்திரம் ஒளிப் பிரகாசத்துடன் வானில் தோன்றிப் பிரகாசம் ஏற்படுத்தும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வர்ஷருதுவில் மேகங்கள் நீர் நிறைந்து கனமாக இருப்பதால் சூரியஒளி தடைபட்டுத்தெரியும். வர்ஷ ருதுவில் மழை முழுதுமாகப் பெய்து, மேகம் கனம் குறைந்து, காற்றினால் விலக்கப்பட்டு சரத்ருதுவில் சூரியஒளி நன்றாக வெளிப்படும். எங்கும் பரவி இருக்கும்.

தாமரை மலர்கள் ஏராளமாக மலர்ந்து காட்சியளிக்கும். சரத்கால சந்திரன் தெளிவுடனும் பொலிவுடனும் காட்சி தருவான்.

சரத்காலத்தில் ஹம்ஸங்கள் கூட்டம் கூட்டமாக வெண்மையின் பவனி போல் காட்சிதரும்; நீரில் ஆம்பல் மலர்ந்து வெண்ணிறம் பளிச்சிட்டுத் தெரியும்; வானத்து வின்மீன்கள் ஒளியுடன் பிரகாசித்து வெண்மையைக் காட்டும்; கதிரவனின் ஒளி வெண்மை கூடும்; எங்கும் வெண்மை; எங்கும் வெண்மை.

சரத்காலம் பருவங்களில் ஒரு பொன்னான பருவம்.

பொழுதுகளும் பருவங்களும் காலத்தைக் குறிக்கும் அளவைகள். ஒரு வருஷத்திற்கு ஆறு பருவங்கள்; பருவங்களை ருது என்பார்கள். காவிங்களில் ருதுவர்ணனம் அமைந்திருக்கும்.

சித்திரையும் வைகாசியும் வசந்த ருது (இள வேனிற்காலம்); ஆனியும் ஆடியும் கிரீஷ்ம ருது (முதுவேனிற்காலம்); ஆவணியும் புரட்டாசியும் வர்ஷருது (கார்காலம்); ஐப்பசியும் கார்த்திகையும் சரத்ருது (கூதிர்காலம்; இலையுதிர்காலம். கனிதரும் காலம். குளிர் காலம் எனவும் சொல்வர்); மார்கழியும் தையும் ஹேமந்த ருது. (முன்பனிக்காலம்); மாசியும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பங்குனியும் சிசிர ருது. (பின் பனிக்காலம்); என ஆறு ருதுக்கள் ஒரு வருஷமாகும்.

வருஷத்திற்கு ஒரு முறை வருவது சரத்ருது. நாம் நூறு சரத்ருதுக்களைப் பார்ப்போமாக என்றால் நூறு வருஷங்கள் வாழ்வோமாக என்பதாகப் பொருள். பல நூறு சரத்ருதுக்கள் என்று மந்திரம் சொல்கிற போது பல நூறு வருஷங்கள் என்பது உட் பொதிந்த பொருளாகிறது. மந்திரங்களின் வலிமை தான் என்னே!

ஸப்தபதிக்குப் பிறகு இவ்வாறான மந்திரத்தை அதற்குரிய சப்த தொனியுடன் மொழிந்தார். தொடர்ந்து சில மந்திரங்களும் சொல்லப்பட்டன.

விவாஹத்தில் ஸப்தபதி மந்திரங்களைச் சொல்லி நிறைவு பெறுகிறவரை வந்திருந்த அனைவரும் ஆங்காங்கே அமர்ந்து கொண்டும் அவரவர்க்குரிய பணியைச் செவ்வையாகச் செய்த வண்ணமுமாக இருந்தார்கள்.

விவாஹத்தில் ஸப்தபதி மிக முக்கியமான தாயிற்றே! ஆதலின் சுற்றத்தாரும் உற்றார் உறவினரும் மற்றோரும் ஸப்தபதி நிறைவு பெற்றதும் மணமக்களுக்கு ஆசி கூற எழுந்து சென்றார்கள். வாழ்த்துக் கூறவும் மலரும் அக்ஷதையும் தூவி ஆசி கூறவும் மணமக்களை நெருங்கினார்கள். மணமக்களின் பெற்றோர்களிடம் தங்களுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்து அன்பைப் பரிமாறிக் கொண்டார்கள்.

எழுந்து சென்றவர்கள் எல்லோரும் தாங்களே முறைப்படுத்திக் கொண்டு வரிசைக்கிரமமாகச் சென்றது வனப்புமிக்கதாக இருந்தது. மங்கலமான ஒலிகள் எங்கும் நிறைந்தன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெரியோர்களும் பண்டிதர்களும் மணமக்களை அக்ஷதையும் மலர்களும் தூவி மனதார வாழ்த்தினார்கள.

''அருந்ததியைப் போல் கணவருக்கு, கடமை தவறாத உத்தமியாக வாழ்வாயாக! இந்திராணியைப் போல் செல்வச் செழிப்புடன் திகழ்வாயாக! அதிதிக்கு நிகராக நற்குணமுள்ள புத்திரர்களைப் பெறுவாயாக. லக்ஷ்மியைப் போல் அழகானவளாக விளங்குவாயாக! மனுவை நிகர்த்த நிபுணராக இருப்பீராக. புருஷோத்தமனைப் போல வெல்லற்கரியவர்களாக ஒளிர்வீராக! மகேந்திரனை ஒத்த செல்வ வளத்தோடும் சீரோடும் மிளிர்வீராக!''

என்று வாழ்த்துக்கள் கூறி, பிராமணோத்தமர்களும் பெரியோர்களும் மங்கல நீரை சதி-பதியான பாரதீ-விசுவரூபர் தம்பதியரின் மீது தெளித்தார்கள்.

தந்தப்பூண் கட்டிய கோல் ஒன்றை பண்டிதர்களின் சார்பில் ''கொம்பின் கொள்கை'' என்று கூறி அதனை வயது முதிர்ந்த ஒரு பண்டிதர் விசுவரூபரிடம் வழங்கினார். விசுவரூபர் அதனை மிக்கவிநயமுடன் பெற்றுக் கொண்டார்.

'பிங்களம்' ஒன்றை பெண்டிர்களின் சார்பாக, பாரதியிடம் அளித்தார்கள். அந்தப் பிங்களம் எனும் தாம்பாளத்தில் ''முத்தின் உழுது'' எனும் முத்துமணி ரத்தினங்கள் பதித்த தொன்மையான அணி வைக்கப் பட்டிருந்தது. மின்னிப் பிரகாசித்துக் கொண்டிருந்த 'முத்தின் உழுது' அணியை பாரதிக்குச் சூட்டினார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பின்பு, விசுவரூபர் பாரதீ இருவருக்கும் 'திருப்பள்ளித் தொங்கல்' மகுடம் சூட்டப்பட்டது. ஸ்வர்ண ஹாரங்கள் வளைந்து வளைந்து தொங்க, நுனியில் வைர வைடூர்யங்கள் பதித்த பதக்கம் அணி செய்ய அற்புதமான அந்த ஆபரணம் அவர்களது அழகுக்கு அணியப் பெற்ற மகுடமாகத் திகழ்ந்தது.

செந்தமிழும் ஸம்ஸ்கிருதமும் கற்றறிந்த தமிழ் நாட்டு தாமிரபருணி நதிக்கரைப் புலவர் அதனைப் பற்றி விரிவாக விளக்கினார்.

தனித்தனியாக வந்து பரிசளித்து அன்பு பாராட்டியவர்களின் எண்ணிக்கை கணக்கிலடங்காது. அன்பளிப்பு வழங்குவதே அற்புதமான ஒரு வைபவமாக நிகழ்ந்தது.

ஹிமமித்ரரும் விஷ்ணுமித்ரரும் கல்பக விருஷம் போல, ஆனந்த மிகுதியினால், வந்திருந்தவர்களுக்கு பலபொருள்களை அள்ளித் தரலானார்கள். பரிசுகளும் அன்பளிப்புக்களும் பெற்று நன்றிப் பெருக்குடன் பண்டிதர்களும் பூரித்தார்கள். வந்திருந்த அனைவருக்கும் பாரதீ திருக்கரங்களினால் வஸ்திரங்கள் வழங்கப் பட்டன. வஸ்திரங்களில் ஸகல தேவதையரும் வாசம் புரிகிறார்கள்.

நான்கு நாட்களும் கோலாகலத்துடன் சோணாபுரி திகழ்ந்தது. விஷ்ணுமித்ரரின் அகத்திலே தங்கி இருந்து, விஸ்வரூபர் ஔபாசனம் வளர்த்தார். தம்பதிகள் பாலிக்க தெளித்தார்கள். வேதச்சடங்குகள ஒன்றையும் விடாமல் செய்து முடித்தார்கள். விசுவரூபர் பத்தினியுடன் காஷ்மீரம் செல்லும் நாளும் வந்தது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெண்ணின் மீது அன்பும் பாசமும் கொண்ட விஷ்ணு மித்ரருக்கு இனி மகளைப் பிரிய வேண்டுமே என்ற எண்ணம் எழுந்து உள்ளத்தில் துயரம் கவிந்தது. ஆயினும் மனத்தை ஒருவாறு தேற்றிக் கொண்டார். தமது துணைவியை அழைத்து, கணவர் வீடு செல்லும் பாரதிக்கு, வேண்டியவற்றைச் செய்யச் சொன்னார்.

பின்பு மருகராகிய விசுவரூபர் அருகினில் வந்தார்.

''தாங்கள் என் மகளை மணந்த என் இனிய மருகர். சகல சாஸ்திரங்களையும் கற்றுணர்ந்தவர். ஆயினும் எங்களிடம் அனுபவம் என்ற அறிவு இருக்கிறது. புகுந்த வீடு செல்லும் மகளுக்குப் பெற்றவர்கள் சில வார்த்தைகள் சொல்ல வேண்டுமென்ற நியதியும் இருக்கிறது. தங்களிடம் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன்.''

விஷ்ணுமித்ரர் கூறுவதை விசுவரூபர் ஆவலுடன் கேட்கலானார்.

''என் மகளைப் பற்றி ஒரு சில வார்த்தைகள். அவள் ஒரு குழந்தை. மென்மையானவள். கடுமையின் சாயலான சொற்கள் கூட அவள் மனத்தைப் புண்படுத்திவிடும். ஆகையால் இதமாகப் பேச வேண்டும். அவளுக்கு இதுவரை எந்தப் பொறுப்பும் நாங்கள் தந்ததில்லை. குடும்ப பாரத்தை அவள் சுமக்க தாங்கள் உறுதுணையாக இருக்க வேண்டும்.''

''கல்வியுடன் ஞானமும் பாரதீ பெற்றிருக்கிறாள். இதைத் தாங்கள் உணர்ந்திருப்பீர்கள். வருங்காலத்தில் மிகப் பெரிய நீதிஸ்தானத்தை அவள் வகிப்பாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விசுவரூபரே! என் மகள் பாரதீ... இவள் மானுட உருவெடுத்த தெய்வப் பிறவி. இதற்கு மேல் என்னால்... நெகிழ்ச்சியில் சொல்ல முடியவில்லை. அவளைப் பாதுகாக்க வேண்டியது உங்கள் பொறுப்பு.''

பெற்ற பாசத்தால் விஷ்ணுமித்ரர் தவித்தார்; வார்த்தைகள் நழுவின; நாத்தழுதழுத்தது; பெருகிய கண்ணீரை, விசுவரூபரின் அருகில் நின்ற பாரதீ துடைத்தாள்.

''என் கண்ணே, குழந்தாய் பாரதீ, நீ விரும்பிய மணாளனுக்கு மாலையிட்டு அவருடன் அவர் வீடு-இல்லை இனி அதுதான் உன் வீடு-செல்லப் போகிறாய். உனக்கும் சில அறிவுரைகள் சொல்கிறேன். கவனமுடன் கேட்டுக் கொள்.''

''சொல்லுங்கள் தந்தையே! தங்களுடைய அனுபவப் பாடம், என் வாழ்வுக்கு வளம் சேர்க்கும்'' பாரதீ வீணைக் குரலில் மிழற்றினாள்.

''பாரதீ! இதுவரை நீ இருந்த விதம் வேறு; இனி வாழப்போகும் விதம் வேறு; நீ உன் குழந்தைத் தனத்தை இனி விட்டு விட வேண்டும். தாயையும் தந்தையையும் கடவுளாக எண்ணி வழிபட்டாய். இனி உனக்கு கணவரே கடவுள். அவரோடு இணைந்து அவருக்காக வாழ்ந்து வருவது தான் உன் வெற்றியாகும்!''

''அவ்வாறே செய்வேன் தந்தையே!''

''கணவர் உண்பதற்கு முன்னால் நீ உணவருந்து வதோ அவர் வெளியூர் சென்றிருக்கும் போது நீ அலங்கரித்துக் கொள்வதோ கூடாது.''

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''பெரியோர்களிடம் பணிந்து நட. அவர்களிட மிருந்து நிறையக் கற்றுக் கொள். கணவர் கோபித்தால், நீயும் அதே வேகத்தோடு பேசாதே! தணிந்து விடு. எதையும் தெளிவுபடப் புரிந்து கொள். புரிந்து கொள்ளல் மிக முக்கியம். அவருடைய கோபத்தால் உனக்கேற்படும் வருத்தத்தை, முகக்குறியால் உணர்த்தி விடு.''

''அந்நியர்களுடன் அதிகம் பேசாதே. அதனால் உன் இல்லற வாழ்வில் பாதிப்பு வரலாம். கணவர் வெளியூர் சென்று திரும்பியதும் அவருக்குத் தேவையானவற்றைச் செய்வது உன் கடமை. உன் கணவர் இல்லாத நேரங்களில், கற்றறிந்த பண்பாளர்கள் வீடு தேடி வந்தால், அவர்களுக்கு உரிய மரியாதையைச் செய்.''

''உன்னைப் பெற்றவர்களைப் போல போற்றிப் பணி செய்ய வேண்டியவர்கள் உன் கணவரின் பெற்றோர்களே! அவர்களின் மனமறிந்து நடக்க வேண்டும். கணவரின் உடன் பிறப்புக்களுடன் நல்லிணக்கமாகப் பழக வேண்டும். நீ பழகும் முறையில் தான் அவர்கள் உன்னிடம் பழகும் விதம் அமையும்.'' என்று கூறி முடித்தார்.

அறுபத்து நான்கு கலைகளின் அற்புத வடிவினளான பாரதீ, விசுவரூபரை மணம் புரிந்து கொண்ட பாரதீ, பெற்றோர்களின் மொழிகளைத் தன் இதயத்தில் ஆழமாகப் பதித்துக் கொண்டாள்.

சாஸ்திரங்களின் சங்கமமாக, உபசரணைகளின் உதாரணமாக பாரதீ-விசுவரூபர் விவாஹம் நடந்தேறியதாக அனைவரும் வர்ணித்தார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சோணாபுரியில் இத்தகைய விவாஹம் இதுவரை நிகழ்ந்ததில்லை என்று ஒருமுகமாகப் பெருமிதம் கொண்டார்கள்.

பாரதீ-விசுவரூபர் விவாஹத்தில் நேரில் கலந்து கொண்டவர்கள் புண்ணியம் செய்தவர்கள் என்றும் கலந்து கொண்டவர்களின் வாயிலாக, இந்த விவாஹ விமரிசைகளைக் கேட்டறிந்தவர்கள் பெரும் பாக்கியசாலிகள் என்றும் தர்மசாஸ்திர விற்பன்னர்கள் இந்த விவாஹ மகத்வத்தைப் பற்றி மொழிந்தார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

11

பதியுடன் பயணம்

விசுவரூபரின் தாயும் தந்தையும் பாரதியைத் தங்கள் கிருஹத்துக்கு அழைத்துச் செல்வதற்கான ஏற்பாடுகளில் முனைந்திருந்தார்கள். விஷ்ணுமித்ரர் தம்பதிகளும் ஹிமமித்ரர் தம்பதிகளும் தங்கள் செல்வங்களுடன் உவகையொடு நின்றிருக்க விஷ்ணுமித்ரரும் அவரது பத்தினியும் பாரதியின் கைகளைப் பற்றிய வண்ணமிருந்தார்கள்.

அதைக் கண்ட ஹிமமித்ரரும் அவரது பத்தினியும் கனிவுடன் நோக்க, அந்தக் கனிவிலே பாரதியின் பெற்றோரின் மனம் நெகிழ்ந்தது.

யானைகள் மீதும் குதிரைகள், காளை மாடுகளைப் பூட்டிய வண்டிகளிலும் பாரதிக்கு பிறந்த வீட்டு ஸ்ரீதன வரிசைகளை ஏற்றிக் கொண்டே இருந்தார்கள். ஊர் கூடி நின்று, அவற்றைப் பார்த்து பிரமித்தது.

பாரதீ, விசுவரூபருடன் காஷ்மீர தேசம் செல்வதைக் காண அங்கே ஆவலுடன் சோணாபுரியின் குடிமக்கள் குழுமியிருந்தார்கள். வழியனுப்பவும் வாழ்த்தவும் காத்திருந்தார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஹிமமித்ரரின் அருகில் ஒருவர் ஏராளமான காஷ்மீரத்து சால்வைகளுடன் நின்று கொண்டிருந்தார். இன்னொருவர் மற்றவரிடமிருந்து சால்வையை வாங்கி தமது கையில் இருந்த ''பொத்தி'' எனும் ரத்தின வகைக் கற்கள் பதித்த பிங்களத்தில் வைத்துக் கொண்டிருந்தார்.

ஹிமமித்ரர், விஷ்ணுமித்ரருக்கும் அவர் குடும்பத்தைச் சார்ந்த அனைவருக்கும் காஷ்மீரத்து சால்வைகளை மகிழ்வோடு அணிவித்த வண்ணமாக இருந்தார்.

சோணாபுரி வாசிகள் பிரமிப்புடன் அத்தனையையும் கண்டு களித்த வண்ணம் இருந்தனர். சால்வைகளின் விளிம்பில் சித்திர வேலைப்பாடுகள் செய்யப்பட்ட 'சித்திரக்கம்மி' வகையோ என்று தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள். பட்டு, கம்பளங்களில் பின்னப்பட்ட ''காசிடா' போல தோன்றுகிறதே என்று சொல்லிய பெரியவரிடம், 'இரு பக்கமும் ஒன்றுபோல் காணப்படுகிறதே. ஆம். அது, ''காசிடா' தான்' என்று உறுதியாகச் சொன்னார் மற்றொருவர்.

வடசிக்கன், டோரியா, ஜாலக்டோஸி, ராவுகாரி எனப் பலவகையான பின்னல் வேலைப்பாடுகளில் மின்னிய பட்டுச் சால்வைகள் அணிவிக்கப்பட்டன. இரு குடும்பத்தினரும் பரஸ்பரம் அன்புப் பரிசுகளைப் பெற்றும் வழங்கியும் மகிழ்ந்தார்கள்.

விசுவரூபரின் அருகில் சென்று விஷ்ணுமித்ரர் மிக நேர்த்தியான காஷ்மீர சால்வை ஒன்றை பாரதியிடம் கொடுத்தார். அதனை, பாரதியைக் கொண்டு, விசுவரூபருக்கு அணிவிக்கச் செய்தார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

துவாபரயுகத்தில் கண்ணபிரானுக்கு காஷ்மீரத்து சால்வை அணிவித்துப் பெருமை செய்த அந்த இதிஹாஸ நினைவு, இப்போது உடனிருந்தோர் உள்ளங்களில் நிலவியது.

அந்த மஹாபாரத நினைவுகளுடன் திரேதாயுகத்தில் விதேக நாட்டரசன் ஜனக மன்னர் தம்முடைய புத்திரி சீதா தேவிக்கு, இராமச்சந்திர மூர்த்தியை விவாஹம் செய்து வைத்து முதன் முதலாக மணமக்கள் அயோத்தி செல்லும் போது வழங்கிய பல்வகைச் சீர் வரிசைகளுடன் காஷ்மீரத்து சால்வைகளையும் வழங்கிய இராமாயண காலத்துக் காட்சிகளும் அருகில் இருந்தவர்களின் கண் முன்னே வந்து நின்றன.

எழிலுடன் கூடிய வேலைப்பாடுகள் நிறைந்த ''ஒரு சிவப்பு, மூன்று நீலம், ஏழு பச்சை'' என்ற அளவிலான ஜரிகை சித்திரப் பின்னல் அமைந்த மூவண்ணம் மிளிரும் காஷ்மீர் சால்வையை ஹிமமித்ரர் விசுவரூபர் கரங்களில் தந்து, பாரதிக்கு அணிவிக்கச் செய்தார்.

பாரதியின் பேரெழில் சௌந்தர்யத்திற்கு அந்த மூவண்ண சால்வை மிகப் பொருத்தமாக அமைந்தது.

யுகயுகாந்திரக் காட்சிகளும் காவிய இதிஹாஸ நிறைவுகளுமாக அமைந்த அந்நிகழ்வு, மறக்க இயலாத வண்ணம் பதிந்தது.

தோரணங்களும் குஞ்சலங்களும் பொன்னாக மின்ன, தங்க ரதம் கம்பீரமாக வந்து நின்றது.

விசுவரூபர் ஒரு முறை சுற்றிலும் பார்வையைச் செலுத்தினார். திட்டமிட்டபடி எல்லோரும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவரவர்க்குரிய பணிகளுடன் தயாராகி விட்டார்கள். பொருட்களும் சீராக ஏற்றப்பட்டு விட்டன.

விசுவரூபரும் பாரதியும் தங்க ரதத்தில் ஏறிக் கொண்டதும், எல்லோரும் கிளம்ப வேண்டியதுதான். பாரதியும் விசுவரூபரும் ரதத்தில் ஏறிக் கொண்டனர்.

கிளம்பும் தருணத்தில், திடீரென்று பாரதீ ரதத்தினின்று கீழே இறங்கினாள்; தாய் தந்தையர் இருக்கும் பக்கம் ஓடோடி வந்தாள்; பெற்றோர்களை அணைத்துக் கொண்டாள்; பெற்றோர்கள் பாரதியை ரதத்தின் அருகில் அழைத்துக் கொண்டு வந்தனர்; விசுவரூபர் ரதத்தினின்று இறங்கி கீழே நின்று கொண்டிருந்தார். பாரதீ அருகில் வந்ததும், அவளது கரம் பற்றி ரதத்தில் ஏற்றிவிட்டு, தாமும் ஏறி அமர்ந்தார்.

''செல்வோமா, பாரதீ'' என பாரதிக்கு மட்டுமே கேட்கும்படியாக விசுவரூபர் மொழிந்தார்.

பாரதியும் பதிலுக்கு மொழிந்தாள். அவள் என்ன மொழிந்தாள் என்பது, விசுவரூபருக்குப் புரிந்து விட்டது. வீணையின் பஞ்சம ஸ்தாயி போல, அருகிலிருந்த அவர் மட்டுமே அதனை அறிய முடிந்தது.

'ரதம் செல்லலாம்' என்பதற்கான சைகை ஒரு சங்கொலி மூலம் எழுந்தது. சங்கொலியின் சப்தம் தெய்வீகமான அதிர்வுகளுடன் நாற்புறமும் பரவியது.

சத்யலோக வேத நாதங்களை கீத ஒலியாக எழுப்பி, புறப்படுவதற்கான சுபசூசகம் காட்டும் நயமுடன் ஒலித்த பின்பு ரதம் மெதுவாக நகர்ந்தது.

ரதத்தின் விசாலமான, திடமான ஆழி மெல்லச் சுழன்றது. கிடுகு, கும்பு, கூவிரம், கொடிஞ்சி, விமானம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என கம்பீரமாகக் காட்சி தந்த ரதத்திலே பாரதீ, பதியோடு பயணத்தைத் துவக்கினாள்.

ரதத்தில் பூட்டப்பட்ட குதிரைகளின் 'கதி' தொடங்கியது. 'கூவிரம்' என்னும் தேர்க் கொடி காற்றில் அசைந்தாடிப் பறந்தது. ரதத்தின் சாரதி, வலவன், கவனமாகச் செலுத்தினான்.

குதிரைகளின் மெல்லிய நடையான 'கவுரிதகம்' தொடங்கியது. சில விநாடிகளுக்குப் பின்பு 'ஆக்கிரந்திதம்' என்ற விரைவு நடைக்குத் தாவிற்று.

மேலும் சில நிமிடங்கள் சென்றன. முன்னிரு கால்களையும் பின்னிரு கால்களையும் தூக்கியும் பூமியில் பதித்தும் குதிரைகளின்நடையில் வேகம் ஏற்பட்டது. இருகால் தூக்கிப் பாய்ந்தோடி வரும் இந்த நடையை 'வல்கிதம்' என்பார்கள்.

ரதத்தின் ஓட்டத்தில் வழிப்பாதையின் இரு மருங்கிலும் உள்ள விருக்ஷங்கள் மிக வேகமாக ஓடுவதுபோல, ரதத்தில் உள்ளவர்களுக்குத் தோன்றியது.

குதிரைகளின் நடையில் முழுவோட்டம் பற்றியது. 'புலித' நடையில் பொற்தேர் சென்று கொண்டிருந்தது. ரத ஓட்டி, பரிகளின் நடைகளை, பாதையின் டங்க ளுக்கேற்ப சீர் படுத்திக்கொண்டே ரதத்தைச் செலுத்தினான்.

பாரதியும் விசுவரூபரும் குதிரைகளின் நால்வகைப் பட்ட நடைகளில் ரதத்தில் பயணம் செய்வதை உணர்ந்து சிலிர்ப்புடன் அமர்ந்திருந்தனர்.

குதிரை சுற்றியோடுகிற நடைதான் 'இரேசிதம்' என்பதை மனதிற்குள்ளாகவே எண்ணிய பாரதீ, ஐவகை நடை பற்றியும் நினைவில் கொணர்ந்தாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்த ரதத்தில் பூட்டப்பட்ட குதிரைகள், தேவேந்திரனின் குதிரைகளான உச்சைச் சிரவஸ் குதிரைகளைப் போல அல்லவா தோன்றுகின்றன?

பொன் ரதமும் யானைகளும் குதிரைகளும் பூட்டிய சிறிய, பெரிய ரதங்களும் வண்டிகளுமாக பயணம் காஷ்மீரை நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

சோனா நதியும், சோணாபுரியும் பாரதியின் நெஞ்சத்தில் காட்சிப்பட்டுக் கொண்டே இருந்தன. பெற்றோர்களின் நல்லுரைகள் மனத்தில் அலையென எழும்பிய வண்ணம் இருந்தது.

வழி நெடுக காட்சிப்பட்ட இயற்கை எழிலின் தோற்றங்கள் பாரதியின் சிந்தையைப் பரவசப்படுத்தின. இயற்கையின் கோல எழிலில் உள்ளம் குதூகலித்தது; ஆனந்த நடமாடியது.

வானத்தில் நவநவமாய்த் தோன்றிய காட்சிகளை வரிசைப்படுத்தி இயம்பிடவும் கூடுமோ? கணந்தோறும் வியப்புக்கள் புதியதாய்த் தோன்றும்.

கணந்தோறும் வெவ்வேறு வண்ணக் காட்சிகள், விதவிதமான தோற்றம் காட்டும் வானத்தின் வனப்பெல்லாம் சொல்லிடத்தான் இயலுமோ?

இயற்கையின் இறைமை இதயத்தை வருட, பாரதீ அதிலே தோய்ந்திருந்தாள்.

''அதோ தெரிகிறதே, அது தான் தேவதாரு மரம், செழித்து வளர்ந்திருக்கும் இம்மரத்தின் விசேஷத்தை நீ அறிவாயா?''

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிரபஞ்ச இயற்கையின் ஆகர்ஷணத்திலிருந்து பாரதியை, விசுவரூபரின் வார்த்தைகள் விடுபடச் செய்தன.

''தேவதாரு'' என்ற சொல், அவளுக்குள்ளே தெய்வீகத் தன்மையை பிறப்பிப்பதுபோல உணர்ந்தாள். தேவதாரு சாதாரணமான விருக்ஷமா? அது தொடர்பான பல நினைவலைகள் பவனி வரத் துவங்கின.

தேவதாரு மரம் உமா தேவியால் வளர்க்கப் பட்டு, முருகக் கடவுளைப் போன்று பாதுகாக்கப்படுவது பற்றியும் நினைத்தபடியே உமையுடன் உறவு கொண்ட அத்தகைய தேவதாரு மரங்களை பாரதீ பார்த்தாள். உடன் வந்தவர்களும் பார்த்தார்கள்.

நாலாயிரம் முதல் ஒன்பது ஆயிரம் அடி உயரம் வரை உள்ள இடங்களில் மட்டுமே வளரும் உயர்ந்த விருக்ஷ வகை தேவதாரு.

மலைப் பள்ளத்தாக்குகளும், பர்வதமான பிரதேசங் களுமான அங்கு தேவதாரு விருக்ஷங்கள் அடர்ந்திருந்தன.

தேவதாரு இனத்தைச் சேர்ந்த 'ஸரள' மரங்களும் அங்கே காட்சிப்பட்டன. அருகருகே 'ஓஷதி' என்கிற ஒருவகைச் செடிகளும் காணப்பட்டன.

ஓஷதிச் செடிகள் இரவு நேரங்களில் ஒளி வீசுபவை. அந்த ஒளியின் வீச்சு ஸரள மரங்களில் பட்டு, ஒளித்திட்டுக்களாக அமைந்து, பயண வழிக்குச் சற்றே பிரகாசத்தை அதிகப் படுத்தியது.

சற்று தூரம் சென்றதும் மூங்கில் காடுகள் தென்பட்டன. காம்போஜத்தில் 'பூர்ஜ' விருக்ஷங்கள் அடர்ந்த பகுதியைத் தாண்டிச் சென்று கொண்டிருந்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தார்கள். இயற்கையின் வனப்புக்கள் பயணத்தை இன்பகரமாக்கிக் கொண்டிருந்தது.

'மர்மர' என்ற சப்தம் காற்றில் பறந்து வந்தது, பூர்ஜ மரத்தின் காய்ந்த இலைகளின் மீது காற்று வீசும்பொழுது எழுந்த 'மர்மர' சப்தமும், மூங்கில் மரங்களின் உராய்சல் களினால் எழுகிற 'சொர்சொர' சப்தமும், ரதத்தில் பயணம் செய்பவர்களுக்கு ஒரு புதிய ஸ்வரதாளங்கள் போல் இசைத்துக் கொண்டிருந்தது.

பல வகையான விருக்ஷங்களைத் தன்னகத்தே உடைய காம்போஜத்தில் அக்ஷோடம் என்றொரு வகை உண்டு. அதனையே அக்ஷோட மரங்கள் என்றழைப் பார்கள்.

அக்ஷோட விருக்ஷங்களின் அடிப்பகுதி இரும்புத் தூண்களைப் போன்று அதிக வண்மை பொருந்தியது. யானைகளை அக்ஷோட மரத்தில் கட்டியிருப்பார்கள்.

பயணத்தின் போது இதுபோன்ற கவின்மிகு காட்சிகள் சிந்தையைச் சிலிர்க்க வைத்து பயணத்தின் தொலைவையும், பயணக் களைப்பையும் மறக்கும்படி செய்தது.

'நமேரு' நிழல் தரும் மரங்கள் சூழ்ந்த பகுதியொன்றில் வழிப்போக்கர்கள் சிலர் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார்கள். சற்றே கற்பாங்கான பாறையான இடம் அது. பாறைகள் அதிக உயரமானவை அல்ல. அப்பாறைகளின் கீழே பசுமை போர்த்தியிருந்தது.

நிழல் தரும் அப்பகுதியில் மான்கள் வந்து அவ்வப்போழ்து துள்ளி ஓடி விளையாடும். கஸ்தூரி மான்களின் கூட்டம் அங்கே அதிகம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பரந்து விரிந்து கிளைகளுடன் இலைகளுமாகக் காட்சி தரும் 'நமேரு' மர நிழல் தண்மை நிறைந்ததாகும். அந்தத் தண்மை நிழல் உடைய பாறைப் பகுதிகளுடன், உறவாடிய கஸ்தூரி மான்களினால் அந்தப் பாறைகளுக்கும் கஸ்தூரி மணம் ஏற்பட்டு விட்டது.

நமேரு மரங்களைக் கடந்து செல்லும்போது கஸ்தூரி மான்கள் உலாவியதால் நறுமணம் குடிகொண்ட அப்பகுதியிலிருந்து காற்றோடு கலந்து கஸ்தூரி வாசனை பயணம் செய்பவர்களின் நாசியையும் நிறைத்தது.

பயணமாகும் போது, பாரதீ செந்நிறமான சில மான்களைக் கண்டு மனமகிழ்ச்சி கொண்டாள்.

மான், மிருக இனங்களில் சாதுவான மென்மையான அழகான சாகபக்ஷிணியல்லவா? புல்லைப் புசித்து, துள்ளி ஓடி, மருண்டு நோக்கி, கண்ணுக்கு விருந்து படைக்கும் மான். பாரதியின் மனம் மானிடம் ஒன்றியது.

மான்களைக் கண்ட மகிழ்வில் திளைத்திருந்த பாரதியிடம் விசுவரூபர் ஏதோ கூற, அவள் நாணமுற்றாள். ''அதோ, துள்ளித் துள்ளிச் செல்லும் மான்கள், கஸ்தூரி மான்கள் தானே?'' என வினவினாள்.

''ஆம், ஆம்' என்று பதிலுரைத்த விசுவரூபர், ''சற்று தூரத்தில் தெரிகின்றதே அந்த மான்கள்'' என்று கூறி முடிப்பதற்குள் பாரதீ ''அவை பாராசிங்கு மான் களல்லவா?'' என்றாள். விசுவரூபர் களி உவகை கொண்டார். புள்ளி மான் போல அவருடைய மனமும் துள்ளியது.

வேகமான பயணத்திலும் விருக்ஷங்களையும் வன விலங்குகளையும் பறவையினங்களையும் கண்டு களித்தாள் பாரதீ.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காஷ்மீரிலுள்ள ஏரிகள் பலவும் தினால் நிறைந்திருந்தன. நீரில் அலையெறியும் சப்தங்கள் பாரதியின் காதுகளில் கானமாக ஒலித்தன.

நதிகளையும் விருக்ஷங்களையும் விலங்குகளையும் கடந்து சென்ற போதும் ரக்ஷக மந்திரங்களைச் சொல்வதன் மூலம் கேடுகள் வராமல் பாதுகாத்துக் கொண்டார்கள்.

காஷ்மீரத்து ஜீவநதியான ஜீலம் நதியின் நீரோடு, பூக்களும் அவற்றின் வாசமும் கலந்து வந்தன.

கண்கவரும் எழிலின் மணி மகுடமான காஷ்மீரத்தில் இயற்கை அரசியின் தவக் கோலங்களாகக் காட்சி தருபவை நதி தீரங்கள்.

ஜீலம் என்னும் பிதாஸ்தா நதி தீரத்தில் அனைவரும் சற்றே இளைப்பாறி னார்கள்.

நதிகள் என்றாலே புனிதம்தானே? பாரதீ நதி தீரத்திற்குச் சென்றாள்.

புனித நதிக்கரையோரமாக இருவரும் அமர்ந்து கொண்டார்கள்.

வரும் வழியில் மான்கள் அவர்களைக் கவர்ந்தது போலவே மயில்களின் காட்சியும் மனத்தில் பதிந்ததை, இப்போது பகிர்ந்து கொள்வது போல விசுவரூபர், ''இயற்கையின் பசுமையும் நீலமும்'' என்று தொடங்கிய துமே பாரதீ உள்ளத்திலும் மயிலின் நினைவுகள் எழ ''மயூரத்தின் கழுத்தைப் போல'' என்று மொழிந்து ''மழை வரும் என்பதை மயிலின் நடனத்தின் போது நீங்கள் குறிப்பிட்டீர்களே'' என்றாள்.

''ஆமாம். மயில்கள் இங்குதானே அதிகம்''

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''ஆம் ஆம்; பாரத நாட்டில் தான் மயில்கள் மிகுதி'' என்று ஆமோதித்த விசுவரூபர் பாரதியிடம் நெருங்கின வராக, மெல்ல, ''இதோ, ஞானமயில்'' என்றார்.

பாரதீ செவிகளில் இந்த வார்த்தை விழுந்ததோ விழ வில்லையோ என்ற சந்தேகம் கொண்டிருந்த விசுவரூபரிடம், பாரதீ மெதுவான குரலில்,

''ஞானமயில் என்கிறீர்களா? மயிலுக்கு ஏது ஞானம். உண்மையாகச் சொல்கிறேன். இதோ தோகைமயில், ஆம் தோகை மயில்தான் நீங்கள்'' என்றனள் பரிவும் பெருமிதமும் பொங்க.

தோகையுடன் கூடியது ஆண் மயில் என்பதை சிந்தையில் கொண்டு கூறினாளோ என்று விசுவரூபர் மனத்திற்குள்ளாகவே எண்ணிக் கொண்டார்.

'கலாபி' இருக்கட்டும்; கமலமல்லவோ இதோ இருக்கிறது''

பாரதீ, கமலம் என்ற வார்த்தையைச் செவியுற்றதும் மென்னகை புரிந்தது, தாமரை மலர்களின் இதழ்கள் மலர்ந்தது போல் இருந்தது. பாரதீ, தாமரை மலரில் தன்னையே மறந்தாள்.

''அம்புயம் அம்போருகம், அரவிந்தம்
கஞ்சம், கமலம், கோகனம்
பங்கயம் பதுமம், புஷ்கரம்
திருமலர், திருமாலுந்தி, தோடகம்
நீரோருகம், நளினம், முளகம்
முண்டரி, சரோருகம், சதபத்ரி
வாரிசம், வனசம், சரோசம்
வகையான பெயரின் னுமுளவே''

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்று பாரதியின் உதடுகள் அசைந்தசைந்து கொண்டிருந்தது. தடாகத் தாமரையில் மலரிதழ்கள் காற்றில் விரிந்து விரிந்து மலரும் காட்சிக்கு நிகராக இருந்ததை விசுவரூபர் கண்டு அக மகிழ்ந்தார்.

இருவரும் எழுந்து நதி தீரத்தை நோக்கிச் சென்றார்கள்.

மலை எழிலும், மான், மயில், தாமரை நினைவுகளும் புனித நதி தீரமும் அவர்களிருவரிடத்தும் ஒன்றியிருந்தன.

நதிகள் நீரை உலருக்கு வழங்குவதோடு மட்டுமல்லாது, அவை ஒரு தத்துவத்தைக் கூறாமல் கூறுகின்றன.

முன்னே விரைந்து பாய்ந்தோடும் நதிகள் என்றுமே பின்னோக்கிப் பார்ப்பது கிடையாது.

பாரதீ, நதி நீரைக் கரங்களில் அள்ளிக் கொண்டு துதித்தபடியே நின்றாள்; உள்ளம் மகிழ்ச்சியால் துள்ளியது.

வதனத்தில் நீரை அள்ளித் தெளித்துக் கொண்டாள். அந்த குளிர்ந்த ஸ்பர்சத்தில், நீர்மைக் குணம் கொண்ட பகவானையே கண்டதுபோல பாரதீ உணர்ந்தாள்.

பொற்குடமொன்றிலும் நதி நீரை நிறைத்துக் கொண்டாள்.

விசுவரூபரும் அருகே வந்தார். புனித நீரை இருவரும் சிரமீது தெளித்துக் கொண்டார்கள்.

"ஓ, நதிகளே! எங்களுடைய வாழ்வில் ஆனந்தமும் பொலிவும் இணைந்திட அருள் புரியுங்கள்!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முன்னோக்கிச் செல்ல நல்லருள் பாலியுங்கள்'' என்று வேண்டினாள்.

புனித நதி நீர் நிறைந்த பொற்குடத்துடன் பயணம் தொடர்ந்தது.

மலைப் பகுதிகளில் ரதம் சில இடங்களில் செல்ல முடியாத நிலை இருந்தபோது, காம்போஜத்தின் ஜாதிக்குதிரைகளில் பயணம் தொடர்ந்தது. குதிரைகள் பூட்டிய ரதம் மெல்ல மெல்ல நகர்ந்து, மீண்டும் பயணத்திற்குத் தயார் என்பது போல் அருகில் வந்து நிற்கும். பயணம் தொடரும்.

மேடுகளும் பள்ளங்களும் நிறைந்த பகுதிகளில் பயணம் இவ்வாறாகத் தொடர்ந்தது.

பர்வதங்களின் பாதைகளில் செல்லும் போது பரிகளின் குளம்புகள் எழுப்பும் ஓசை கேட்டு, வன விலங்குகள் பதுங்கிக் கொண்டன.

பயணம் பத்திரமாகத் தொடர்ந்தது.



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

12

காஷ்மீர வாஸம்

நீண்ட பயணத்திற்குப் பின் அனைவரும் ஹிமமித்ரரின் மாளிகையை நெருங்கினார்கள். திரளான மாந்தரும் வேத பண்டிதர்களும் மரியாதைகளுடன் வரவேற்கும் நிலையில் காட்சியளித்தனர். பர்வத வாசிகளும் வந்து கூடியிருந்தனர்.

தங்கரதம் வந்து நின்றது. பாரதியும் விசுவரூபரும் ரதத்திலிருந்து கீழே இறங்கினார்கள். மற்றும் அனைவரும் வந்து சேர்ந்தார்கள்.

விசுவரூபர், கீழே இறங்கும் போது ரதத்தின் படிகளில் கால் பதித்து நின்ற வண்ணம் ஜரிகை அங்க வஸ்திரத்தை இழுத்துப் போர்த்திக் கொண்டார். அப்போது, விசுவரூபரின் அங்க வஸ்திரம் பட்டு, ரதத்திலிருந்த ஏட்டுச் சுவடி ஒன்று கட்டவிழ்ந்து, கீழே விழுந்தது.

அவிழ்ந்து விழுந்த சுவடி, கீழே நின்ற பாரதியின் கரங்களில் வந்து விழுந்தது. அதைப் பற்றிக் கொண்ட பாரதீ, அதனை ஏந்திக் கொண்டாள். அச்சுவடியில் இருந்த எழுத்துக்களை பாரதீ படிக்க முயன்ற அதே தருணத்தில் அதனை விசுவரூபரும் கண்ணுற்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''ந மே பார்தாஸ்தி கர்த்தவ்யம்
த்ரிஷு லோகேஷு கிஞ்சன|
நானவாப் தமவாப் தவ்யம்
வர்த ஏவ ச கர்மணி ||''

''அர்ஜுனா! எனக்கு மூவுலகங்களிலும் செய்ய வேண்டிய கடமை ஒன்றுமில்லை. அடைய வேண்டியது எதுவுமில்லை. அடையப்படாமலும் இல்லை. ஆயினும் கூட, நான் கர்மத்திலேயே தான் ஈடுபட்டுள்ளேன்.''

பகவானே கடமை புரிவதில் தொடர்ந்து ஈடுபட்ட வண்ணம் இருக்கிற வாசகங்கள், பாரதியின் உள்ளத்தில் பொதிந்திருந்த எண்ணங்களுக்கு புத்தொளி பாய்ச்சுவதாக அமைந்தது.

அந்தப் புத்தொளியில் பிரகாசக் கிரணங்கள் போன்று பல சிந்தனைக் கதிர்கள் வியாபித்தன.

''சாஸ்திரங்களில் விதிக்கப்பட்ட உயர்ந்த கடமைகளே கர்மம் எனப்படும். ஸமபாவனையே யோகம்.''

''கர்ம யோகம் என்பதே ஸமத்வ யோகம். ததர்த்த கர்ம, மதர்த்த கர்ம, மத்கர்ம, புத்தியோகம் என பகவான் சொல்கிறார்.''

இந்த வியாபகச் சூழலில் இருவருடைய மனமும் ஒரு நிலைப்பட்டதாக இருந்தது.

பாரதீ நினைத்துக் கொண்டாள். பதிக்கு பணிவிடை புரியும் கடமைகளை மனத்தில் கொண்டே, ரதத்தினின்று இறங்கியதுமே பகவானின் கீதா வாசகங்களைத் தமது கரங்களில் தந்தருளியதை தங்களுக்குக் கிடைத்த ஒரு பாக்கியமாகக் கருதினாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சோணாபுரியிலிருந்து காஷ்மீரம் வந்து சேர்ந்த ரதத்தின் பவனி நிறைவு பெற்று விட்டது.

ரதத்திலிருந்து இறங்கியதும் பாரதியின் மனத்தேரில் இன்னொரு புதிய பவனி.

சுவடிகள் தந்த சிந்தனா வியாபகம் பதிக்குப் பணிவிடை புரியும் பவனியில் செலுத்திற்று.

எல்லா விதத்திலும் கணவருக்குத் துணையாக இருந்து கடமைகளை ஆற்றி வர வேண்டும் என்ற மன அலைகள் பாரதியின் வதனத்தில் பிரதிபலித்ததை விசுவரூபர் ஊன்று கவனித்தார்.

பாரதியும் விசுவரூபரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். அந்தப் பார்வை, பிரம்மதேவரும் ஸரஸ்வதி தேவியும் சத்யலோகத்திலே பரிமாறிக் கொள்கிற பார்வை போல் இருந்தது.

ஹிமமித்ரர் மாளிகை முன்பு ஜனத்திரள். பாரதீ விசுவரூபர் முன் செல்ல, தொடர்ந்து, ஹிமமித்ரர் அவர் தம் குடும்பத்தினர், உறவினர்கள், சுற்றத்தார் என அனைவரும் மாளிகைக்கு வந்து சேர்ந்தனர்.

வலது பாதம் எடுத்து வைத்தாள் பாரதீ; பாதச் சிலம்பணிகள் மெல்ல ஓசையெழுப்பின.

''க்ராணாமாயுஹ் ப்ரவயம் திராமஹ் க்ருஹா
அஸ்மாகம் ப்ரதிரன்தின் யாயுஹ்''

என்ற மந்திரத்தை மெதுவாக உச்சரித்தவாறே பாரதீ, தன்னுடைய புகுந்த கிருஹத்தினுள் வலது பாதத்தை முன்னால் எடுத்து வைத்தாள். சிலம்பணி சப்தித்த ஓசையில் ஏழு ஸ்வரங்கள் ஒலித்தன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அது சமயம், மங்கல ஆலத்தி (ஆரத்தி) சுற்றினார்கள்.

மஞ்சள் நீருள்ள தாம்பாளத்தில் மத்தியில் மங்கள தீபஒளி, சுடர் விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருக்கவும், 'ஆலத்தி வைபவம்' நிகழ்ந்தது.

பாரதியின் பாதச் சிலம்பணி சப்தித்த ஏழு ஸ்வரங்களுக்கேற்ப 'ஆலத்தி கானம்' பாடினார்கள். அளவில் குறுகிய அந்த கானம் அற்புதமாக இருந்தது.

அந்த ஆலத்தி கானம், அனைவருடைய உள்ளத்திலும் பதிந்தது. அதன் இசை மெய்ச்சிலிர்ப் பூட்டியது. தேவகானமாக அமைந்திருந்தது.

தெய்வீகம் நிறைந்த அந்த இசையோடு பாரதீ, பதியின் கிருஹத்தில் பாதம் பதிக்கும் போது, நெடுங்காலம் நன்கு வாழ வேண்டும் என்ற பிரார்த்தனையுடன் வலது பாதம் எடுத்து வைத்து மாளிகையினுள்ளே வந்தாள்.

இதயமெலாம் ஆனந்தம் பொங்க இரு பாதங்களையும் மெல்ல மெல்ல அடிமேல் அடி வைத்து மாளிகையினுள் நடந்தாள். சலங்கைகள் சங்கீதம் இசைத்தன.

மணிச் சிலம்பின் ஒலி ''கலஹம்ச நாதம்'' என்று அன்னத்தின் குரல் ஒலியாக இலக்கியங்களில் பேசப்படும்.

'கலீர், கலீர்' என நாதம் எழுப்பியது மணிச்சிலம்பு.

''பாதாம்புஜம் பவது தே விஜயாய மஞ்ஜு
மஞ்ஜீர சிஞ்சித மனோஹரம் அம்பிகாயா;''

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அம்பிகையின் அழகு நிறைந்த சிலம்பு; சிலம்பும் திருவடிகள் வெற்றியை அளிக்கட்டும் என்பதுபோல் பாரதியின் பாதச் சிலம்புகள் சப்தித்தன. சிலம்பும் சதங்கை யொலியும் அனைவருடைய கவனத்தையும் ஈர்த்தன.

நாத ஒலி எழுந்திட நடந்து வரும் பாரதியின் அழகை, ஹிமமித்ரரும் குடும்பத்தாரும் வைத்த விழி மாறாமல் பார்த்து மகிழ்ந்தார்கள்.

மாளிகையினுள் வந்ததும் பாரதீ பெரியவர்களை நமஸ்கரித்தாள். உடன் இருந்த சமவயதினரைப் பார்த்து களி தோன்ற மென்னகை புரிந்தாள்.

கீதைச் சுவடியின் எழுத்து பாரதியின் மனக்கண்ணின் முன் வந்து 'கர்மணி' என்கிற பதத்தை பளிச்சிட்ட வண்ணமிருந்தது.

விசுவரூபருக்கு தாரம், துணைவி, பாரி, பாரியை, பத்தினி, பிரியை, நாயகி என வாழ்ந்தும் குடும்பத்தில் குடும்பினி, மன்னியாட்டி, இல்லத்தரசி எனவும் வாழ்க்கைத் துணை நலம், வல்லவி, விருந்தனை எனவும் திகழ்ந்திடப் பிரார்த்தனை செய்து கொண்டாள்.

''கணவருக்குப் புகழையும் கணவரைப் பெற்ற தந்தைக்கு நற்பேறுகளையும் தாய்க்கு மகிழ்ச்சியையும் அளிப்பதற்காகவே இந்த கிருஹத்தில் வலது காலை எடுத்து வைத்திருக்கிறேன்'' என்ற பொருள் பொதிந்த,

''சுமங்கலி ப்ரதரணி க்ருஹாம்
ஸுஸேவா பத்யே விஸே மான்
ஸ்வஸுராய சம்புஹ் ஸ்யோனா
ஸ்வஸ்ர்வை ப்ரா க்ருஹான்''

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மந்திரங்களைக் கூறிய பாரதியை, விசுவரூபர் அழைத்துச் சென்று, மாளிகையின் ஒவ்வொரு இடமாகக் காட்ட, பர்த்தாவைத் தொடர்ந்து பாரதீ சென்றாள்.

பூஜாக்ருஹம் தேஜோமயமாக ஒளிர்ந்தது. அக்கிருஹத்தைக் காட்ட விசுவரூபர் முனைவதற்குள்ளாகவே, அவளது பார்வை அத்திசை நோக்கிச் சென்றது.

பெரியோர்கள் முன் நிற்க, விசுவரூபர் அருகில் இருக்க, பாரதீ முத்துச் சுடர் போல் தீபமேற்றி வணங்கினாள், பூஜாகிருஹம் முன்னிலும் ஒளி பெற்றுத் திகழ்ந்தது.

அந்த தீப ஒளிச் சுடரில் திவ்யப்ரகாசமாக ஒளிர்ந்த பூஜாக்ருஹத்தை விட்டு, அவர்கள் வெளியில் வந்தார்கள்.

காஷ்மீரத்து மாளிகையில் புதுமணத் தம்பதியர் சுற்றி வந்தார்கள். மாடங்களையும் கூடங்களையும் மலர் வனங்களையும் வாவிகளையும் பறவையினங்கள் தங்கியுள்ள விருக்ஷங்களையும் கண்டு பாரதீ கழிபேருவகை எய்தினாள்.

மணமான பின்பு, விசுவரூபர் கிருஹஸ்தராகி விட்டாரன்றோ. நித்ய கர்மங்களைத் தொடர்ந்து செய்வதில் விசுவரூபருக்கு பாரதியும் துணை நின்றாள்.

பெரியோர்களின் ஆசி அனுக்ரஹத்துடன் வேத கர்மாக்களையும் யாகாதி வேள்விகளையும் செய்ய எண்ணம் கொண்டார்கள். வாத சதஸ்களுக்குச் செல்வதும் மென்மேலும் கற்றுத் தெளிவதும் நிகழ்ந்த வண்ணம் இருந்தன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒரு சமயம் விசுவரூபருடன் பாரதியும் பாண்டிபுரம் என்கிற பாண்டித்யபுரம் சென்றிருந்தாள். வேத சபை யொன்றில் பங்கேற்கச் செல்லும் பொழுது,

''அன்னம் ஓதிமம் என்று சொல்லப்படுவதை அறிவாயல்லவா?'' என்றார் விசுவரூபர். பாரதீ, உடனே பதில் கூற நினைத்தாலும் சற்றே தாமதம் செய்து, விசுவரூபரின் வதனத்தில் கண் பதித்தாள்.

விசுவரூபர் விபு அல்லவா? புரிந்து கொண்டார்.

''ஓதிமமுயர்த்தோன், தேவரீர் தானே.''

''அயன் மனைவி, நான்முகன் கிழத்தி, வாணி, வெண்தாமரையாள், கூறிடில் கேட்கத்தானே வேண்டும்?''

''வாணிகேள்வன், பங்கயன், தமனியன், எண்கணன், விதாதா, கேட்டால் சொல்லிடவும் வேண்டாவோ?

நினைவுகளை நெஞ்சம் மறப்பதில்லை.

விசுவரூபரும் பாரதியும் மாளிகைக்குத் திரும்பி வரும் வழியில் வேத பண்டிதர்களைச் சந்தித்து உரையாடலில் ஈடுபட்டார்கள்.

விபுதர்கள் என்பவர்களுடன் அமர்ந்து சம்பாஷணைகள் செய்தார். வேதமோதும் பிரமயாகம், ஹோமம் வளர்க்கும் தெய்வயாகம், பலியிடுகிற பூதயாகம், தர்ப்பண முடிக்கிற பிதிர்யாகம் என்ற யாகங்கள் பற்றி விஸ்தாரமாகக் கருத்துரைகள் நிகழ்ந்தன.

''ஐந்து வகை யாகங்கள் உண்டல்லவா?'' என்ற கேள்வி எழுந்ததும், ''இரப்போர்க்கு உணவு முதலியன ஈதலே, 'மனிதயாகம்' என்ற மென்குரல் எழுந்தது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மிகவும் கற்றறிந்த விபுதர்கள் மகிழ்ந்தனர். விசுவரூபர் பாரதியுடன் அங்கிருந்து கிளம்பி, தமது மாளிகையை அடைந்தனர்.

காஷ்மீர மண்டலம் வாக்தேவதையான ஸரஸ்வதி ஆராதனை மிக அதிகமாக நிகழுமிடம். வித்யைகளில் தேர்ந்தவர்கள் வித்வத்துக்குப் பட்டாபிஷேகம் நிகழ்த்துவது இங்கேதான் என்பார்கள். அத்தகைய பாண்டித்யத்தின் சிகரமான இடம் காஷ்மீரம், இமயத்தின் அடிவாரம், இந்து தர்மத்தின் முடிச்சிகரம்.

காஷ்மீரத்தில் விசுவரூபர் பாரதீ வாஸம் புரிந்தது மிகக் குறுகிய காலம்தான். எனினும் அவர்கள் வாஸம் புரிந்த காலத்தை காஷ்மீர மகாப் பண்டிதர்கள் ஒரு பொற்காலமாகக் கருதி சந்தோஷத்துடன் கொண்டாடினார்கள்.

காஷ்மீரத்தில் எங்கு நோக்கினும் வெண்ணுடை தரித்தது போன்று மலை முகடுகளும் வானமும் காட்சியளிக்கும். ஏழு வண்ணங்களுக்கும் அப்பால் உள்ள ஏழும் இணைந்த நிறம் வெள்ளை; வெண்மை தூய்மையின் சின்னம்; அதுவே ஸ்படிகம் போன்ற தூய்மை; அந்தத் தெளிவுக்கு நிகரேது?

காஷ்மீரத்தின் வெண்மையில் பாரதீ மனம் ஒன்றினாள். காஷ்மீரம் பாரதிக்கு வீடு போல் தோன்றியது. அகம் உடையானின் வீடு என்ற பேதமில்லாமல் தன்னகம் என்ற எண்ணம் கொண்டிருந்தாள். அந்த மனநிலையுடனே விஸ்வரூபருடன் அங்கே வாழ்ந்து வரலானாள்.

பாரதியின் உள்ளம் காஷ்மீரத்து எழிலில் சஞ்சரித்தாலும், ''விசுவரூபரின் மாஹிஷ்மதி நகருக்கு நாம் எப்போது செல்வோம்'' என்ற தாபமும் இருந்தது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விசுவரூபர், பாரதியின் அருகில் வந்து, ''தேவி வெண்மையில், லயித்து விட்டனளோ?'' என்று கூறியது பாரதியின் செவிகளில் கேட்டது.

கருத்தும் கவனமும் ஈடுபாடும் மெய்ப்பாடும் கொண்டிருக்கும் போது மெல்லிய குரலும் துல்லியமாக தீர்க்கமுடன் செவிகளில் ஒலிக்குமல்லவா?

தனது வதனத்தை விசுவரூபரின் புறம் திருப்பிய பாரதீ,

''வெண்மை இருக்கட்டும். மனத்தை ஈர்க்கிற வெண்மையைக் காட்டிலும் மணம் வீசுகிற, காஷ்மீரக் குங்குமப்பூ இருக்கிறதே'' என்றதும்,

குங்குமப்பூ அவ்விடத்தில் அக்கணத்தில் மணப்பது போன்று விசுவரூபர் உணர்ந்தார்.

''சிவப்பு வர்ணத்தில் பாரதிக்கு சிந்தனை செல்கிறது போலும்'' என்று நினைத்தவராக, ''சுவே'தத்திலும் சோணம்...'' என மெல்ல மொழிந்து, ''தாடிமீ குஸுமப்ரபா'' என்று மாதுளம்பழத்தின் நிறத்தை பாரதியின் மனத்தில் பதிய வைத்து விட்டு, பதிலுக்காகக் காத்திருந்தார்.

''இங்கே அமருங்களேன்'' - என்று அருகிலிருந்த ஆஸனத்தை அவள் சுட்டிக் காட்டினாள். ஏதோ சொல்லப் போகிறாள் என்று உணர்ந்து விசுவரூபர், பாரதீ சுட்டிய ஆஸனத்தில் அமர்ந்தார். அருகிலிருந்த மற்றொரு ஆஸனத்தில் அவளையும் அமரச் செய்தார்.

அருகருகே அவர்கள் அமர்ந்திருந்தார்கள். தெய்வீக அருள் சுரக்கும் கோலமாக அது அமைந்திருந்தது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''மாதுளை முத்துக்கள் அருணோதயத்தின் சிவப்பான பிரகாசத்தை நினைவுப்படுத்துகின்றன'' என்றாள், பாரதீ.

''சோணா நதிக்கரையின் அருணோதயம் போல் சிவப்போ?'' விசுவரூபர், இளநகையுடன் கூற;

''சோணா நதி காஷ்மீரத்துக் குங்குமப்பூ போல், மாதுளம்பழத்தின் முத்துக்களைப் போல் சிவப்பு வண்ணம் தானே... ஆனால், நான் சொல்ல வந்தது... மாஹிஷ்மதியின் வைகறைப் பொழுதின் அருணப் பிரபை பற்றி... என்று கூறும் போதே மாஹிஷ்மதிக்குச் செல்ல வேண்டும் என்ற பாரதியின் இதய தாகம் வெளிப்பட்டதை விசுவரூபர் தெளிவுபடவே புரிந்து கொண்டார். அவருடைய உணர்வுகளை அவளும் தொடர்ந்து சென்று அறிந்தாள்.

பாரதீ மாஹிஷ்மதிக்குச் செல்லும் விருப்பத்தில் ஆழ்ந்திருக்கிறாள் என்பதை விசுவரூபர் நன்கு தெரிந்து கொண்டார்.

பெற்றோர்களிடம் கூறியதும், அவர்களும் தங்கள் இசைவினை உடன் தெரிவித்து ஆவன செய்யலானார்கள்.

நாட்கள் பல சென்றன. பாரதியுடன் விசுவரூபர் மாஹிஷ்மதி நகரம் வந்து சேர்ந்தார். அந்த மாளிகை பாரதியின் பாதம் பட்டுப் புனிதமடைந்தது.

மாஹிஷ்மதி நகரத்து மாந்தர்கள் விசுவரூபர்-பாரதீ வருகையை அறிந்து, அவருடைய மாளிகையின் முன்பு கூடியிருந்தார்கள்.

வரவேற்பு நல்கி, தங்களுடைய உளமார்ந்த வந்தனங்களை நல்கினார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சோணாபுரியில் விவாஹம் நடந்து, பல திங்கள் சென்று விட்டபோதிலும், மாஹிஷ்மதி மக்கள் இன்னமும் அந்த விவாஹத்தின் பெருமைகளைப் பேசிக் கொண்டுதான் இருந்தார்கள். காஷ்மீரத்தினின்று பாரதியும் விசுவரூபரும் எப்போது வருவார்கள் என்று எதிர் நோக்கிய வண்ணம் இருந்தார்கள்.

மாஹிஷ்மதியில் பாய்ந்தோடும் தர்மமூலா நதிக்குச் செல்லும் போது, வழி நெடுக அவர்களுடைய சம்பாஷணைகள் விசுவரூபர்-பாரதீ பற்றியும் அவர்களுடைய வேதஞான வித்தகங்கள் பற்றியுமே அமைந்திருக்கும்.

அந்தச் சம்பாஷணைகளை மிக ஊன்றிக் கவனிப்பது போன்று தர்மமூலா நதி நிசப்தமாகப் பாய்ந்தோடிக் கொண்டிருந்தது.

தர்மமூலா நதி, நர்மதை என்ற பெயரிலும் அழைக்கப்படுவதுண்டு.

மகத தேசத்து மாஹிஷ்மதியில் பாயும் தர்மமூலா என்கிற நர்மதை நதிப் பிரதேசம் இமயமலைச் சாரலைச் சார்ந்த பகுதி என்பதால் இங்கே சால விருக்ஷங்கள் மிகுதி.

ஆனால் விந்திய மலைகளில் உற்பத்தியாகி அம்மலையின் வடப்புறச் சரிவுகளை ஒட்டி, அம்மலைத் தொடருக்கும் ஸாத்பூரா மலைத் தொடருக்கும் நடுவிலான பள்ளத்தாக்கில் பஸ்சிமவாகினியாகப் பாய்ந்தோடி, மேற்குக் கடலில் சேருகிற ரேவா நதி என்றழைக்கப்படுகிற நர்மதை நதிக்கரைப் பிரதேசம் தமால விருக்ஷங்கள் நிறைந்த இடமாகும்.

தமால விருக்ஷங்கள் நிறைந்த பகுதியில் பிரவாஹமுடன் செல்லும் இந்த நர்மதை நதி, பளிங்குப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(சலவைக்கல்) பாறைகளின் நடுவே பாய்ந்தோடும் கண் கவர் பகுதி (இன்றைய ஜபல்பூர்) மிகளழில் உடையதாகக் காட்சி யளிக்கும்.

அவந்தி நாட்டின் தெற்கு எல்லை என மகாபாரதத்தின் மூலம் அறியலாம். சாளுக்கிய அரசின் வடக்கு எல்லையாக ஓடிய நதி இது. ஹர்ஷவர்த்தனச் சக்கரவர்த்தியின் சாம்ராஜ்யத் தெற்கு எல்லை இந்த நர்மதை நதி.

முனிபுங்கவர்களும் ரிஷிமகான்களும் சாந்தமாகத் தவம் புரியும் மலைப் பிரதேசத்தில் அமைந்த இடம்.

சங்கரர் துறவு ஏற்று, குரு கோவிந்த பகவத் பாதரை நாடி வந்த சிரேஷ்டமான நர்மதை நதி தீரம் இது தான்.



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

13

சங்கரரின் திக் விஜயம்

நர்மதை நதி தீரம். தமால விருக்ஷங்களும் கதம்ப மரங்களும் அடர்ந்த குகைகள் செறிந்த விந்திய மலைப் பிரதேசம் வந்து, நர்மதை நதி தீரத்தில், சங்கரர் ஸ்ரீகோவிந்த பகவத் பாதரை தரிசித்தார்.

''நீ யார்?'' என்று கோவிந்த பகவத் பாதர் கேட்டார்.

''நான் பிரும்மம்'' என்ற கருத்தை உள்ளடக்கிய பத்து ஸ்லோகங்களை (தசச்லோகீ) சங்கரர் பதிலாகத் தந்தார்.

குகையினுள்ளே சமாதி நிலையிலிருந்து எழுந்து வந்த குரு கோவிந்த பகவத் பாதர், ''சிவனே, மானுட உருக் கொண்டு வந்ததை நான் உணர்ந்தேன், மகனே வா'' என்று வரவேற்றார். சங்கரரைச் சீடராக ஏற்றுக் கொண்டார்.

'அஹம் ப்ரும்மாஸ்மி'

'தத்வமஸி'

'அயம் ஆத்மா ப்ரும்மா'

'பரக்ஞாணம் ப்ரும்மா'

நான்கு மஹா வாக்யங்களை உபதேசித்து அதன் மூலம் சங்கரருக்கு பிரம்ம ஞானத்தை அளித்தார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வியாசரின் வேதாந்த தத்துவ சாரத்தையும் கோவிந்த பகவத் பாதர் தமது சீடருக்கு அளித்து அருளினார். வியாசர் பராசரரின் மைந்தர். வியாசரின் மகன் சுகர். சுகர் வேதாந்த சாரத்தை தமது சீடரான கௌடபாதருக்கு வழங்க, கௌடபாதர் தமது சீடரான கோவிந்த பகவத் பாதருக்கு அருளினார்.

கோவிந்த பகவத் பாதர் ஆதிசேஷனின் அவதாரம்; பூவுலகைத் தாங்கி, அறிவின் சிகரமாகத் திகழ்பவர் ஆதிசேஷன். அத்தகைய பிரஸித்தி பெற்றவரின் சீடராகி, சங்கரர் ஞானக் கடலாகத் திகழ்ந்தார்.

ஒரு சமயம், பெருத்த மழையினால் நர்மதை நதியில் வெள்ளம் வந்தபோது, நதிப் பிரவாஹத்தை, சங்கரர் தமது கமண்டலுவில் அடக்கி ஊர் மக்களைக் காப்பாற்றினார்.

பெருவெள்ளம் கமண்டுலுவுக்குள் அடங்குமா! ஆம்; சங்கரரின் தவ வலிமையால் கமண்டலுவுக்குள் வெள்ளம் அடங்கியது.

குரு கோவிந்த பகவத் பாதரின் ஆணையை ஏற்று திக் விஜயமாக சங்கரர், காசி மாநகரம் வந்தடைந்தார். நகரையொட்டிய வனத்திலே சங்கரர் தங்கி ஆத்ம விசாரம் செய்தார். பண்டிதர்களுடன் வாதம் செய்தார். பல நூல்களை இயற்றினார்.

காசியில் சங்கரர் வாழ்ந்த காலத்தில், அவரை நாடி ஒரு இளைஞன் வந்தான். தன்னை அவருடைய சீடனாக ஏற்கும்படி வேண்டினான். அந்த இளைஞனின் மன வலிமையை ஆத்ம விசார நாட்டத்தை கேள்விகள் தொடுத்து சோதித்த பின்பு சங்கரர், அவ்விளைஞனை தமது சீடராக்கிக் கொண்டார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சனந்தனர் என்ற தீக்ஷா நாமம் பெற்ற அச்சீடரே, பின்னாளில் பத்மபாதர் என்ற பெயரால் அழைக்கப் பெற்றார்.

காசியில் இருந்த போது சங்கரர் ஆத்மா ஒன்றே, உடல் வேறு என்ற உண்மையை உலகுக்கு உணர்த்த எண்ணினார். சீடர்களுடன் கங்கைக் கரைக்கு நீராடச் செல்கையில் அவரெதிரே ஒரு சண்டாளன் வந்தான். நான்கு நாய்கள் அவனைச் சூழ்ந்து வந்தன. 'விலகு, விலகு' என்று சங்கரர் சண்டாளனைச் சொல்ல, அவன் எதிலிருந்து எதை விலகச் சொல்லுகிறீர்கள்?'' என்று கேட்க, 'மனீஷா பஞ்சகம்' என்ற அருமையான ஸ்லோகம் பிறந்தது. சாக்ஷாத் சிவபெருமானே, சண்டாளனாக வந்து திருவிளையாடல் புரிந்து, முடிவில் சங்கரருக்கு சிவதரிசனம் தந்து மறைந்தார்.

காசிக்ஷேத்திரத்தில் சங்கரர் வாசம் செய்த காலத்தில், கங்கா அஷ்டகமும் அன்னபூர்ணா ஸ்தோத்திரமும் பாடினார்.

''காசீ புராதீஸ்வரீ பிக்ஷாம்தேஹி
க்ருபாவலம்பனகரி மாதா அன்னபூர்ணேச்வரீ''

என்று வைராக்ய ஞானபிக்ஷை வேண்டினார்.

பின்பு சங்கரர் வடக்கு நோக்கி, தமது திக்விஜயத்தைத் தொடர்ந்தார். காடு, மலை, பாலை என்று பல பிரதேசங்களைக் கடந்து பத்ரியை அடைந்தார்.

பத்ரி க்ஷேத்திரத்தில் சங்கரர் பல ஜீவன் முக்தர்களை தரிசித்து, உபநிஷத்துக்களின் விளக்கங்களைப் பெற்றார். அவர் தமது பன்னிரெண்டாவது வயதில் பிரம்ம சூத்திரத்திற்கு மிகச் சிறந்த பாஷ்யம் ஒன்றை, பத்ரியில் இருந்த போது எழுதினார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸனந்தனர் போன்ற சிஷ்யர்களுடன் சங்கரர் மீண்டும் காசி க்ஷேத்திரம் வந்தடைந்தார். கங்கைக் கரையிலே அவர்கள் தங்கியிருந்த காலத்தில் ஸனந்தனரின் குருபக்தியை விளக்கும் அரிய நிகழ்ச்சி ஒன்று நடந்தது.

கங்கையின் அக்கரையில் ஸனந்தனர் இருந்தார். சங்கரர் ''ஸனந்தனா'' என்று அழைத்ததும், ''இதோ வந்து விட்டேன்'' என்று நதிப் பிரவாஹத்தைப் பற்றிய பிரஞ்ஞை சிறிதுமின்றி கங்கையில் கால் வைத்து நடக்கலானார். அவரது காலடித் தடம் பதிந்த இடத்தில் எல்லாம், பாதத்தின் அடியிலே பத்மம் பூத்து அவரைத் தாங்கியது. இதை அவர் உணரவில்லை. ஆனால் சங்கரரும் மற்ற சிஷ்யர்களும் இதை நேரில் கண்டு வியந்தார்கள். ஸனந்தனரின் குரு பக்தியை, ஸேவையை சங்கரர் பாராட்டி, ''பத்மபாதரே'' என்று விளித்தார்.

சங்கரர் காசியில் இருந்தபோது அவருக்கு வயது பதினாறு ஆயிற்று. எட்டு வயது மட்டுமே வாழ வேண்டிய சங்கரரின் வாழ்நாள் சந்யாச ஆஸ்ரமத்தை மேற்கொண்டதால் பதினாறுவயது என்று ஆகியது. காசியில் வியாசரின் தரிசனம் பெற்றார். சங்கரரின் பிரம்மசூத்திர பாஷ்யத்தை வியாசர் ஆமோதித்து பாராட்டியபின்பு, சங்கரர் தமது வாழ்நாளை மணி கர்ணிகையில் முடித்துக் கொள்ள எண்ணினார்.

அப்போது, வியாசர் அவர் முன் தோன்றி, ''சங்கரா! உன் ஆயுளை மேலும் பதினாறு ஆண்டுகளாகக் கூட்டுகிறேன். உன்னால் வெல்லப்பட வேண்டியவர்கள் இன்னும் பலர் உள்ளனர். சங்கரா, நீ அவதாரம் எடுத்ததன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பயன் இன்னும் முற்றுப் பெறவில்லை'' என்று உணர்த்தினார்.

வியாசர் பணித்தபடி சங்கரர் தமது திக் விஜயத்தைத் தொடர்ந்தார். தமது திக்விஜயத்தில் முதன் முதலாக குமாரில பட்டரைக் கண்டு தமது பாஷ்யத்திற்கு 'வார்த்திகம்' இயற்ற அவரைப் பணிக்க வேண்டுமென்று விரும்பினார். எனவே, காசியிலிருந்து பிரயாகை நோக்கிச் சென்றார்.

சங்கரர் பிரயாகை வந்ததும் குமாரில பட்டரைக் காண விரும்பினார்.

வேதங்களில் மகா பாண்டித்யம் பெற்றவரும் ஞானத்தின் உருவாக விளங்குபவரும் மூவுலகும் போற்றிடும் பேரறிஞர் என்று கொண்டாடப்படும் கீர்த்தி மிக்கவர் குமாரிலர். இவரை ''பட்டாச்சாரியன்'' என்றும் அழைப்பார்கள்.

குமாரிலரின் மாணாக்கர் பலராவர். அவர்களுள் குறிப்பிட்டத்தக்கவர்களுள் முதன்மையானவர் விசுவரூபர். பிரபாகரர் என்றொரு சீடரும் இருந்தார். அவரை, பிரபாகர மிச்ரர் என்று அழைப்பார்கள்.

சமய மார்க்கங்களைப் பண்டிதர்கள் வேதப் பிரமாணங்களுடன் வியாபகப்படுத்தி வந்தார்கள். மனித குலத்தை நல்வழிப்படுத்தும் நெறியில், அம்மார்க்கங்கள் வழி காட்டிகளாக அமைந்திருந்தன.

வேதத்தில் ஞான காண்டத்தினும் கர்ம காண்டத்தை ஆராய்ச்சி செய்ய எழுந்ததே மீமாம்ஸை என்பர். ஜைமினி முனிவர் வகுத்ததே மீமாம்ஸையாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பூர்வ மீமாம்ஸை உத்தர மீமாம்ஸை என்று அது இரு வகைப்படும். பிரமாணவியல், கர்ம வேதியல், அங்காங்கி இயல், பிரயோகவியல், முறைமைப் பாட்டியல், பயனியல், மாட்டேற்றியல், ஊகவியல், விலக்கியல், பிரசங்கவியல் என்று பல்வேறு அத்யாயங்களை உடைய இதில் இரண்டாயிரத்து எழுநூற்று நாற்பத்தொன்பது சூத்திரங்கள் உள்ளன.

மீமாம்ஸை நூலுக்கு சபர முனிவர் பாஷ்யம் செய்தார். சூத்திரங்களுடனும் பாஷ்யத்துடனும் மீமாம்ஸை விளங்கிற்று.

குமாரில பட்டர் சூத்திரத்திற்கும் பாஷ்யத்திற்கும் சிறிதளவு வேறுபாடு இருப்பதாகக் கண்டறிந்தார். அதன் காரணமாக சூத்திரங்கள் பற்றி வழிநூல் செய்தார். சூத்திரங்களை நீதி என வலியுறுத்தினார்.

''ஜைமினி செப்பு நூலின் நீதியே கொண்டு
பட்டாச்சாரியனிகழ்த்தும்''

என்று, பழந்தமிழ்ப் பாட்டு வரிகள் இயம்பும்.

குமாரில பட்டரின் இரண்டு சீடர்களில் விசுவரூபர் மீமாம்ஸையில் நிகரற்ற பண்டிதத் திலகமாகத் திகழ்ந்தவர். சூத்திரங்களின் நுணுக்கங்களில் நுண்மாண் நுழைபுலம் மிக்கவராகப் பலராலும் புகழ்ந்து போற்றப்பட்டார். குருவான பட்டர் வழிநின்று செயல்பட்டு வந்தார்.

மற்றொரு சீடரான பிரபாகரர், சூத்திர முறைமை பற்றிய கருத்துக் கொண்டு, சபர முனிவரின் பாஷ்யம் பற்றி நூல் செய்தார். குருவான குமாரில பட்டரின் வழியினின்று சற்றே வேறுபட்டிருந்தார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''பிரபாகரன் பட்டாசாலில் வேறாகிப் பரிந்துரை செய்
நெறியதனை''

என்று மற்றொரு பழந்தமிழ்ப் பாட்டு வரிகள் சொல்லும்.

மீமாம்ஸைத் தத்துவங்களை தத்தம் வழிகளில் தனித்து வியாபகப்படுத்தி வந்தார்கள். நாளடைவில் குமாரில பட்டர் ஸ்தாபிதம் செய்தது 'பட்டர் வழி மீமாம்ஸை' எனவும் பிரபாகர மிச்ரர் நிறுவ முயன்றது 'மிச்ர வழி மீமாம்ஸை' எனவும் வழங்கலாயிற்று.

பிரபாகரரின் மிச்ர வழி மீமாம்ஸையின் கோட்பாடுகள் பூர்ணமான விளக்கங்களுடன் அமையாத நிலையில் காணப்பட்டது. அறிஞர்களின் விமர்சனத் திற்கும் உள்ளாகியது. தெளிவற்ற போக்குகள் அடங்கியுள்ளதாக, பண்டிதர்களால் கருதப்பட்டது.

அந்தத் தருணத்தில் குமாரிலரின் சீடரும் மீமாம்ஸையில் மகாப் பண்டிதருமாகிய விசுவரூபர், தம் குருவழி நின்று, பட்டர் வழி மீமாம்ஸையைப் பெரிதும் விளக்கியும் தெளிவுபட எடுத்துக் கூறியும் அதற்கொரு ஈர்ப்பு சக்தியை ஏற்படுத்தினார்.

ஜைமினியின் அனைத்து சூத்திரங்களிலும் கூறப்பட்டவற்றைத் தெளிவுற மொழிந்தும் சபர முனிவரின் பாஷ்யத்தின் நோக்கு போக்குகளையும் தீர்க்கமாக வெளிக்கொணர்ந்தும் 'பட்டர் வழி மீமாம்ஸை'யை பிரஸித்தி பெறச் செய்தார் விசுவரூபர்.

மிச்ரர் வழி மீமாம்ஸையையும் ஆராய்ந்து, அதனுள் நிலவியிருந்த தெளிவற்ற தன்மைகளை வாதிட்டும் வெற்றி கொண்டார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நிறைவான முறைமைகளும் அழுத்தமான தொடர்புகளும் கொண்ட பட்டர்வழி மீமாம்ஸையில் பொதிந்துள்ள சீர் மிகுந்த பாங்குகளைச் செறிவுடன் அழகுபட விசுவரூபர் தம் புலமைச் சிகரத்தால் அனைவரிடத்தும் பதியுமாறு புரிய வைத்தார்.

விசுவரூபரின் விரிவுரைகளையும் வியாக்யானங்களையும் பண்டிதர் உலகம் ஏற்றுக் கொண்டது. பாமரர் உலகமும் போற்றிக் கொண்டாடியது.

புலமையையும் வாதத்திறமையையும் மதிப்பதும் பாராட்டிச் சிறப்பிப்பதும் பாரதப் பண்பாடு.

தெளிவுறவே அறிந்து தெளிவுபட மொழிந்து, சிந்திப்பார்க்கு உள்ளத்தில் களி வளர, ஆனந்தக் கனவு பல காட்டல் ஒரு தனிக் கலை.

புரிகிற வண்ணம் பொருள் விளக்கம் செய்து அவற்றை ஏற்கிற வண்ணம் சான்றுகள் காட்டி அணியழகு தவழ மணி வாசகங்களாக வாதவுரை நிகழ்த்தி செறிவான அர்த்தப் பொலிவுகளுக்கு மகுடம் அமைக்கும் பாண்டித்யம் மிக்கவர்களை 'மண்டனர்' என்ற சிறப்புப் பெயர் சூட்டி, கௌரவித்து அழைப்பது அக்கால மரபு.

அத்தகைய தொன்மையான மரபின்வழி முற்றிலும் அதற்குத் தகுதியும் திறமும் வாய்ந்த விசுவரூபரை 'மண்டனர்' என்று சிறப்புப் பெயர் சூட்டி பண்டிதர் உலகம் கௌரவித்தது.

விசுவரூபரின் தந்தை ஹிமமித்ரர் என்றழைக்கப் படும் ஹிமமிச்ரர் அவரும் ஒருவேத விற்பன்னரன்றோ? தந்தை வழியிலும், தந்தையின் சிறப்புப் பெற்றவராக விளங்கிய விசுவரூபர் 'மண்டனர்' என்னும் சிறப்புப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெயருடன் குடும்பப் பெயரும் இணைந்திட 'மண்டனமிச்ரர்' என்று அழைக்கப்படலாயினர்.

கால ஓட்டத்தில் விசுவரூபர் என்று அழைக்கப் பட்ட நிலைகள் மாறி 'மண்டனர்', 'மண்டன மிச்ரர்' என்று, மரியாதைக்குரிய மகத்தான திருநாமத்துடன் அனைவராலும் அன்புடன் அழைக்கப்பட்டு வந்தார்.

விசுவரூபரின் சிறப்புப் பெயரான மண்டனர் என்பதே அவருடைய திருப்பெயர் போல் விளங்கலாயிற்று. மண்டனர் என்று வேறு ஒருவர் அக்காலத்தில் சிறப்புப் பெற்றிருந்தாலும் பெருமையுடன் பிரகாசித்த 'மண்டனர்' விசுவரூபரே.

குருவாகிய குமாரிலரின் வழி நின்று, அதையே தமது வாழ்க்கைத் தத்துவமாக ஏற்றுக் கொண்டிருந்தார், மண்டனர்.

''பிள்ளாய், மண்டனா! என் பள்ளியில் படிக்கும் அனைவரையும் நீ வென்று விட்டாய்!'' என்று குமாரில பட்டர் கூறி மகிழ்வார்.

மண்டனரை, தம் பிள்ளை என்றே புகன்று புளகாங்கிதமடைவார்.

''பிள்ளாய், மண்டன! உன் கேள்விக் கணைகள் என்னையே திகைக்க வைக்கின்றனவே'' என்று கூறிப் பெருமிதம் கொள்கிற பண்டிதோத்தமராகிய மண்டனரைச் சீடராகப் பெற்றவர் குமாரில பட்டர்.

அத்தகைய பெருமை பொருந்திய குரு குமாரில பட்டரைக் காணவே, சங்கரர் பிரயாகை வந்தடைந்தார்.

சங்கரர், குமாரிலரைக் காணச் சென்றார். ஸனாதன வேத நெறி தழைத்தோங்க விரும்பிய குமாரிலர் என்ற

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யமுனையைச் சேர, ஞான கங்கைபோல் உள்ளம் பிரவாஹமெடுத்துப் பாய்ந்தோட சங்கரர் பிரயாகை வந்தார். குமாரிலர் இருக்குமிடம் பற்றி விசாரித்தார். அவர் கேள்வியுற்ற செய்தியானது அவரைத் துடிதுடிக்க வைத்தது. சாஸ்திரக் கடலாகத் திகழும் குமாரிலர் துஷாக்னியின் நடுவில் இருக்கிறாரா? எரியும் உமிக்குவியலின் நடுவே இருப்பதன் காரணம்?

எண்ணங்கள் அலைமோத, சங்கரர் துரித கதியில் நடந்தார்; குமாரிலர் இருக்குமிடம் வந்தடைந்தார்.

புகை சூழ்ந்த தாமரைமலர் போல புகைந்து கொண்டிருக்கும் உமிக்குவியலின் நடுவே குமாரிலர் வீற்றிருப்பதைக் கண்டார்.

''இதென்ன கோலம்? தங்களுடைய வார்த்திகம் வேண்டி நான் வரும்போது, இவ்வாறு காண நேர்ந்ததே?'' என்று வருந்தினார், சங்கரர்.

''ஈச்வர நிந்தனையும் குருத்துரோகமும் செய்த எனக்கு நானே விதித்துக் கொள்ளும் தண்டனை இது. தங்களுடைய திவ்ய தரிசனத்தை முன்பே பெற்றிருந்தால், இத்தகைய கொடுந்துன்பத்தை அனுபவிக்க நேர்ந்திராது. அத்வைத தத்துவத்தை இப்போதேனும் அறிந்து உய்ய விரும்புகிறேன்.''

குமாரிலரின் வேண்டுகோளை ஏற்று, சங்கரர் அவருக்கு பிரம்ம வித்யா ஞானத்தை விளக்கி அருளினார்.

''தாங்கள் அத்வைத தத்துவத்தை உலகில் நிலை நாட்டுங்கள். தங்களுடைய பாஷ்யத்துக்கு 'வார்த்திகம்' எழுதும் பாக்யத்தை நான் பெற்றிருக்கவில்லை. என்னுடைய சீடர் அறிவுக் கடலான மண்டன மிச்ரரைச் சந்தியுங்கள்; பூர்வமீமாம்ஸையை மேலான தத்துவமாக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நினைத்திருக்கும் மண்டனரை வாதம் செய்து வென்று அத்வைதத்தை ஏற்கும்படிச் செய்யுங்கள்; மண்டனர் என்னிலும் சிறந்தவர்.''

குமாரிலரின் உள்ளும் புறமும் இருந்த ''மோகம்'' நீங்கியதும் சங்கரர் அங்கிருந்து செல்லலானார்.

குருவின் திருவாயாலே போற்றப்பட்டு, ''அறிவுக்கடல்'' என்ற பாராட்டைப் பெற்ற மண்டன மிச்ரரைக் காண, சங்கரர் அவாவினார்.

மோனத்தில் மூழ்கிய குமாரிலர் என்னும் பாண்டித்யத்தை, தம்மொடு இணைத்துக் கொண்டவராக சங்கரர் உளம் நெகிழ்ந்தார்.

யமுனையின் திருக்கோலமும் கங்கையின் அருட் கோலமும், ஸரஸ்வதியின் தவக்கோலமும் சங்கரரின் ஞானக் கோலமும் நெஞ்சில் கவிக்கோலங்களாக உதயமாயின.

கங்கையும் யமுனையும் பிரவாஹித்து வந்தது. ஸரஸ்வதி உள்ளூடாய் பிரவாஹித்தது.

சங்கரரின் பிரயாகை க்ஷேத்திர விஜயம் முக்கியத்துவமானது.

''ஸிதாஸிதே ஸரிதே யத்ர
ஸங்கதே தத்ராப்லுதாஸோ
திவமுத்பதந்தி''

என்று சுருதி மொழிகிறது. ''வெண்மையும் கருப்புமாகிய நதிகளின் சங்கமத்தில் ஸ்நானம் செய்பவர்கள் பரஞ்ஜியில் கலப்பார்'' என்பது வாசகம்.

சங்கரர் யமுனையையும் கங்கையையும் உற்று நோக்குகிறார். அந்த நதிகளின் சங்கமத்தோடு ஸரஸ்வதி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நதியின் சங்கமமும் சங்கரரின் அக நயனங்களில் புலப்படுகிறது.

கண்ணனின் காற்சதங்கையொலி போல் யமுனையின் அலை வீச்சுக்களின் பக்திப் பெருக்கும், ஞானப் பிரவாஹமாகப் பாய்ந்தோடும் கங்கையும் கலக்கிற சங்கமம் அது.

உள்ளத்தில் பதிந்துள்ள அழுக்கினைக் கழுவி கண்ணனின் கமல பாதங்களில் நிலைத்திடச் செய்யும் யமுனா நதி, பரஞான உணர்வூட்டும் பிரவாஹ கங்கா நதி, ஆனந்தப் பெருக்கினால் மகிழ்வூட்டும் அந்தர்வாஹினி ஸரஸ்வதி நதி இம்மூன்று நதிகள் கூடும் பூர்ணப் பிரவாஹமான பிரயாகையிலிருந்து சங்கரர் மாஹிஷ்மதிக்குச் சென்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

14

கிருஹஸ்தாச்ரமத்தில் மண்டனர் - உபயபாரதீ

மாஹிஷ்மதி! மண்டன மிச்ரரின் எழில் நிறைந்த மாளிகை அமைந்திருக்கும் அணிநகரம். எண்டிசை புகழும் பண்டிதராஜர் எனப் பிரகாசிக்கும் மண்டனரும் அவரது பத்தினி உபயபாரதியும் 'கிரஹஸ்தாச்ரமம்' மேற்கொண்டு இல்லறம் நிகழ்த்தும் ஈடில்லாப் பெரு நகரம் மாஹிஷ்மதி.

மாஹிஷ்மதித் திருநகரத்தில் தர்மமூலா நதி பாய்ந்தோடுகிறது; நதிக்கரை நகரம் மாஹிஷ்மதி.

தர்மம் தான் அனைத்துக்கும் மூலம். தர்மம் தான் வாழ்வுக்கு முதன்மையானது. 'தர்' என்ற மூலத்திலிருந்து பிறந்ததே தர்மம். தர்மமூலா நதி பாய்ந்தோடுகிற மாஹிஷ்மதியில் மண்டனரும் பாரதியும் கிருஹஸ்தர்களுக்குரிய தர்மத்துடன் இல்லறத்தை செவ்வனே நடத்தி வருகிறார்கள்.

வேதத்தில் கூறப்பட்டுள்ள, கிருஹஸ்தர்களுக்குரிய தர்மங்களை நன்கறிந்தவர்கள் மண்டனரும் பாரதியும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''தாரயதி தர்ம இதி ஆஹு''

என்று பண்டிதர்கள் பகர்வார்கள். தர்மம் என்பதற்கு ஆதரவாயிருப்பது, ஆதாரமாக இருப்பது என்றே ஆதியில் பொருள் கொள்ளப்பட்டது. காலப் போக்கில் தர்மம் என்றால் சட்டம் வழக்குநெறி, கடமை, உரிமை, நியாயம், ஒழுக்கப் பண்பு, குணசீலம், நற்பண்புகள் என்பதாக விரிவு பெற்று மலர்ச்சியுற்றது.

பொதுவாக, கடமைகள் என்கிற கர்மாக்களும் பொறுப்புக்களும் தர்மத்தின் பாற்பட்டதாக எல்லோராலும் உணரப் பட்டது.

தர்மங்களை வகைப்படுத்துகையில் ஐந்து விதமாகக் கூறுவது மரபு. தனி மனித தர்மம், வியக்தி தர்மம் எனவும் குடும்ப தர்மம் பாரிவார்த்திக தர்மம் எனவும், சமூக தர்மம் சமாஜ தர்மம் எனவும், தேசம் தழுவிய தர்மம் ராஷ்ட்ர தர்மம் எனவும் மனித குலத்திற்குரிய தர்மம் மானவ தர்மம் எனவும் பஞ்சதர்மங்களாகச் சொல்லப்பட்டன.

இவற்றுடன்கூட கடப்பாடுகள் என்பதாக தேவரின (கடவுளுக்கு) ரிஷிரின (முனிவர்களுக்கு) பித்ரிரின (முன்னோர்களுக்கு) நரிரின (மனிதகுலத்துக்கு) பூதரின (உடன் வாழ்பவர்களுக்கு) என்பதாக பஞ்ச கடமைகள் என்று வரையறை செய்து காட்டியுள்ளார்கள்.

வேதங்களிலிருந்தும் வேதாந்தத்திலிருந்தும் தர்ம சாஸ்திரங்கள் வடிவெடுத்து கல்ப சூத்திரங்களாக மலர்ந்தன. 'கல்ப' என்றால் வழிமுறை என்றே பொருள்.

வேதம் தான், தர்மத்துக்கு ஆதாரம். கல்ப சூத்திரங்கள் நான்கு உண்டு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேத வேள்விகள் யாகங்கள் பற்றியது முதலாவதும் நான்காவதுமான ஸ்ரௌத சூத்திரங்கள்; ஸுல்ப சூத்திரங்கள், இரண்டாவதாகிய க்ரிஹ்ய சூத்திரங்கள் கிருஹஸ்தர் செய்ய வேண்டிய காரணம், சடங்குகள் பற்றிக் கூறுபவை. தர்ம சூத்திரங்கள் பொதுவான சமூக நெறிகளைச் சொல்பவை.

தர்ம சூத்திரங்களான ஆபஸ்தம்ப, ஔஸானஸ, போதாயன, கௌதம, ஹரித, ஹிரண்யகேசி, வைகானஸ, வசிஷ்ட, விஷ்ணு என ஒன்பது வகை சூத்திரங்களும் மண்டனரின் சிந்தையில் பதிந்தவைகளே.

க்ரிஹ்ய சூத்திரம், தர்ம சூத்திரம் இரண்டும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை. இரண்டுமே பண்டைய பாணியிலும் சீராக வரையறுக்கப்படாத வகையிலும் அமைந்திருந்த காரணத்தால் ஸ்மிருதிகள் உருவாயின.

எளிதில் நினைவிற் கொள்ளத்தக்கவாறு செய்யுள் வடிவில் ஸ்மிருதிகள் இயற்றப்பட்டன.

மனுஸ்மிருதி மிகத் தொன்மையானது. சந்த வடிவில் அமைந்த தர்மக் கருவூலம்.

ரிக்வேதத்தில் குறிப்பிடப்படுகிற ஆங்கீரஸ ஸ்மிருதி, மனுவால் நினைவு கூறப்படுகிற அத்ரி ஸ்மிருதி ஆகியவற்றுடன், ப்ருஹத் பராசர ஸ்மிருதி, தக்ஷஸ் மிருதி, தேவலஸ்மிருதி, கோபில ஸ்மிருதி, பராசர ஸ்மிருதி, ஸம்வத்ர ஸ்மிருதி, வியாஸஸ்மிருதி யமஸ்மிருதி முதலியவற்றிலும் புலமை மிக்கவர் மண்டனர்.

இந்து தர்ம நெறிகளின் மும்முனிவர்களான நாரதர், பிரஹஸ்பதி, காத்யாயனர் ஆகியோர் யாத்த மூன்று ஸ்மிருதிகளும் மண்டனர் கற்றறிந்து தெளிந்தவையே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவற்றோடு, மண்டனரின் பாண்டித்யம் நின்றுவிட வில்லை.

பாரதியுடன் மணவாழ்வைத் தொடங்கி ஒரு கிருஹஸ்தர் ஆற்ற வேண்டிய தர்மங்களை சாஸ்திர வழி கற்று உணர்ந்த பிரத்யட்ச மேதை மண்டனர்.

சுக்லயஜுர் வேதம் அருளப் பெற்ற மகான் யாக்ஞவல்கீயர். பாரதத்தின் தொன்மை மிக்க சிறந்த முனிவர் யாத்த யாக்ஞவல்கீய ஸ்மிருதி சத்கர்மாக்கள் எனப்படுகிற ஆசாரம் (சதாசாரம்) வியவகாரம், பிராயச்சித்தம் ஆகிய தர்ம சாஸ்திரத்தின் மூன்று முக்கிய பகுதிகளையும் செழுமையான வகையில் விவரிக்கிறது. அதிலுள்ள கர்மாக்கள் எல்லாம் மண்டனருக்கு மனப்பாடம்.

யாக்ஞவல்கீய ஸ்மிருதி ஆயிரத்துக்கும் மேலான செய்யுட்களைக் கொண்டது. அழகு மிளிரும் சந்தத்தில் ஆக்கப்பட்டுள்ளது.

அனுஷ்டுப் சந்தஸ், ஈரடியால் அமைந்த செய்யுள். மனனம் செய்ய எளிமையானது. யாக்ஞவல்கீய ஸ்மிருதி, அனுஷ்டுப் சந்தஸால் ஆனது.

வால்மீகி முனிவரும், இராமாயண காவியத்தில் அனுஷ்டுப் சந்தஸை, எழுத்து நியதி, குறில் நெடில் வியவஸ்தையுடன், சீர், தளை, அடி, நிறுத்தல், நியமனம் என மிக அழகுடன் கையாண்டுள்ளதால் அனுஷ்டுப் சந்தஸின் பிதா என வால்மீகியைச் சொல்வார்கள்.

''மாநிஷாத ப்ரதிஷ்டாம் த்வம்''

என்று தொடங்கும் ஸ்லோகம் அனுஷ்டுப் சந்தஸின் மகிமையுடன் திகழ்வதாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தர்ம சூத்திர சாரங்களும் ஸ்மிருதி சந்தங்களும் கிருஹஸ்த தர்ம சீலராக வாழும் மண்டனர் மாளிகையில் நித்யமும் உறவாடும்.

பிரம்மச்சரியம், கிருஹஸ்தாச்ரமம், வானப்ரஸ்தம், ஸந்யாஸம் ஆகிய நால்வகையினுள்ளும் கிரஹஸ்தாச்ரமமே சிறந்ததெனச் சாற்றுவார்கள். மற்ற மூன்று நிலைப் பட்டவர்களுக்கும் ஆகாரம், கல்வி முதலியன வழங்குபவர்களும் தொண்டு புரிபவர்களும் கிருஹஸ்தாச்ரமத்தில் இருப்பவர்கள்தான்.

தர்ம சாஸ்திரத்தின் முழு வடிவமாகத் துணை நின்று மண்டனரின் தர்ம பத்தினியாக, கர்மாக்களைக் குறைவின்றிச் செய்வதில் கண்ணும் கருத்துமாய் இருக்கிற உத்தமி பாரதீ.

கிருஹஸ்தாச்ரமத்தின் மகத்துவம் பற்றி,

''யஸ்மாத் த்ரயோ பயாஸ்ரமினோ,
ஞானேனை அன்னேன சான்வஹம்
க்ரஹ்தேனய்வ தார்யந்தே
தஸ்மாத் ஜ்யேஸ்தஸ்ரமி க்ரஹி''

என்று காலத்தால் தொன்மைப்பட்ட மனுவின் சந்தமிகு ஸ்மிருதி செப்புகிறது.

இல்லறம் ஒரு நல்லறமாக கடைபிடிக்கப்பட்டு தர்மமாகக் கொள்ளப்பட்டது.

அன்பும் அறமுமாக பாரதீ-மண்டனர் இல் வாழ்க்கை நடந்தேறியது. மங்கலமே மனைமாட்சியாக விளங்கிற்று.

மனையறம் காத்து வாழ்க்கைத் துணை நலமாகத் திகழ்ந்து அதிதிகளை உபசரித்து விருந்தோம்பலில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிறந்து, கிருஹத்திற்குரிய தலைவியாக எல்லாப் பண்புகளிலும் தலைசிறந்து, மண்டனருக்கு பணிவிடைகள் புரிந்து வருகிற பாரதியை உற்றாரும் ஊராரும் பாராட்டினார்கள்.

தர்ம சாஸ்திரம் சாற்றியுள்ளபடி கிருஹத்திற்குரிய வர்களாக மண்டனரும் பாரதியும் வேத, தர்ம, சூத்திர, ஸ்மிருதிகளுக்கு ஒரு உரைகல் போன்று இல்லறம் மேற்கொண்டுள்ள பாங்கினை மாஹிஷ்மதி மாந்தர் பெருமிதம் ததும்ப ஒருவருக்கொருவர் சம்பாஷித்துக் கொள்கிறார்கள்.

பாரதீ வழிகாட்டும் மாதரசியாக இருந்து மண்டனரின் கிரஹஸ்தாச்ரமக் கர்மாக்களுக்கு வலுவும் பொலிவும் கூட்டுகிற வாழ்க்கைத் துணையாகப் பணி புரிகிறாள்.

கர்மாக்கள் என்பவை தாயின் கருப்பையில் உருவாகும் காலத்திலிருந்தே தொடங்கி வாழ்வின் இறுதி மூச்சு வரை நிறைவேற்ற வேண்டிய கடமைகளாகும்.

''நிஷேகாதி ஷமஸ் ஹாரநந்தஹ''

என்று மொழிவதன் பொருள் அதுதான்.

ஸனாதன தர்ம சாசனங்களைப் பூரணமாக அறிந்த மாதரசியன்றோ பாரதீ!

தொன்மையான வேள்விகள் விளைக்கும் நற்பயன்கள் அனந்தமாகும். வேள்விகள் என்றும் யாகங்கள் என்றும் யக்ஞங்கள் என்றும் வேதத்துடன் மையப்பட்ட நிகழ்வுகள் மானுடத்தின் க்ஷேமம் கருதி நிகழ்த்தப்படுகின்ற கர்மங்களாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மனமும் சுற்றுப்புறச் சுழலும் மாசுகளகன்று மகத்துவம் பெறுகிற நிலைகளை உருவாக்குகிற தன்மை வாய்ந்தவை அவை.

ஹோமங்கள் நிகழும் போது அந்த வேள்வித் தீயிலிருந்து எழுந்து வருகிற அக்னி ஜ்வாலை நயனங்களின் தீட்சண்யத்தை அதிகரிக்கும் சக்தி வாய்ந்தவை.

அக்னி, சமித்து, பசுவின் நெய் ஆகிய மூன்றின் சேர்க்கையும் மந்திர சப்தத்துடன் கலந்தொன்றி சதுர் சங்கமமாகப் பிரகாசித்து வியாபகமாகிற ஜ்வாலையும் அதைத் தொடர்ந்து எழுகிற புகை மண்டலமும் மானுட தேக ஆரோக்யத்துக்கு வலுவூட்டுகிற தன்மை உடையது என்ற உள்ளார்ந்த நுணுக்கங்களையெல்லாம் நன்குணர்ந்தவள் பாரதீ!

மண்டனரின் கர்ம சிரத்தையும் பாரதியின் மெய்ப்பாட்டுணர்வும் செயல்பாடுகளும் சேர்ந்து மண்டனர் மாளிகையில் நடைபெறும் அனைத்து நிகழ்வுகளிலும் முறைமையும் சீர்மையும் ஒன்றி நிலவுவது வழக்கம்.

மண்டனரின் மனைவியாக பாரதீ மாட்சியுடன் திகழ்ந்தொளிர்ந்தாள். தனது புக்ககத்துப் பெரியவர்களின் அன்பையும் பெற்று, பணிகளை ஆற்றி வந்தாள். பணிகளில் சிறந்தும் பணிவில் உயர்ந்தும் விளங்கினாள் பாரதீ.

வித்தையும் விநயமும் நிறைந்த மருமகளைக் காணுந்தோறும் மண்டனரின் தாயும் தந்தையும் அடையும் பூரிப்புக்கு அளவேது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''பாரதீ, யாகசாலை அமைக்க நிலம் வாங்கியுள்ளேன். அதற்கான பணிகளைத் துவங்க நல்ல நாள் ஒன்று பார்த்துச் சொல்லம்மா'' இது ஹிமமித்ரரின் அன்பு வேண்டுகோள்.

அன்பு வார்த்தைகள் அகம் நிறைந்து முகம் மலர்ச்சி பெறச் செய்தன.

அருமைக் கணவருக்கு வலது கரமாக இருந்து, அவர் ஆற்றும் கருமங்களில் சிரத்தை காட்டி, தகுந்த யோசனைகளைத் தகுந்த வேளையில் கூறி... மண்டனரின் மனைவியாக, பிரியத்துக்குகந்த சகியாக, மதி மந்திரியாக...

மண்டனரின் மாளிகையில் அரசியாய் வாழ்ந்து வந்த அறிவுத் தெய்வத்தை பாரதியை - ''உபயபாரதீ'' என்று போற்றி வரலானார்கள். உபய பாரதீ எனும் அறிவு தெய்வத்தால், மண்டனரின் மாளிகையே அறிவுச் சோலையாக விளங்கிற்று.

மண்டனர் மாளிகையில் அன்பு பாராட்டி அனைவரின் அரவணைப்பிலும் இடம் பெற்ற மாதரசி பாரதீ.

''பாரதீ-பாரதீ'' என்று பரிவும் பாசமும் இணைந்திட மிகுந்த மரியாதையுடன் கூடிய தொனியில் இதுகாறும் எல்லோரும் அழைத்து வந்தனர். இப்போது அதே நிலையில் உபயபாரதீ, உபய பாரதீ என்று உள்ளம் பூரிக்க அழைக்கலாயினர்.

வேத கர்மானுஷ்டானங்களில் தலைசிறந்த மண்டனருக்கு சகலத்திலும் உற்ற துணையாக இருந்த பாரதீ, எல்லா நேரங்களிலும் ஏற்ற துணையாக இருந்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாரதீ ஒரே பாரதீதான். என்றாலும் உபயபாரதீ என அழைக்கப்பட்டாள்; போற்றப்பட்டாள். உலகுக்கு உபயம் பண்ணுகிற பாரதீ உபயபாரதீ எனத் திகழ்ந்தாள்.

பாரதீ என்பதே பவித்ரமான சொல். பவித்ரமான இந்தப் பதத்துடன் 'உபய' என்பது சேர்ந்து சீர்மை பெற்றது.

இரு மொழிகளில் கவிதை எழுதுவோரை உபய கவி என்றும் தாய் வழி, தந்தை வழியைச் சேர்த்துச் சொல்வதற்கு உபயகுலம் என்றும் மொழிவது மரபு.

'உபயம்' என்றால் இரண்டு என்பது பொருள். ஒரு பாரதீ, இரண்டு பாரதீயா, சத்திய லோகத்து பாரதீ சோணாபுரி பாரதீ என்பதால் உபய பாரதீ ஆனாளா?

பிறந்த வீட்டில் பாரதீ, புகுந்த வீட்டிலும் அறிவுக்கரசியாக பாரதியாக ஒளி வீசுகின்றாள். அதனால் பெறப்பட்டதல்லவா இந்த உபயபாரதீ என்ற திருநாமம்! பிறந்தகத்தில் போற்றப்படுவது இயல்பு. புகுந்தகத்திலும் ஏற்றம் பெறுவது வியப்பல்லவா?

உபயம் என்றால் அறச்சாலை என்றொரு அர்த்தமுண்டு. வேத தர்மங்களின் சிகரமான மண்டனர், அப்பணிகளை உரிய வண்ணம் நிகழ்த்துவதற்கு ஒரு பீடமாக அமைந்து இருக்கிற ஸ்தானமான அறச்சாலையாக விளங்குவதால் உபய பாரதீ என்ற திருப்பெயரோ?

உபய பாரதீ, மங்களம் தரும் சப்தமாக ஒலித்து மதுர ஒலியாக செவிகளில் பாய்கிறது. உபய பாரதியின் மேதா விலாசம், அவள் பெரியவர்களிடமும், சம வயதுடையவர்களிடமும், சிறியவர்களிடமும் நடந்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கொள்ளும் விதம் எல்லாம் இயல்பாயும் ஏற்புடையதா யும் அமைந்து அனைவராலும் மதிக்கப் பெற்றாள்.

ஹிமமித்ரர், அவர்தம் மனையாள், விசுவரூபராம் மண்டனர், பந்துக்கள் என எல்லோரும் கொண்டாடும் குண சௌந்தர்யவதியாக உபய பாரதீ இருந்ததால் அவளிடம் உள்ள பரிவு பன்மடங்காகப் பெருகிற்று.

ஒரு சமயம் பர்வதவாசிகள் பலர் மாஹிஷ்மதி மாளிகைக்கு வருகை தந்திருந்தார்கள். உபய பாரதியைப் பார்த்துத் தங்கள் அன்பின் அடையாளமாக மலைப் பொருட்களை சமர்ப்பித்தார்கள். உபய பாரதீ அவற்றை மனம் நெகிழ்ந்தவாறு ஏற்றபடியே ஒவ்வொருவர் அருகிலும் நெருங்கி, இன்முகத்துடன் புன்னகை பாலித்தனுப்பினாள்.

பர்வதவாசிகள் விடை பெற்றுச் செல்லும் போது வழி நெடுக கவிதையிலேயே உரையாடிச் சென்றார்கள். பர்வத வாசிகளான தங்களுக்கு எவ்வாறு இந்த அளவு கவிதாசக்தி உண்டாயிற்று என்பதையும் அவர்கள் கவிதை நடையிலேயே சம்பாஷித்து வியந்து கொண்டே நடந்து சென்றார்கள்.

மாளிகைக்கு இசை விற்பன்னர்கள் ஒரு குழாமாக ஒரு சமயம் விஜயம் செய்தபோது விசுவரூபரின் தாய் மகிழ்ந்தாள்.

அந்த சமயத்தில்,

''மகளே, சிறிது நேரம் வீணையை மீட்டி 'வாதனம்' பண்ணம்மா; நாத இன்ப நிறைவு செய் குழந்தாய்'' என்று ஹிமமித்திரரின் மனைவி, உபயபாரதியைப் பெறாத

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தாயாக இருந்து, பரிவு காட்டும் தாயினும் சாலப் பரிந்து செய்பவள் கூறுகிறாள்.

உபயபாரதிக்கு மட்டில்லா மகிழ்ச்சி; பாரதியின் உள்ளம் ஸ்வரங்களில் சஞ்சாரம் புரியத் தொடங்கியது.

இசைக் கருவிகளின் மூலம் எழும் ஸ்வர வெளிப் பாடுகள், அவளுடைய இதயவீதியில் பவனி வந்தன. குழல், நாதஸ்வர வழி, மூச்சுக் காற்றை அடக்கி ஊதுவதின் மூலம் ஸ்வரங்களை வெளியிட உருவானவை, 'த்மானம்'; மிருதங்கம், தவில் போல் அடிக்கப்படுவதின் வாயிலாக ஸ்வரத்தை வெளியிடு பவை 'ஆத்யாதம்'; வீணை, கோட்டு வாத்யம் போல் விரல்களினால் அல்லது கருவிகளால் இயக்குவதால் ஸ்வரங்களை வெளியிடுபவை 'வாதனம்' என மூன்று வகையாக வேதங்களில் கூறப்பட்டிருக்கிறது.

'வாதனம் பண்ணம்மா' என்ற பரிவு மிகுந்த குரலைக் கேட்டதும், உபய பாரதிக்கு வேத கால ஸங்கீதம் மன அலைகளில் இசைத்தது.

வீணையை கானம் பண்ணினாள். அந்த வீணா கானம் மாலிகை முழுவதும் பரவி வியாபித்தது. அந்த வியாபகம் உபய பாரதியின் சிந்தையில் ஒன்றுக்கு மேற்பட்ட பலர் அமர்ந்து வீணாகானம் செய்வது போன்ற தோற்றமாகி, கண்களில் தெரிந்தது.

'வீணா கணைகி' என்ற வீணா கோஷ்டி கானம் நிகழ்ந்தால் எவ்வாறு இருக்குமோ, அவ்வாறு இருப்பதாக உபயபாரதீ அக நயனங்களில் ஒரு புதுத் தோற்றம்.

அந்தப் புதுத் தோற்றத்தில் உபய பாரதீ சிலிர்த்தாள். ஸ்தம்பல வீணை, காண்ட வீணை சப்த ஒலிகள் பாரதியின் செவிகளில் பதிவது போல் தோன்றிற்று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உபய பாரதீ வீணையை மீட்டிக் கொண்டே யிருந்தாள். அந்த வீணாகான நாத அலைகளில் அவளுடைய இதயம் மிதந்து கொண்டே இருந்தது.

வாணம் என்ற கருவி வீணையைப் போன்றது தானே என எண்ணிக் கொண்டாள். உடனே, உபய பாரதிக்கு வேத காலச் சிந்தனைக் கீற்றுக்கள் பளிச்சிட்டன.

ஏழு தந்திகள் உள்ள வாணம் பற்றி நினைத்தாள். நூறு தந்திகள் உள்ள வகை பற்றியும் கூறப்பட்டுள்ளதை நினைவுபடுத்திக் கொண்டாள்.

'சப்தவாணிசீ வாண: சததந்து:' என்று பாரதியின் உதடுகள் சப்தம் எழுப்பாமல், ஆனால் உள்ளுக்குள் ஸ்வரங்களுடன் இசைத்தன.

ஸங்கீதக் கருவிகளுள் வீணை மிகப் பிரதானமானது என்பதும், எல்லா வேதங்களும் வீணையைக் குறிப்பிட் டுள்ளன என்பதும் உபய பாரதிக்குத் தெரியாததில்லை.

கல்ப சூத்திரங்கள், இதிஹாஸ புராணங்கள், காவியங்கள் ஆகியவற்றில் ஸங்கீதத்தையும் வீணா கானத்தையும் ஏற்றமுடன் கூறியிருக்கிறார்கள். பெண்களுக்கு விசேஷமான இடம் ஸங்கீதத்தில் கொடுக்கப்பட்டிருப்பதை வேதங்களில் காணலாம்.

ஸங்கீதத்தை வேதம் போற்றுகிறது. ஸங்கீதமும் வீணா கானமும் வேதம் போல் அநாதியானது. மனோ தர்மத்திற்கும் கற்பனைக்கும் அவற்றில் இடமுண்டு.

உபய பாரதீ வீணையை மீட்டிக் கொண்டே இருந்தாள். 'விபஞ்ச்யா காயந்தீ', அதாவது வீணையில் கானம் செய்கின்ற பாரதீ, தன்னுடைய வீணையிலுள்ள

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தந்திகளில் இசையைக் கூட்டி ஸ்பஷ்டமாக வாதனம் பண்ணிக் கொண்டே, தன்னையே மறந்தவளாய் வீணா நாதத்துடன் ஒன்றி விட்டாள்.

ஹிமமித்திரர் மனைவியும், அப்பொழுது அங்கே வந்த மண்டனரும், அமர்ந்தபடி ரசித்துக் கேட்டுக் கொண்டே இருக்கிறார்கள்.

உபய பாரதீ தன் பொன் விரல்களால் வீணை மீட்டும் போது. எழும் தந்தியின் மென் நாதம் நானா திக்குகளிலும் வியாபகமாகி, ககனத்தில் பவனி வந்தது.

ககனத்தில் வலம் வந்த வீணா நாத பவனியில் உபய பாரதியின் மன அலைகள், பரதேவதையின் தர்பாரில், முன்னம் ஒரு ஸந்தர்ப்பத்தில் தான் நிகழ்த்திய வீணாகான நினைவுகளைத் தழுவியது.

அந்த சமயத்தில்...

பரதேவதையின் தர்பாரில்...

தன்னுடைய வீணையை ஸரஸ்வதி தேவி மீட்டு கிறாள். பரதேவதையின் பர்த்தாவாகிய் பரமேச்வரரின் திவ்ய சரித்திரத்தையே கீர்த்தனங்களாகச் செய்து வீணையில் ஸரஸ்வதி தேவி கானம் பண்ணுகிறாள்.

வீணாதாரிணியே வீணாகானம் பண்ணுகிறாள்;

திரிபுரஸம்ஹார சரித்திரம், கால கூட விஷத்தை பானம் செய்து உலகத்தைக் காத்தருள்புரிந்த புண்ணிய கதை, மார்க்கண்டேயன் என்னும் தம் பக்தனுக்காகக் காலனை இடது காலால் உதைத்துத் தள்ளிய கதை, பாண்டிய ராஜ தனயையாக தேவி அவதாரம் செய்த சமயத்தில் பரமேச்வரன் தேவியை பரிணயம் செய்து கொண்ட கதை, பார்வதி பரிணயம் முதலிய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சரித்திரங்களை எல்லாம் பிரகாசப்படுத்தக் கூடியதான திவ்யமான கீர்த்தனைகளை, வீணையின் தந்திகளில் மீட்டியவாறே, ஸரஸ்வதி தேவி ஸங்கீதமாகப் பொழிகிறாள். அமுத கானம் வர்ஷிக்கப்படுகிறது.

தர்பாரில் உள்ள ஸகல தேவதைகளும் களிப்பில் ஆழ்கிறார்கள். பரதேவதைக்கு மனத்திற்குள் சந்தோஷப் பிரவாஹம் பெருக்கெடுத்தோடுகிறது.

பர்த்தாவினுடைய பெருமைகள் பொருந்திய சரித்திரங்களை ஸரஸ்வதி தேவியின் வீணாகானத்தில் திருச்செவியுற்று, பரதேவதை பெரிதும் சந்தோஷம் கொண்டாள்.

சிரஸை அசைத்தவண்ணம் பரதேவதை திருச்செவி மடுத்து மகிழ்ச்சிப் பெருவெள்ளத்தில் அப்பொழுது திளைத்த காட்சியைக் கண்டு, ஸரஸ்வதி தேவி ஆனந்தம் அடைந்தாள்; பெரும் பாக்யமாகக் கருதினாள்.

பரதேவதை, ஸரஸ்வதியின் வீணாகானத்தில் பூரித்துப் பூரித்து, புளகாங்கிதம் அடைந்து, நெகிழ்ந்த அந்தச் சுந்தரக் காட்சியும், அதே தருணம் ஸரஸ்வதி தேவியின் ஹிருதயத்தில் ஆனந்தப் பிரவாஹம் பெருக்கெடுத்தோடிய திருக்காட்சியும், இப்போது, மண்டனர் மாளிகையில் அமர்ந்து வீணாகானம் செய்கிற சமயம் உபயபாரதியின் இதயத்தில் ஆனந்த ஸ்வரங்களாக ஆர்த்தெழுந்து ஆர்த்தெழுந்து, வீணையொலி, வியப்பூட்டும் விந்தைமிகு இன்னிசையாக ஒலித்துக் கொண்டிருந்தது.

ஹிமமித்திரரின் மனைவியும் மண்டனரும் எப்பொழுதையும் விட இப்பொழுது வீணா கானப் பொழிவில் உபய பாரதியிடம் மிகுந்திருக்கும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புத்துணர்வு விளையும் புதுப் பொலிவையும் பார்த்து, ரசித்து உளம் நெகிழ்ந்தனர். விஜயம் செய்திருந்த இசைவிற்பன்னர்களும் தங்களை மறந்து வீணா கானத்தில் தோய்ந்திருந்தனர்.

அந்தப் பொழுதில் வானம், உபய பாரதியின் கானத்தில் நெகிழ்ந்து மண்ணைத் தண்மைப்படுத்திக் கொண்டிருந்தது. மண்டனர் மாளிகையில் உள்ள பூஞ்செடிகளில் புஷ்பங்கள் மலர்ச்சி பெற்றுக் காட்சி தந்தன. விருக்ஷங்களின் கிளைகளும் இலைகளும் வீணைக் குரலுக்கு இசைந்தவாறு ஒலி எழுப்பிக் கொண்டிருந்தன.

''மதுரம், மதுரம்'' என்று ஹிமமித்திரரின் மனைவி வாய் விட்டுக் கூறியதை அருகில் இருந்து செவியுற்ற மண்டனர், ''மதுர ரஸம் அளவற்ற தித்திப்புள்ள தாயிற்றே'' என்று தம் தாயாரிடம் இனிமையுடன் கூறினார்.

தாயும் தனயனும் உரையாடியதைச் செவிமடுத்த உபய பாரதிக்கு அன்று தர்பாரில் பரதேவதை, தன் வீணா கானத்தில் மெய் மறந்து, 'நன்று, நன்று' என நவின்ற மொழியில் தொனித்த மதுர நவரஸம் நினைவிற்கு வந்து பரவசத்தைத் தந்தது.

தாயும் தனயனும் உபய பாரதியை நெருங்கினார்கள்.

பணிவும் விநயமும் இணைய, உபய பாரதீ அவர்கள் இருவரையும் தனித் தனியே நமஸ்கரித்தாள், பரதேவதையின் தர்பார் நினைவு அலைகளிலிருந்து ஒருவாறு விடுபட்டவளாக.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நித்தியமான பணிகளில் ஈடுபட்டாள். மண்டனர் மாளிகை பூர்வ மீமாம்ஸை தத்துவங்களுக்கு நிலைக்களனாக விளங்கியதுடன், ஸங்கீதம், கலைகள், கல்வி, வித்தை இவற்றின் நிலையமாக, கலைத் தேவியின் ஆலயமாகத் திகழ்ந்தது.

வேதங்கள் சாற்றியுள்ள கர்ம நெறிகள் மண்டனர் மாளிகையுடன் உறவாடிய வண்ணம், மண்டனரும் உபய பாரதியும், வீணையும் நாதமுமாக, தர்மத்தின் ஆதார ஸ்ருதிகளை கர்ம ஸ்வரங்களாக சதா காலமும் மீட்டிக் கொண்டே, மாஹிஷ்மதி மட்டுமல்லாது இந்தப் பிரபஞ்சம் முழுவதும் நலமுடன் வாழ்ந்து வருவதற்காக, தங்களுடைய கடமைகளை ஆற்றிக் கொண்டிருந்தார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

15

மாஹிஷ்மதி
மண்டனர் மாளிகையில்

மண்டனருடன், உபயபாரதீ வேதங்களுக்கு ஒரு உரைகல்லாக வாழ்ந்து, கணவருடைய காரியங்கள் யாவினும் கை கொடுத்து உடன் இருந்தாள். மாதர் அறங்கள் போற்றிடும் வகையில் மண்டனர், உபய பாரதியின் உளமறிந்து ஒன்றி வாழ்ந்தார்.

உபய பாரதியின் வாக்குச் சாதுர்யங்களை அனுபவித்து, ரசித்து, மண்டனர் அவளைப் பாராட்டு முகத்தான், சில சமயங்களில் உபய பாரதியை ''வாக்தேவி'' என்று இதயப்பூர்வமாக அழைப்பார்.

''பாரதீ, உபய பாரதீ, நீயொரு வாக்வாதினி'' என்று பரிவுடன் நெகிழ்ந்து கூறும்போது, உபயபாரதீ சிரம் தாழ்த்திக் கொள்வாள்.

மண்டனர், உபயபாரதியின் பணிவில் மெய் சிலிர்த்து, ''உபயபாரதீ வாக்வாதினி மட்டுமில்லை'' என மொழிந்து, யஜுர் வேதத்தின் நினைவலைகள் நெஞ்சில் படர்ந்து வர ''நீயொரு ஹவிஸ்மதி'' என்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''ஹவிஸ்மதி'' என்ற பெயரைக் கேட்டதும் உபய பாரதிக்கு புனிதம் நிறைந்த நைவேத்யத்தின் நினைவு மனத்தில் எழுந்தது.

அன்று தெய்வத்திற்குத் திருப்படையல் பண்ணி யிருப்பதைப் பற்றி கணவர் வந்ததும் கூற எண்ணியிருந்தாள். அதைத்தான் தம், பதி குறிப்பால் உணர்த்துகிறாரோ என நினைத்தாள்.

உபயபாரதியின் நினைப்பு வார்த்தைகள் வழியே வருவதற்குள்ளாகவே மண்டனர். ''தூய்மைப் படுத்துகிற 'பவக'; பெருமையுடைய 'ப்ரஹ்தி'; நாநயமும் பேச்சாற்றலும் கொண்ட யஸோபகினி; விருப்பங்களை நிறைவேற்றுகிற ஸுஹு எல்லாமே நீ தான்.'' என்று பல பெயர்கள் சூட்டிப் பாராட்டினார்.

எல்லாவற்றையும் ஆமோதிக்கிற நிலையில் உபயபாரதீ, ''யஜுர் வேதத்தில் ஸரஸ்வதி தேவிக்குரிய அடைமொழிகளை உங்கள் பத்தினிக்கு உரியதாக ஆக்குகிறீர்களா?'' என்றாள்.

''மெய்தானே'' என்றார் மண்டனர். அதில் பல அர்த்தங்கள் பொதிந்திருந்தன.

சித்த சாகரத்தில் மண்டனரும் உபயபாரதியும் சொற் கப்பலில் உலா வந்தார்கள். அப்போதும் அவர்களின் முன்னே வேத அலைகள் ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தன.

மண்டனர், உபய பாரதீ இருவருடைய அக நயனங்களிலும் பாரத வர்ஷமாகிய இந்த கர்மபூமியின் புனிதத்தன்மைகளே தரிசனப்பட்டுக் கொண்டிருந்தன.

பாரத வர்ஷத்தில் மானுட ஜன்மம் கிடைத்தற்கரிய ஒன்றாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''பாரதபூமி பழம் பெரும்பூமி''

என்கிற சிந்தனைகள் அவர்களிடம் வலம் வந்து கொண்டிருந்தன.

இந்த ஸமஸ்த பூமண்டலம் ஸமுத்திரங்களுடனும் த்வீபங்களுடனும் பர்வதங்களுடனும் வனங்களுடனும் நதிகளுடனும் கூடியது.

ஜம்பூத்வீபம், ப்லக்ஷத்வீபம், சால்மலித்வீபம், குசத்வீபம், க்ரௌஞ்சத்வீபம், சாகத்வீபம், புஷ்கரத்வீபம் ஆகிய ஸப்த த்வீபங்களிலும் ஜம்பூத்வீபமே சிறப்பு உடையது.

ஸமுத்திரங்களால் சூழப்பெற்று நடுவில் தங்கமயமான மேரு பர்வதத்துடன் உள்ள ஜம்பூத் வீபத்தை, ஆக்னீத்ரன் ஆண்டு வந்தான். ஆக்னீத்ரன், தனது ஒன்பது புத்திரர்களுக்கும் ஜம்பூத்வீபத்தை ஒன்பது வர்ஷங்களாக (பிரிவுகளாக) அமைத்து வழங்கினான்.

அவை, ஹிமவர்ஷம், ஹேமகூட வர்ஷம், வைஷத வர்ஷம், இலாவ்ருதவர்ஷம், ரம்ய வர்ஷம், ச்வேத வர்ஷம், ச்ருங்கவான வர்ஷம், பத்ராச்வன் வர்ஷம், கந்தமாதன வர்ஷம், என்ற பெயர்களுடன் ஒன்பது ராஜ்யங்களாக விளங்கின.

முதலாவதான ஹிமவர்ஷத்தை ஆக்னீத்ரனின் மூத்த குமாரரான நாபி அரசாண்டு வந்தான். நாபிக்கு ரிஷபன் என்ற புத்திரன் பிறந்தான். ரிஷபனின் ஆட்சி நிகழ்ந்தது. ரிஷபனுக்குப் பிறந்த பிள்ளைகளில் மூத்தவன் பரதன். ஹிமவர்ஷத்தின் அரசனாக பரதனுக்கு மகுடாபிஷேகம் சிறப்பாக நடந்தேறியது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பரதனின் ஆட்சிபாரம் செம்மையாக நடந்து வந்தது. ஹிமவர்ஷம் என்ற பெயர், பரதனின் பிரசித்திபெற்ற ஆட்சியின் காரணமாக பரதவர்ஷம், பாரதவர்ஷம் என வழங்கலாயிற்று.

கால ஓட்டத்தில் பாரத வர்ஷமாகிய பாரததேசம் ஸமஸ்த பூமண்டலத்திலும் உன்னதமான ஸ்தானத்தில் திகழ்ந்தொளிர்ந்தது.

பூமண்டலத்தில் உள்ள ஏழு த்வீபங்களிலும் சிறப்பு உடையது ஜம்பூத்வீபமே. இந்த விசேஷமான ஜம்பூத்விபத்தின் ஒன்பது வர்ஷங்களிலும், ஹிம வர்ஷமாகிய பாரதவர்ஷமே மகத்துவம் உடையது.

ஆயிரமாயிரம் ஜன்மம் எடுத்த பிறகுதான், பெரும் பேற்றினாலேயே பாரதபூமியில் ஜனனிக்க முடியும். பாரதபூமி அத்தகைய சீர் படைத்த பூமியாகும்.

ஸமஸ்த பூமண்டலத்திலேயும் பாரதம்தான் கர்மபூமி - ஸ்வர்க்கம் என்கிற வீடுபேறு அடைவதற்கும், முக்தி எய்துவதற்கும் மார்க்கம், பாரதவர்ஷமாகிய பாரததேசம் தான்.

பாரதவர்ஷம் பார்க்கெல்லாம் திலகம். வானவரும் விழையும் பூமி இது; வீரமும் சிரத்தையும் விளைந்திடும் நிலம் இது. பாரதநாட்டிசைப் பகர்ந்திடல் இயலுமோ!

'ஜம்பூத்வீபே, பாரதவர்ஷே' என்ற மந்திரங்களின் மகத்துவம், இது கர்மபூமி, என்கிற பிரதட்சயப் பேருண்மையை மறைபோல் மொழிந்து கொண்டிருப் பவை. அத்தகைய மகோன்னதமான கர்மபூமியில், கர்மங்களை, சிரத்தையுடன் புரிவதைத் தங்கள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கடமையாகக் கொண்டிருந்தார்கள் மண்டனரும் உபயபாரதியும்,

வேத வேள்விகளும் யாகங்களும் மண்டனர் - உபய பாரதீ இல்லறத்தில் பெரும் பங்கு வகித்தன.

மாஹிஷ்மதியில் மண்டனரின் மாளிகை மாடங்களும் கூடங்களும் நிறைந்து அரண்மனை போல் காணப்படும். உபய பாரதியின் நேரடிப் பார்வையில் அங்குள்ள பொருட்கள், அவ்வவற்றிற்குரிய இடங்களில் வைக்கப்பட்டு பார்ப்பவர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொள்வதாகக் காட்சிதரும். கிரமங்கள், ஒவ்வொரு அம்சத்திலும் அனுஷ்டிக்கப் பட்டிருக்கிற நேர்த்தியை, அம்மாளிகையில் கண்டு மகிழலாம்.

வேதகாலம் தொட்டே வேள்விகளும் யாகங்களும் நிகழ்ந்து வந்திருக்கிற புண்ணிய பூமி பாரதவர்ஷம். இங்கே, வேதத்தை ரக்ஷகம் புரிந்த மன்னர்களும் மகான்களும் எத்தனையோ யாகங்களைச் செய்திருக் கிறார்கள்.

மண்டனரும் உபயபாரதியும் வேதங்கள் சாற்றும் சாரங்களின் பொழிவாகத் தங்கள் வாழ்வில் கடமைகளைக் கண்ணே போல் ஆற்றி வந்தார்கள்.

வேதகாலத்தைத் தொடர்ந்து பிற்காலத்திலும் ஸோமயாகங்கள் பல நிகழ்த்திருக்கின்றன. நான்கு வேதங்களின் மந்திரங்களும் நயம் பயப்பவை. ரிக், யஜுர், சாம, அதர்வ வேத மந்திரங்களில் ஸாம வேத மந்திரங்களின் பெரும்பகுதி ஸோம யாகத்திற்காகவே உருவானது என்று சொல்வார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸோமயாகம் பற்றிச் சொல்லும்போது ''ஸோம மும் ஸாமமும்'' ஒன்றுடன் ஒன்று இணைந்தவை என்றும் கூறுவார்கள். ஸோமயாகம், ஸாமயாகம் என்று எதுகையின் எழிலுடன் மொழிவார்கள்.

ஸோமயாகத்தில் அக்னியில் ஆரம்பித்து வருணன், யமன், ருத்ரன் என்பதாக மகாவிஷ்ணு முடிய முப்பது தேவதா மந்திரங்களின் உச்சாரணம் கம்பீரமாக இருக்கும். ஸோம யாகத்தில் 12 சஸ்திரம், 300 மந்திரம் என்பார்கள். இதில் ஸாமவேத மந்திரத்தை இருவகையில் சொல்வதுண்டு. அதாவது ஸ்தோத்ரம் - ஸ்தோமம் எனப்படும். பல முறைகள் சொல்லப்படுபவை. அதற்கு நியதிகள் உண்டு.

மாஹிஷ்மதியில் மண்டனரும் உபயபாரதியும் நாள்தோறும் ஏதாவது ஒரு வகையான வேதகர்மாவில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு மனிதகுல க்ஷேமத்திற்காக அக்னியின் ஜ்வாலையில் தங்கள் மாளிகைக்கு மட்டுமின்றி மாஹிஷ்மதி நகருக்கே புனிதத்தைச் சேர்த்துக் கொண்டிருந்தார்கள்.

தாண்ட்ய ப்ராஹ்மணம் என்பதான ஸாமவேதம் சார்ந்த நூலில் ஸோமயாகங்கள் 182 வகைகள் என்று கூறப்பட்டுள்ளன. இந்த 182 வகைகளுக்கும் அடிப்படை அமைப்பு முறைகள் விவரிக்கப்பட்டுள்ளன. அவற்றிற்கு மேற்கோளாக ஏழுவகை ஸோம யாகங்கள் என்றும் அவை அக்னிஷ்டோமம், அத்யக்னிஷ்டோமம், அப்தோர்யாமம், உக்தயம், ஷோடசி, அதிராத்ரம், வாஜபேயம் எனவும் குறிக்கப்பட்டுள்ளது.

இவற்றில் அதிராத்ரம் என்கிற ஸோமயாகத்தில் ரிக்வேத மந்திரங்கள் ஆயிரத்துக்கும் மேல் உண்டு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்பதாகக் கூறுவார்கள். அப்போதும் தொடக்கத்தில் பன்னிரு ஸாமவேத ஸ்தோத்திரங்கள் உண்டு.

மந்திர உச்சாரணங்களும், அவற்றின் கணக்குகளும், அவற்றை உச்சாரணம் பண்ணும்போது நிகழ்த்துகிற காரியங்களும் கிரமப்படி நடைபெறுதல் மிக முக்கியமான அம்சமாகும்.

வாஜபேயம் என்பது பிரஸித்தமான யாகம். ஷோடசிக்குப் பின்னர் அதிராத்ரம் என்பதற்குப் போகாமல் விஷ்ணு அம்சமான ஒரு ஸ்தோத்திர சஸ்திரத் (மந்திரகோஷம்) துடன் நிகழ்த்துவது வாஜபேயம்.

மண்டனர் மாளிகையுடன் தொடர்புடைய மாந்தருக்குக் கூட யாகங்களைப் பற்றிய தெளிவு உண்டு. வாஜம் என்றால் அன்னம் அதாவது சாதம் என்று பொருள். அத்துடன் இந்திரியபலம் என்றும் பொருள் உண்டு. 'பேயம்' என்பதற்கு அருந்துதல், பானம் செய்தல் என்றும் காத்தல் அல்லது பேணுதல் என்றும் பொருள்.

ஒரு சமயம் மண்டனரின் மாளிகையில், அவர் ஸோம யாகம் புரிவதற்கான ஏற்பாடுகள் நிகழ்ந்து கொண்டிருந்தன. அப்போது ஒரு பெரிய பண்டிதர் வாஜபேயம் பற்றிய கதை ஒன்று கூறட்டுமா என்று சகபண்டிதர்களிடம் கேட்டார்.

அருகில் இருந்தவர், ''கிருஷ்ண யஜுர் வேத ப்ராஹ்மணத்திலிருந்து தானே?'' என்றார்.

''முதல் அஷ்டகம், மூன்றாவது ப்ரசனம், இரண்டாவது அநுவாகத்திலிருந்து தானே'' இவ்வாறு மண்டனருக்கு மிக நெருக்கமான வேத பண்டிதர் ஒருவர் கேட்டார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''எல்லாம் நன்கறிந்தவர்களிடம் சொல்லவும் வேண்டுமா?'' என்று பெரிய பண்டிதர் நினைத்ததை, 'முகக்குறிப்பால் உணர்ந்த மற்ற பண்டிதர்கள், 'சொல்லுங்கள், சொல்லுங்கள், கேட்கச் சித்தமாக உள்ளோம்.'' என்று ஒரே குரலில் விண்ணப்பித்தார்கள்.

பெரியவர்கள், படித்தறிந்தவர்கள் வாயிலாக விஷயங்களைத் தெரிந்து கொள்வதில் பல நயங்களும் நன்மைகளும் உண்டு.

பெரிய பண்டிதர் கூறலானார்:

''அசுரர்கள் மிகுதியும் கொடுமை செய்ததனால் தேவர்கள் அவர்களை அடக்கியாள்வதற்கு யாது செய்து பலன் காணலாம் என்பதாக யோசித்தார்கள்.

ஒருவர் ஸோமயாகம் செய்யலாம் என்றார். இன்னொருவர் அதிராத்ரம் செய்யலாமே என்றார். மற்றொருவர் உக்தியம் என்றார்.

சற்று நேரத்தில் அனைவருடைய மனத்திலும் வாஜபேயம் செய்யலாமே என்று தோன்றியது.

உடனே எல்லா தேவர்களும் 'நான்தான் வாஜபேயம் செய்வேன்' முதலில் நானே செய்வேன் என்றும் போட்டியிட்டார்கள். யார் செய்யத் தகுந்தவர்கள் என்பதை அறிய போட்டி ஒன்று வைக்கப்பட்டது.

தேவர்கள் அலங்கரிக்கப்பட்ட ரதங்களின் மீது ஏறிக் கொண்டு வேகமாகக் சென்று ஒரு குறிப்பிட்ட இடத்தைச் சேரவேண்டும். அந்த இடத்தை ரதத்தில் செல்கிறவர் களில் யார் முதலில் அடைகிறாரோ அவரே வாஜபேயம் செய்ய உரிமை பெற்றவர் என்று முடிவு செய்யப்பட்டது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

போட்டி நிகழ்ந்ததும் தேவகுரு (பிரஹஸ்பதி) வெற்றி பெற்று முதலில் வாஜபேயம் செய்தார்.''

பெரிய பண்டிதர் இவ்வாறு கூறி முடித்தார். உடனிருந்தவர்களிடம் ''இன்றும் யாக சாலையில் அலங்காரம் செய்யப் பட்ட குதிரைகள் பூட்டிய ரதம் நிற்பதைக் காணலாம். ரதப் போட்டியின் அடையாளம் தான் அது'' என்றார்.

''யாக சாலையின் வடகிழக்கு ஓரத்தில் சக்கரவண்டி குடத்தின் மீது அச்சுடன் காட்சி தருமே'' என்று விஷயம் தெரிந்த பண்டிதர் மேலும் விபரம் சேர்த்தார்.

''எஜமானர் வண்டிச் சக்கரத்தின் மீது அமர்வார்.''

''சில மந்திரங்களைக் கூட கோஷிப்பாரல்லவா?''

''வேறு ஒருவர் அச்சக்கரத்தைச் சுழற்றி விடுவதும் உண்டே!''

''அபிஷேகம் செய்யும் வழக்கமும் உள்ள தன்றோ?''

''வாஜபேயம் நிகழ்த்தியவருக்கு வெண்குடை, பல்லக்கு, யானை இவற்றை வழங்குவதும் மன்னரின் மரபு தானே!''

இப்படியாக மண்டன மிச்ரரின் மாளிகையில் குழுமியிருந்த பண்டிதர்கள் வாஜபேயத்தைப் பற்றி அலசினார்கள்.

இத்தகைய வேத விற்பன்னர்களும் பண்டிதர்களும் நிறைந்த இடமாக மண்டனரின் மாளிகை விளங்கி வந்தது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மண்டனரே ஸோமயாகங்கள் பலமுறை நிகழ்த்தியிருக்கிறார். ஒவ்வொரு முறை ஸோமயாகம் நிகழ்த்தும் போதும் மாஹிஷ்மதி நகரத்து மாந்தர் மண்டனர்-உபயபாரதியின் பெருமையை சிலாகித்துக் கொண்டிருப்பார்கள்.

ஸோம யாகங்கள் மனிதகுல நலத்துக்காகச் செய்யப் படுபவை. மண்டனரும் உபயபாரதியும் மனிதகுல ரக்ஷகமே பெரிதென்று வாழ்பவர்கள்.

ஸோமயாகம் பார்ப்பதற்கு கண் கொள்ளாக் காட்சியாகும். ஹோம குண்டம், அதன் கீழ்த்திசையில் கொடிக் கம்பம் இருக்கும். கொடிக்கம்பத்தில் மூன்றில் நான்கு பகுதி உயரத்தில் வட்ட்வடிவு மண்டபம் போன்று அமைந்திருக்கும் ஏணி ஒன்றும் இருக்கும்.

ரதத்திலிருந்து கீழிறங்கிய எஜமானர் ஏணியின் பக்கமாக வந்து தமது பத்தினியைப் பார்த்து ''ஜாயே ஏஹி'' என்று பரிவோடு பகர்வார். ஏணிவழி உயரே சென்று சற்றே அங்கிருந்து விட்டு பின்பு கீழே வருவார்கள். - பத்தினியுடன் சேர்ந்தே நிகழும் வைபவம் இது.

இத்தருணத்தில் மந்திர கோஷங்கள் ஒலித்துக் கொண்டே இருக்கும். பிரம்மதேவனே ஸாமகானம் செய்வார். ஸாமகான ஓசையுடன் முரசுகளின் பேரொலி எழுந்து நாதம் நாற்றிசையும் பரவி ஒலிக்கும். பிறகு அபிஷேக ஆராதனைகள் நிகழும்.

ஸோமயாகங்கள் என்பவை மகத்தானவை. அந்த மகத்தான யாக வைபவத்தை மண்டனர் பலமுறை நிகழ்த்தி யுள்ளார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

செய்யும் கர்மாக்களை மிகவும் சிரத்தையுடன் செய்வதென்பது மண்டனர் - உபயபாரதீ இருவருக்கும் உள்ள பொது இயல்பு.

தத்வம் சூக்ஷ்மமான விஷயம் என்பதால் சிரத்தை அதிகமாக இருக்கவேண்டும் என்று சாஸ்திரமே சொல்கிறது.

''ச்ரத்தா வித்தோ பூத்வா ஆத்மன்யேவ ஆத்மானம் பச்யதி''

என்பதாகவும்,

''யஸ்யஸ் யாதத்தா நவிசிகித்ஸா Sஸ்தி''

என்பதாகவும் சாந்தோக்ய ஸ்ருதியும் கான்வ ஸ்ருதியும் கூறியுள்ள வாசகங்கள் மெய்ம்மை நிறைந்தவை.

சிரத்தை இருந்து விட்டால் ஐயம் சிறிதுமின்றி ஸ்வரூபம் பிரகாசிக்கும். சிரத்தையே மிகப் பெரிய செல்வம் என்பதும் ஸ்ருதி வாசகம்.

கர்மானுஷ்டானங்களை சிரத்தையுடன் செய்தல் வேண்டும். சிரத்தையையே ஒரு கர்மமாகக் கருதி கர்ம சிரத்தையுடன் யாகங்களையும் வேள்விகளையும் செய்வது இவர்கள் இயல்பு.

நல்ல சீலமும் நல்ல குணங்களும் ஹிமமித்ரர், விஷ்ணு மித்ரர் ஆகிய இரு குடும்பத்தினரின் பாரம்பரிய இயல்பாகும்.

வேத சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டுள்ள கர்மாக்களை, காரியங்களைச் சரிவர செய்தல் வேண்டும். நல்ல ஆசார அனுஷ்டானங்கள் இருக்க வேண்டும், என்று மண்டனரும் அவாவுகிற இயல்பினர். அவருக்கு வாய்த்த பத்தினி உபயபாரதியும் அவ்வாறே வளர்க்கப்பட்டு சீலங்கள் நிறைந்த இல்லத்தரசியாகத் திகழ்பவள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சீலங்கள் வேண்டும்; அந்தச் சீலங்கள் உண்டாவதற்கு அதிதி உபசாரம் செய்தல் வேண்டும்.

கர்மானுஷ்டானம்தான் சித்த மலத்தை நீக்கக் கூடியது. சித்தமலம் நீங்கினால் தான் பரமாத்மஸ்வரூபம் தம்முள்ளே தானாகவே ஜ்வலித்துப் பிரகாசிக்கும். சரீரமும் வதனமும் தேஜஸுடன் விளங்கும்.

மாஹிஷ்மதியில் இருப்பவர்கள் மண்டனரையும் உபய பாரதியையும் குறிப்பிடும் போது, அவர்கள் சொல்லும் சொல்லே அழகுதான்.

''அதோ பாருங்கள் தேஜஸ் ஒளிரும் தர்மசாஸ்திர வேதகர்மானுஷ்டானத் தம்பதிகள் வருகிறார்கள்'' என்பார்கள். அவ்வாறு கூறுவதிலே பெருமையையும் பூரிப்பையும் அடைவதை அவர்களது மலர்ந்த முகங்கள் காட்டும்.

உபயம் என்றால் அறச்சாலை என்ற பொருள் உண்டல்லவா? உபய பாரதியை மண்டனரின் அறச்சாலை என்று புகழ்வார்கள்.

பரமாத்ம ஸ்வரூபமானது உருவாக்குகிற 'தேஜஸ்' பவித்ரமானது. அந்த பவித்ரமான தேஜஸ் உடையவர்கள் எல்லையற்ற ஆனந்தத்துடன் வாழ்ந்து கொண்டிருப் பார்கள்.

தம்பதிகள் ஆனந்தமாக வாழ்ந்து, கர்மாக்களை அனுஷ்டித்து வந்தார்கள். சந்தோஷத்தையும், ஐசுவர்யங் களையும் அளிக்க வல்லதான சங்கீதமும் வேதங்களில் சிறப்பாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

யாகங்களில், விரதங்களில், விவாஹங்களில் ஸங்கீதமும் வீணாகானமும் முக்கியப் பங்கு வகிப்பவை. கலை நிகழ்ச்சியாகவே நடைபெறுவது வழக்கம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அச்வமேத யாகத்தில் வீணாகானம், பகல் இரவு இரு வேளைகளிலும் செய்கிறார்கள். மஹாவிரதம் என்பது ஒரு பெரிய யாகம். அதிலும் ஸ்தம்பல வீணா கானம் உண்டு. ஸோமயாகத்தில் வீணை, தூணவம் ஆகியவற்றின் இசை நிகழ்வுகளை இவர்கள் நிகழ்த்தி யிருக்கிறார்கள். கீதமும் வீணாகானமும் நெஞ்சில் சீலத்தை உருவாக்குபவை.

சீலமும் தேஜஸும் பொலியப் பொலியத் திகழ்கிற இருவருமே வேத சாஸ்திரங்களின் பிரகாரம் எதைச் செய்தாலும், அதைப் பூர்ணமாகவும் மனநிறைவுடனும் நியமங்களை ஒட்டியும் பரஸ்பர ஈடுபாட்டுடனும் நிகழ்துவதையே வழக்கமாகக் கொண்டிருந்தார்கள்.

அத்தகைய கருத்தொருமித்த தம்பதியர் வாழும் மாளிகையே மாஹிஷ்மதிக்கு ஒரு அணியாக விளங்கியது.

பண்டிதர்களின் வருகையாலும், வந்து விசாரங்கள் பண்ணுகிற சீரினாலும், மண்டனரின் மாளிகை ஒரு கலாசாலையாக விளங்கிற்று.

அறுபத்து நான்கு கலைகளும் பதினான்கு வித்யைகளும் அவற்றின் சாரங்களைப் பொழிந்து கொண்டிருக்கும் கலா கேந்திரமாக மண்டனர் மாளிகை காட்சியளித்தது.

பண்டிதர்களின் உலகமாகத் திகழ்ந்த மாளிகை, மண்டனரின் செல்வாக்கையும் செல்வச் செழிப்பையும் உள்ளடக்கியதாகத் திகழ்ந்தது.

சாமான்ய மாந்தர்களும் வந்து போவார்கள். மாணவ நிலையில் இருப்பவர்கள், தங்கள் ஐயங்களைக் களைந்து கொள்ள வருவார்கள். புலவர்கள் விளக்கங்கள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கோரி வருவார்கள். வேதவிற்பன்னர்கள் விசாரம் செய்யவருகை புரிவார்கள். பண்டிதர், பாமரர், வறியவர், செல்வந்தர் என சர்வ ஜனங்களும் வருகை புரியும் நல்லிடமாக மண்டனர் மாளிகை காட்சி தந்தது.

மண்டனர் வேத கர்மானுஷ்டானங்களில் ஈடுபட்டிருந்தாலும் மாளிகைக்கு வருவோரை, அன்புடன் வரவேற்று இன்முகம் காட்டி உபசரிப்பதிலும் கவனம் கொண்டிருப்பார். அதிதி உபசாரம் என்பது கிரஹஸ்தனின் கடமைகளில் ஒன்றல்லவா?

பணியாளர்கள் எத்தனையோ பேர் இருந்தாலும் பர்த்தாவின் மனமறிந்து காலக்கிரமத்துடன் காரியங்களைச் செய்வதில் உபயபாரதிக்கு நிகர் உபயபாரதிதான் என்று, அம்மாளிகைக்கு வருபவர்கள் மனம் திறந்து பாராட்டுவார்கள்.

சதி-பதிகள் இருவருமே, மாளிகைக்கு வந்தவர்களை, தனித்தனியே வரவேற்று முகம் மலர உபசாரத்திற்காக இன்றி உண்மையாகவே வரவேற்பார்கள்.

எண்ணற்ற ஏட்டுச் சுவடிகள் குவிந்து கிடக்கும் அம்மாளிகையில். குவிந்த என்றால் நிறைய என்றே பொருள். எந்தச் சுவடியை எப்போது யார் வந்து கேட்டாலும், உடனே அதனை எடுத்துக் கொடுப்பதற்கு ஏற்றவாறு, வரிசைப் படுத்தி அடுக்கியிருக்கும் அழகை வர்ணித்துக் கொண்டே இருக்கலாம்.

ஒருநாள் அங்கு விஜயம் செய்த ஓர் அரசன் 'விஸ்வஜித்' யாகம் பற்றி அறிய விரும்பினான். உடனடியாக வேள்விச் சுவடிகளின் பகுதியில் 'விஸ்வஜித்' என்று குறிப்பிட்ட இடத்தில் உள்ள சுவடிகளின் பக்கம் சென்றான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அரசர்கள், பல நாடுகளை வென்று பெற்ற செல்வங்களை தக்ஷிணையாகப் பிறருக்கு வழங்கிட விஸ்வஜித் யாகம் ஒரு அரிய சந்தர்ப்பம் என்பதையும் தோற்றுப்போன அரசர்களுக்கும் மரியாதைகள் செய்யும் நிகழ்வுகளையும் சுவடிகளைப் படித்து அறிந்து மகிழ்ந்தான். மன்னன் ரகு, விஸ்வஜித்யாகம் புரிந்த தகவலையும் அதில் கண்டறிந்தான்.

'ராஜஸூயம்' பற்றிய சுவடிகள் தனியாக அப்பகுதியில் இருந்தன.

மண்டனரின் மாளிகைக்கு ஒரு முறை விஜயம் செய்து உபய பாரதியின் அருகில் வந்து நின்றதும் உபயபாரதியின் அருள் தேஜஸின் ஆகர்ஷணம் அகந்தனில் ஊடுருவப் பெற்றதாக உணர்ந்து பல பண்டிதர்கள் மகா பாண்டித்யம் கைவரப் பெற்றதாக மொழிவார்கள்.

பாரதீ, எப்பொழுதும் மாளிகைக்கு வந்தவர்களை நெருங்கி தானாக முன்நடந்து, தாய்போல் வாத்ஸல்யப் பரிவு காட்டுவது வழக்கம்.

பொருள் வேண்டுமென மனத்தில் நினைத்து வந்தவர்கள், பாரதியைப் பார்த்ததுமே நினைத்து வந்ததை மறந்து விடுவார்கள்; பாரதியோ கருணா வாத்ஸல்யத்துடன், தம் கரங்களால் அவர்களின் அகநினைவுகளுக்கு மிக உகந்தவற்றைப் பரிசுகளாக வழங்கி, களிகொள்வாள்.

புலவர்கள் ஐயம் களைந்து, அர்த்தப் பொலிவு பெறும் விழைவுடன் வந்து பாரதீ முன் நின்றதுமே, பாரதியாகவே புலவோரின் உளமறிந்து அளவளாவி ஐயம் தீர்ப்பாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மண்டனரின் மாளிகைக்குள் காலடி வைத்து உள்ளே வந்து, பாரதியைப் பார்த்துத் திரும்பியதுமே மங்களங்களும் மன விழைவுகளும் நிறைவாகியதை, அங்கு விஜயம் செய்த அனைவரும் நிதர்சனமாகக் கண்டு பூரித்தார்கள்.

இவ்வாறாக, மண்டனரின் மாளிகை ஒரு மஹா வித்யாசர்வகலாசாலையாகவும் பொற்களஞ்சியமாகவும் காட்சியளித்தது.

பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் சிறந்தோங்கிய கல்வி கேந்திரத்தில் பணிபுரிந்தவர்களின் சந்ததியினர் வருகை புரிவதும் மண்டனர் உபயபாரதியுடன் சம்பாஷணைகளில் ஈடுபடுவதும் உண்டு. அத்தகைய சம்பாஷணைகள் நிகழ்வதைக்கண்டு களிக்கவும் உணர்ந்து தெளிவு பெறவும் பல விற்பன்னர்கள் அங்கே வந்து கூடுவார்கள்.

வேதகால குருகுல வாசக் கல்வியின் சாரத்தை ஒரு பண்டிதர் சொல்ல, குருவின் இல்லமே மாபெரும் கல்விக் கேந்திரம் என்பார் மற்றொரு பண்டிதர். 'அந்தேஸி' வாழ்வை அலசுவார் வேறு ஒருவர்.

பாரத தேசக்கல்வி வேதகாலக் கல்வி, வேத காலத்துக்குப் பிற்பட்ட காலக்கல்வி என வளர்ந்தோங்கிய வகைகளை இன்னொரு பண்டிதர் வரிசைப் படுத்தி விளக்குவார்.

ஆதியில் கல்வி என்பது பிரம்மத்தை அறிதலாகவும் நற்பண்புகளை வளர்ப்பதாகவுமே அமைந்திருந்தது. பன்னிரு ஆண்டுகால குருகுல வாசம் முடிவுற்றதும் ''ஸமவர்தன் உபதேஷ்'' என்ற விடை பெற்றுத் திரும்பும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வைபவத்தில் அறிவுறுத்தப்படும் எட்டு அறிவுரைகள் மாணவர்களின் வாழ்வைச் செம்மைப்படுத்தும்.

இவ்விதமாக சிலர் தங்கள் கருத்துக்களை மொழிவார்கள். கூடவே, புத்தர் காலக் கல்விச் சிந்தனைகளும் பேசப்படும்.

பலரும் அவரவர் எண்ணங்களையும் தெரிவிப் பார்கள். அவ்வாறு தெரிவிக்கும்போது அந்தந்தப் பண்டிதர்களின் பாரம்பரியம் நன்கு பளிச்சிடும். யார் யார் எங்கெங்கு, கல்வி கற்றவர்களின் சந்ததி வழி வந்தவர்கள் என்பது அவரவரின் பேச்சுக்களின் மூலமும், நடை முறை பாவனைகளின் மூலமும் உபய பாரதிக்கு பளிச்செனத் தெரிந்துவிடும்.

''ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தி, தம்பி பரதனுக்கு சிந்து நாட்டைக் கொடுத்து அரசாட்சி புரியச் செய்தார். பரதன் தம் மக்களாகிய தக்கன், புட்கலன் ஆகிய இருவருக்கும், இரண்டு நகரங்களை உருவாக்கித் தந்து அவற்றை ஆட்சிபுரியச் செய்தான். புட்கலாவதி என்பது ஒரு நகரின் பெயர், இன்னொரு நகரின் பெயர் தக்கசிலை. அந்த தக்கசிலையின் சான்றோர் சந்ததியில் வந்த யான் மொழிகிறேன்.'' என்று பெருமிதமான அறிமுக உரையுடன் பண்டிதர் ஒருவர் பேசலானார்.

புராதன கல்விக் கேந்திரமாகச் சிறந்து விளங்கிய ''தக்ஷசீலம்'' உபயபாரதியின் அகநயனங்களில் வந்து நின்றது. 'தக்க சிலை' என்று கேட்டதுமே உபயபாரதீ அகமலர்ச்சி பெற்றாள். சற்றே உதடுகள் விரிந்திட இருபதங்களை மனதிற்குள்ளே உச்சரித்து இதழ்கள் இணைந்து மனம் மகிழ்வதை, மண்டனர் இனம் கண்டு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தக்ஷசீலம் என்கிற தொன்மையின் சின்னமாகப் பேசலுற்ற பண்டிதரைக் கூர்ந்து நோக்கினார்.

''தக்ஷசீலம் புராதன பாரதத்தின் மாபெரும் கல்விக் கேந்திரம். அயல் நாட்டவரும் இங்குவந்து கற்றுச் சென்றுள்ளனர். காந்தார ராஜ்யத்தின் தலைநகரின் பெயரிலேயே அமைந்த சர்வகலாசாலை இது. தக்ஷசீலத்திலே தான் பரீஷித்தின் புதல்வர் ஜனமேஜய மகாராஜா 'நாகயக்ஞம்' புரிந்தார்.

பதினெட்டுத் துறைகளின் கல்வி போதிக்கப்பட்ட கேந்திரம்; கிரேக்கத்தின் கட்டிடக்கலை கூட இங்கே கற்பிக்கப் பட்டது. ஏழை செல்வந்தர் என்றோ, ஜாதி பேதமோ இல்லாமல் கல்வி வழங்கிய கேந்திரம் தக்ஷசீலம்,'' இங்கே பணிபுரிந்த, குலபதியொருவரின் வம்சவழி வந்த அப்பண்டிதர் மொழிந்தவை இவை.

வேதகால, உபநிடத கால முதல் பிரசித்த பெற்ற காசி என்கிற கங்கைக் கரைக் கல்விக் கேந்திரத்தில் பயின்றவரின் சந்ததியில் வந்தவர் பேசும்போதும் பெருமிதம் உபய பாரதியிடம் தோன்றும். காசிநகர்ப் புலவர்கள் காசினியில் உயர்ந்தவர்களன்றோ!

பேசுகிற போதே குப்தர்களின் பெருமையும் ஹர்ஷரின் பெருமையும் கலந்து உரையாற்றுபவர்களைக் கண்டு 'நாலந்தா' பல்கலைக்கழகத்துடன் உறவு கொண்டவர் வழிவந்த பண்டிதர் இவர் என்றும் நாலந்தாவின் தோற்ற காலத்தவரான ஆரிய தேவா பற்றி அவர் கூற்றை செவிமடுத்து அறிந்தும் அகமகிழ்வாள் உபயபாரதீ.

நூறு சிறப்பு ஆய்வுரைகள் நாள்தோறும் நிகழ்ந்த கல்விக் கேந்திரம் நாலந்தாப் பல்கலைக் கழகமாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கத்தியவார் பகுதியின் கிழக்குப் பக்கமாகவுள்ள 'வல்லபி' கல்விக் கேந்திரத்துடன் தொடர்புடையவர் களின் சந்ததியினரும் மகதத்திலிருந்த ''ஓதன்த் புரி'' சர்வகலாசாலையில் படித்தவர்களின் பரம்பரையினரும், ''ராஜ்கிரஹ்'' பண்டிதர் களும், மண்டனர் மாளிகையில் நடைபெறும் உரையாடல் அரங்குகளில் கலந்து கொண்டு பாரதீய ஸம்ஸ்கிருதியின் சாரத்தை மக்களிடம் பரப்புகிறவர்கள்.

ஜனக மகரிஷியின் மிதிலை மிகச் சிறந்த ஒரு கல்விக் கேந்திரம் ''மிதிலைப் பண்டிதர்களின்'' வழி வந்தவர்கள் மாஹிஷ்மதி மண்டனர் மாளிகைக்கு வருவது என்பது சகஜமான ஒரு நிகழ்வாகும்.

மகத சாம்ராஜ்யத்தில், கங்கை நதிக்கரையில், ஒரு அழகான குன்றின்மீது அமைந்த ''விக்ரம் ஷீலா'' சர்வகலா சாலை நூற்றுக்கணக்கான பேராசிரியர்களைக் கொண்டது. அந்தப் பேராசிரியர்களின் வழித் தோன்றல் களாகப் பிறந்து பண்டிதர்களானவர்களும் விக்ரம் ஷீலா சர்வகலாசாலை ஸ்தாபகரான மன்னர் தர்ம பாலா பற்றிச் சிறப்புடன் அறிந்தவர்களும் மண்டனர் மாளிகையில் உபயபாரதீ முன்னிலையில் சம்பாஷணைகள் புரிவதற் கென்றே வருவார்கள். விக்ரம்ஷீலா பண்டிதர்கள் என்றும் தங்களைச் சொல்லிக் கொள்வார்கள்.

புராதனமான நகரமும் சங்ககால செந்தமிழ் இலக்கியங்களால் 'கச்சிமூதூர்' என்றழைக்கப்பட்டது மாகிய காஞ்சி ஒரு மஹா ஷேத்திரமும் வித்யாராஜ தானியுமாகும்.

இங்கே சிறப்புடன் கடிகாஸ்தானம் என்ற ஸம்ஸ்கிருத சர்வகலாசாலை இருந்திருக்கிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தென்னிந்தியாவில் உள்ள ''காஞ்சி'' கல்வி கேந்திரங்களில் முக்கியப் பங்கு வகித்துள்ளது. கல்வி கலாசார மையமாகத் திகழ்ந்தொளிர்ந்த காஞ்சியிலிருந்து மாஹிஷ்மதிக்கு வந்து மண்டனர் உபயபாரதீ மாளிகையில் கருத்துப் பரிவர்த்தனையில் ஈடுபட்டவர்களும் உண்டு.

பண்டிதர்களின் வருகையைப் பெரிதும் ஆவலுடன் எதிர்பார்த்தும் விஜயம் புரிந்த வித்தகர்களின் மேதாவிலாசத்தை அறிந்து, அகமலர்ந்து மெச்சியும், அவர்களுடன் அமர்ந்து, அளவளாவி, மனம் நெகிழ்ந்தும் உபயபாரதீ, மண்டனர் இருவருமே பொழுதுகள் நல்லவண்ணம் செல்வதில் மகிழ்வார்கள்.

கற்றவர்களை உற்றவர்களாகக் கருதுவார்கள்.

'கல்வி என்பதே மனித குலத்தைப் பண்புடையவர்களாக உருவாக்குவது தான் என்ற சிந்தனை மலர்ச்சியை விரிவுபடுத்துவார்கள் இருவரும். கற்கக் கற்கத்தான், கற்றது சிறிது என்ற உணர்வு ஏற்படுவதை அங்கே காணலாம்.

படிப்பும் பாண்டித்யமும் பணிவுடைமையினோடு ஒன்றிப் பிணைந்திருப்பதை உபயபாரதீ - மண்டனர் மாளிகையில் ஒவ்வொரு நாளும், பொழுதுகள் தோறும் கண்டு அறிந்து களிப்படையலாம்.

தக்ஷசீலம், காசி, நாலந்தா, வல்லபி, மிதிலை, விக்ரம்ஷீலா, காஞ்சி ஆகிய பல்கலை கல்விக் கேந்திரங்களின் ஒரு மகா சங்கமஸ்தானமாக மாஹிஷ்மதி மாளிகை, திகழ்ந்து கொண்டிருந்தது.

❀ ❀ ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

16

வாத பிக்ஷைக்கு வந்த சங்கரர்

மண்டனரின் மாளிகையைப் பொதுவாக 'வேத மாளிகை' என்று மாஹிஷ்மதி மக்கள் குறிப்பிடு வார்கள். உபய பாரதியின் வருகையால் அந்த வேதமாளிகை, வேதகலா மாளிகையாகவும் சர்வகலா சாலையாகவும் பரிமளித்துக் கொண்டிருந்தது.

மாளிகையின் முன் முகப்பு வளைவு கம்பீரமாகக் காட்சி தரும். அதன் வழியே சிறிது தூரம் நடந்தால், மாளிகையின் நுழைவாயிலை அடையலாம். மாளிகையின் நாற்புறமும் உயர்ந்த மதில்களும், அந்த மதில்களில் சாளரங்கள் அமைந்தும் கம்பீரமாக அமைக்கப்பட்டிருந்தது.

மண்டனர் மாளிகைக்கு வருபவர்களை, கனிவுடன் வரவேற்க, வாயில் முகப்பிலேயே, அதற்கென ஒருவர் இருந்து, தகுந்த முறையில் வரவேற்பளிப்பார்.

வருபவர்களின் தாக சாந்திக்கு நீரும், நீர்மோரும், பானகமும் சுக்குநீரும் தனித்தனியாகப் பாத்திரங்களில் வைக்கப்பட்டிருக்கும். அமர்ந்திருந்து பானத்தைக் குடிப்பதற்கு வசதியாக, ஆஸனங்களும் அங்கே இடப்பட்டிருந்தன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விசாரம் பண்ணுகிற இடங்களில் வேத சப்த ஒலி கேட்கும். ஐயம் களைந்திடும் பகுதிகளில் மெதுவான ஒலிகளே எழும். ஏட்டுச் சுவடிகளை எடுத்துப் படிக்கும் பகுதியில், ஏடுகளைப் புரட்டும் போது எழும் ஓசை மட்டுமே கேட்கும்.

மண்டனர் மாளிகையில், மாஹிஷ்மதியில் தர்க்கத்தில் தனித்த சிறப்புடையவர்களின் வருகை மிகுந்திருக்கும். எதுகருதி வந்தார்களோ அதனைப் பெற்றவர்களாகவே அனைவரும் மாளிகையினின்று திரும்பிச் செல்வார்கள்.

அம்மாளிகைக்கு வரும்போது உள்ள மனக் களிப்பு, திரும்பும் போது பன்மடங்கு பெருகி விஷயஞானச் செறிவோடு விளங்கும்.

அந்நாட்களில், கல்வி என்பது வேத விசாரத்தை பிராதான்யமாகக் கொண்டிருந்தது.

சமயங்கள் அகச் சமயங்கள், அகப்புறச் சமயங்கள், புறச் சமயங்கள், புறப்புறச் சமயங்கள் என நால்வகைப் பட்டிருந்தன.

லோகாயதம், பௌத்தத்திலுள்ள மாத்யமிகம், யோகாசாரம், சௌத்திராந்திகம், வைபாடிகம் ஆகியவையும் ஆருக்தம் எனவும் நிலவியதை விவாதிப்பார்கள்.

மீமாம்ஸையுடன் அதன் பல உட்பிரிவுகள் மற்றும் ஏகான்மவாதம், சுத்த ப்ரம்மவாதம், மாயாவாதம், சாங்கியம், பாற்கரிய மதம், பாஞ்சரார்த்தம் என பல சமயங்களின் சாரங்கள் விசாரம் செய்யப்படும் தத்துவ தரிசன காலம் அது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அன்பு செய்து அளவளாவி அமைதியுடன் வாழ்வதற்குரிய ஒழக்கங்களை போதிக்கும் நீதி நிலையங்கள் போன்றவையே சமயங்கள். இந்திரியங் களால் அறியப்படுகிற அசேதனப் பிரபஞ்ச சொரூபத்தை யும் அனுமானப் பிரமாணங்களால் அறியக் கிடக்கும் சேதனப் பிரபஞ்சமாகிய ஜீவாத்ம சொரூபத்தையும் எல்லாம் வல்லதான பரமாத்ம சொரூபத்தையும் ஐயம் திரிபின்றி, அவரவர் தகுதிக்கேற்ப விளக்கித் தெளிவு படுத்துகிற ஞான தீபங்களான சமயங்கள் பற்றி ஆய்ந்து கண்டறிகிற வித்தகர்கள் அங்கே வருகை புரிந்து, அதன் காரணமாக, பல்வேறு நிலைப்பட்ட பயன்களைப் பெறுவார்கள்.

நித்யா, நித்ய வஸ்து விவேகத்தை விரிவு படுத்தி விளக்கி உணர்த்துகிற உபதேச கலா ரூபங்களான சமயங்களில் வல்லவர்கள் மண்டனர் மாளிகைக்கு விஜயம் செய்து தெளிவு பெற்றுச் செல்வார்கள்.

வாதத் தருக்கம் என்ற சொல், வேதமும் தர்க்கமும் நியாயமும் சாஸ்திர ரீதியில் படித்தவர்கள் புரிகிற ஞானப் போர் ஆகும்.

வாதம் புரிவதே ஒரு தனிக்கலை.

புலமை மிக்க பண்டிதர்கள் ஒருவரோடு ஒருவர் கருத்து மாறுபாடுகளை பரிவர்த்தனை செய்து கொள்கிற பாணி வசீகரம் நிறைந்ததாக அமைந்திருக்கும். தர்க்கம் என்பதே நியாயத்தின் படிகளில் நிற்பது தானே!

நியாயமான இரண்டு தன்மைகள் வெவ்வேறு திசைகளில் காட்சிப்படும் போது, வினோதமாக இருக்கும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வசீகரமும் விசித்திரமும் சேர்ந்து பண்பாட்டின் அடிப்படையில் தத்துவ தரிசனங்களாகி அது சத்திய வாதமாக விகசிக்கும். தர்க்கம், நியாயம் என்பதெல்லாம் சாஸ்திரங்களாக விஞ்ஞானம் போல் அமைந்ததே பாரத ஸம்ஸ் கிருதி. அதற்கு இணையேது, ஈடேது!

இவ்வாறான சத்தியவாதங்கள் தான் பாரத மானுடத்தை மேம்படுத்துகிற பெரும் வேள்விகளாகத் திகழும்.

இத்தகைய பீடும் பெருமையும் சீரும் சிறப்பும் பெற்ற மண்டனரை அம்மாளிகையில் காணும் ஆவலுடன் சங்கரர் ககன மார்க்கமாக விரைந்தார்.

வானத்திலிருந்து மாஹிஷ்மதி நகரின் சௌந்தர்யத் தைக் கண்ட சங்கரரின் வியப்பு எல்லை கடந்தது. நந்தவனச் சோலைகளின் நடுநாயகமாக நின்ற மாளிகைகள், மரகதக் கற்களினூடே வைரம் பதித்தது போன்று மின்னின. சங்கரர் மண்ணில் கால் பதித்தார்.

மலர்களின் சுகந்தம் மென்காற்றில் மிதந்து வந்தது. தடாகங்களில் உள்ள தாமரைகள் இதழ்விரித்து முகமலர்ந்து வரவேற்றன. நால்வகை வேதங்களின் கோஷமும் திவ்யமங்கள ஒலிகளும் நகரில் நிறைந்திருந்தன.

'பண்டித லோகமோ இது' என்று வியந்தவண்ணம் சங்கரர், அமைதியும் எழிலும் கொலுவிருந்த அற்புதமான மாஹிஷ்மதி நகரைக் கண்டு, ''இதுதான் சத்திய லோகமோ'' என்று எண்ணியவாறு பிரமித்தார்.

விசாலமான இந்த நகரில் மண்டனரின் இல்லத்தை கண்டு பிடிப்பதற்கு என்னவழி என்று சங்கரர் தம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மனத்திற்குள்ளாகவே ஆலோசனை செய்து கொண்டிருந்த பொழுது, அவ்வழியாக, ஜலம் கொண்டு செல்வதற்காக நதியின் பக்கம் குடங்களுடன் குழுவாக வந்து கொண்டிருந்த ஸ்திரீகளை அவர் பார்த்தார்.

''குத்ராலயோ மண்டன பண்டிதஸ்ய''

மண்டனர் என்று பிரசித்தி பெற்றுத் திகழும் பண்டிதருடைய வீடு எங்கே இருக்கிறது'' என்று சங்கரர் அந்த ஸ்திரீகளிடம் வழி கேட்டார்.

உலகுக்கெல்லாம் ஞானவழி காட்டுபவர், வழி கேட்கிறார்.

வழிகாட்டி வாழ்விக்க வந்த சங்கரர், வழியில் வந்தவர்களிடம் வழி கேட்கிறார்.

சங்கரரின் கம்பீரம் அந்த ஸ்திரீகளை நிறுத்தியது.

சூரியனைப் போன்ற தேஜஸுடன் தங்கள் எதிரில் வந்து நின்று வழி கேட்பவரை பயபக்தியுடன் பார்த்தவாறே அந்தப் பெண்கள் வணங்கி நின்றார்கள்.

சற்றும் தாமதிக்காமல் அந்தப் பெண்கள் சந்தோஷம் மேலிட, பதில் சொன்னார்கள்.

''மண்டனர் மாளிகையைக் கண்டுபிடிப்பது கடினமல்ல; நேராகச் செல்லுங்கள். ஒரு பெரிய மாளிகை தென்படும்'' என்றார்கள்.

''தென்படும் மாளிகைகள் எல்லாமே பெரியனவாகத் தானே இருக்கின்றன'' என்ற சங்கரரின் வார்த்தைகளுக்கு, '' இன்னுமொரு அடையாளமும் உண்டு'' என்று அவர்கள் நவின்றார்கள்.

''சொல்லுங்கள்'' என ஆவலுடன் மொழிந்தார், சங்கரர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அந்தப் பெண்கள், மஹிமை பொருந்திய யதீச்வராள் நம் நகருக்கு வந்திருக்கிறார். அவராகவே நம்மோடு பேசுகிறார். நம்முடைய 'பாக்யோதயம்' தான் என்று உள்ளமெல்லாம் சந்தோஷம் நிலவிட, பணிவுடன் அவருக்குத் தெளிவுபட வழி கூற விழைந்தார்கள்.

''ஸ்வத: – ப்ரமாணம் பரத: ப்ரமாணம்
கீராங்கனா யத்ரகிரம் கிரந்தி |
த்வாரஸ்த்த நீடாந்தர ஸந்நிருத்தா
ஜானீஹி தன்மண்டன பண்டிதெளக:'' ||

''பலப்ரதம் கர்ம பலப்ரதோऽஜ:
கீராங்கனா யத்ர கிரம் கிரந்தி |
த்வாராஸ்த்த நீடாந்தர ஸந்நிருத்தா
ஜாநீஹி தன்மண்டன பண்டிதெளக:'' ||

''ஜகத் த்ருவம் ஸ்யாத் ஜகத்த்ருவம் ஸ்யாத்
கீராங்கனா யத்ர கிரம் கிரந்தி |
த்வாரஸ்த்த நீடாந்தர ஸந்நிருத்தா
ஜாநீஹி தன்மண்டன பண்டிதெளக:'' ||

மூன்று விதமாகவும், மிக நிதானமாகவும் அப்பெண்கள் மொழிந்ததை, சங்கரர் செவியுற்றார்.

''இந்த வழியாக முன் செல்ல வேண்டும்; அங்கே மிகப் பெரிய மாளிகை இருக்கிறது; அந்த மாளிகையின் முன் அரங்கத்தில் - வாயிலில் கூண்டிலிலுள்ள பெண் கிளிகள், சாஸ்திரார்த்த விசாரங்கள் செய்து கொண்டிருக்கும். அந்த மாளிகையான வீடே மண்டனரின் வீடு'' என்பதாகக் கூறி, ''பெரியவரே, நீங்கள் அங்கே செல்லும் சமயத்தில் அந்தப் பெண்கிளிகள், ஸ்வத: பிரமாணமா அல்லது பரத: ப்ரமாணமா, வேதமே பிரமாணமா

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அல்லது வேறு ஏதேனும் பிரமாணம் உண்டா என்பதை விசாரம் பண்ணிக் கொண்டிருக்கும்.

''ஒரு வேளை, தாங்கள் போகும் அந்த நேரத்தில், பலனைக் கொடுப்பது கர்மாவா, அல்லது ஈஸ்வரனா என்றும் அந்தக் கிளிகள் வாதம் புரிந்து கொண்டி ருக்கலாம்''

''இந்த ஜகம் நித்தியமானதா அல்லது ஜகம் அநித்யமானதா அதாவது இந்த உலகம் நிலையானதா மாயை தானா என்பது பற்றியும் அந்தக் கிளிகள் வாதங்கள் புரிந்து கொண்டிருக்கலாம்.''

இவ்வாறு அந்தப் பெண்கள் விளக்கமாகக் கூறி வழி காட்டுகிற அடையாளத்திற்கு கிளிகளின் பாண்டித்யத்தை எடுத்துக் காட்டிய விதம் நயமாகப் பளிச்சிட்டது.

கிளி பச்சை வண்ணமானது. அதன் அலகு செந்நிற வண்ணமுடையது. அந்தச் செந்நிறம் கல்யாண முருங்கைப் பூவின் நிறமாகிய சிவப்பு என்று காவியங்கள் சொல்லும். பவழமும் மாணிக்கமும் போல காட்சிதரும் அலகுடைய வண்ணக்கிளி என்று மகாகவிகள் வர்ணிப்பார்கள்.

கிளியை தத்தை, பைஞ்சிறகிற் செல்வி, அஞ்சுகம், தேனார் மொழிக்கிள்ளை, சுகம், எனப் பல பெயர்களில் சொல்வது வழக்கம். மாஹிஷ்மதி, உபயபாரதீ உறைந்துள்ள மாநகரம். அந்நகரத்துப் பெண்மணிகள் பாண்டித்யமும் சமத்காரமும் உடையவர்கள். அதனாலேயே, சங்கரர் செல்லும் நேரத்தில் கிளிகளின் மொழி எவ்வாறிருக்குமோ என மூன்று விதமாகச் சொல்லி ஐயத்திற்கு இடமின்றி வழிகாட்டும் வகையில் அடையாளத்தை இயம்பினார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பண்டிதைகளான அந்த ஸ்திரிகள், தங்கள் புலமை மிகுதியால், கிளிகளுக்கும் மூன்றுவிதமாகப் பெயர்கள் சொல்லியிருக்க முடியும். ஆனால், அவர்கள் 'கீராங்கனா' என்றே மும்முறையும் சொல்லி, அடையாளம் காட்டினார்கள்.

கிளியைக் குறிப்பிட வேறுவேறு பெயர்கள் பண்டிதைகளான மாஹிஷ்மதி ஸ்திரிகளுக்கு நன்றாகவே தெரியும். ஆனாலும், வித்யாசமான பதப் பிரயோகத்தினால் அப்பெயர்கள், ஒரு வேளை, வேறு ஒரு பொருளுக்குரியதாக தொனித்து, குழப்பமாக ஆகிவிடுதல் கூடாது; குறிப்பாக வழி காட்டுகிற நிலையில், மிகத் திடமாக மொழிதல் வேண்டும் என்ற சாதுர்ய, சமத்காரப் புலமையும் அந்த ஸ்திரிகளிடம் நிறைந்திருந்தது.

கிளிகளின் வாதவிஷயத்தை நிச்சயித்துச் சொல்ல இயலாது. ஆனால் கிளிகள் என்பதை நிச்சயப்படுத்தி, கிளிகள் என்று கூறுவதே சாலப் பொருத்தம் என்று கருதி, அந்தஸ்திரிகள் அவ்வாறு சங்கரரிடம் தெளிவுபடச் சொன்னார்கள்.

இருவகையிலும் புலமை சான்ற அப்பெண்களின் வழிகாட்டுதலில் சங்கரர் உள்ளம் பூரித்தவாறே, அவர்களின் வார்த்தைகளும் வர்ணனைகளும் மிகையான தல்ல என்று எண்ணிக் கொண்டே, வழி நடந்தார்.

மாஹிஷ்மதி வேதம் தழைக்கும் வியத்தகு பூமி; இங்கே சப்தங்கள் மந்திரங்களாக ஒலித்து, கிளி மொழிகள் கூட கானமாகி, தெய்வக்களி துலங்கும் சீருடைத் திருநகரம் மாஹிஷ்மதி.

''ஸ்வத: பிரமாணம் பரத: பிரமாணம்''

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்று கிளிகள் பிரமாண வாதத்தை அலசிக் கொண்டிருந்ததை சங்கரர் செவியுற்றார். கிளிகளின் தர்க்கவாத மொழி சங்கரரை வியப்பிலாழ்த்தின.

சங்கரரின் முழு கவனமும் மண்டனர் மாளிகையின் திருவாயிலையே நோக்கியபடி இருந்தது. உள்ளே சென்று மண்டனரைக் காணவேண்டுமே.

ஆனால்...

அந்த மாளிகையின் வாயிற் கதவுகள் திறந்திருக்க வில்லை.

உட்புறமாக தாளிடப்பட்டிருந்தன. இதை அறிந்ததும், சங்கரர்,

ககனமார்க்கமாகச் சென்று மாளிகையின் உட்புற நந்தவனத்தை அடைந்தார். மலர்வனங்களைக் கடந்து மாளிகையின் உள்ளே பிரவேசித்தார்.

சங்கரரின் வருகையை மண்டனர் அறியவில்லை. சிரத்தையுடன், அவர் தமக்கு முன்னால் அமர்ந்திருக்கும் வியாசருக்கும் ஜைமினிக்கும் ''பாதசேசனம்'' (கால்கள் அலம்புதல்) செய்வதில் ஈடுபட்டிருந்தார்.

மண்டனரின் தர்மபத்தினி அவருடைய செயல் களுக்குத் துணை புரிந்தபடி அருகில் நின்றிருந்தாள்.

சங்கரர், மண்டனரைக் கண்டதும் ஒரு கணம் பிரமித்தார்.

ஆகா, பொன்முகத்தின் ஒளியும், விழிகளின் பிரகாசமும் ஞானத்தின் சிகரம் என்று கூறாமல் கூறுகிறதே! குமாரிலர் போற்றும் சீடரிடம் குறை காண முடியுமோ?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மீமாம்ஸகரான மண்டனர் சிரார்த்த காரியத்தில் ஈடுபட்டிருந்ததையும், அதற்காகவே வியாசரையும் ஜைமினியையும் தம்முடைய தவ வலிமையால் மண்டனர் இங்கு வரவழைத்திருப்பதையும் சங்கரர் கண்டு உணர்ந்தார்.

சங்கரர், வியாசரையும், ஜைமினியையும் வணங்கினார். அவர்களும் அவரை வாழ்த்துவது போல ஹஸ்த சைகை செய்தார்கள்.

யாரை நோக்கி இவ்விருவரும் இவ்விதம் கைய சைக்கிறார்கள் என்று எண்ணிய மண்டனர், திரும்பிப் பார்த்தார்.

சிரார்த்த சமயத்தில் முன்பின் அறியாத சந்யாசி, மாளிகையின் உள்ளே வந்து நின்றதைக் கண்டதும் மீமாம்ஸகரான, மண்டனரின் நெஞ்சம் கோபத்தால் கொதித்தது. தீவிழிகளால் சங்கரரை நோக்கினார்.

சிகையில்லாத யக்ஞோபவீதம் அணியாத் சந்யாசியான சங்கரரை நெருங்கி வந்தார்.

''எங்கே இருந்து வந்தது இந்த மொட்டை?'' என்றார் சற்றே கடுமையாக, தணலாகக் கொதித்து பொறியாக வந்த கேள்வி தெறித்து விழுந்தது.

''என் கழுத்திலிருந்து..!'' என்று புனலாகக் குதித்து வந்தது பதில். தலையிலே கங்கை; தண்ணென்ற சந்திரன்; வாமபாகத்தில் உமையவள். கயிலை சங்கரரின் அவதாரமல்லவா காலடிச் சங்கரர்; குளிர்ச்சியான முறுவலுடன் பேசலானார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''யக்ஞோபவீதமும் சிகையும் உங்களுக்கு ஒரு சுமையோ? அதனால் தான் அவற்றை நீக்கி விட்டீர்களா?'' என்று மண்டனர் வினவினார்.

''சம்சாரபந்தத்தைச் சுமக்கிறவர்கள் அல்லவா நீங்கள். மோக்ஷத்தை அடையும் எண்ணம் இருப்பவர்களுக்கு சிகையும் உபவீதமும் சுமைதானே என்று ஸ்ருதிகளே சொல்கின்றனவே! அது தெரியாதா உங்களுக்கு?''

''பிரம்ம நிஷ்டர்களான உங்களுக்கு மனைவியுடன் வாழ்ந்து சம்சாரத்தை நடத்துகிற யோக்யதை இல்லை. அதனால்தானே சுவடிகளைச் சுமந்து சீடர்கள் புடைசூழ, சுற்றித் திரிகின்றீர்கள்.'' என்று மண்டனர் உரைக்க;

வியாசரும் ஜைமினியும் உபயபாரதியும் இருவருடைய பாண்டித்யம் நிறைந்த உரையாடலின் கம்பீரமான சாதுர்யத்தில் மயங்கி இருந்தார்கள்.

நேரம் பனிபோல உருகிக் கரைந்தது. சூரியன் கீழ் வானிலிருந்து மேலேறி, தன்னுடைய சுடர்க் கண்களால் ஞான சாகரமான சங்கரரும் கல்விக் கடலான மண்டனரும், சொற்போர் புரிவதைக் காண வந்தான்.

வியாசர், ஒரு கட்டத்தில் அவர்களின் புலமை நிறைந்த உரையாடலை நிறுத்தி வைக்கவேண்டியது தம் கடமை என்றுணர்ந்தார். அதனை மண்டனருக்கும் உணர்த்தினார். குமாரிலர் கூறியபடி சங்கரர் வந்துள்ளதை மண்டனர் அறிந்து கொண்டார்.

''மண்டனரே! உமது இல்லம் நாடி வந்திருக்கும் இவர், பிரம்மஞானி, சிறந்த அறிஞர் உலக இன்பங்களையெல்லாம் துறந்தவர். சிரார்த்த தினமான

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இன்று மகா விஷ்ணுவாக ஏற்று வரவேற்பதுதான் உமது தகுதிக்கு அழகு.

மகாதேவனையே மஹாவிஷ்ணுவாக ஏற்பதா? ஹரியும் ஹரனும் ஒன்று என்ற தத்துவம் உணர்ந்த வரல்லவா? வியாசர். சங்கரர் நகை முகத்தோடு நின்றிருந்தார்.

வியாசர் கூறியதைக் கேட்டதும் மண்டன மிச்ரர், தமது கோபத்தை அடக்கிக் கொண்டார். முகத்திலே பணிவையும் அன்பையும் தேக்கிக் கொண்டு சங்கரரிடம் கனிவோடு பேசினார்.

''தாங்கள் அன்புடன் என் இல்லம் தேடி வந்ததற்கு மகிழ்ச்சியடைகிறேன். தாங்கள் இன்று, இங்கே பிக்ஷை ஏற்றருள வேண்டும்.'' என்று வேண்டிக் கொண்டார்.

சங்கரரின் மதி வதனத்தில் இருந்த இளநகை பெருநகையாகியது. அருள் கனியும் திருப்பார்வையால் மண்டனரை நோக்கி, ''தங்களுடைய விருப்பத்தை ஏற்க இயலாத நிலையிலுள்ளேன். நான் இங்கு வந்தது ''வாத பிக்ஷை'' ஏற்பதற்காக என்பதை நினைவூட்ட விரும்புகிறேன்.''

''வாத பிக்ஷையா?'' என்று மண்டனர் வியப்புடன் வினவினார்.

''ஆம், சம்சாரமென்ற தளையிலிருந்து மானிடப் பிறப்புக்கு விடுதலையளிக்கும் அத்வைத தத்துவத்தை உலகில் நிலை நாட்டுவதே என் நோக்கம். தங்களோடு வாதிட்டு, தங்களை வென்று என் சீடராக்கிக் கொள்வதற்காகவே இங்கு வந்தேன். வாதபிக்ஷை வேண்டுவதும் அதற்காகவே.''

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மண்டனர் சங்கரரை பெருமையுடன் நோக்கினார்.

''ஓகோ, புரிந்தது. உங்களோடு வாதம் செய்ய நான் தயங்க வில்லை. ஆதிசேஷன் தம்முடைய ஆயிரம் நாக்குகளுடன் என்னிடம் வாதிடவந்த போதும் நான் தயங்கியவனல்லன், நன்று; இப்போது வாதம் செய்ய இயலாது. சிரார்த்த தர்மத்தைச் செய்து முடிக்க வேண்டியவனாக இருக்கிறேன். நம்முடைய வாதத்தை, நாளை துவங்கலாமே'' என்று கம்பீரமாக மண்டனர் கூறிவிட்டு வியாசரையும் ஜைமினியையும் அவர்களது இசைவினைப் பெறும் விதத்தில் பார்த்தார்.

''நாளை எங்கள் இருவருக்கும் இடையில் நடக்க இருக்கும் வாதத்திற்கு நடுவராக, தாங்களும் ஜைமினியும் எழுந்தருள வேண்டும் என்று விரும்புகிறேன்'' என மண்டனர் பவ்யத்துடன் வணங்கிக் கேட்டுக் கொண்டார்.

வியாசரும் ஜைமினியும் ஒருவரையொருவர் முறுவலுடன் பார்த்துக் கொண்டார்கள். அம்முறுவல் பார்வை சில வினாடி நீடித்தது.

எது நடக்க வேண்டுமென்று ஈசன் சித்தமோ அது அல்லவா நாளை நடக்க இருக்கிறது. அவ்விதம் இருக்கையில் நடுவராக நாம் இருப்பதா என்ற எண்ணத்தை அவர்களுடைய விழிகள் எதிரொலித்தன.

பின்னர் வியாசர், மண்டனரிடம், ''அன்புக்குகந்த வரே! உங்களுக்கும் சங்கரருக்கும் நடைபெறும் வாதத்திற்கு தீர்ப்புக் கூறுவதற்கு எங்கள் இருவரையும் விட வேறு ஒருவரே தகுதி படைத்தவர்.'' என்றார்.

''வேறு ஒருவரா?'' என்ற மண்டனரின் முகத்தில் வியப்புக்குறி தோன்றியது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''ஜைமினியையும் வியாசரையும் விடத் தகுதி வாய்ந்தவரா? அத்தகைய தகுதி படைத்தவர் யாராக இருக்கும்?'' என்ற வியப்புத் தோன்ற, மண்டன மிச்ரர் அவர் களை நோக்கினார்.

''மண்டனரே! அருகில் இருப்பதன் காரணத்தா லேயே சிறப்பும் அருமையும் தெரியாமல் போய் விடுகிறது. உங்களுக்கும் சங்கரருக்கும் நாளை நடைபெற இருக்கும் வாதத்திற்கு, மத்யஸ்தராக இருக்கும் தகுதி, தங்கள் பத்தினி உபயபாரதிக்குத் தான் இருக்கின்றது.''

உபய பாரதியை அவர்கள் உயர்வாகப் பேசியதைக் கேட்டு மண்டனமிச்ரரின் உள்ளத்திற்கு உவப்பாக இருந்தது. ஆயினும், தன் எண்ணத்தைத் தெரிவிக்க வேண்டுமென்று விரும்பினார்.

''உபயபாரதியின் தகுதியைப் பற்றி நான் அறிவேன். ஆனாலும் எங்கள் இருவருடைய வாதத்திற்கு, என் மனைவி மத்யஸ்தராக இருக்கலாமா என்றொரு சந்தேகம்...''

''தங்களுக்கு யாதொரு சம்சயமும் வேண்டாம். சாக்ஷாத் ஸரஸ்வதி தேவியைப் போன்ற தங்கள் பத்தினி உபய பாரதீ மத்யஸ்தராக இருப்பதை நானும் ஏற்கிறேன்.'' தம்முடைய இசைவினை, கனிவு தோன்ற சங்கரர் கூறிவிட்டு, ''நாளை சந்திக்கலாம்,'' என்றவாறு மண்டனரின் மாளிகையிலிருந்து சென்றார்.

தர்ம சாஸ்திரங்களில் வகுக்கப்பட்டுள்ளவாறும் சுக்ல யஜுர்வேத யாக்ஞவல்கீய ஸ்மிருதியில் கூறியுள்ளவாறும் மண்டனர் கிரமமாக சிரார்த்த கர்மாக்களைக் குறைவறச் செய்தார். உபய பாரதீ உடனிருந்து சிரார்த்த காரியங்களில் ஈடுபட்டாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஜைமினியும் வியாசரும் கர்மாக்களை சிரத்தையுடன் செய்த உபயபாரதியையும் மண்டனரையும் ஆசீர்வதித்து விட்டு தேவலோகம் சென்றார்கள்.

பிண்டப்ரதானம், பிராமண போஜனம், தக்ஷிணை அளித்தல், தாம்பூலம் வழங்குதல் என எல்லாம் முடிந்து, சிரார்த்தம் நிறைவுற்றது. ஹோம குண்டங்களில் அக்னி வளர்த்து, பிதிர்களுக்கு அன்னமிட்டு, திருப்தி செய்த நிறைவுடன், உபயபாரதியும் மண்டனரும் உறவினர் களுடன் பித்ருசேஷ போஜனம் செய்தார்கள்.

மண்டரின் உள்ளம் மறுநாள் நடக்கவிருக்கும் வாதபிக்ஷை பற்றிய நினைவுகளில் மூழ்கியது.

மஞ்சள் கிரணங்களுடன் மாலைக் கதிரவன் மறைந்தான். ஸந்தியா காலம் மெதுவாக நெருங்கியது.

அந்தி மாலைப் பொழுது, ரம்மியத்தைப் படரவிட்டு இருள் கவ்வும் நேரத்திற்கு வழிவிட்டவாறு மெல்ல நகர்ந்தது.

பக்ஷி ஜாலங்கள் விருக்ஷங்களில் உள்ள கூடுகளைத் தேடிப் பறந்து சென்றன.

நீலவானில் தாரா கணங்கள் கண்சிமிட்ட, தன் வண்ணத்தில் மாறுதல்களை வானம் காட்டத் தொடங்கியது. கருநீலமாக வானம் காட்சிப் பட்டது. சந்திரன் கிரணங்களால் இருளைப் போக்கினான்.

கருவானம் இரவுப் பொழுதைத் தழுவியவாறே நகர்ந்து நகர்ந்து விடியலின் பக்கமாக வந்தது.



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

17

சங்கரர்-மண்டனர் சம்வாதம்

இரவுப் பொழுதின் அந்தமாகிய வைகறையைத் தொடர்ந்து, பகற்பொழுதின் ஆதியாகிய விடியல் வந்தது; பொழுது புலர்ந்தது. கீழ் வானில் அருணன் வந்து இருள் போக்கினான். காலைக் கதிரழகின் கோலம், நெஞ்சில் நற்சீலங்களை மலரச் செய்தது.

கருணைச் சூரியன் எழுந்தான்; கங்குல் அகன்று செங்கதிர்த் தேவன் செங்கமலப் பொற்பாதம் பதித்தாற் போல் செவ்வண்ணம் எங்கும் எழில் பரப்பிற்று.

அந்த எழிலில் என்றும் காண இயலாத புதுக் கோலம் தெரிந்தது. அப்புதுக்கோலக் கதிர்வீச்சுக்கள், ஆகர்ஷண வலிமை மிகுந்து அன்றைய உதயத்திற்கு புதிய பாஷ்யங்களை வழங்குவது போன்று அமைந்திருந்தன.

உதயபானு கீழ்வானிலே பொற்கிரணங்களைப் பரப்பிய வாறே உலகை ஒளிமயமாக்கி ''ஞான சூரியர்களின் வாதங்களைக் கேட்க வாரீர்'' என்று உறங்கிக் கொண்டிருந்தவர்களை எழுப்பினான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மாஹிஷ்மதி நகரில் பண்டிதர்களும் பேரறிஞர்களும் மீமாம்ஸகர்களும் தர்மசாஸ்திரங்களைக் கற்றுத் தேர்ந்த கல்விமான்களும் வேத விற்பன்னர்களும் வந்த வண்ணமிருந்தார்கள்.

''ஆஹா! நம் செவிகள் செய்த பாக்யம் தான் என்னே! சங்கரருக்கும் மண்டனருக்கும் இன்று துவங்கும் வாதம் எத்தனை நாட்கள் நடக்கப் போகின்றதோ?'' வேத வித்தாக இருந்த முதியவர் ஒருவர் கேட்டார்.

''பூரணரே! வாதம் எத்தனை நாட்களுக்குத் தொடர்ந்தால் என்ன? அத்தனை நாளும் நம் அறிவுக்கு விருந்து தானே!'' என்று இளம் பண்டிதர் பதிலிறுத்தார்.

மண்டனரின் மாளிகையை நோக்கி அறிஞர்கள் சென்ற காட்சியானது சர்வகலாசாலை நோக்கி மாணவர்கள் அணிவகுத்துச் செல்வது போல இருந்தது.

மாஹிஷ்மதி நகரின் எல்லையில் ஒரு ஈஸ்வரன் கோவில்; அங்கே சீடர்களுடன் சங்கரர்; இளம் காலையிலே எழுந்தார்கள். தடாகத்திலே நீராடினார்கள். சங்கரர் தூய ஆடைகள் புனைந்து நெற்றியிலே நீறணிந்து தண்டமேந்தி கைலை வாசனைப் போலக் காட்சியளித்தார்.

சீடர்கள் புடைசூழ மண்டனரின் மாளிகை நோக்கி நடந்தார். அத்வைதத்தை நிலை நாட்ட வருகின்ற ஆத்ம ஞானியின் பாதம் பட்ட இடமெல்லாம் பூமாதேவி சிலிர்த்தாள்; பெருமிதம் அடைந்தாள்.

வழியில் எதிர்ப்பட்ட சோலை மலரெல்லாம் பூத்துக் குலுங்கி மலர்முகம் காட்டின.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மண்டனருடைய மாளிகையின் விஸ்தாரமான கூடத்திலே மேடை அமைத்து அதில் அழகிய மூன்று உயர்ந்த ஆஸனங்கள் இடப்பட்டிருந்தன. பண்டிதர்களும் பேரறிவாளர்களும் அங்கே நடைபெறும் வேத விசாரத்திலே திளைக்கும் ஆவலுடன் காத்திருந்தார்கள்.

நடுநாயகமான ஆஸனத்தில்உபயபாரதீ வந்து அமர்ந்தாள். சங்கரரும் மண்டன மிச்ரரும் ஒருவரை யொருவர் வணங்கிவிட்டு உபய பாரதியின் இருபுறமும் இருந்த ஆஸனங்களில் அமர்ந்தார்கள்.

சாஸ்திர நிபுணர்களின் முகங்களெல்லாம் கதிரவனைக் கண்ட கமலம் போல் மலர்ந்தன.

''உபய பாரதியைப் பாருங்கள். ஆஹா அவளது முகத்திலே அறிவின் தீக்ஷண்யம், ஜொலிக்கிறது!''

''சாந்தம் ஒரு வடிவெடுத்தால் இப்படித்தான் இருக்கும் போலும்; அவளது தெய்வீகத் திருவுருவத்தைக் காண்பதா, இவர்களுடைய வாதத்தை கவனிப்பதா என்றே எனக்குப் புரியவில்லை.''

பண்டிதர்கள் இந்தத் திரிவேணி சங்கமத்திலே திளைத்து மகிழ்ந்தார்கள்.

சங்கரரே முதலில் வாதத்தைத் துவக்கினார்.

கேட்பவரைப் பரவசப்படுத்தும் கணீரென்ற தொனியிலே பேசலானார்.

''முடிவான உண்மை எதுவெனில் அது பிரும்மமே! உலகின் எல்லாத் தோற்றங்களும் பிரும்மத்தின் மாய பிம்பங்களே, இந்தப் பேருண்மையை ஜீவன் அறிந்து கொள்ள வேண்டும். உலக மாயையைக் களைதல் வேண்டும். அதுவே மோக்ஷ ஸாதனமாகும். வேதங்களின்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மணிமகுடமான உபநிஷத்துக்கள் இதையே குறிப்பிடுகின்றன. இந்தத் தத்துவத்தை வலியுறுத்தவே நான் இங்கே வந்துள்ளேன். இந்த வாதத்தில் நான் தோற்றுப் போவேனாகில் நான் காஷாயத்தை விடுத்து வெள்ளாடை தரிப்பேன். உபயபாரதீ மத்யஸ்தராக இருந்து வெற்றி தோல்வியை நிர்ணயிக்கட்டும்.''

சங்கரரைத் தொடர்ந்து, மண்டனரும் தம் கருத்தை உரைக்கலானார். சதுர் மறைகளைப் போல் அவர் உரையானது இனிய சங்கீதமாக அமைந்தது.

''உருவும் நிறமுமற்ற தூய, நிலைத்த ஒரு வஸ்துவை வேதத்தின் மூலமோ உபநிஷத்துக்களின் மூலமோ நிரூபிக்க இயலுமா? ஒருவர் செய்யும் கர்ம வினைகளே அவரை மோக்ஷ ஸாம்ராஜ்யத்துக்கு அழைத்துச் செல்கின்றது. இதுவே எனது பூர்வ மீமாம்ஸக மதம். இந்தக் கருத்தை நான் வலியுறுத்தி, அத்வைத மதத்தை எதிர்த்து வாதிடப் போகிறேன். என் முயற்சியில் தவறினால் நான் கிரஹஸ்தாச்ரமத்தை விட்டு சந்யாஸி ஆவேன்''

இவ்வாறு அவர்கள் மொழிந்த பின்னர், தத்தம் வாதங்களை எடுத்துரைக்கத் தயாரானார்கள்.

அச்சமயத்தில் உபயபாரதீ, இரு புஷ்ப ஹாரங்களை எடுத்து இருவரிடமும் தந்து அதனை அவர்கள் அணிந்து கொள்ளுமாறு பணித்தாள்.

''நீங்கள் அணிந்து கொள்ளும் மாலை, வாதம் முடிவடையும் தருணத்திலும் வாடாமல் இருக்க வேண்டும். யாருடைய மாலை வாடிய நிலையை அடைகிறதோ அவர்கள் வாதில் தோற்றவராவார்.'' என்று உபயபாரதீ சபை அறியும் வண்ணம் உரைத்தாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சபையோர், உபயபாரதியின் மொழிகளை ஆமோதித்தார்கள்.

மண்டனரின் மாளிகைக்கு மேலே, வானத்தில் தேவர்கள் எல்லோரும் கூடியிருந்தார்கள். வாயு பகவான் கூடச் சலன மின்றி இருந்தார்.

சபையில் நிசப்தம்.

எல்லோருடைய சிந்தையும் மண்டனருக்கும் சங்கரருக்கும் இடையில் நடைபெற இருக்கும் வாதத்தை எதிர் நோக்கியபடி இருந்தது.

வாதம் தொடங்கியது.

மண்டனர்: பரமாத்மாவுக்கும் ஜீவாத்மாவுக்கும் வேறுபாடற்ற தன்மையை நிரூபிக்கும் உண்மையான ஆதாரம் எது?

சங்கரர்: தத்வமஸி, அயமாத்மா பிரும்மா, பிரக்ஞானம் பிரும்மா, அஹம் பிரும்மாஸ்மி'' என்ற நான்கு மஹா வாக்கியங்களால் நிரூபணமாகின்றது.

மண்டனர்: இந்த நான்கு மஹா வாக்கியங்களுக்கும் விசேஷ அர்த்தம் இருப்பதாகத் தெரியவில்லையே! இவற்றை ஜபம் செய்வதால் பாவங்கள் போகும் என்பதைத் தவிர இவை நிரூபணமாகாது. உபநிஷத்துக்கள் என்பவை வேதத்தை ஒட்டி எழுதப் பட்டவை தானே! யாகம் முதலிய கர்மாக்களில் ஆத்மாவுக்குத் தொடர்பு இருக்கிறது என்கிறேன். அந்த ஆத்மாவும் கர்மாவுக்கு அங்கம்.

சங்கரர்: வேதத்தில் கர்ம காண்டத்தில் காணப்படும் கருத்துக்களைக் கொண்டு ஞான காண்டத்திற்கு அர்த்தம் சொல்வது தவறல்லவா?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புன்னகை மாறாமல் வாதிட்ட சங்கரரைக் கண்டு சபை வியப்பு மாறாமல் நோக்கியது.

மண்டனரின் முகப்பிரகாசமும் குன்றவில்லை. அவரும் மலர்ச்சியுடனே சங்கரருக்கு பதில் அளித்தார்.

''தத்வமஸி'' என்ற மஹா வாக்யத்தின் தாத்பர்யத்தைக் குறித்து இருவருக்கும் கருத்து வேறுபாடு தோன்றியது.

வாதம் வளர்ந்து கொண்டே சென்றது.

வார்த்தைகள் என்ற தேரில் ஏறி, கருத்துக்கள் ஊர்வலம் வந்தன. கேட்போர் மெய்மறந்து அமர்ந் திருந்தார்கள்.

''பிரும்மமாக ஜீவனை உபாஸிக்க வேண்டும்..''

''மனத்தை பிரும்மமாக உபாஸனை செய்ய வேண்டும்'' அதுவே 'தத்வமஸி' என்ற மஹாவாக்யத்தின் தாத்பர்யம்'' என்ற மண்டனரின் கருத்தை சங்கரரின் வாதம் தகர்க்க முயன்றது.

சங்கரர்: ''உபாஸீத'' - என்ற பதம் இருந்தால் தாங்கள் கூறும் கருத்தை ஏற்க முடியும். ஆனால் 'தத்வமஸி' என்ற மஹா வாக்யத்தில் ''உபாஸீத'' என்ற பதம் இல்லை. எல்லாம் உணர்ந்த தங்களுக்கு நான் கூறவேண்டியதில்லை. ஆயினும் வாதம் என்று வந்த பின்பு, வாதிட வேண்டிய கடமை எனக்கு இருக்கிறது அல்லவா; அஸி'' என்ற பதம் மட்டுமே உள்ளது.

மண்டனர்: எல்லாம் உணர்ந்தவர் என்று என்னைப் பாராட்டினீர்கள். ஆனால் தாங்கள் ஒன்றை உணர வேண்டும். ''உபாஸீத'' என்ற பதம் 'தத்வமஸி'யில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இல்லாதிருக்கலாம். விதியைக் கூறும் சொல் இல்லாவிட்டால் என்ன? விதியின் பயனான முக்தியைக் கூறுகிறதே! அது போதுமே. பயன் கூறப்படுவதால், விதியைக் கற்பித்துக் கூறுவது நியாயமானது தான் என்பதே என் வாதம்.

சங்கரர்: உங்களுடைய வாதத்தின் வழியாகவே நாமும் செல்வோம்; ஒரு விஷயத்தை இங்கே தெளிவுபடுத்த வேண்டும். 'முக்தி' என்பது செயலால் உண்டாவதாகக் கூறுகிறீர்கள். உபாஸனை என்பதும் மனத்தின் செயலாகிறது. மனத்தின் செயலான முக்தியும் அழியும் தன்மையுடையன. அதனால் நித்யசுகம் பெறப்படுவதில்லை.

சங்கரரின் சமத்காரமான வாதத்தைச் செவியுற்ற உபய பாரதீ, மென்னகை புரிந்தாள். நியாயவாதங்கள் நெகிழ்ச்சியூட்டின.

சாஸ்திரங்களில் தேர்ந்த விற்பன்னர்கள் நிறைந்த சபை 'ஆஹாஹாரம் செய்து, மகிழ்ச்சியையும் வியப்பையும் வெளிப்படுத்தியது.

மண்டனர் வாதத்தின் போக்கை மாற்ற நினைத்தார்.

மண்டனர்: 'தத்வமஸி' என்ற மஹாவாக்யம் ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் ஒப்புமை கூறுவதாகக் கொள்ளலாமே!

சங்கரர்: ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் எந்த விதத்தில் ஒப்புமை? சைதன்யத் தன்மையிலா? 'அருள் ஒளி'யாக மிளிர்வதிலா. அல்லது ஸர்வஜ்ஞத்வம் (எல்லாமறிந்த ஒன்றாக) ஸர்வாத்மத்வம் (எல்லா

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆத்மாவும் ஒன்றாக) என்ற குணங்களிலா? எதில் ஒப்புமை உள்ளது?

மேலும் சங்கரர் தொடர்ந்தார்: ''சேதனத் தன்மையில் ஒப்புமை உள்ளதை எல்லோருமே அறிந்திருப்பார்கள். அதற்கு சாஸ்திரம் தேவையில்லை. இது புதிய உபதேசமுமில்லை. எல்லோரும் அறிந்த ஒன்றை சாஸ்திரம் சொல்லாது. ஸர்வஞத்வம், ஸர்வாத்மத்வம் என்று பொருள் கொள்வதை மீமாம்ஸவாதிகள் ஒப்புக் கொள்ள மறுப்பார்கள். ஆக, ஒப்புமை கூறுவதற்காகச் சொல்லப்பட்ட இரண்டுமே சரியன்று.''

சபை கரகோஷம் செய்து சங்கரரின் வாதத்தை வரவேற்றது. மண்டனர், சங்கரருக்கு பதிலளிக்கத் தயாரானார்.

மண்டனர்: அறியப்படுகின்ற அறிவும், உணரப் பெறுகின்ற, அனுபவிக்கப்படுகின்ற ஆனந்தமும் ஜீவாத்மாவுக்கும் உரிய குணங்கள். ஆனால் ஜீவாத்மாவை அவித்யை மறைக்கிறது. இது ஒன்றே வேறுபாடாகும். தத்வமஸி என்ற வாக்யத்தின் தாத்பர்யம் இருவருக்கும் நித்யத்வம் சமம் என்பதே ஆகும்.

வாதம் தொடர்ந்து நடைபெற்றது. மண்டனரின் கருத்தை மறுத்து சங்கரரும், சங்கரரின் கருத்தை மறுத்து மண்டனரும் வாதம் செய்ய... சகல சாஸ்திரமும் கற்ற மகாப் பண்டிதர்கள், இருவரையும் உற்சாகப்படுத்தி கரகோஷம் செய்த வண்ணமிருந்தார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''வாக்குவன்மை மிகுந்த மண்டனரின் வாதத்தைக் கேட்கும்போது; ஆஹா இதுதான் உண்மை என்று தோன்றுகிறது.''

''அதை மறுத்து, சங்கரர் கூறும் கருத்தைக் கேட்டால் இதுதான் உண்மை என்று நம்பத் தோன்றுகிறதே, அதற்கென்ன சொல்கிறீர்?''

''என்ன சொல்வது. நாம் கற்க வேண்டியது இன்னும் நிறைய உள்ளது என்பது தான் என் எண்ணம்.''

விற்பன்னர்களே, வியந்தவாறு அமர்ந்திருந் தார்கள்.

மண்டனர், அனுமானப் பிரமாணத்தின் வழி தன்னுடைய கருத்தை வலியுறுத்தலானார்.

மண்டனர்: ஞானமற்ற குடம், வஸ்திரம் இவை வேறுபட்டது போல ஸர்வஞனான பரமாத்மாவும் ஸர்வஞனல்லாத ஜீவாத்மாவும் வேறுபட்டதே. இவ்வாறிருக்க அபேத வாதம் தவறில்லையா?

சங்கரர்: நீங்கள் சொல்லும் பேதம் உண்மையா? கற்பனையா? உண்மை என்றால், காரணத்தைக் காட்டிலும் காரியம் வேறல்ல. பிரம்மம் காரணம், இந்த பிரபஞ்சம் காரியம். ஆகையால் உண்மையான வேற்றுமை கிடையாது.

குமாரில பட்டரால் போற்றப்பட்டு, ''மண்டனர்'' என்று உலகோரால் புகழப்பெற்ற மண்டனமிச்ரரின் வாதத்திறமையை சங்கரர் உள்ளார்ந்த களிப்புடன் கவனித்தார். ஞான விளக்காகத் திகழும் அவருடைய வாக்கின் வன்மை, சங்கரருக்கு உவகையைத் தந்தது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆத்மஞானம் ஏற்படுவதால் பேதபுத்தி நீங்குவதாக சங்கரர் எடுத்துரைத்தார். ஞானத்தால் பேத புத்தி நீங்குவதில்லை என்று மண்டனர் உறுதிபடச் சொன்னார்.

திருஷ்டாந்தத்தால் சொல்வது தவறு என்பதை வேதத்தில் நம்பிக்கை உள்ளவர்கள் ஒப்புக் கொள்வார்கள் என்று சங்கரர் மொழிந்ததும் மண்டனமிச்ரர் தமது வாதத்தை வேதப்ரமாணத்தை வைத்துத் தொடர்ந்தார். பிரத்யக்ஷம், அனுமானம் என்ற இரு பிரமாணங்களையும் கொண்டு தம்முடைய வாதத்தை ஸ்தாபிக்க முடியாது என்ற நிலை ஏற்பட்டது.

''த்வா ஸுபர்ணா'' என்ற உபநிஷத் வாக்யத்தின் தாத்பர்யத்தை எடுத்துக் கூறி விளக்க முயன்றார்.

மண்டனர் அடுக்கடுக்காகக் கூறிக் கொண்டே வந்த விளக்கங்களை சங்கரர் ஊன்றி கவனித்தார். மண்டனரின் திருவாயிலிருந்து மலர்ந்த வார்த்தைகள் ஒவ்வொன்றும் கருத்துக் கருவூலப் பொக்கிஷங்களாக ஜொலித்தன. அவற்றின் அழகிலும் செறிவிலும் ஆழ்ந்து, அதற்கு பதில் கூற முனைந்தார், சங்கரர்.

ஞானமென்ற அம்புறாத்தூணியிலிருந்து வார்த்தை களாகிய அஸ்திரங்களைத் தொடுத்து இருவரும் வாதம் புரிந்தார்கள்.

வாதம் துவங்கி ஒருசில நாட்கள் செல்லச் செல்ல விஷயங்களின் கூர்மையும் நுண்மையும் ஆழமும் அதிகரித்த வண்ணம் இருந்தன.

அவர்கள் இருவரின் உரையாடல்களில் வித்தையும் விநயமும் வெளிப்பட்டன. அதிஅற்புதமான

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நாவன்மையுடன் சங்கரரும் மண்டனரும் வாதமிட்டு சபையோரை, மெய் சிலிர்க்கச் செய்தார்கள்.

பேராச்சர்யம் ததும்ப, பண்டிதர்களும், ஏன் வானவரும் அறிவார்ந்த ஞானக் கருவூலங்களைக் கேட்டு ரசித்து அமுத பானம் உண்டவர்களைப் போன்ற ஆனந்தப் பரவச நிலையெய்தினார்கள்.

அரணிக் கட்டைகள் ஒன்றோடொன்று உரசிக் கொள்ளும்போது, தீப்பொறிகள் கிளம்புவதைப் போன்று சங்கரரும் மண்டனரும் வாதிடும்போது ஞானப் பொறிகள் கிளம்பின. ஞானப் பொறிகளின் ஒளியிலே பண்டிதர்கள் அறிவு விளக்கம் பெற்றார்கள்.

இருவரும் மெய்ப்பாட்டுடன் புரிந்த, வாதத்தின் போக்கும் நோக்கும், ஒவ்வொரு கட்டத்திலும் தத்துவ சிகரங்களாக மிளிர்ந்தன; அவையாவும் சாஸ்திர ரத்னங்களாக ஒளிர்ந்தன.

''மனம் ஒரு இந்திரியம்; மனத்திற்கும் ஆத்மாவிற்கும் தொடர்பு உண்டு. ஆனால் ஆத்மாவுக்கு இந்திரிய சம்பந்தம் உண்டு'' என்று மண்டனர் உறுதியான குரலில் இயம்பினார்.

''உருவமுள்ள ஒன்றைத்தான் உருவமுள்ள மற்றொன்றுடன் தொடர்புபடுத்த முடியும். ஆத்மா என்பது விபு. அதுவே ஞானத்திற்கும் காரணமாகிறது. பேத ஞானம் இந்திரியங்களால் ஏற்படுவதில்லை'' என்று தொடங்கி அடுக்கடுக்கான பிரமாணங்களுடன் சங்கரர் தம் கருத்துக்களுக்கு வலிவும் பொலிவும் தந்தார். இதயப்பூர்வமாக அமைந்து இருந்தது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கூர்த்த நுண்ணறிவு நிறைந்த இருவரின் வாதங்களிலோ பிரயோகித்த வார்த்தைகளிலோ உஷ்ணமில்லை. சுட்டெரிக்காத சூரியர்களாக, இனிய தென்றலாக, வாதம் செய்து குளிரருவியாகப் பொழிந்தார்கள். வீர்யமான கருத்துக்கள், விவேகமான தடத்தில் விசாரங்களின் ஊர்வலமாக அமைந்தன.

சாஸ்திர பண்டிதர்களின் வியப்புக்கும் எல்லையே இல்லாமல் போயிற்று.

''தத்துவக் கருப்பொருளை எவ்வளவு நேர்த்தியாக சங்கரர் சொல்கிறார்'' என்றார் ஒருவர்.

''அடுக்கடுக்காக மலர்களைத் தொடுத்து மாலை யாக்குவது போல என்ன நேர்த்தி? என்ன நேர்த்தி!''

''ஞான மலையிலே ஞான சாகரம் மோதுவது போலத் தோன்ற வில்லையா?''

''இரண்டு மஹாநதிகள் வீச்சுடன் பாய்ந்து மோதிக் கலக்கும் சங்கமஸ்தானம் போல் இருக்கிறதன்றோ?''

சங்கரரின் ஞானக்கருவூலமான, அள்ளக் குறையாத வற்றாத நிதியத்தைக் கண்டு மண்டனர், அவருடன் வாதம் புரிவதிலே பூரிப்படைந்தார். மகிழ்ச்சியும் நெகிழ்ச்சியும் மலர்ந்தொன்றின.

உபயபாரதீ மத்யஸ்தராக இருப்பினும் மண்டனரின் தர்மபத்தினியுமாக இருப்பவளல்லவா? குடும்பத் தலைவருக்கு போஜனமும் சந்யாசிகளுக்கு பிக்ஷையும் தயாராக இருப்பதாக அறிவிக்கிறாள்.

ஆனால் வாதம் என்ற சாகரத்திலே மூழ்கி முத்துக்களைத் தேடுவதில் ஈடுபட்டிருந்த சங்கரரும் மண்டனரும் கருமமே கண்ணாக இருந்தார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தொடர்ந்து பதினேழு வாட்கள் வாதம் நடைபெற்றது.

''இரும்புக் கம்பி தானாகச் சுடுவதில்லை. நெருப்பின் சம்பந்தம் ஏற்பட்ட காரணத்தினாலே தான்சுடுகின்றது. ஆனாலும் நாம் ''இரும்புக் கம்பி சுடுகிறது'' என்று தானே சொல்கிறோம். அதுபோலத் தான் ஜடமான புத்தி கர்மபயனை அனுபவிக்கிறது.'' என்கிறோம்.

இப்படி பல்வேறு உத்திகளால் சங்கரர் மண்டனரை வாதத்தில் வென்றார்.

''மற்ற பிரமாணங்களால் வேதத்திற்கு பலம் வராது. வேதத்திற்கு மாறாக இருப்பதால் இதர பிரமாணங்கள் பலமற்றுப் போய்விடும்.''

என்று அழுத்தமாகத் தம் கருத்தை வெளிப்படுத்தி சபையோரின் ஏகோபித்த புகழ்ச்சியை சங்கரர் பெற்றார். அனைவருடைய அங்கீகாரமான 'ஆஹா''ஹாரம் எழுந்தது.

வாதம் முடிவடையும் தறுவாயில்...

மண்டனர் தாம் அணிந்திருந்த புஷ்ப ஹாரத்தைப் பார்த்தார்.

''ஹா! மண்டனரின் ஹாரம் சோபையிழந்து வர்ணமிழந்து வாடிவிட்டதே!'' என்று வாதத்தைக் காண வந்திருந்த வேத பண்டிதர்கள் சுட்டிக் காட்டினார்கள்.

ஆம். சங்கரரின் வாதத்தின் முன் மண்டனரின் வாதம் எதிர் நிற்கமுடியாத நிலை ஏற்பட்டது. அவருடைய கழுத்தில் அணிந்திருந்த பூமாலையே அதற்கு சாட்சி கூறியது போலத் தோன்றியது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மாலையிலிருந்த புஷ்பங்கள், அவற்றின் ஜீவரஸத்தை இழந்திருந்தன.

உபயபாரதீ தன்னுடைய பீடத்தினின்றும் எழுந்தாள்.

வீணைக் குரலிலே சங்கீதமாகப் பேசலானாள்.

''அனைவரும் வியந்து போற்றிட இருவருக்கும், இடையிலே எழுந்த வாதத்திலே, அத்வைதமே வென்றது. மண்டனர் தாம் முன்பே வாக்களித்த வண்ணம் சந்யாச ஆச்ரமத்தை ஆச்ரயிக்க வேண்டும்.''

இந்த மங்கலச் சொற்களைக் கேட்டு விண்ணவரும் மண்ணவரும் புளகாங்கிதமடைந்தார்கள்.

உபய பாரதியின் தீர்ப்புக்கு வானவர்கள் புஷ்பமாரி பொழிந்து ஆசீர்வதித்தார்கள்.

சபையில் நிறைந்திருந்த வித்தகர்களும் வேத பண்டிதர்களும் சந்தோஷம் மிகுந்து, சங்கரருக்கு ஜெயகோஷம் செய்து முழக்கமிட்டது வானுலகை எட்டியது.

மாஹிஷ்மதி நகரில், வெற்றி வாழ்த்துக்களே எங்கும் எதிரொலித்தன.

இருவரையும் ''பிக்ஷைக்கு வாருங்கள்'' என்று அழைத்தாள். அந்த அழைப்பின் உட்பொருள், மண்டனரும் சந்யாசியாகி விட்டார் என்பதைச் சூசகமாக உணர்த்திற்று.

வாக்தேவியின் நாவன்மையும், இடமறிந்து சொல்லும் திறனும், நான்முகன் அறிந்ததுதானே! இளநகையோடு மண்டனர், சங்கரருடன் பிக்ஷைக்குச் சென்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அத்தருணத்தில் உபயபாரதீ, சங்கரர் முன்வந்து வணங்கினாள். வெண்பட்டு உடையில் ஸரஸ்வதி தேவி போன்று காட்சியளித்த அவளைக் கண்டு சங்கரர் கருணை மயமாக நின்றார். மண்டனருக்குப் புரிந்தும் புரியாத நிலை.

''கயிலை நாதனே! சங்கரராக வந்து என்முன் காட்சியளிக்கின்றீர்; சங்கர தரிசனத்தைப் பெற்றதும் துர்வாஸரால் நான் பெற்ற சாபம் நீங்கி விட்டது என்றறிகிறேன். இனி நான் வானுலகு செல்லும் காலம் வந்து விட்டது. நான் வருகிறேன்.''

பலமுறை நமஸ்கரித்து நமஸ்கரித்து, சங்கர தரிசனத்தால் பரவசமடைந்த ஸரஸ்வதிதேவி - உபயபாரதீ - மாளிகையினின்றும் செல்வதற்கு ஆயத்தமானாள்.

சங்கரர், ஒருகணம் சிந்தனையிலாழ்ந்தார். தாம் இளம் பாலகனாக இருந்த பருவத்தில் பிராமண ஸ்திரீயின் தரித்திரத்தைப் போக்க லக்ஷ்மி தேவியைத் துதித்ததை நினைத்துப் பார்த்தார். லக்ஷ்மிதேவி, கனகதாரையாக வர்ஷித்துக் குடிசையை பொன் மாளிகையாக்க வில்லையா?

சக்தியின் உபாசகரான தம்முடைய வாக்குக்கு, தேவி ஸரஸ்வதியும் கட்டுப்படுவாளா?

பூவுலகு வந்த தேவி பூவுலகிலேயே வாசம் புரிந்து, உலக மக்கள் உய்ய, ஞானத்தை அளிக்கும் வித்யா ரூபிணி இங்கே அல்லவா நித்யவாசம் செய்யவேண்டும்.

திடமான ஒரு முடிவுடன் சங்கரர், வனதுர்க்காஸ் தோத்திரத்தை உச்சாரணம் செய்தார். தேவி ஸரஸ்வதி,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சங்கரரின் ஞானசக்தியால் ஆகர்ஷிக்கப்பட்டவளாக, சங்கர தரிசனத்திலே மெய்விதிர்த்து நின்று விட்டாள்.

''தேவி! நீ சதுர்முக பிரம்மாவின் பத்தினி; சிவபெருமானின் சோதரி. உன்னை, யான் இந்த ஜென்மம் எடுத்தது முதலே உபாஸிக்கிறேன். நான் அனுமதிக்கும் போது நீ வானுலகம் செல்லலாகாதா? என்று கனிவுடன் தேவியைப் பணிந்து வேண்டினார்.

போற்றுவோரின் வாக்குக்குக் கட்டுப்பட்டு நிற்பவள் தேவிஸரஸ்வதி. சங்கரரின் அன்புக் கட்டளைக்கும் அடிபணிந்தாள். வானுலகு செல்லும் எண்ணத்தை விடுத்தாள்.

மண்டனர், சங்கரரை குருவாக ஏற்று சந்யாச ஆஸ்ரமம் ஏற்க முன்வந்தார். உபயபாரதீ அவரைத் தடுத்தாள். வெற்றி வாகை சூடிய சங்கரருடன் திருவிளையாடல் புரிய தேவி திருவுள்ளம் கொண்டனள். மெல்லிய புன்னகைக் கீற்று அவளது இதழ்களில் மலர்ந்தது.

''உபய பாரதீ! நான் அணிந்த புஷ்பஹாரம் வாடிவிட்டது. பண்டிதர்கள் சங்கரருக்கு ஜெயகோஷம் போட, நீயும் தீர்ப்பு வழங்கினாய்! உன் தீர்ப்பை வானுலகத்தேவர்களே பூமாரி பொழிந்து ஏற்றுக் கொண்டார்களே! இப்போது ஏன் தடுக்கிறாய்?

''ஸ்வாமி. பதியும் பத்தினியுமாக நாம் இருந்தபோது, என்னை உங்கள் மறுபாதி என்று கூறுவீர்களல்லவா?''

...ஆமாம், அதற்கென்ன?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''அவ்வாறு நோக்கினால் சங்கரர் பெற்றது ஒரு பாதி வெற்றி தானே. என்னையும் வாதில் வென்றால் அல்லவோ அவர் முழுவெற்றி பெற்றவராவார்?''

தேவி ஸரஸ்வதியின் அவதாரமான உபயபாரதீ சமத்காரமுடன் பதியிடம் மொழிந்ததைக் கேட்டு, சங்கரர் சிந்தனையில் ஆழ்ந்தார்.

''ஒரு பெண்ணோடு வாதிடுவதா?''

சங்கரர் சிந்தனையில் பல எண்ண அலைகள் படர்ந்தன.

அவர் முன்பாக வந்து, தன் உள்ளத்தில் உதித்த ஒரு எண்ணத்தைக் கூறலானாள், உபயபாரதீ.



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

18

உபயபாரதியின் வாதம்

உபயபாரதீ உள்ளத்தில் இளமைக்கால நினைவு ஒன்று தோன்றியது. ''இளம் பிராயத்தில் ஒருநாள் தாயுடன் இருந்த போது யோக தண்டம் ஏந்திய ஒரு துறவி எங்கள் இல்லத்திற்கு வந்தார். இப்போது நிகழ்ந்தவை எல்லாம் என் வாழ்வில் நிகழும் என்று அவர் அன்றே கூறினார்'' இந்த விபரத்தைத் தெரிவித்த உபய பாரதீ, ''என் கணவரை நீங்கள் வென்றிருந்தாலும் என்னையும் வாதத்தில் வென்றால் தான் தாங்கள் முழு வெற்றி பெற்றவராவீர்.'' என்று மொழிந்ததைக் கேட்டு சங்கரர் சற்று திகைத்தார்.

''தர்க்கமா? உங்களோடு நான் தர்க்கம் செய்ய வேண்டு மென்றா விரும்புகிறீர்கள்? தேவீ! தாங்கள் ஒரு ஸ்திரீ. ஸ்திரீகளுடன் வாதம் செய்வது.... அழகல்ல.....''

சங்கரர், தம்முடைய கருத்தை, தீர்க்கமாக எடுத்துரைத்தார்.

காம்பீர்யத்துடன் உபயபாரதீ சங்கரரை ஏறிட்டு நோக்கினாள்.

''உங்களோடு யாரேனும் வாதம் புரிய வந்தால் அவர் ஆணா பெண்ணா என்று வேறுபடுத்திப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பார்ப்பீர்களா? நியாய மில்லையே அதில்! வாதம் செய்ய வந்தால் அவர் யாராயினும் சரி வெல்வது ஒன்றே லட்சியமாக இருக்க வேண்டும். ஆண் என்ன, பெண் என்ன! இவைகள் தாங்கள் அறிந்தவை தானே; எல்லாம் தெரிந்துமா இவ்விதம் பேசுகிறீர்கள்?

உபயபாரதீ நகைப்பினூடே கூறினாள்.

''இருப்பினும் சந்யாசி.... ஒரு ஸ்திரீயுடன் வாதிடுவதா?'' என்று தயக்கத்துடன் தம் கருத்தை வலியுறுத்தினார். சங்கரரின் குரலில் அழுத்தம் தோய்ந்திருந்தது.

''இஃதொன்றும் புதிதல்லவே! முன்னொரு காலத்தில் மஹரிஷி யாக்ஞ வல்கீயருடன் கார்க்கி தர்க்கம் செய்ததை மறந்து விட்டீர்களா? இல்லை ராஜரிஷியான ஜனகர், சுலபாவுடன் வாதிட்டதைத் தான் மறுக்க முடியுமா? ஸ்திரீகளுடன் வாதம் செய்ததால் இந்த முனி சிரேஷ்டர்களின் புகழ் சிறிதளவு கூடக் குறைந்து போய் விடவில்லையே!''

உபயபாரதீ, தொடர்ந்து மேற்கோள்களைக் காட்டிப் பேசியதும் சங்கரர் மென் நகை புரிந்தார். ஞானச்செறிவான மொழிகளைக் கேட்கும் போதெல்லாம் ஆதிசங்கரரின் மதிவதனம் புஷ்பம் போல மலர்ந்து விடும்.

''ஞானத்தில் பெண் என்றும் ஆண் என்றும் பேதங்கள் இல்லை தேவீ! நான் தங்களுடன் வாதம் புரிய இசைகிறேன்'' என்றார் முடிவாக.

விற்பன்னர்களும் பண்டிதர்களும் குதூகலத்தில் ஆழ்ந்தார்கள். ''மீண்டும் ஒரு முறை தத்துவ அமிழ்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தத்தைப் பருகி அனுபவிக்கலாம்,'' என்று மகிழ்ந்து அந்நகர மாந்தர் மகிழ்வோடு மண்டனரின் மாளிகையிலே கூடினார்கள்.

மாளிகை விழாக்கோலம் பூண்டது. விசாலமான கூடத்தின் மையத்தில் இரு உயரிய ஆஸனங்கள் இடப்பட்டிருந்தன. அவற்றில் உபய பாரதியும் சங்கரரும் வந்தமர்ந்தார்கள்.

திரளான மாந்தர்கள் குழுமியிருந்த போதிலும் அங்கே நிசப்தம் அரசோச்சியது. அனைவருடைய விழிகளிலும் ஆர்வப் பெருக்குப் பரவியிருந்தது.

உபயபாரதியையும் சங்கரரையும் மாறி மாறிப் பார்த்து மக்கள் பரவசமெய்தினார்கள்.

ஞானமழை வர்ஷிக்கப் போவதை, சிந்தையில் ஆயிரம் ஆனந்தக் கனவுகளுடன் அனைவரும் எதிர்பார்த்திருந்தார்கள்.

உபயபாரதீ வாதத்தைத் துவக்கினாள்.

தெளிந்த நீரோட்டமான சொற்களைத் தொடுத்தாள். கருத்துக்கள் சொற்கள் என்னும் தேரேறி அலங்கார பவனி வரத் துவங்கின.

ஞானமே ஓர் உருவான பாரதீ, திறன் மிகுந்த வினாக்களைத் தொடுக்க;

ஞானஸ்வரூபியான தக்ஷிணாமூர்த்தியான சங்கரர் நயம் மிகுந்த விடைகளைப் பகர்ந்திட;

வேதங்கள், அதன் சாரங்கள் அவற்றிற்கு விளக்கங்கள், விளக்கங்களுக்கு விரிவுரைகள் விரிவுரையில் மறுப்புக்கள் மறுப்புக்களுக்கு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சமாதானங்கள், வகையோடு அவற்றை வரிசைப்படுத்திய வனப்புகள்;

ஆதிசேஷனின் மதி நுட்பம்; பிரஹஸ்பதியின் ஆழ்ந்த புலமை; இவற்றைத் தோற்கடிக்கும் வண்ணம் உபய பாரதிக்கும் சங்கரருக்கும் இடையே நடந்த வாத விவாதங்கள் அமைந்தன; கேட்பவர்களையெல்லாம் பிணைத்தன; கேளாதவர்களைக் கேட்கத் தூண்டின; கருத்துக்கள் காவிய நடம் புரிந்தன.

இரண்டு நெருப்பு முனைகள் ஒன்றையொன்று மோதும் போது தீப்பொறிகள் பறப்பது போல, ஆன்ம ஜ்வாலைகள் கனன்று ஞான ஜோதியின் பிரகாசம் ஜாஜ்வல்யமாக ஒளிர்ந்தது.

நித்யகர்மானுஷ்டானங்களுக்காக இடையில் சிறு பொழுது சென்றது போக மற்ற பொழுதெல்லாம் வாதம், வாதம், வாதம் தான். பதினேழு தினங்களைத் தொடர்ந்த வாதத்தின் போது உபய பாரதீ ஒருகணம் யோசித்தாள்.

சங்கரருடன் வாதிடும் நேரத்தில் எத்தனை எத்தனை ஞான விதைகள் தோன்றி விருக்ஷமாகி, செறிவான விஷயங்களை உலகுக்கு அளிக்கின்றன என்ற சந்தோஷ நினைவலைகள் உபயபாரதியின் மனத்திற்குள் ஆர்ப்பரித்தன.

தேசயாத்திரை புரிந்து பல பண்டித சிரோமணிகளுடன் கலந்துரையாடியும் கருத்து மாற்றம் கொண்டவர்களுடன் வாதம் புரிந்து வெற்றிக் கொடி நாட்டியும் தத்துவதரிசனங்களை பிரஜைகளுக்கு வழங்கி வருகின்ற ஒரு மஹானுடன் தொடர்ந்து வாதம் புரிவதை நினைக்க நினைக்க, அவளுடைய உள்ளம் ஒரு நிலைப் படாமல் இருந்தது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்றாலும், சங்கரருடன் வாதிட்டு வெல்வதற்கான புதிய உத்திகளின் திசை நோக்கி உபயபாரதியின் சித்தம் பயணம் செய்தது.

வாதம் நீடித்த வண்ணம் இருந்தது. நீண்ட வாதங்கள் தொடர்ந்தாலும், உசிதமானதொரு வினாவுடன் வாதத்தைத் தொடுத்து அந்தக் கட்டத்தில் விடை வருவதற்கு தடை ஏற்படுமானால் வெற்றிக்கு அந்நிலையே வழிகோலும் என்ற நோக்கில் உபய பாரதியின் சிந்தனை படர்ந்தது.

சிந்தித்ததை, உடனே செயல்படுத்துவது சிறப்பானது தானா, என்று பன்முறை யோசித்த பிறகு தான் உபயபாரதீ தீர்மானித்தாள்.

''ஞானத்தை உலகுக்குத் தருகின்ற தக்ஷிணா மூர்த்தியாக, குருவாக விளங்குபவர் சங்கரர். அவரை வாதிட்டு வெல்வதென்பதோ இயலாத செயல். ஆயினும் இவர் அறியாத ஒன்று உள்ளது. பாலப் பருவத்திலேயே சந்யாச ஆச்ரமத்தை மேற்கொண்ட இவருக்கு குஸுமாஸ்த்ர சாஸ்திரம் பற்றித் தெரிந்திருக்க நியாயமில்லை. அந்த சாஸ்திரத்திலே சில வினாக்களைத் தொடுத்தால் என்ன?'' என்று மனத்திற்குள்ளாகவே எண்ணினாள்.

குஸுமாஸ்த்ர சாஸ்திரத்திலிருந்து சில கேள்வி களைக் கேட்டு அவற்றிற்கு விளக்கம் தருமாறு வேண்டினாள்.

சகல சாஸ்திரங்களிலும் கரை கண்டவரான சங்கரரும் இக்கேள்விகளுக்கு பதில் கூறாமல், ஒரு மாத கால அவகாசம் தருமாறு உபய பாரதியிடம் கேட்டார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உபயபாரதியும் சங்கரரின் வேண்டுகோளை ஏற்று ஒரு மாத கால அவகாசம் அளித்தாள்.

சங்கரர் வாதமண்டபத்தினின்று எழுந்தார்.

கூடியிருந்த மஹாஜனங்களும் வேத வித்தகர்களும், நிபுணர்களும் சங்கரர் உபயபாரதியின் வினாவுக்கு எவ்விதம் விடை பகரப் போகிறார் என்ற ஐயத்துடன் சபையிலிருந்து எழுந்து சென்றார்கள்.

மாஹிஷ்மதியிலிருந்து கிளம்பிய சங்கரர் தமது யோக சக்தியால் காசி மன்னன் அமருகனின் உயிரற்ற உடலில் புகுந்தார். அம்மன்னனின் உடலில் ஒரு மாத காலம் இருந்த பின்பு மீண்டும் சங்கரராக மாஹிஷ்மதிக்கு வந்து சேர்ந்தார்.

சங்கரர் மாஹிஷ்மதிக்கு வந்த செய்தி ஊரெங்கும் பரவியது. பிரஜைகளும், பல சமயப் பெரியோர்களும் வேத சாஸ்திரப் பண்டிதர்களும் மண்டனமிச்ரரின் மாளிகைக்கு வந்து, வாதத்தைக் கேட்கும் ஆவல் மீதூர அமர்ந்தார்கள்.

சங்கரர் வருவதைக் கண்டதும் மண்டன மிச்ரர் எழுந்து வந்து வாசலில் வரவேற்றார். ''ஸ்வாகதம்'' கூறினார். பற்றற்ற துறவியாகி விட்ட மண்டனர், சங்கரரை குருவாக ஏற்று, அவர் முன்பு பணிவும் பக்தியும் மிகுந்து, அவரது ஆணைகளை ஏற்க சிரத்தையோடு காத்திருந்தார்.

''வருக, வருக, வந்து அரியாசனத்தில் அமர்ந்து எங்களை கௌரவிக்க வேண்டும்'' கை கூப்பி வரவேற்றார். உபயபாரதியும் சங்கரருக்கு முகமன் கூறி வரவேற்பு நல்கினாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அங்கே குழுமியிருந்த மஹா ஜனங்கள் மிக்க எதிர்பார்ப்புடன் சங்கரரை நோக்கினார்கள். உபய பாரதியின் கேள்விக்கு சங்கரர் என்ன பதில் கூறப் போகிறார் என்ற எதிர்பார்ப்பு அனைவரிடமும் அளவுக்கதிகமாகவே இருந்தது.

ஆனால் நடந்ததோ வேறு விதமாக அல்லவா இருந்தது?

ஞான மூர்த்தியாக, பூமாதேவியைப் புனிதப் படுத்திய வண்ணம் சங்கரர் நடந்து வந்ததும் உபயபாரதீ அவரை நமஸ்கரித்தாள்.

''அகில உலகிற்கும் மூலமாகிற தெய்வம் தாங்களே! திரிபுரங்களை எரித்த மகேசனும் தாங்கள் தான். தாங்கள் அறியாதது ஒன்றுமில்லை. நான் அன்று தங்களிடம் வினாவைத் தொடுத்த உடனேயே அந்த வினாவுக்கான விடையைத் தங்களால் கூறியிருக்க முடியும். ஆயினும், உலக மக்களுக்கு தர்ம நியாயங்களை எடுத்துக் காட்டவும் நியதியைப் பின்பற்றவுமே, தாங்கள் அவகாசம் கேட்டீர்கள். தாங்களே வாதில் வென்றீர்கள். நீங்கள் என்னை வென்று விட்டதில் எனக்குப் பெருமிதம் தான்.

பிரகாசமான, பானுவின் கதிர்கள் ஒளிவீசும் பொழுது தாரா கணங்களும் தண்ணிலவும் ஒளிர முடியுமோ?

நான் தங்களின் திவ்யதரிசனம் பெற்று உய்ந்தேன். இனி நான் சத்தியலோகமாகிய பிரம்மலோகம் செல்ல எனக்கு அனுமதி அளிக்க வேண்டும்.''

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இதுவரை உபயபாரதியாக இருந்தவள். இப்போது ஸரஸ்வதி தேவியாக வீற்றிருந்தாள்.

சபை மகிழ்ச்சியில் பொங்கியது. மண்டனர், உபய பாரதியை பெருமிதத்துடன் நோக்கினார். பூரிப்பின் எல்லையில் நின்றார்.

ஞானஸ்வரூபிணியாக பிரம்மஸ்வரூபிணியாகக் காட்சி தந்த தேவியை, சங்கரர் ஸ்தோத்தரித்தார்.

''தேவீ! ஸுத்தப் பிரும்மமாக விளங்கும் தாயே! தாங்கள் பிரம்மலோகம் செல்லலாம். ஆனால் ஒரு வேண்டுகோள்.... அதை நிறைவேற்ற வேண்டும்.''

சதகோடிச் சூரியர்கள் சங்கமிக்கும் ஒளி மண்டலமாகப் பிரகாசிக்கும் அவரை நோக்கி,

''சங்கரரே! எதுவாயினும் கூறுங்கள். என் சக்திக்குட் பட்டதைச் செய்கின்றேன்.'' தேவி ஸரஸ்வதி, சங்கர தரிசனம் பெற்ற அகமகிழ்வுடன் மொழிந்தாள் மலர்ச்சியுடன்.

பகவத்பாதர், ஞானமென்னும் மஹாநதி. அவரது முக கமலத்திலிருந்து பிரவாஹிக்கும் வார்த்தைகள் அமுதத்தின் பொழிவாகும்.

யோகசக்தியால், சங்கரர் தேவி சரஸ்வதியைப் பார்த்து வேண்டினார்:

''தஸ்மா தஸ்மத்கல்பிதே தேஷ்
வர்ச்யமானா
ஸ்தானேஷூ த்வம் சாரதாக்யா
திஷந்தி|
இஷ்டானர்த்தானுஷ்ய
ச்ருங்கா தி கேஷூ
க்ஷேத்ரே ஷாஸவ் ப்ராப்த
ஸத்ஸன்னிதானா||''

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''சக்தியாக - ஞான சக்தியாக ரிஷ்ய சிருங்காவில்-சிருங்ககிரியில் தேவி ப்ரத்யக்ஷ தெய்வமாக விளங்க வேண்டும். என்னால் பிரதிஷ்டை செய்யப்படுகின்ற தெய்வ சாந்நித்யங்களில் தேவி ஆவாஹனமாக வேண்டும். பக்தர்களுக்கெல்லாம் வித்தையும் செல்வமும் அள்ளி அருள வரம் தர வேண்டும். இதுவே எமது வேண்டுகோள்'' என்றார்.

சங்கரர் தமது உள்ளக் கிடக்கையைக் காணிக்கை ஆக்கினார். இதைக் கேட்டு அன்னை ஸரஸ்வதி தேவி, ''அங்ஙனமே ஆகுக'' என்று கருணைமொழி நல்கி, அருள் பாலித்தாள்.

பிரஸன்ன வதனத்துடன் சங்கரரிடம், ''தாங்கள் சிருங்ககிரி வரும் காலத்தில் தங்களைத் தொடர்ந்து நானும் வருகிறேன்'' என வாக்களித்து, தேவி ஸரஸ்வதி அருட் பாலனம் புரிந்தாள்.

மாளிகையில் சூழ்ந்திருந்தவரெல்லாம் தேவியின் தரிசனத்திலும் சங்கரரின் திவ்ய ரூபத்தைக் கண்டும் அளவற்ற ஆனந்தம் அடைந்தவர்களாகி அங்கிருந்து செல்ல மனமின்றிச் சென்றார்கள்.

உபயபாரதீ, அந்தர் தியானமானாள். மாளிகை வாசம், இல்லறவாழ்வு, செல்வம், சுகம் அனைத்தையும் துறந்த மண்டனர், சங்கரரின் சீடரானார்.

சங்கரர் முறைப்படி செய்ய வேண்டியவற்றைச் செய்து மண்டனரை சந்யாச ஆஸ்ரமத்துக்கு உரியவராக்கி, ''சுரேஸ்வரர்'' என்ற தீக்ஷாநாமம் வழங்கினார். வேத ஸாரமான மஹா வாக்யத்தை சங்கரர் அவருக்கு, உபதேசித்தார். சங்கரரின் நிழல்போலத் தொடர்ந்து, சுரேஸ்வரர் பாடங்களைக் கற்றார்.



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

19

சிருங்ககிரியில் ஸ்ரீ சாரதாம்பாள்

சங்கரர் திக் விஜயம் தொடர்ந்தது. சுரேஸ்வரர், பத்மபாதர் உடன்வர, கோகர்ண க்ஷேத்திரத்தை அடைந்தார். பிரம்மா, விஷ்ணுவினால் வணங்கப்பட்ட மஹேஸ்வரரை தரிசனம் செய்தார். சக்தியும் சிவனும் ஏகரூபமான அர்த்த நாரீஸ்வரரை தரிசித்து தோத்திரம் செய்தார்.

கோகர்ணத்தை அடுத்து மூகாம்பிகை க்ஷேத்திரம் வந்தார். கொல்லூரில் சௌபர்ணிகா நதிக் கரையில் ஸ்ரீ மூகாம்பிகையை தரிசனம் செய்தார். அங்கே அமர்ந்து தவம் செய்தார்.

அருகிலிருந்த ஸ்ரீ பலிபுரத்தில் (ஷிவள்ளி) பிரபாகரர் என்பவரின் புத்தி ஹீனனான பிள்ளையைப் பார்த்தார். அவன், அவரை நமஸ்கரித்ததும் சங்கரர் கராவலம்பம் செய்ய புத்திஹீனனான அச்சிறுவன் அத்வைத தத்துவங்களைப் பொழியலானான். அந்தப் பிள்ளையே ஹஸ்தாமலகர் ஆனார்.

பின்பு பத்மபாதர், சுரேஸ்வரர், ஹஸ்தாமலகர் முதலான சீடர்களுடன் சங்கர பகவத் பாதர் யாத்திரையைத் தொடர்ந்தார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மலைசார்ந்த ஒரு பிரதேசத்திற்கு அவர்கள் வந்தார்கள்.

''ஆசார்ய! இதென்ன, ரம்மியமாகக் காட்சியளிக்கும் இந்த ஸ்தலத்தை நெருங்கும் போதே மனத்தில் பேரானந்தம் தோன்றுகிறதே'' என்று பத்மபாதர் வினவினார். சுரேஸ்வரரின் கண்கள் மலையும் மலை சார்ந்த எழில் பிரதேசமுமாக விளங்கும் சிருங்ககிரியைக் கண்டு களித்தன.

ஞாலத்தில் மலையழகும் நதியழகும்
நிலைகொண்ட நித்தியமாக் காட்சிகளன்றோ|
சீலத்தை நிறைக்கின்ற எழில் யாவும்
சிந்தைதனில் சிலிர்ப்பூட்டும் சிருங்ககிரியோ||

என்றார் சுரேஸ்வரர்.

''இது பளிங்கா இல்லை ஸ்படிகமா? தூய்மையாகப் பாய்ந்தோடும் இந்த நதி தீரத்தைப் பாருங்களேன்.'' ஆவல் ததும்ப ஹஸ்தாமலகர் கூறினார்.

துங்காநதியின் தூய பிரவாஹம், அவரை அவ்விதம் ஆகர்ஷித்தது.

''மேற்கு மலைத் தொடரின் மீது
பண்டு தொட்டு நின்றிலங்கும்
கங்கை மூலம் எனும் நாமமுடை
உற்பத்தி ஸ்தானமதில்
துங்காநதி ஸ்படிகமாய்த் தவழ்ந்து
ஓம்காரச் சுருதியோடு
மோனமிகு இடத்தில் பாய்ந்து
துங்கை நீரில் காணும் தெளிவு
பண்டைக் காலம் பிறந்ததாகும்
கங்கை மூலம் என்பதாலே.''

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பண்டையப் பெருமை படைத்த துங்காநதி தீரம் வந்து சேர்ந்ததுமே சங்கரரும் அவருடைய சிஷ்யர்களும் இந்தத் தவபூமியை தரிசனம் செய்கிற புத்துணர்வில் காலடி மேல் காலடி வைத்து நடந்து வந்தார்கள்.

இந்தத் தவபூமியில் நடக்கும் போதே வேதச் சிந்தனைகள் அவர்கள் உள்ளத்தில் படர்ந்தன. வேதத்திலிருந்து உத்தாரணம் பண்ணப்பட்ட மஹாமந்திரங்கள் பற்றி புராணங்கள் தெரிவிக்கின்றன.

கங்கை நதி தீரத்தில் சதுர்புஜ நாராயணர் வால்மீகி மஹரிஷிக்கும், பத்ரிகாஸ்ரமத்தில் பிரம்மா, ப்ருகு மஹரிஷிக்கும், ப்ருகு மஹரிஷி புஷ்கர தீர்த்தத்தில் சுக்ராச் சாரியாருக்கும், சிவபெருமான் கணாத முனிவருக்கும், சூரிய பகவான் யாக்ஞவல்கீயருக்கும் காத்யாயன மஹரிஷிக்கும், பாற்கடலின் கரையில் ஜரத்காரு மஹரிஷி தம் புத்திரர் ஆஸ்தீகருக்கும், பிலி சக்கரவர்த்தியின் சபையின் பாதாளத்தில் ஆதிசேஷன் பாணினி மஹரிஷிக்கும், சாகடாயனருக்கும், 'ஸரஸ்வதி மஹா மந்திரத்தை' உபதேசித்ததாகச் சொல்லப் படுகிறது.

அதே போன்று, விபாண்டக மஹரிஷி, தம் புத்திரரான ரிஷ்ய சிருங்கருக்கு உபதேசித்த இடமாகிய மேருகிரியான சிருங்ககிரி தெய்வீக சாந்நித்யம் நிறைந்த இடமாகும்.

சிருங்ககிரி மலைகளில் ஏறியும் இறங்கியும் சில காத தூரம் சென்று, கீழே இறங்கினால் காடு போன்று காட்சியளிக்கும். மலைத் தொடர்களின் கீழ் ஒரு கா (காடு) இருக்கிற அந்த இடத்தில் ரிஷ்யசிருங்கர் தவம் புரிந்து வந்தார். அந்த கீழ்க்கா (இன்று கிக்கா என்று

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அழைக்கப்படுகிறது) அமைதி நிறைந்து ரம்மியமாகக் காட்சியளித்தது.

துங்காநதியின் கிளைநதியாகப் பாய்ந்தோடும் நந்தினிநதி, ஜாபாலி முனிவரால் பூவுலகில் பிறந்தாள். இந்திரன் ஜாபாலி முனிவர் மற்றும் முனிபுங்கவர்களின் யாக வேள்விகளுக்காக, காமதேனுவின் மகளான நந்தினியை அளித்தார். அந்த நந்தினியை ஜாபாலி முனிவர் மலை முகட்டிலும் பள்ளத்தாக்குகளிலும் பாய்ந்தோடச் செய்தார்.

பரவசமூட்டும் இயற்கைவனப்பு நிறைந்த பிரதேசமாக்கியபடி நந்தினி பாயும் பகுதியில் சங்கரர் நடந்து வந்துகொண்டிருந்தார்.

புராண வரலாற்றுடன் சரித்திர நினைவுகளையும் எழுப்பிக் கொண்டே நந்தினிநதி மேட்டிலும் பள்ளத்திலும் நர்த்தன மிட்டபடியே பாய்ந்தோடிக் கவின்மிகு காட்சியைத் தந்து கொண்டிருந்தது.

இங்கே சாந்தார மன்னர்கள் செம்மையுற ஆட்சி புரிந்திருக்கிறார்கள். அலுப அரசன் குணசேகரன், அவனுடைய மகன் சித்ரவாகனன் முதலானவர்களின் ஆட்சித் தடம் பதிந்த பிரதேசம் இது. இறையுணர்வும் தர்ம ஈடுபாடும் மிகுந்த மன்னர்கள் ஆண்ட நிலமாகத் திகழ்ந்த மலைநாடு இது.

பழம்சுவடிகளின் நினவுகளுடன் சங்கரர் தம் கால் சுவடுகள் பதித்தபடியே வந்து கொண்டிருந்தார்.

"விபாண்டகப் பெருமுனியாம்
தவமுனியின் திருமகனார்
மழைபொழிய வகைசெய்து
ரோமபாதர்தம் திருநாட்டை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

செழிப்பாக்கி வளம் சேர்த்த
பெருவள்ளல் தவவேந்தர்;
ஸ்ரீராமர் ஜனனத்திற்கு
தசரதர் புரிந்த யாகந்தன்னை
முன்னின்று நிகழ்த்திட்ட
ரிஷ்யசிருங்கர் தவம்புரிந்த
துங்கைநதிக்கரை இதுவே''

என்ற எண்ண அலைகள் சங்கரரின் ஹ்ருதயத்தில் வட்டமிட்டுக் கொண்டே இருந்தன.

''நிறைநிலைத் தவமே பூரணமாம்
பூரணத்தில் ஜோதிமயப் பொறி தோன்றி
லிங்கமொடு ஒன்றாகி
சிங்கேஸ்வரத் திருஉருவாய்
கீழ்க்காவில் ஆலயம் கொண்ட
திரேதாயுகப் பெருமுனியின்
தவநிலமாம் சிருங்ககிரி''

அத்தகைய சிருங்ககிரி பூமியில், காலடிச் சங்கரரின் மனம், மோனத்தவம் புரியும் நிலைக்கு உகந்த இடம் வந்து விட்டோம் என்ற நிறைவை எய்தியது.

எல்லோருக்கும் பதில் கூறுவது போல சங்கரர் உரைக்கலானார்:

''இந்த க்ஷேத்திரம் மகிமை வாய்ந்தது. மகான்கள் உறைகின்ற புண்ணிய பூமி. விபாண்டக முனிவரும் அவரது புதல்வர் ஆத்மானுபூதி பெற்ற மஹானாகிய ரிஷ்ய சிருங்கர் தவம் செய்த புனித க்ஷேத்திரம். நீங்கள் பார்க்கும், இந்த நதி துங்கையாவாள். இதன் நீரை ஸ்பரிசித்தாலே மனம், வாக்கு, காயம் யாவும் பரிஸுத்தமடையும்.''

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சங்கரர் இவ்வாறு மொழிந்ததுமே, சுரேஸ்வரர், பத்மபாதர், ஹஸ்தாமலகர் மூன்று சீடர்களின் மனமும் துங்கா நதியின் பிரவாஹத்திலும் அந்த ஸ்படிகமான நீருடைய துங்கா நதி பயணமாகும் சீர்த்தியிலுமே ஒன்றிவிட்டது. அவர்கள் மனக்கண் முன்னே,

''துங்கா நதியின் பயணம்
வடகிழக்காய் ஓடிப் பாய்ந்து
மங்காப்புகழைத் தங்கிடச் செய்தே
துங்காதேவி உத்தரவாஹினியாய்
சிருங்ககிரி வழியில் நடக்கும்
ரிஷ்ய சிருங்கர் கதையைக் கூறும்
மந்திர கீதம் செவியில் ஊறும்
மரகதச் சூழல் மனத்தை ஈர்க்கும்
சலசல என்னும் நதியின் சப்தம்
தவத்தை நாடும் தத்துவம் பாடும்
தவமாம் நதி நடமாய் ஆடும்
குருவின் தெளிவை ஸ்படிகம் காட்டும்
குவலய அன்பை அகத்தில் ஊட்டும்
சங்கரர் வடிவை நெஞ்சில் நாட்டும்''

என்பதாகக் காட்சிகள் தோன்றி, சீடர்களின் எண்ணமெல்லாம் துங்காநதியில் நீராடுவது போல் இருந்தது. துங்கா நதி தீரத்தில் ஆத்மானந்தம் அருட்பிரகாச வெள்ளமாகியது.

சிருங்ககிரி தவபூமியில் சங்கரரின் காலடியை ஒற்றி நடந்து செல்லும் சீடர்களின் செவிகளில்,

''காற்றலைகள் மேலெழுந்து மேலெழுந்து
கான் முகட்டில் உராய்ந்து உராய்ந்து
நாற்றிசையும் வட்டமிட்டு வட்டமிட்டு
நல்லிசையாய் தேவகானம் கேட்டதங்கு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அந்த தேவகானத்தைச் செவியாரக் கேட்டுக் கொண்டே வந்த அவர்கள் பார்வையில், துங்காநதியே முன்னால் வந்து காட்சி தந்து கொண்டிருந்தது.

"புனிதப் புனலாய் அங்கே பாயும்
மலையில், குகையைக் குடைந்தே பாயும்
மேற்கே திரும்பிப் பாயும்
கிழக்கில் ஓடிப் பாயும்
பச்சிம வாஹினி ப்ரவாஹமாயப் பாயும்
காடுகளின் ஊடே வேகமாய் ஓடும்
மூங்கில் புதர்களைத் தழுவிச் சாடும்
மலையிலும் நிலத்திலும் பாங்குடன் ஓடி
மலர்களை அணைத்து மணமுடன் ஓடி
கூடலி தன்னில் பத்ராவுடனே கூடி
குலவி ஒன்றாய்த் தானே சேரும்
நதியின் பெருமை பதியில் முழங்கும்"

இவ்வாறான காட்சிகள் அவர்களின் மனத்தில் ரம்மியத்தை ஏற்படுத்திற்று. துங்கபத்ரா நதியின் பெருமை சிருங்ககிரிப் பதியில் தங்கள் குரு சங்கரரால் வேதமாக முழங்குவதாகவே அவர்கள் உள்ளத்தில் எதிரொலித்தன.

கானம் போல் உண்மை பேசும் ஞானத் தென்றல் வீசுகிற மோனத்தலமாகவே கண்களில் பட்டது.

சங்கரரும் அவர்தம் சீடர்களும் சிருங்ககிரி க்ஷேத்திரத்தை அடைந்தார்கள். துங்கை நதியில் யுகதரிசனங்களான சிந்தனைகள் நெஞ்சைத் தொட்டுக் கொண்டிருந்தன. சிருங்ககிரியின் தொன்மையும் பண்டையப் புனிதமும், தவம் புரிந்து தவம் புரிந்து, அந்த மண் நித்திய தவத்தின் நெறிப்பட்டு, தவபூமியாக ஒளிர்ந்து கொண்டிருப்பதை சங்கரரின் சாந்தமிகு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வதனத்தில் சுந்தர ரேகைகளாகப் பிரகாசிப்பதைக் கண்டு சீடர்கள் மகிழ்ந்து திளைத்தார்கள்.

வேதஞான வித்தகங்கள், காலகாலம் வழிவழியாய், விருக்ஷமாகி, விழுதுபட வளர்ந்தோங்கி, சீர்மையொடு நெறிகளாகி, அற்புதத்தின் தவநிலமாகத் திகழ்கின்றதே என்று மனம் ஒன்றி அச்சூழலில் மெய்ம் மறந்தார்கள்.

திருவோங்கும் நிலமா, இல்லை இது வேதத் தருவோங்கும் தவ புலமா, ஞானக்கரு நிலவும் திருத்தலமா என்று மனத்திற்குள்ளாகவே எண்ணிக் கொண்டார்கள்.

வனாந்திரங்களும் நதிக்கரைகளும் இயற்கை வளம் நிறைந்து மண்ணும் விண்ணும் ஒன்றாகி மானுடத்தின் மனத்தை பண்படுத்தி தெய்வீகத்துடன் இணைக்கும் சக்தி உடையவைகளாகும்.

காலடிச்சங்கரரின் ஞானச்சீரடி அவ்வாறான சிருங்க கிரியின் தெய்வீகச் சூழல் நிறைந்த பூமியில் பதிந்து கொண்டிருக்கிறது.

ஜெயக்கொடி நாட்டிய சங்கரர், பாரத பூமியில் எண்ணற்ற க்ஷேத்திரங்களுக்குச் சென்றிருக்கிறார். திசைகள் தோறும் உள்ள நதிக்கரைப் பதிகள் எல்லாம் சங்கரரின் காலடி பதிந்த புனிதமான தலங்கள்.

பூர்ணாநதிக்கரையில் பிறந்து, பொன் மழை வர்ஷித்து வெள்ளத்தைக் கமண்டலுவில் அடக்கிய பூரணர், நர்மதை, கங்கை என நதிகளில் பாதம் பதித்து வந்தவர்.

ஆனாலும், ஆனாலும்.....

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

துங்காநதி தீரத்தின் சிருங்ககிரி வந்து சேர்ந்ததுமே, சங்கரர் மோன மஹானந்தம் எய்தியது போல் ஆகி விட்டாரோ என்பதாக, சீடர்கள் அவரைக் கண்ணுற்று, பரவசம் கொண்டார்கள்.

சங்கரர், இப்போது தான் சிருங்ககிரியில் காலடி எடுத்து வைக்கிறார். சிருங்ககிரியில் காலடிச்சங்கரர் பொற்பாதங்களை முதன் முறையாகப் பதிக்கிறார்.

இப்பொழுது தான், சிருங்ககிரியின் மீது அவர் பார்வை படுகிறதோ?

இல்லை, இல்லை. அத்வைத அணிவிளக்காம் சங்கரர் எப்போதோ சிருங்ககிரியை, தமது அகநயனங் களால் முழுமையாகக் கண்டு, அந்த பூமியின் தவ ஒளியைப் பார்த்திருக்கிறார். ஞானவாரிதியாம் சங்கரரின் ஞானக்கண் சிருங்ககிரியையும் துங்காநதியையும் தரிசித்து தரிசித்து, சிருங்ககிரி க்ஷேத்திரத்தின் மீது ஒப்புவமை இல்லாத ஒரு ஈடுபாட்டை உருவாக்கிக் கொண்டிருந்ததை யாரறிவார்!

எத்தனையோ நதிகளும் எத்தனையோ பதிகளும் இத்தரையை வாழவைக்க வந்த சங்கரரின் காலடி பதிந்தவைகள் தாம். என்றாலும் —

சங்கரரின் ஹ்ருதய கமலத்தில் சிருங்ககிரி ஒன்றி யிருக்கிற க்ஷேத்திரம்; ஆரம்ப முதலே சங்கரருக்கு, சிருங்ககிரி என்றாலே புனிதப் பதி என்னும் பெருமதிப்பு இருந்திருக்கிறது.

தேவி ஸரஸ்வதி, வானுலகம் செல்ல நினைத்த பொழுது, சங்கரர், ஸரஸ்வதி தேவியிடம் பூவுலகத்தில் நிலைத்திருக்குமாறு வேண்டிக் கொண்ட பொழுது, வரப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிரஸாதியாக இருந்து ஸாந்நித்யம் தந்து அருள் பாலிக்க சிருங்ககிரியில் நித்திய வாஸினியாக இருக்குமாறு தான் தேவியைப் பிரார்த்தித்துக் கொண்டார்.

துங்காநதியின் உற்பத்தி ஸ்தானத்தின் பெயரே கங்கை மூலம் என்ற நாமமுடையது என்று எண்ணும் போதே துங்கா நதி தவழும் பதியாகிற சிருங்ககிரி காசி க்ஷேத்திரத்திற்கு நிகரானது என்ற சிந்தனை எழும். ''கங்கா ஸ்நானம், துங்கா பானம்'' என்பது தொன்மைப்பட்ட வாசகம்.

காலடிச் சங்கரரின் திருவடிகள் சிருங்ககிரித் தலத்தில் பதிந்த வண்ணமாக, சங்கரர் தம் சீடர்களுடன் சிருங்ககிரியில் துங்கா நதி தீரத்தில் நடந்து வந்து கொண்டிருக்கிறார்.

தேவி ஸரஸ்வதி, ககன மார்க்கத்தில் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறாள்.

சிருங்ககிரியில் நித்தியவாசம் புரியுமாறு தம்மிடம் வேண்டிக் கொண்ட சங்கரருக்கு வாக்களித்த வண்ணம், வந்து கொண்டிருந்த தேவி ஸரஸ்வதி, துங்கபத்ரா நதி சங்கமத்தின் எழில் கூடிய வனப்பான பிரதேசம் வந்ததுமே, அந்த இயற்கைச் சூழலால் ஆகர்ஷிக்கப் பட்டாள். ககன மார்க்கத்தை விடுத்து, பூமியில் சீரடி பதித்துத் தொடர்ந்து வந்தாள்.

காலடிச் சங்கரரின் கமலத்திருவடி பற்றி, தேவி ஸரஸ்வதி சீர்ப்பாதம் மண்ணிலும் மலையிலும் பதித்தவாறு, வந்து கொண்டிருந்தாள்.

பாய்ந்தோடும் துங்காநதி நீரின் சலசலப்பு சங்கீதமாக ஒலித்தது. நதிக்கரையில் பொன்னடி பதித்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வந்த தேவி ஸரஸ்வதியின் பாதச் சதங்கையொலி, அந்த சங்கீதத்திற்கு நயம் சேர்ப்பது போன்று நாத மயமாக ஒலிக்க, தேவி ஸரஸ்வதி சீரடி பதித்தவாறே வந்து கொண்டிருந்தாள்.

'ஜல்ஜல்' 'ஜல்ஜல்' என்கிற சதங்கையொலிச் சப்தங்களின் மாத்திரை அளவு சீராக தெய்வீகமாக ஒலித்தது.

சத்தியலோக நாயகியின் தங்கச் சதங்கை யொலி, வேதச் சாகைகளின் நாதம் என, பண்ணும் பாட்டும் போல் பாங்குடன் ஒலிப்பதாக அமைந்திருந்தது.

தம்மைத் தொடர்ந்து சிருங்ககிரி வரும் சத்தியலோக நாயகியைத் தமது நெஞ்சில் ஆராதித்த வண்ணமாகவே, சங்கரரும் நடந்து முன்னே சென்று கொண்டிருந்தார்.

சங்கரர் துங்கா நதிக் கரையோரம் நடந்து வந்தார்.

வேத விசாரப் பிரவாஹங்களை உள்ளடக்கிய படியே பாய்ந்தோடும் நதி தீரத்தில் சங்கரர் நிதானமாக வந்து கொண்டிருந்தார்.

துங்கா நதி நீரைப் போன்றே ஸ்படிகமாகத் திகழும் தெளிவுடைய சங்கரர், மெதுவாக வந்து கொண்டிருந்தார்.

கீழ்த்திசைப் பகலவன் நடுவானை நோக்கி வந்த சமயம் அது.

நதிக்கரையின் ஓர்புறத்தில், பாறையொன்றின் அருகாமையில், சங்கரர் வந்து கொண்டிருந்தார். சங்கரரின் நடைமென்னடையாக இருந்தது. பார்வை யிலே சாந்தம் குடி கொண்டிருந்தது.

கதிரவன் உச்சியிலே பளீரென்று ஒளிவீசிய நேரம். கருங்கல் பாறை... அருகே....

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தவளையொன்று சூல்வலியால் வேதனைக்குரல் எழுப்பியது. கூரையில்லாத அந்த இடத்தில் தகிக்கும் உஷ்ணம்; பகலவனின் வீர்யம்; தவளையின் கத்தல் சப்தம்.

என்ன ஆச்சரியம்! என்ன ஆச்சரியம்! சங்கரரின் நயனங்கள் அந்தத் திசை நோக்கிப் பார்வையைப் பதித்தன.

கண நேரத்திற்குள்ளாக....

அந்தத் தவளையின் காட்சி, தவசீலரான சங்கரரின் நினைவுகளை வேத காலத்திற்கே அழைத்துச் சென்று விட்டது.

தவளை வெய்யிலின் கடுமையில் தவித்துக் கொண்டிருந்தது. தவளையின் சப்தம் சங்கரரை ஈர்த்தது.

தவளைகத்துகிற சமயம் 'கரகர, கரகர' என்னும் ஒலி எழுப்பி சப்தம் செய்கிறது. ஸோமயாகத்து அதிராத்ரத் திலுள்ள சஸ்த்ர, ஸ்தோத்ர சப்தம் போல் 'கர கர, கரகர' என்ற தவளையின் சப்தத்தை, வேத கால நினைவுகளுடன் நடந்து வந்த சங்கரர் செவியுற்று, அதிலேயே ஒன்றி நின்றார்.

இன்னொரு காட்சியையும் கண்டார்.

அருகிலேயே ஸர்ப்பமொன்று... ஆம் ஸர்ப்பமொன்று படமெடுத்த வண்ணமாக;

தவளை; கரகர சப்தம்; அதனருகே ஸர்ப்பம்; வெயிலின் கொடுமை.

பகைமையை மறந்து, படமெடுத்துக் குடை பிடித்து, வெயிலின் கொடுமையிலிருந்து தவளையைக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காக்கும் காட்சி; அதிசயமான காட்சி, அன்பு மயமான அற்புதக் காட்சி.

சங்கரரின் பார்வையும் சிந்தனையும் அதிலே ஒன்றி, ஒரு கணம் அதிலேயே லயித்தது; அதிலேயே நிலைத்தது.

நெஞ்சமெல்லாம் நெகிழ்ச்சி; அக நயனங்களில் ஆனந்த பாஷ்பம்.

அந்த அன்பு மயமான காட்சி - வேத கால மந்திர சப்தத்தை நினைவுபடுத்துகிற வியத்தகு காட்சி -

கருணை நிறைந்த நிகழ்வு; துங்காநதி தீரத்திலே, சிருங்ககிரி தவபூமியிலே, நடந்து வந்து கொண்டிருந்த சங்கரரின் பார்வையை ஆகர்ஷித்தது. ஆம்; அக்காட்சியை அவரது அகநெஞ்சம் கிரஹித்தது. அதனையே உற்றுப் பார்த்துக் கொண்டே மெல்ல நடந்து வந்த சங்கரர், அதைக் கடந்து செல்லுகிற இடம் —

நெகிழ்வூட்டிய அக்காட்சி சங்கரரின் மென்னடையைப் பின்னடைவு செய்ய முற்பட்ட போது—

அந்தத் தருணம்—

சங்கரரைத் தொடர்ந்து வந்து கொண்டிருந்த தேவி ஸரஸ்வதியின் சீர்ப்பாதங்கள், துங்காநதி தீரத்தின் மணற்பாங்கான பகுதியில், அழுந்தி அழுந்தி தேவியின் பொன்னடிகள் பதிந்தன.

ஸரஸ்வதி தேவியின் கமலத் திருப்பாதங்களில், பத்ம ராகங்கள் இழைந்த தங்கச் சலங்கைகள், அலங்கரிக்கப்பட்டு பொன்மயமாகத் திகழ்கின்றது.

தேவி ஸரஸ்வதி தம்முடைய திருப்பாதங்களை மெல்லத் தூக்கி, அடிமேல் அடி வைத்தவாறு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அருள்பொலியப் பொலிய, சதங்கையொலி எழ வந்துகொண்டிருந்தாள்.

ஹம்ஸம் என்கிற அன்னபக்ஷிகளின் அழகு நடைபோல் தேவி ஸரஸ்வதி நடந்து வந்தாள்; மணலில் காலடி பதித்து நடந்தாள்.

கலைவாணியாம் ஸரஸ்வதி தேவியின் கமலத் திருப்பாதங்களில் அணிந்திருந்த சலங்கைகளின் ஊடே மணல்கலந்து உட்புகுந்து விட்டதால் கனகச் சலங்கை களினின்று 'ஜல்' 'ஜல்' என்னும் ஒலி எழவில்லை.

பாதாம்புஜப் பொற்சலங்கை ஒலி சப்திக்கவில்லை.

அந்தச் சூழலில்....

சட்டென்று சங்கரர் திரும்பினார். திரும்பிய சங்கரர் நின்றார்.

ஆம், சங்கரர் நின்று விட்டார்.

நின்ற சங்கரரின் நயனங்கள், பரவசத்தில் ஆழ்ந்தன. துங்காநதி தீரத்தில், அந்த ஸ்தலத்தில் தேவி ஸரஸ்வதி பிரத்யக்ஷமாக திவ்ய தரிசனம் அளிக்கும் காட்சி, சங்கரருக்கு ஆனந்தத்தை அளித்தது.

கருணாசாகரியைக் கண்டு கண்ணீர் மல்கினார்; கலைவாணியின் திருக்காட்சியில் கசிந்து உருகினார்; வீணாதாரிணியை தரிசித்து மனம் விகசித்தார்; சங்கரர் நெகிழ்ந்து நெகிழ்ந்து, நெகிழ்ச்சியில் பரவசப் பிரவாஹ மானார்.

சிருங்ககிரியில் நித்யவாஸம் புரியுமாறு சங்கரர் வேண்டிக் கொண்டதை நிறைவேற்றும் வகையில் சங்கரர் துங்காநதி தீரம் வந்ததுமே, அவர் பின்னே வந்த தேவி ஸரஸ்வதி, அங்கே பிரஸன்னமாக நின்றாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நின்றாளா, தேவி ஸரஸ்வதி!

இல்லை, இல்லை.

அந்தப் பரவசப் பிரவாஹச் சூழலில் நிலைத்தாள்.

நித்யவாஸம் புரிவதற்காக அந்த ஸ்தலத்தில், சிருங்ககிரியில், நிலைத்தாள்.

சகலகலாவல்லி, சாஸ்திரவல்லி, வீணாபுஸ்தக தாரிணி, கலைவாணி, கமலபாணி, வாக்தேவி, வரதாயகி, வெண் தாமரைச் செல்வி, வித்யா ரூபிணி, ஆரணப் பாவை, சத்யலோக நாயகி, துங்கா நதி தீரத்தில் சிருங்ககிரித் தலந்தன்னில், நித்ய வாஸினியாக நித்திலத்திற்கு அருள்பாலிக்கும் ஸ்ரீ சாரதையாக தரிசனம் தந்தாள்.

சிருங்ககிரி க்ஷேத்திரத்தை, தன்னுடைய பீடமாகக் கொண்டாள்.

பாறைமீது, தேவி ஸரஸ்வதியை ஸ்ரீ சாரதையாக யந்திரத்தில் ஆவாஹனம் செய்தார் சங்கரர். பாறை அருகே நின்று நிலைத்த ஸரஸ்வதி தேவி, பிரஸன்னமாக அங்கே ஸ்ரீ சாரதாம்பாளாக நித்யவாஸம் புரியலானாள்.

சங்கரர் தேவி ஸரஸ்வதியாம் பரதேவதையை நிரந்தரமாக வழிபடும் பொருட்டு, ஒரு அரசரின் அத்தாணி மண்டபம் போன்று அரசவையை நிகர்த்த கட்டிடம் உருவாக்க எண்ணினார். எண்ணியவாறே தேர்ந்த வாஸ்து சில்ப சாஸ்திர வல்லுநர்களைக் கொண்டு அந்தப் புனிதமான இடத்தில் பிரம்மனும் தேவர்களும் மற்ற வானவர்களும் போற்றித் தொழும் பரதேவதையை நிரந்தரமாக வழிபடும் முறையில், ஸ்ரீ சக்ரத்தில் பிரதிஷ்டை செய்தார். அங்கே தாரு மூர்த்தியாக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ சக்ரயந்திரத்தின் மீது ஸ்ரீ சாரதையை ஆவாஹனம் செய்தார்.

சங்கரருக்கு வாக்குக் கொடுத்தபடி, ஸ்ரீ ஸரஸ்வதி தேவி, அவ்வாறே சிருங்ககிரித் தலத்தில் நித்யவாஸம் புரிந்து, வேண்டும் பக்தர்களுக்கு வேண்டியது அனைத்தையும் அளிக்கும் மஹாவரப் பிரஸாதியாக விளங்கினாள். ஸ்ரீ சாரதா ரூபத்தில் அங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டு, நித்ய பூஜைகளுக்கும் ஸேவைகளுக்கும் வழி வகுத்தார், சங்கரர்.

சங்கரர், ஸரஸ்வதி தேவியை சிருங்ககிரியில் நித்ய வாஸினியாக்கி சாரதைக்கு எழுப்பிய ஆலயம் நிகரற்ற சாந்நித்யம் பெற்றதாகத் திகழ்ந்தது.

இந்தத் தலத்திலே தான், ''குருஸேவையே உகந்தது'' என்ற மன நிறைவுடன் சங்கரருக்குப் பணிவிடைகள் புரிய சீடர் ஒருவர் வந்தார். உயிர்களிடம் கருணை மிகுந்தவரும் குருஸேவையில் மனப்பூர்வமான திருப்தி உடையவருமான தோடகர் என்பவரே அச்சீடர்.

சங்கரர் தம் சீடர்களான சுரேஸ்வரர், பத்மபாதர், ஹஸ்தா மலகர், தோடகர் ஆகியோருடன் சிருங்ககிரித் தலத்தில் இருந்து சிஷ்யர்களுக்கு வேத பாஷ்யங்களையும் உபநிஷத் சாரங்களையும் சாஸ்திரக் கலைகளையும் போதித்து வந்தார். சிரவண மாத்திரத்தில் முக்தியளிக்கும் பெருமையுடைய மந்திரங்களை உபதேசம் செய்து வந்தார்.

அஞ்ஞானத்தை அகற்றி, மானுட உள்ளத்தில் தனிப்பட்டதாகத் தோன்றும் ஜீவாத்மாவுக்கும் எங்ஙனும் வியாபித்துள்ளதாகிய பரமாத்மாவுக்கும் பேதங்கள் இல்லை என்று மொழியும் நுணுக்கமான துறைகள் சார்ந்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேதாந்த சாஸ்திரத்தின் பல்வேறு நுட்பங்களையும் திட்பங்களையும் விளக்கமாகவும் எளிதில் புரியுமாறும் சீடர்களுக்கு எடுத்துரைத்தார்.

துங்கா நதியினால் புனிதமானதாகிய சிருங்ககிரி பல மகான்களின் இருப்பிடமாக விளங்கிற்று. வேத சாஸ்திரங்களைக் குறைவறக் கற்ற எண்ணற்றோர், சிருங்க கிரியில் சங்கரரின் அருகாமையில் இருந்து சாஸ்திர ஞானம் பெற்றார்கள்.

நான்கு சீடர்களுடன் சங்கரர் பல்லோரும் போற்றும் குருவாகத் திகழ்ந்தொளிர்ந்தார்.

குரு பரம்பரையை மூன்று வகையாக மொழிவது மரபு.

குரு பரம்பரையில் முதல் குரு சதாசிவர். அவரே ஸ்ரீமந் நாராயணன் திருவடிவம் கொண்டு தமது நாபி கமலத்திலிருந்து சிருஷ்டி தேவனான பிரம்ம தேவரைப் படைத்தவர். நாராயணன் வடிவத்திலிருந்து சதாசிவமாகிய பரமசிவரே நான்முகனாம் பிரம்மாவுக்கு ஆத்ம ஞானமாகிய பிரம்ம வித்தையை உபதேசித்தார்.

சதாசிவர், நாராயணர், நான்முகர் மூவரும் திவ்ய குரு பரம்பரை.

திவ்ய குரு பரம்பரையைத் தொடர்ந்து வசிஷ்டர், சக்தி, பராசரர், வேதவியாசர், சுகர் ஆகிய ஐவரும் வம்ச வழி புத்திரர் களான குரு சிஷ்யர்களாகிய ரிஷி பரம்பரை.

கௌட பாதரும் கோவிந்த பகவத் பாதரும் ஆசிரியர் மாணவர் நிலை குரு சிஷ்ய பரம்பரையைத் தோற்றுவித்த மகான்கள். ஆசார்ய பரம்பரை உதயமாயிற்று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கோவிந்த பகவத் பாதரின் சிஷ்யர் சங்கரர். அவரே சங்கர பகவத் பாதர்.

சங்கரரின் சீடர்களான ஹஸ்தாமலகர், சுரேஸ்வரர், பத்மபாதர், தோடகர் ஆகிய நால்வரும் ரிக், யஜுர், ஸாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்களுக்குப் பிரதிநிதிகள் என்பதையும் பண்டிதர்களும் பேரறிஞர்களும் உணர்ந்தார்கள்.

இறைமையை அடைவதற்கான ஸாலோக்யம், ஸாமீப்யம், ஸாரூப்யம், ஸாயுஜ்யம் என்கிற நான்கு நிலைகளுக்கும் நான்கு பிரதிநிதிகள் என்பதாக மகான்களும் மகாப் பண்டிதர்களும் தெளிவுடன் உணர்ந்து தேர்ந்தார்கள்.

நான்கு திசைகள்; நான்கு வேதங்கள் என்று மொழிவார்கள். நான்கு மார்க்கங்களான,

அவன் உலகினில் உறைதல் (ஸாலோக்யம்)

அவனருகினில் இருத்தல் (ஸாமீப்யம்)

அவன் உருவினைக் கொள்ளல் (ஸாரூப்யம்)

அவனோடு இணைந்திடும் இறைநிலை (ஸாயுஜ்யம்).

அவ்வாறாக, நான்கு சீடர்களை, ஒரு சேர சிருங்ககிரியில் சங்கரருடன் நேரில் தரிசித்து மகிழ்ந்தார்கள்.

ஸ்ரீ சங்கரர் சிருங்ககிரியில் ஸ்ரீ சாரதா மடத்தை ஸ்தாபித்த தருணத்தில், சிருங்ககிரி தலத்தின் காவல் தெய்வங்களையும் பிரதிஷ்டை செய்தார். சிருங்ககிரியின் நாற்புறமும் உள்ள மலைத் தொடர்களில் நான்கு காவல் தெய்வங்களுக்கும் கோயில்களை உருவாக்கினார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கிழக்கு திசை மலையடிவாரத்தில் கால பைரவர் கோயிலும் மேற்குத் திசையில் ஆஞ்சநேயர் கோயிலும், தென் திசையில் துர்கை கோயிலும் வடக்கு திசையில் காளி கோயிலும் சங்கரரால் ஸ்தாபிக்கப் பட்டது.

நான்கு திசை காவல் தெய்வங்களின் கோயில்களிலும் பூஜைகள் தொடர்ந்து நடைபெறவும் வழிமுறைகள் செய்தார். ஆபத்துக்கள், நோய்கள், தீயசக்திகள் இவற்றிலிருந்து பாதுகாக்கும் பொருட்டே இந்தக் காவல் தெய்வங்கள் பிரதிஷ்டை செய்யப் பட்டுள்ளன. ரக்ஷக தேவதைகளாக விளங்குகின்றன.

ஸ்ரீ சாரதா தேவியின் திருநாமத்துடன் ஸ்ரீ சாரதா பீடத்தை ஸ்தாபித்த ஸ்ரீ சங்கரர், ஸ்ரீ சுரேஸ்வரரை பீடாதிபதியாக்கினார். ஸ்ரீ சுரேஸ்வரருக்கு ஸ்படிகத்தினா லான லிங்க வடிவான ஸ்ரீ சந்திர மௌளீஸ்வரரையும், ஸ்படிகத்துடன் மத்தியில் சிவப்புக்கல் பதிக்கப் பெற்ற ரத்ன கர்ப்ப கணபதியையும் வழங்கினார்.

தாரணி போற்றிட, ஸ்ரீ சாரதா பீடம், சிருங்ககிரியில் ஒளியுடன் பிரகாசித்தது.

ஸ்ரீ சுரேஸ்வரர், ஸ்ரீ பத்மபாதர், ஸ்ரீ ஹஸ்தாமலகர், ஸ்ரீ தோடகர் ஆகிய நான்கு சீடர்களுடன் பன்னிரு ஆண்டுகள் ஸ்ரீ சங்கரர், சிருங்ககிரியில் வாசம் புரிந்தார்.

ஸ்ரீ விபாண்டக முனிவராலும் அவரது புதல்வர் ஸ்ரீ ரிஷ்ய சிருங்கராலும் சிரேஷ்டமான தவபூமி சிருங்ககிரி ஸ்தலத்தில் ஸ்ரீ சாரதாம்பாளை நித்திய வாஸினியாக்கி ஸ்ரீ சாரதா கோயிலை நிர்மாணித்த ஸ்ரீ சங்கரர் ரிஷ் ய சிருங்ககிரி என்னும் சிருங்ககிரி ஸ்தலத்தை புண்ணிய மிகு ஸ்ரீ சாரதா க்ஷேத்திரமாக உருவாக்கினார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

20

குருஸ்வரூபிணி
ஸ்ரீ சாரதாம்பாள்

சிருங்கேரி, ஸ்ரீ சாரதா க்ஷேத்திரமாக ஒளிரும் வண்ணம் ஸ்ரீ சங்கரர் ஸ்தாபிதம் செய்தார். ஸ்ரீ சாரதாம்பாள் கோயில் குருஸ்வரூபிணியின் கேந்திரமாகத் திகழ்ந்திடும் வண்ணம் ஸ்ரீ சங்கரர் அமைத்தார். ஸ்ரீ சாரதா தேவி, சக்தியாகவும் அதே நேரம் சக்தியை இயக்குகிற சக்திமானாகவும் திகழ்கிறவள். சிருங்கேரி யில் கோயில் கொண்ட - குருஸ்வரூபிணி.

ஸ்ரீ சாரதையே சக்தி; ஸ்ரீ சாரதையே சக்திமான்.

நாமரூபமற்ற நிர்குண பிரம்மத்தின் சகுண மூர்த்தங்களில் தக்ஷிணாமூர்த்தி ஒன்றாகும். ஞானத்தின் திருவுருவம். பேரானந்தப் பெருஊற்றின் வடிவம், தக்ஷிணாமூர்த்தி. ஸம்ஸாரமென்னும் விருக்ஷத்தைக் குறிக்கும் கல் ஆலின் நிழலில் தக்ஷிணாமூர்த்தி அமர்ந்திருக்கிறார். ஞான விளக்காக ஒளிரும் அவர் திருமேனி தூய வெண்ணிறமாகக் காட்சி தருகின்றது. சந்திரனை ஜடையிலே தரித்தவர். நான்கு திருக்கரங்களை உடையவர்.

ம்ருத்துவை நிவர்த்திக்கும் சின்னமாக ஒரு கரத்திலே அமிருத கலசத்தை ஏந்தியிருக்கிறார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மற்றொரு கரத்தில், வித்தையைக் குறிக்கும் புஸ்தகத்தைத் தாங்கிய வண்ணம் காட்சித் தருகின்றார்.

தியானத்தையும் மோனத்தையும் குறிப்பால் உணர்த்தும் ஜபமாலை மூன்றாவது கரத்தில் பெற்றிருக்கிறார்.

தக்ஷிணாமூர்த்தியாகிய குருமூர்த்தியின் நான்காவது கரம் சின் முத்திரை காட்டி அருளும் ஞானக் கரமாகப் பொலிகின்றது. ஜீவன் பிரம்மத்தோடு இரண்டறக் கலக்கும் தத்துவத்தை தக்ஷிணாமூர்த்தி எனும் குருநாதர் சொல்லாமற் சொல்லி விளங்க வைக்கின்றார்.

ஞானமே ஓர் வடிவானவர் தக்ஷிணாமூர்த்தி. 'சுத்த வித்யா ப்ரதாயகம்' என்னும் வாக்குப்படி பக்தர்களுக்கு ஞான குருவாகத் திகழ்ந்து ஆத்மபோதத்தை அருளும் கருணாமூர்த்தி. முன்னைப் பழமைக்கும் முன்னைப் பழம்பொருளாய் பின்னைப் புதுமைக்குப் பேர்த்துமப் பெற்றியராய் - என்றும் மாறா இளமைக் கோலத்துடன் இருப்பவர் தக்ஷிணா மூர்த்தி. அவரது இணையடிகளைச் சார்ந்த மஹான்களில் ஸ்ரீ சங்கரரும் ஒருவர்.

தக்ஷிணாமூர்த்தி, நாம ரூபமற்ற பிரம்மத்தின் சகுண வடிவம். பிரம்மத்தின் தேவி வடிவாக, தக்ஷிணமூர்த்தி தத்துவத்தின் பெண் வடிவாக விளங்குபவள் ஸ்ரீ சாரதை, சர்வ லோக ஜனனி. அம்ருத கலசம், புஸ்தகம், ஜபமாலை, சின் முத்திரையோடு, ஸ்ரீ சாரதை காட்சி தருகின்றாள். ஸ்ரீ சாரதையின் திருக்கரத்திலுள்ள ஜபமாலையில் உள்ள மணிகள் தத்துவங்களின் உருவமாகும். எல்லா தேவியரின் அம்சங்களையும் ஒருருவாகக் கொண்டு திகழ்பவளே ஸ்ரீ சாரதாம்பாள்.

த்ரிதேவியரும் த்ரிமூர்த்திகளும் த்ரிசக்திகளும் அவளே!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ சாரதையின் பிரபாவம் எண்ணற்றது. அளவு கடந்தது.

இப்பிரபஞ்சம் அண்டாண்டம், பிரம்மாண்டம் - இரண்டும் இணைந்த தொகுதியாகும். இப்பிரபஞ்சத்தின் காரண வஸ்துவையும் ஒருங்கே அறிவுறுத்தும் ஸ்ரீ சக்ரத்தின் மீது அம்பாள் ஆரோகணித்திருக்கிறாள். சக்ரங்களுக்கெல்லாம் ச்ரேஷ்டமானது ஸ்ரீ சக்ரம்.

அம்பாளுடைய சக்ரத்தை ஸ்ரீ சக்ரமென்றும் ஸ்ரீ சக்ர ராஜமென்றும் சொல்வதுண்டு. சரீரமானது ஜீவனுக்கு எப்படி நிலைக்களனாக உள்ளதோ அவ்வாறே சிவன்சக்தி இருவருக்கும் இருப்பிடமாக உள்ளது ஸ்ரீ சக்ரம்.

ஸ்ரீ சக்ரமானது கீழ்நோக்கிய முக்கோணங்கள் ஐந்தும் மேல் நோக்கிய முக்கோணங்கள் நான்கும் சேர்வதால் உண்டாவது. மேல் நோக்கிய நான்கு முக்கோணங்களை சிவாத்மகம் என்றும் கீழ்நோக்கிய ஐந்து முக்கோணங்களை 'சக்தியாத்மகம்' என்றும் கூறுவர்.

ஸ்ரீ சக்ரத்தில் அடங்கிய பிந்து, அஷ்டதளம், ஷோடதளம், சதுரச்ரம் என்ற இவை சிவச்சக்ரங்கள். (சிவாத்மகம்) த்ரிகோணம், அஷ்டகோணம், தரசாத்வயம், மன்வச்ரம், இவை சக்தித் சக்ரங்களாகும். (சக்தியாத்மகம்) இவற்றில் சக்திச் சக்ரங்களின் சேர்க்கையினால் தான் சிவச்சக்ரத்திற்கு மேன்மை ஏற்படுவதாக ''சிவ சக்த்யா யுக்தோ'' என்ற சௌந்தர்ய லஹரி ஸ்லோகம் கூறுகிறது.

ஸ்ரீ சக்ரத்தின் மத்யபாகத்தை பிந்து என்பர். ஸ்ரீ சக்ரத்தின் மத்தியிலுள்ள த்ரிகோணத்தின் நடுவில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸர்வானந்தமய சக்ரமென்ற பிந்து இருப்பதால் அதற்கு ''பைந்தவஸ்தானம்'' என்று பெயர்.

ஸ்ரீசக்ரத்தின் மத்தியில் இருக்கும் பிந்துஸ்தானத்தில் நிஷ்களசிவமான காமேஸ்வரரும் காமேஸ்வரியும் இரண்டறக் கலந்து அபின்னமாக வீற்றிருக்கின்றார்கள். கீழ்நோக்கிய ஐந்து கோணங்களும் மேல் நோக்கிய நான்கு கோணங்களும் சேர்ந்து 43 முக்கோண ஸ்தானங்களை உண்டாக்குகின்றன. இந்த முக்கோண ஸ்தானங்களில் பிரபஞ்ச தத்துவங்களையும் மனோ நிலைகளையும் குறிக்கும், ''யோகினிகள்'' என்று அழைக்கப் பெறும் சக்திகள் அமர்ந்திருக்கின்றார்கள்.

முக்கோணஸ்தானங்களில் அமர்ந்திருக்கும் 'யோகினி'கள் ஆவரண தேவதைகள் என்று அழைக்கப் பெறுகிறார்கள். 'ஆவரண' என்றால் மறைக்கும் என்று பொருள். பிந்து மண்டலத்திலுள்ள பிரம்ம ஸ்வரூபத்தை மறைத்து பஞ்ச பௌதீகப் பிரபஞ்சத்தைத் தோற்றுவிப்பவர்கள் இந்த யோகினிகளே! சூரியனிலிருந்து கிரணங்கள் தோன்றுவது போல, யோகினிகள் தேவியிடமிருந்து தோன்றுகிறார்கள்.

ஆவரண தேவதைகள் அம்பாளிடமே ஐக்யமாகி விடுவதை ஸ்ரீ சக்ர பூஜையில் காணலாம். பைந்தவஸ்தானத்தில் வீற்றிருக்கும் தேவியே பரப்ரம்ம ஸ்வரூபிணி. பிரம்மத்தின் பிரகாசாம்சம் என்ற அகள நிலையும் விமர்சாம்சம் எனப்படும் சகள நிலையும் பிரம்மத்திலே ஒன்றி ஏகமாகி விடுகின்றன.

ஒன்றிலிருந்து ஒன்று தோன்றியது; பின்பு அவை இரண்டுமே இரண்டறக் கலந்து ஒன்றுபட்டு விடுவதால்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அம்பாளை 'பிரகாச-விமர்ச-பரப்ரம்ம-ஸ்வரூபிணி' என்று போற்றுகிறோம்.

ஸ்ரீ சக்ரத்தின் மத்யஸ்தானமாகிய பைந்தவஸ்தானத்தில் வீற்றிருக்கும் பரதேவதையின் மற்றொரு மூர்த்தமே ஸ்ரீ சாரதை; ஸ்ரீ ராஜராஜேஸ்வரிக்கும் நான்கு திருக்கரங்கள். அவைகளில் பின்னிரண்டு கரங்கள் பாசத்தையும் அங்குசத்தையும் தாங்கியிருக்கின்றன. முன்னிரு கரங்களில் கோதண்டமும் பஞ்ச புஷ்ப பாணங்களும் உள்ளன. 'ராகம்' எனப்படும் விருப்பைக் குறிப்பது பாசம். குரோதம் என்ற வெறுப்பைக் குறிக்கும் அங்குசம். கரும்பு வில் மனத்தையும் ஞானேந்திரிய பஞ்சகம் பஞ்ச புஷ்ப பாணங்களையும் குறிப்பிடுகின்றன. ஸ்ரீ சக்ர பூஜையைச் செய்யும் சாதகன், லௌகீக சுகங்களை அடைவதோடு நிவர்த்தி மார்க்கத்தில் வெறுப்பு விருப்பு, புலன்கள் இவற்றையும் வென்று ஜிதேந்திரியனாக ஜீவன் முக்தியை அடைகிறான்.

அம்பாளாகிய ஸ்ரீசாரதையை வழிபடும் சாஸ்திரத்திற்கு ஸ்ரீ வித்யை என்றும் அம்பாளுடைய மந்திரத்திற்கும் ஸ்ரீ வித்யை என்றும் சொல்லப்படுகிறது. சகல விதமான மந்திரங்களுக்குள்ளும் மிக உயர்ந்த மந்திரம் ஸ்ரீ வித்யை என்று சொல்லப்பட்டுள்ளது.

ஆதிசக்தியாக, சர்வேச்வரியாக, ராஜ்யலக்ஷ்மியாக விளங்கும் ஸ்ரீ ராஜராஜேஸ்வரி தன்னை ஆச்ரயித்தவர்களுக்கு ராஜ பீடங்களைக் கொடுக்க வல்லவள்.

சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் எனும் மூவகைக் கிருத்யங்களுக்காக மும்மூர்த்திகளைத் தோற்றுவித்த மூலசக்தி பரதேவதை அவளே!

அந்தப் பரதேவதையே ஸ்ரீ சாரதை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''ஸர்வவேதாந்தப் பிரகாசினீ பிரம்ம வித்யா சாரதா'' என்று போற்றப்படுகிறாள் ஸ்ரீ சாரதை.

தக்ஷிணாமூர்த்தியின் வித்யா ஸ்வரூபமே தக்ஷிணாமூர்த்தி ரூபிணியான ஸ்ரீ சாரதை.

ஸ்ரீ சாரதை முழுமுதல் இறைவி. (matrix of the universe).

பிரம்ம வித்யா ஸ்வரூபிணியாக விளங்குகின்ற ஸ்ரீ சாரதா பரமேச்வரி அகில லோக நாயகி.

ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி அல்லது ஸ்ரீ சாரதையின் அம்சாவதாரமான ஸ்ரீ சங்கரர், சிருங்ககிரியில் ஸ்ரீ சாரதைக்கு கோயில் எழுப்பினார். அனுதினமும் நினைப்பவர்க்கு சதுர்வித புருஷார்த்தங்களையும் இந்த ஜன்மத்திலேயே அடையும் படி அனுக்ரஹம் செய்பவளே, துங்காநதிக் கரையில் உள்ள சிருங்ககிரி ஸ்ரீசாரதாம்பாள்.

புனித நதிக்கரைகளில் பல புண்ணிய க்ஷேத்திரங்கள் அமைந்திருக்கின்றன. துங்கா நதிக் கரையில் ஸ்ரீ சாரதா க்ஷேத்திரமாக சிருங்ககிரி விளங்குகிறது.

ஸ்ரீ சங்கரர், ஸ்ரீ சாரதையை ஸ்தோத்தரித்து, பாடியருளி, சிருங்ககிரி க்ஷேத்திரத்தை கீர்த்தி பெறச் செய்தார்.

ஸ்ரீ சாரதாம்பாளின் சாந்நித்யம் மிகுந்த சிருங்ககிரிக்கு எண்ணற்ற பக்தர்கள், க்ஷேத்திராடனமாக வந்து, ஸ்ரீசாரதாம்பாளின் அருள் பெற்றும், துங்காநதியில் நீராடி, புனித ஸ்நானப் பேறு பெற்றும் செல்வது மரபாகி விட்டது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீசாரதையின் சாந்நித்யம், மெய்ப்பாட்டுடன், சிரத்தை மிகுந்த பக்தியுடன் துதிப்பவர்களுக்கு சகல சுபிட்சங்களையும் அளிக்க வல்லது.

ஸ்ரீ சாரதாம்பாளை ஸ்ரீ சங்கரர் தாயாக தரிசனம் செய்தார். ஸ்ரீ சாரதையின் சரணாரவிந்தங்களில் பணிந்து, பக்திப் பரவசம் எய்தினார்.

தானாக வந்து, தாயாகிக் கருணை சுரந்து, அருள் பாலிக்கும் ஸ்ரீ சாரதாம்பாள் திருமுன்னர் நின்று துதி பாடினார்.

ஸ்ரீசங்கரரின் இதயத் தடாகத்தில் தேவி சாரதையின் அருள் கடாக்ஷம் பிரவாஹமெடுத்துப் பாய்ந்தது.

வாக்தேவியின் அனுக்ரஹத்தால் ஸ்ரீ சங்கரர், தேவியை பிரத்யக்ஷமாகத் தரிசனம் புரிந்தவாறே ''ஸ்வக் ஷோஜகும்பாம், ஸ்தாபூர்ண கும்பாம்'' என்று ஸ்தோத்திரம் செய்யலானார்.

''பஜே சாரதாம்பாமஜஸ்ரம் மதம்பாம்'' என்று நிறைவுறும் முதல் பகுதியின் தெய்வீக ஒலியுடன் இழைந்தவாறே காற்றுடன் தவழ்ந்து தோத்திரத்துடன் இணைவது போல் ஒரு நாத ஒலி. அந்த நாத ஒலி வீணாகானம் தான். பண்டைய யாழ் என்னும் வீணையின் இசையோ?

நாரதரின் 'மஹதி' என்ற வீணையிலிருந்து உண்டாகிற உன்னத ஒலியோ!

சங்கரரின் தோத்திர கவித்வங்களுடன் பின்னிப் பிணைந்தவாறு வீணை இன்பநாதம் கணந்தோறும் ஒலித்துக் கொண்டிருக்கிறதே!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆகாய வீதி வழியே சீரோடு வருகின்ற இந்த நாத ஒலி எங்கிருந்து வருகுவதோ?

யாவர் இயற்றிடும் தெய்வ இசையோ!

ஸ்தம்பல வீணையின் கானமோ! வாணீசி வீணையின் நாதமோ!

காண்டக வீணையின் காந்த ஒலியோ!

மாணிக்க வீணையின் மதுர கானமோ!

தாளமொர் வீணையின் சங்கீத நாதமோ!

பண்ணார்ந்த வீணையின் பரவச ஒலியோ!

மாசில் வீணையின் மங்காத நாத ஒலியோ!

வித்தக வீணையின் வியத்தகு இசை ஒலியோ!

பயன் கூட்டி இசை நாட்டுகிற பரிவாதினியின் பண்ணிசையோ.

'விபஞ்சி' என்ற நாமமுடைய வீணையின் வளர்கலை நாத நல்லொலியோ!

எத்தனை வீணைகள்; எத்தனை வீணைகள்! என்னே, வீணா கானம்! என்னே, வீணா கானம்!

காலைக் கதிர் பரப்பும் கவின்மிகு கிரணங்கள் போல், ஸரஸ்வதியின் 'கச்சபி' வீணையினின்று எழுந்து, வரும் கானம் தான் அது.

தெய்வீக உணர்வு ஊட்டுகிற வீணை மீட்டுகிற அந்த நாதநயம் கூட்டுகிற அமுதப் பொலிவு; அம்மம்மா! அற்புதம், அற்புதம்!

அருணப் பிரபையின் அழகு ஸௌந்தர்யத்துடன் வீணா கானம் ஒலித்துக் கொண்டே இருக்கிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அத்தனையும் ஆய கலை அறுபத்து நான்கும் தந்தருளும், ஆதிக் கலைகளின் நாயகி, தேவி ஸரஸ்வதியின் அருளில் மலர்ந்த வீணாகான நல்லிசை நாத சங்கமோ! சங்கமச் சாகரமோ!

துங்கா நதியின் தெளிவான நீரோட்டம், கச்சபி வீணா கானத்தில் தோய்ந்து பொங்கிப் பாய்ந்தோடி இசையாக ஒலிக்கிறது.

தேவகானம் பொழிவது போலல்லவா அந்த வீணாகானம் ஸ்ரீ சங்கரரின் ஸ்ரீ சாரதா புஜங்கப் ப்ரயாதாஷ்டகத்தின் அக்ஷரங்களுடன் இயைந்து ஒன்றி வருகின்றதே.

''என் தாயாகும் சாரதாம்பாளை, மனம் மொழி மெய் சேர சந்ததமும் துதிக்கின்றேன்'' என்று தோத்திரம் செய்ததும் ஸ்ரீ சங்கரரின் வாக்குக்கு வளம் சேர்ப்பது போன்று அந்த வீணா கானம் ஒலித்துக் கொண்டே இருக்கிறது.

வாக்தேவி வாணி ஸரஸ்வதி, அவள் நானாவிதக் கலைகளின் நாயகி; வீணாதாரிணி.

ஸ்ரீ சாரதையே ஒரு வீணை தான்.

வீணையை மீட்டிக் கொண்டிருக்கிறாள், தேவி ஸரஸ்வதியாம் ஸ்ரீ சாரதை.

பக்திப்பூர்வமாக தோத்திரப் பாமாலை சூட்டிக் கொண்டிருக்கிறார், ஸ்ரீ சங்கரர் ஸ்ரீ சாரதாம்பாளுக்கு.

நாதமும் கீதமும் வேதமென ஒன்றியபடி காற்றில் தவழ்ந்து தவழ்ந்து, எங்கும் பரவிப் பரவி, துங்கா நதி நீரின் கலகலப்போடும், அங்கே உள்ள விருக்ஷங்களின் சலசலப்போடும் கலந்து கலந்து, சிருங்ககிரி க்ஷேத்திரத்தின்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மகத்துவத்தையும், அங்கே கோயில் கொண்டிருக்கும் ஸ்ரீ சாரதாம்பாளின் மகாத்மியத்தையும் தாரணி எங்கும் எதிரொலித்த வண்ணமாக இருக்கிறது.

அந்த வீணையின் நாத ஒலியிலும் அம்பாள் ஸ்ரீ சாரதையின் அருள் பார்வையிலும் எழுந்து நாற்திசை களிலும் பரவுகிற தெய்வீகம், அந்த சிருங்ககிரி க்ஷேத்திரத்தை மட்டுமின்றி, ஜகம் முழுவதையும் புனிதப்படுத்தி ரக்ஷித்துக் கொண்டே இருக்கிறது.

ஜக்ம் முழுவதையும் காத்தருளும் குரு ஸ்வரூபிணி ஸ்ரீ சாரதாம்பாள், பூரணமாக, கருணா பிரபாவத்துடன் சகல வித்யைகளையும் அனைத்து சுபிட்சங்களையும் சர்வ மங்களங்களையும் சர்வ பொழுதுகளிலும் அருள் பாலித்துக் கொண்டிருக்கிறாள்.

ஸ்ரீ சாரதாம்பாள் திவ்ய சரிதம்

நிறைவு பெறுகிறது.



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

21

ஸ்ரீ ஆதிசங்கரர் அருளிய ஸ்ரீசாரதா புஜங்கப்ரயாதாஷ்டகம்

1

ஸுவக்ஷோஜகும்பாம் ஸுதாபூர்ண கும்பாம்
ப்ரஸாதாவலம்பாம் ப்ரபுண்யாவலம்பாம்
ஸதாஸ்யேந்து பிம்பாம் ஸதாநோஷ்ட பிம்பாம்
பஜே சாரதாம்பாமஜஸ்ரம் மதம்பாம்.

2

கடாக்ஷே தயார்த்ராம் கரே க்ஞானமுத்ராம்
கலாபிர் விநித்ராம் கலாபை: ஸுபத்ராம்
புரஸ்தாீம் விநித்ராம் புரஸ்துங்கபத்ராம்
பஜே சாரதாம்பாமஜஸ்ரம் மதம்பாம்.

3

லலாமாங்கபாலாம் லஸத்கான லோலாம்
ஸ்வபக்தைகபாலாம் யச:ஸ்ரீகபோலாம்
கரே த்வஷமாலாம் கனத்ப்ரத்ன லோலாம்
பஜே சாரதாம்பாமஜஸ்ரம் மதம்பாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

4

ஸுஸீமந்தவேணீம் த்ருசா நிர்ஜிதைணீம்
ரமத்கீரவாணீம் நமத்வஜ்ரபாணீம்
ஸுதாமந்தராஸ்யாம் முதா சிந்த்யவேணீம்
பஜே சாரதாம்பாமஜஸ்ரம் மதம்பாம்.

5

ஸுசாந்தாம் ஸுதேஹாம் த்ருகந்தே கசாந்தாம்
லஸத்ஸல்லதாங்கீமனன் தாமசிந்த்யாம்
ஸம்ருதாம் தாபஸை: ஸர்கபூர்வஸ்திதாம் தாம்
பஜே சாரதாம்பாமஜஸ்ரம் மதம்பாம்.

6

குரங்கே துரங்கே ம்ருகேந்த்ரே ககேந்த்ரே
மராலே மதேபே மஹோக்ஷே திரூடாம்
மஹத்யாம் நவம்யாம் ஸதா ஸாம ரூபாம்
பஜே சாரதாம்பாமஜஸ்ரம் மதம்பாம்.

7

ஜ்வலத்காந்திவஹ்னிம் ஜகன்மோகநாங்கீம்
பஜன்மானஸாம்போஜஸுப்ராந்தப்ருங்கீம்
நிஜஸ்தோத்ர ஸங்கீதந்ருத்யப்ரபாங்கீம்
பஜே சாரதாம்பாமஜஸ்ரம் மதம்பாம்.

8

பவாம்போஜநேத்ராஜஸம்பூஜ்யமானாம்
லஸன்மந்தஹாஸப்ரபாவக்த்ரசின்ஹாம்
சலச்சஞ்சலாசாருதாடங்ககர்ணாம்
பஜே சாரதாம்பாமஜஸ்ரம் மதம்பாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தமிழாக்கம் : பாரதிகாவலர்

1

அமுதம் நிறைக் கலசங்கள்
கரங்களில் உடையவளாம்;
குடமெனக் குவிந்தபடி
அருள் பொழியும் நெஞ்சினளாம்;
பாலனம் புரிந்து நமைக்
காத்திடும் அம்பிகையாம்;
புனிதர்க்கெல்லாம்
பொற்பதம் தருபவளாம்;
திங்கள் முகப்பொலிவு
எழிலார்ந்த இதழ்க்கனிவு,
பீடுடைய வடிவினளாம்;

என் தாயாகும் சாரதாம்பாளை
சந்ததமும், மனம் மொழி மெய் சேர
துதிக்கின்றேன்.

2

விழிக் கடையில் அளப்பரிய
கருணை மிகுந்து பொங்கும்
நோக்குடையவளாம்;
பொற்கரந்தனில் ஞான
முத்திரை உடையவளாம்;
கலைகளின் நித்ய வாசினியாம்;
புனிதம் நிறைப் பொன் அணி
மங்கலம் உடையவளாம்;
தெய்வதமாய் என்றென்றும்
விழியாலே அருள்தருபவளாம்;
துங்காநதி வாழ்த் தூயவளாம்;

என் தாயாகும் சாரதாம்பாளை
சந்ததமும், மனம் மொழிமெய் சேர
துதிக்கின்றேன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

3

பிறை நுதலில் வகிடென
பொன்நகை தரித்தவளாம்;
இன்னிசைப் பண்ணின்
உன்னதம் நயப்பவளாம்;
தொழுதவரைக் காத்தருளும்
தனிப்பெரும் தேவியாய்த்
திகழ்ந்து ஒளிர்பவளாம்;
கீர்த்தி இசைத்திடு கன்னங்கள்
திருக்கரத்தில் மணிமாலை உடையவளாம்;
கண்கவரும் தொல் அணிமணியில்
அகலாத விருப்பு உடையவளாம்;

என் தாயாகும் சாரதாம்பாளை
சந்ததமும் மனம் மொழி மெய் சேர
துதிக்கின்றேன்.

4

முடிவகிர்ந்து பின்னலிட்டுக்
குஞ்சலங்கள் கொண்டவளாம்;
மான்விழிப் பார்வையினும்
வென்றிடும் திருப்பார்வை உடையவளாம்;
கிள்ளையோடிருக்கும் வாணியாம்;
வானவன் இந்திர தேவன்
வணங்கிடும் தேவதேவியாம்;
அமுதபானம் விளைத்திடும்
மந்தஹாச வதனமுடையவளாம்;
கருங்கூந்தல் கவினழகொடு
நெஞ்சத்தை ஈர்ப்பவளாம்;

என் தாயாகும் சாரதாம்பாளை
சந்ததமும், மனம் மொழி மெய் சேர
துதிக்கின்றேன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

5

சாந்த சொரூபி, எழிற் திருமேனி;
சுந்தரத் திரு வடிவினளாம்;
விழியளவோடிப் பரந்தடர்ந்த
கருங்கேசம் உடையவளாம்;
ஒளிவிடும் கொடிபோலும்
மென் உடம்பினளாம்;
என்றுமுள நித்ய நாயகியாம்;
உள்ளத்து எழும் எண்ணங்கடந்து
நின்று நிலைத்திருப்பவளாம்;
தவமுனிவர் தொழுதேற்றும்
உலகுக்கு முன்னம் உயிர்த்தவளாம்;

என் தாயாகும் சாரதாம்பாளை
சந்ததமும், மனம் மொழிமெய் சேர
துதிக்கின்றேன்.

6

மான்மீதும், மடஅன்னத்திலும்
மாட்சியுற சிம்ம மதன் மீதும்
கரி, பரி, இரண்டின் மீதும்
ஆரோகணித்து இருப்பவளாம்;
கழுகின் மீதும் காளையின் மீதும்
வீற்றிருப்பவளாம்;
நவராத்திரி நற்பொழுதில்
நல்வாகனங்களாகிடும்
இவைமீது அமர்ந்திருப்பவளாம்;
இனிமையின் தனி உருவாகி
என்றும் காட்சி தருபவளாம்.

என் தாயாகும் சாரதாம்பாளை
சந்ததமும், மனம் மொழி மெய் சேர
துதிக்கின்றேன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

7

கனல் போலும் செம்பிழம்பாகி
ஒளிவீசும் செவ்வழகுச்
செந்திருவென ஜொலிப்பவளாம்;
சகல சிருஷ்டிகளின் காந்திமிகு
உருக்கொண்ட வளாம்;
பணிகின்ற நல்லடியாரின்
நெஞ்சக் கமலந்தன்னில்
தேனீயென ரீங்கரிப்பவளாம்;
சுயம்புவான தோத்திரத்தின்,
நாதத்தின், நர்த்தனத்தின்,
உள்ளொளி நிகர்த்த மேனியளாம்;

என் தாயாகும் சாரதாம்பாளை
சந்ததமும், மனம் மொழி மெய் சேர
துதிக்கின்றேன்.

8

படைக்கின்ற நான்முகனும்
பள்ளி கொண்ட மாலவனும்
மலை வாழும் மகேஸ்வரனும்
பூசனை புரிந்து துதிக்கின்ற
பெரும்சீர் படைத்த வளாம்;
தேசுமிகு புன்னகையின்
திருவதனம் உடையவளாம்;
காதணிக் குண்டலங்கள்
ஊஞ்சலென அசைந்தாடி
அழகுக்குத் தனியழகூட்டும்
திருச்செவிகள் உடையவளாம்;

என் தாயாகும் சாரதாம்பாளை
சந்ததமும், மனம் மொழி மெய்சேர
துதிக்கின்றேன்.

★

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

துணை நூல்களின் பட்டியல்

BIBLIOGRAPHY

1. **Madhava-Vidyaranya's Sankara Dig Vijaya;** Anandasrama Sanskrit Series, Poona. 1863-Bombay 1891.
2. **Sankara Dig Vijaya:** By Madhava Vidyaranya, tn. Swami Tapasyananda, Sri Ramakrishna Math, Madras. -1986.
3. **Anantagiri's Sankara Vijaya:** Madras University Philosophical series No.16 & Calcutta Edition 1868.
4. **Chidvilasa's Sankara Vijaya Vilasa:** Bharathya Vidya Bhavan's Research Organ-vol XXXIII-No 1 to 14.
5. **A History of Ancient Sanskrit Literature:** By Max Muller II Ed. 1860.
6. **A History of Sanskrit Literature:** By A.A.Macdonell, London 1899.
7. **Prataparudriya of Vidyanatha:** (Alankara Sastra in Sanskrit) The Sanskrit Education Society, Madras. Ist Ed. 1970.
8. **Neethi Sathagam (Sanskrit):** Edited by Jagannatha Sastry Pande, Motilal Banarsidass, New Delhi-1976.
9. **Roots Verb Forms & Primary Deviations of the Sanskrit Language:** By W.D. Whitney, Leipzig, 1885.
10. **The History of Aryan Rule in India:** By EB. Havell, George G. Harrap & Co., Kingsway, WC London.
11. **The Artic Homes of Vedas:** By Lokamanya Bala Gangadhara Tilak, Tilak Bros, Pune, 1956.
12. **History of Mediviaeval Hindu India:** Vol. I, II & III by C.V. Vaidya, The oriental Book supplying Agencies Arya Bhusan press, Poona, 1921.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

13. **History of India:** By D.N. Kundra & Smt S. D. Kundre, Part I, Navadeep Publications, New Delhi 1983.

14. **History of Indian Philosophy:** By Dr. S. Radhakrishnan, George Allen & Unwin Ltd. London.

15. **History of Indian Education:** By Prof. B.C. Rai, Prakashan Kendra Lucknow, 1974.

16. **History of Indian Literature:** By M. Winternitz, Vol I tr,. by Mrs. S. Ketkar, Calcutta-1927.

17. **The Indian Empire-its People, History & Products:** by Sir William Wilson Hunter, W.H. Allen & Co. London 1893.

18. **Ancient India:** G. Editor, Dr. N. Mahalingam, I.S.I.A.C. Publication, Chennai 1997.

19. **The Essentials of Hinduism:** By Swami Bhaskarananda, The Vedanta Society of western washington, U.S.A. 1994.

20. **The Encyclopaedia of Indian philosophies:** Vol I Karl H. Potter, Motilal Banarridas, New Delhi-1970.

21. **Puranic Encyclopaedia** - Vettam Mani, Motilal Banarsidass, Varanasi & Patna, 1964.

22. **Manu Dharma Sastra:** A Sociological & Historical Studies by Keval Motwari, Ganesh & Co., (M) Ltd, Madras. 1956.

23. **Manu Smrti, the ideal Democratic Republic of Manu:** By Dr. M.V. Pattwardhan, Motilal Banarsidass Patna, 1965.

24. **Laws of Dharma Sastras:** By Dr. B.N. Mani, Nav Rang, New Delhi. 1956.

25. **India of Dharma Sutras:** By Veda Mitra, Arya Book Depot, New Delhi 1965.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

26. **The Dharma sastras of the Hindu Law codes:** By Mammatha Natt Duth, Chaukhumbha Amara Bharathi Prakashan, Varanasi, 1906.

27. **Nitya Kamya Karma Mimamsa:** By Remelle Suryaprakasa Sastry, Rajamahindry, 1990.

28. **The Dharma Sastras, a brief study:** By Swami Harshananda, Ramakrishna Mutt, Bangalore.

29. **Social & Religious life in the Grhya sutras:** By Dr. V.M. Apte, Ahemedabad 1939.

30. **The Srauta-Sutra of Katyana** Ed by Dr. Albrecht Weber, Berlin & London 1959.

31. **Jainminiya Grhya Sutra:** Tr. by W, Caland, Punjab Sanskrit Series, Lahore 1922.

32. **Veda of Black Yajus School:** Tr. by A.B. Keith, Harward oriental series.

33. **The White Yajurveda** Tr. by Ralph T.H. Graiffth.

34. **Rigvedic Studies Series II - space:** by M. Sundar Raj. I.S.I.A.C. publication Madras 1983.

35. **Non-Rigvedic Mantras in the Marriage ceremonies:** by P. K. Narayana Pillai, The Travancore Devasom Board, Trivandram, 1958.

36. **Satapatha-Brahmanas:** tr. By Julius Eggeling, oxford 1882.

37. **The Nigandu and Nirupkta:** Ed. By Laxman sarup, oxford 1920.

38. **Abhijnana Sakuntala of Mahakavi Kalidasa (Sanskrit):** by Dr. Shri Krishnamani Tripathi Sri Sampurnananda vishwa Vidyalaya, Varanasi-The Chaukhamba Subra Bharathi Grantamala 53.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

39. **Kavya prakasa of Sri Mammata:** By Pt. Raghunatha Prasada, chaturveda sahityacharya. Ed. by Kapila Deo Giri, chaukhamba sanskrit samsthan, Varanasi 1990, The Kashi sanskrit series 253.

40. **Kavyadarsa of Sri Madacharya Dandi Mahakavi (Sanskrit):** Commentry by Jeevananda Vidyasageera Bhattacharya, V. Ramaswamy Sastrulu & Sons. Madras. 1964.

41. **The Legend, Mystery & Spirit of Lord Jagannath of puri:** by Manojdas, The Utkal Association publication.

42. **Kerala Sahitya (Malayalam):** by Ullur S. Parameshwara Iyer, Kerala University, Trivandrum

43. **Benares and its Ghats:** The Kashi Tirth sudhar Trust, Benares, 1931.

44. **Varanasi:** by Bhagawati Sharan, National Book Trust, New Delhi-1988.

45. **The story of our Rivers:** by Leela Majumdar, National Book Trust, New Delhi.

46. **Raghuvamsa Makavya of Sri Kalidasa (Sanskrit):** Ed. by T.K. Ramachandra Iyer, R.S. Vaidyar & Sons, Palghat, Kerala 1971.

47. **Ethical philosophy of the Gita:** by P.N. Srinivasachari, Ramakrisna Mutt, Madras 1943.

48. **Selections from the worlds most sacred Literature:** By Eknath Easwaran, Jaico publishing House, Mumbai 1997.

49. சிவகீதை, திருவரசு புத்தக நிலையம், சென்னை.

50. ஸ்ரீமத் பகவத் கீதை: ஸ்ரீ ஜயதயால் கோயந்தகா (ஹிந்தி) தத்துவ விவேசனி உரை- ஸ்வாமிநாத ஆத்ரேயர் தமிழாக்கம், கீதா பிரஸ், கோரக்பூர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

51. ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்: இருபாகங்கள், ஸ்ரீ உ. வே. ஸி.ஆர். ஸ்ரீநிவாச அய்யங்கார் உரை. தி. லிட்டில் ப்ளவர் கம்பெனி, லிப்கோ, சென்னை 1963.

52 சிவ பக்தி தந்த தெல்வம்; பாரதி காவலர், கங்கை புத்தக நிலையம், 1999.

53. சதுரகராதி: வீரமாமுனிவர் பெஸ்கி (1680-1747)

54. பஞ்சமரபு: அறிவனார் இயற்றியது: சக்தி அறநிலைய வெளியீடு, கோவை 1973.

55. காசிக்கலம்பகம்: குமரகுருபரர் இயற்றியது. பண்டித வித்வான் சங்குப்புலவர் உரை. தி. தெ. சை. சி. பதிப்புக் கழகம், சென்னை 1977.

56. திருவாசகம்: பதிப்பாசிரியர், ஸ்ரீ கந்தசாமிப்பிள்ளை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம் வெளியீடு, சிதம்பரம் 1964.

57. ஸரஸ்வதி அந்தாதி: கவிச்சக்கரவர்த்தி கம்பர் இயற்றியது.

58. ஸரஸ்வதி கடாக்ஷம்: ஸ்ரீ பரத்வாஜ ஸ்வாமிகள், வானதி பதிப்பகம் சென்னை-1974.

59. சங்கர க்ருபா: கே.வி. சுப்புரத்தினம் எழுதிய கட்டுரை. வாணிவிலாஸ் பிரஸ், ஸ்ரீரங்கம்.

60. பக்திப் பரவசக் கதைகள் பாகம்-I&II கங்கா ராமமூர்த்தி கங்கை புத்தக நிலையம், சென்னை. 1996, 1998.

61. சரித்திரத்தை மாற்றிய சந்திப்புக்கள்: வித்வான் தே. ஆ. சீனிவாசன், ஸ்ரீஷண்முகா பப்ளிகேஷன் ஹவுஸ், மன்னார்குடி, 1961.

62. சிருங்கேரி நாயகருக்கு சிந்தூர ஆரத்தி: (காவியம்) பாரதிகாவலர் டாக்டர் கே. ராமமூர்த்தி, சங்கரபாரதி, சென்னை 1990.

63. மெய்கண்ட சாத்திரம்: ஸ்ரீ அருணந்தி தேவநாயனார் அருளியது-சிவஞான சித்தியார் பரபக்கம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மூலம்-தத்துவப் பிரகாசர் உரை-திருவாவடுதுறை ஆதினம் 1955.

65. ஸம்சேஷ்ப சாரீரகம் (ஸம்ஸ்கிருதம்): ஸ்ரீமதி கமலாம்பாள் வியாக்யானம் 1993.

66. விஷ்ணு புராணம்: M.K. வெங்கட ராமன், தி. லிட்டில் ப்ளவர் கம்பெனி, லிப்கோ, சென்னை. 1995.

67. மொழிநூல் (PHILOLOGY): மாகர்வ கார்த்திகேய முதலியார், விவேகானந்தா பிரஸ், மதறாஸ்-1913.

68. ஸ்ரீ ஸௌந்தர்ய லஹரீ- ஆதி சங்கர பகவத் பாதர் அருளியது ப்ரஹ்மஸ்ரீ சாஸ்திர ரத்னாகர தேதியூர் ஸுப்ரமண்ய சாஸ்திரிகள் விளக்க உரை-ஸ்ரீசங்கர குருகுலம் சென்னை 1945.

69. **The Seasons in Maha-Kavya literatures:** by Danielle Feller, Eastern Book linkers, Delhi 1995

70. **India's Past- A survey of her literatures Religions Languages & Antiquities:** by A.A. Macdonell, sanskrit prof oxford university, oxford, clarendon press 1927.

71. **Indian Teachers of Buddhist Universities:** by Phanindranath Bose, Theosophical publishing House Madras- 1923.

72. **India's Kavya Literature's:** By A.K. Warder, vol II & III Motilal Banarsidass publishers p.Ltd. Patna, 1974.

73. **Dates & Dynasties in earliest India:** by R. Morton smith Toronto University proffessor. Ed. by. J.L. Shastri, Motilal Banarsidass, Varanasi-1973

74. **Indian Historical studies:** by H.G Rawbinson, Longman's Green and Co., London. 1913.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நூலாசிரியரின் முன்னோர்கள்

பிரம்மாவின் மானஸ புத்திரர்களில் ஒருவர் குசர் என்பவர்.

குசர், பூவுலகம் வந்து வேத தர்ம சாஸ்திரங்கள் தழைக்கும் வண்ணம் விதர்ப்ப நாட்டில் ராஜ்ய பரிபாலனம் செய்து வந்தார்.

குசருக்கு நான்கு புத்திரர்கள். அஸுர்த்த ரஜஸ், குசாம்பர், குசநாபர், வஸு ஆகிய நால்வரும் முறையே தர்மாரண்யம், கௌசாம்பி, மஹோதயம், கிரிவிரஜம் ஆகிய ராஜ்யங்களை ஆண்டு வந்தனர்.

மஹோதயத்தின் மன்னராகிய குசநாபரின் புத்திரர் காதி, அரசாட்சியை ஏற்றார். மஹோதயத்தை கன்யாகுப்ஜ நாடு என்றும் அழைப்பார்கள்.

காதி அரசரின் புத்திரராகிய கௌசிகரே கன்யாகுப்ஜ நாட்டின் மன்னர் விஸ்வாமித்ரர் என்பவராவார். ராஜரிஷியும் பிரம்மரிஷியுமாகிய விஸ்வாமித்திரர் வழிவந்தவர்கள் 'கௌசிகர்' என்றும் கௌசிக கோத்திரம் சார்ந்த குடும்பத்தினர் என்றும் அழைக்கப்படலாயினர்.

எத்தனை எத்தனையோ நூற்றாண்டுகளாக கௌசிக கோத்திர குடும்பத்தினர் கன்யாகுப்ஜ ராஜ்யத்திலுள்ள கங்கைப் பிரதேசத்தில் வாழ்ந்து வந்தார்கள். காசிமாநகரில் ராஜாங்கப் பண்டிதர்களாகவும் வாழ்ந்து வந்தனர், கங்காதார சர்மா குடும்பத்தினர்.

விஸ்வாமித்திரரின் சிறிய தாத்தா வஸுமன்னரின் பரம்பரையினர் அரசாண்ட கிரிவிரஜ ராஜ்யத்திலுள்ள சோணா நதிக்கரையின் இரு புறமும் உள்ள பிரதேசத்தில், கங்கைக் கரையில் வாழ்ந்து வந்த கௌசிக கோத்திரக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குடும்பத்தினர் சிலர் குடியேறி, தொடர்ந்து ராஜாங்க கௌரவத்துடன் வாழ்ந்து வரலாயினர்.

கங்கை நதியின் வடப்புறம் பாயும் உபநதியான சோணா நதி, அக்னி தேவனின் அரும்சக்தி கொண்ட நதிப் பிரதேசமாகும். அக்னிதேவனின் ஆகர்ஷணப் பொலி வுடன் சோணா நதிக்கரையில் வாழ்ந்து வந்த இக்குடும்பத்தினர் ''கௌசிக வடமன்'' என்று அழைக்கப் பட்டார்கள். பசு நெய் வார்த்து, ஹோமங்களில் நெய் மணக்க நியமங்கள் புரிவது இவர்கள் மரபானதால் கௌசிக நெய் வடமன் எனவும் அழைக்கப்பட்டார்கள்.

கால ஓட்டத்தில் அங்கிருந்து அந்த கௌசிக நெய் வடமன் குடும்பத்தினர் தெற்கு நோக்கிப் பயணமாகி ''கங்கை கொண்டான்'' என்னுமிடத்தில் குடியேறி வாழலாயினர். பின்பு அங்கிருந்து, தாமிரவருணி நதிக்கரையிலுள்ள, முனிவர்கள் தவம்புரியும் தாருகாவனம், சிஞ்சாவனம் ஆகிய பிரதேசங்களில் வாழ்ந்து வரலானார்கள்.

அங்கு கோயில் கொண்ட இறைவனை கங்கை புனை ஈசனின் நெற்றிக் கண்ணாகத் திகழ்ந்தொளிரும் அக்னி தேவன் என்று தங்கள் முந்தைய வழிப்படியே வழிபட்டு வரலாயினர். ஸ்ரீ அக்னீச்வரர் பாகமாகிய ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சமேதராக, ஈசன் கோயில் கொண்ட இப்பிரதேசமே ராஜவல்லிபுரம் (திருநெல்வேலி மாவட்டம்).

இந்த ராஜவல்லிபுரம் அக்னீஸ்வரரை மணம் புரிந்து கொண்ட அகிலாண்ட நாயகியின் அருள் ஆட்சித் தலம். கங்கைநதிக் கரையிலிருந்து சோணா நதிக்கரை வந்ததால் கௌசிக நெய் வடமன் என்றும் அங்கிருந்து தாமிரவருணி நதிக்கரையில் குடியேறியதால் இக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குடும்பத்தினர் ''கௌசிக கோத்திர வடதேசத்து நெய் வடமன்'' என்றும் அழைக்கப் பட்டார்கள்.

பாண்டிய மன்னர்கள், நாயக்கர்கள் ஆட்சிக் காலங்களிலும் மணப்படைவீடு மன்னர்களின் காலத்திலும் இக்குடும்பத்தினர் ராஜாங்க அந்தஸ்தும் கௌரவங்களும் பெற்று செல்வாக்குடன் வாழ்ந்து வந்தார்கள். ராஜவல்லிபுரத்தில் மிகப் பிரசித்தியுடன் தர்மிஷ்டர்களாகவும் பைந்தமிழ்ப் பண்டிதர்களாகவும் வாழ்ந்து வந்த இவர்கள் ''கங்காதர'' என்ற ஆதியில் வாழ்ந்த கங்கைக் கரைப் பிரதேச பாரம்பரியப் பெயருடன் ''கங்காதர சர்மா குடும்பம்'' என்றே அழைக்கப்பட்டு வந்தார்கள். பல நூறு ஆண்டுகள் புகழுடன் வாழ்ந்த இக்குடும்பத்தார், தாமிரவருணி நதியில் பெரு வெள்ளம் ஏற்பட்டு, ராஜவல்லிபுரம் பாதிப்பிற்குள்ளாகிய போது, கல்யாணபுரி என்றழைக்கப் படும் கல்லிடைக் குறிச்சிக்கு வந்து குடியேறினார்கள்.

கங்காதர சர்மா, தமது இரு புதல்வர்களான சங்கர சர்மா, சிதம்பரசர்மா, குடும்பங்களுடன் கல்லிடைக் குறிச்சியின் கிழக்குப் பகுதியில் ஒரு குடும்பம், மேற்கு பகுதியில் மற்றொரு குடும்பமுமாக வாழ்ந்து வந்தார்கள்.

அவ்வாறாக, கங்கைக்கரை காசி கங்காதரசர்மா குடும்பம், சோணா நதிக்கரை கங்காதர சர்மா குடும்பம், கங்கை கொண்டான் கங்காதர சர்மா குடும்பம், ராஜவல்லிபுரம் கங்காதர சர்மா குடும்பம், தொடர்ந்து கல்லிடைக்குறிச்சி கங்காதர சர்மா குடும்பம் என அழைக்கப்பட்டு வந்தார்கள்.

இவர்கள் கௌசிக கோத்திர வடதேசத்து நெய்வடமா குடும்பத்தினர் ஆவார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்நூலாசிரியரைப் பற்றி...

'ஸ்ரீ சாரதாம்பாள் திவ்ய சரிதம்' என்னும் இந்த நூலின் ஆசிரியர் டாக்டர் கே. ராமமூர்த்தி, தாமிரவருணி நதிக்கரையில் உள்ள கல்லிடைக்குறிச்சியில் 1937 ம் ஆண்டு பிறந்தவர். ஸ்ரீ கே.எஸ். குளத்து அய்யர், ஸ்ரீமதி விசாலாக்ஷி அம்மாள் தம்பதியரின் புதல்வர்.

'பாரதிகாவலர்' என்றே பொதுவாழ்வு, இலக்கிய பக்தி உலகத்தில் அன்புடன் அழைக்கப்பட்டு வரும் இந்தப் பாராட்டு, பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் வழங்கிச்சிறப்பித்ததாகும். படிக்கத் தெரிந்த நாளிலிருந்து பாரதியைப் பற்றி அறிந்தும், ஈடுபாடு கொண்டும், மாணவப் பருவம் தொட்டே நெல்லை மாவட்டத்தில் மாணவர் தேசிய சங்கங்கள் அமைத்து, பாரதி பணி, தேசியப் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். 1953ல் தொடங்கப் பெற்ற பாரதி இளைஞர் சங்கத்தின் தலைவராக 40 ஆண்டுகள் இருந்து, பாரதி இயக்கத்தை நாடு முழுவதும் பரப்பியவர்.

பாரதி இலக்கியத்திற்கு இவருடைய பங்கும் பணியும், புகழ் பெற்ற அறிஞர்களாலும் நிலைபெற்ற நிறுவனங்களாலும் அங்கீகாரம் பெற்றுள்ளது. வீட்டுக்கு வீடு பாரதி என்ற திட்டத்தை உருவாக்கி ஒரு லட்சம் வீடுகளில் பாரதி படம் திகழச் செய்ததும், கங்கைக் கரையிலும் (காசியில்) தொட்டபெட்டா சிகரத்திலும் பாரதி கவிதை வரிகளுடன் சலவைக்கல் நிறுவியதும், பாரதி இசைவிழாக்கள் நடத்தியதும் குறிப்பிடத்தக்கவை களாகும்.

பாரதி இலக்கியத்தில் உலகக் கவிஞர்களுடன் பாரதியை ஒப்பு நோக்கி முனைப்புடன் ஆய்வு செய்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிறப்புப் பெற்றவர். கல்வித் துறையில், பல பட்டங்களும், பட்டயங்களும் பெற்றுத் தேர்ந்தவர். அறுபதுக்கு மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் வழங்கி உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் முனைப்பு மிகுந்த ஆய்வாளர் எனும் தகுதி பெற்றவர்.

ஐம்பது நாடுகளுக்கு பாரதியின் இலக்கியத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து பெட்டகமாக அறிமுகப்படுத்திய பணிக்காக, ஐக்கிய நாடுகள் (U.N.) சங்கத்தின் எழுத்தாளர் ஸொஸைட்டியின் விசேஷப் பாராட்டும், அமெரிக்காவில் உள்ள இனாகூல்பிர்த் இலக்கிய ஸ்தாபனத்தின் (100 ஆண்டுகளுக்கு மேற்பட்ட) அவார்ட் ஆப் மெரிட், பரிசுத்தொகை, இத்தாலி நாட்டு பல்கலைக் கழகத்தின் அகாடமிக் டொனாரோ கௌரவப் பட்டமும், தாய்லாந்தில் நடைபெற்ற உலகக் கவிஞர் மாநாட்டில் அளித்த பாராட்டுப் பட்டயமும் மற்றும் இங்கிலாந்து, பாரிஸ், மலேசியா நாடுகளின் இலக்கிய அமைப்புகளின் கௌரவங்களும் பெற்றவர் டாக்டர் கே. ராமமூர்த்தி. சர்வதேசக் கவிஞர் அகாதமி இவருக்கு முன்மாதிரியான சர்வதேசக் கவிஞர் என்ற விருதுடன் ஃபொலோஷிப் அளித்துள்ளது.

சிறந்த மொழிபெயர்ப்பாளர் ஆகிய இவர் ஆதிசங்கரரின் மாத்ருபஞ்சகத்தில் ஆய்வுகள் செய்து, சென்னைப் பல்கலைக் கழக தத்துவத்துறைத் தலைவர் திரு. டி.எம்.பி. மகாதேவன், ஸம்ஸ்கிருதத்துறை டாக்டர் வெ. ராகவன் ஆகியோரால் புகழப் பெற்றவர். ஆதிசங்கரரின் அன்னபூரணி துதியை தமிழாக்கி அன்னபூரணி ஆலயம் காசியில் அரங்கேற்றியவர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சங்கரரின் மந்த்ரமாத்ருகா புஷ்பமாலா ஸ்தவம், ஸ்ரீ சாரதா புஜங்கப்ரயாதாஷ்டகம், தோடகரின் தோடகாஷ்டகம், வால்மீகியின் இராமாயணப் பட்டாபிஷேக மஹோத்ஸவம் (ஸர்க்கம் 131) ஆகியவற்றுடன் சிருங்கேரி ஜகத்குருக்கள் சந்திரசேகர பாரதி ஸ்வாமிகளின் ஸ்ரீ லக்ஷ்மி நரஸிம்ம பஞ்சகம், ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகளின், அபிநவ வித்யாதீர்த்த அக்ஷரமாலா, ஸ்ரீ ஐயப்ப ஸ்தோத்திரம், தங்கரத சமர்ப்பண ஸ்துதி ஆகியவற்றைத் தமிழாக்கம் செய்துள்ளார்.

மற்றும் காந்தியக் கட்டுரைகள், உலகக் கவிஞர்கள், சிந்தனையாளர்கள் பற்றியும் தமிழ் - ஆங்கிலம் - தமிழ் என மொழிபெயர்ப்புக்கள் பல பத்திரிகைகளில் பிரசுரமாகி உள்ளன. காந்தி நூற்றாண்டின்போது சர்வோதயத் தலைவர் ஜெயப்பிரகாஷ் நாராயணன் இவருக்கு காந்திப் பதக்கம் வழங்கியும், இந்திய அரசு நூற்றாண்டுக் குழு காந்தியச் சிந்தனையாளர் என்ற சிறப்பும் செய்தது. 'காந்தி வட்டம்' என்ற மாத இதழின் ஆசிரியராக 1969 முதல் 1976 வரை இவர் பணிபுரிந்துள்ளார். ஒரு ஆன்மீக மாத இதழிலும் சில ஆண்டுகள் ஆசிரியராக இருந்தவர்.

தமிழில் ஏராளமான கவிதைகளும், ஆங்கிலத்தில் சில கவிதைகளும் எழுதியுள்ள இவர், இரு கவிதை அந்தாலஜிகளைத் தயாரித்துள்ளார். சிருங்கேரி நாயகருக்கு சிந்தூர ஆரத்தி காவியம் இவரது கவிதைச் சிறப்புக்குச் சான்று பகரும். 'குரு நமஸ்காரம்' நூலும் இவரது கவிதை நூலே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இதுகாறும் இரு ஆங்கில நூலும், தமிழில் முப்பது நூல்களும் எழுதிப் பரிசுகளும் பெற்றிருக்கிறார். பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சியில் இவரது படைப்புகள் இடம் பெற்றுள்ளன. 'குரு தரிசனம்' இவரது எழுத்திலும் பாடல்களிலும் உருவான தெய்வீகத் தொலைக்காட்சித் தொடராகும். தேசிய தெய்வீக உணர்வு மிகுந்த இவர் சிறந்த சொற்பொழிவாளர். நீரருவி போல் வீச்சும் தெளிவும் இணைந்தபடி பேசுவதில் திறம் உடையவர். கவிதைகளுடன் இசைப்பணியாக கீர்த்தனைகளும் எழுதியுள்ளார்.

கற்றோருக்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு என்பது போன்று இவருக்கு பல திசைகளிலிருந்தும் பாராட்டும் விருதும் வந்துள்ளன. வாரணாசி (காசி)யில் உள்ள வேதமீமாம்ஸ ரிஸர்ச் ஸெண்டர் சார்பில் அதன் இயக்குநர் வித்யாவாசஸ்பதி வித்யாசாகர், பண்டிதராஜ ஸ்ரீ பி.என். பட்டாபிராம சாஸ்திரி அவர்கள் பாரதி காவலர் ராமமூர்த்திக்கு 'கவி மௌக்திகம்' என்ற விருது வழங்கி கௌரவித்துள்ளதும், ஸ்ரீ யாக்ஞவல்கீய வேத பீடம் இவருக்கு 'சங்கரபாரதி வாசகமணி' விருது வழங்கியுள்ளதும், காசிமா நகர் அனுமான் காட்டில் வேத பண்டித சிரோமணி காளி பிரசாத் திரிபாதி அவர்கள் 'கவிஸம்ரக்ஷக்' விருது அளித்துள்ளதும் இவருக்குக் கிடைத்த மிகப் பெரிய கௌரவங்களாகும்.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பத்மஸ்ரீ நெ.து. சுந்தரவடிவேலு அவர்கள் இவருக்கு 'பாரதியச் செல்வர்' என்றும், அமெரிக்க டெம்பிள் ஸொஸைட்டியைச் சார்ந்த நாவல்பாக்கம் வரதாச்சாரி ஸ்வாமிகள் இவருக்கு 'பாரதி பக்தபூஷணம்' என்றும், இந்து சமய மன்றம் சார்பில் நீதிபதி நடராசன் அவர்கள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'இதயபாரதி' என்றும் விருதுகள் வழங்கி கௌரவித்துள்ளார்கள்.

கல்கத்தா தமிழ் மன்றத்தில் சங்கரா இன்ஸ்டிட்யூட் ஆப் பிலாஸபி அன்டு கல்சர் ஸ்தாபனத்தின் தலைவர் குரு பக்தமணி ஸ்ரீ பி. சுப்ரமண்யம் அவர்கள் இவருக்கு 'பாரதி சாகரம்' என்ற பட்டம் வழங்கியதும், மகாகவி பாரதியின் மைத்துனி ஸ்வாமினி தவத்திரு ஸ்வர்ணம்பாள் தேவி இவரை கடையம் வரவழைத்து 'பாரதி கலாநிதி' விருது அளித்து சிறப்புச் செய்ததும், ராகவேந்திர வித்வத் சமாஜம் 'பாரதி பிரசங்க ரத்னாகரம்' என்று பட்டம் அருளியதும், ஆந்திர நாட்டு யயாதி அவர்களின் உபநிஷத் ஆசிரமம் சென்னையில் இவருக்கு 'பாரதி அறிஞர்' என்று விருது அளித்துள்ளதும் ராமமூர்த்திக்குப் பெருமை சேர்ப்ப தாகும்.

மேலும் காரைக்குடி பாரதி மன்றத்தினர், 'பாரதியச் செம்மல்' என்றும், கேரளத்து உத்யோகமண்டல் பாரதி பேரவை 'பாரதிச் சுடர்' என்றும், வியாசர்பாடி முத்தமிழ் ஆய்வு மன்றம் 'பாரதிச் சொல்லழகர்' என்றும், விழுப்புரம் பாரதி நிலையம் சார்பில் ஸ்ரீ ஆர். ஏ. பத்மநாபன் 'பாரதி தொண்டர் திலகம்' என்றும், பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தைச் சார்ந்த ஸ்ரீ வேனா (தேசபக்தர் & அறிஞர்) 'பாரதி ஆழ்வார்' என்றும், மற்றும் பாரதி திக் விஜய திலகம், பாரதி களஞ்சியம் 'சமத்துவ மாமணி' போன்ற பட்டங்களும் இவர் பெற்றுள்ள பல விருதுகளில் முக்யமாகக் குறிப்பிடத் தக்கவைகளாகும்.

பாரதப் பிரதமர்களான ஜவஹர்லால் நேருஜி, லால் பகதூர் சாஸ்திரி, மொரார்ஜி தேசாய், இந்திரா காந்தி, ராஜிவ்காந்தி, அடல்பிஹாரி வாஜ்பேயி ஆகியோரைச் சந்தித்தும் பிரதமர்களின் பாராட்டையும் பெற்றுள்ள

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவரை தமிழக, மகாராஷ்டிர, கேரள, வங்கம் ஆகிய மாநில கவர்னர்கள் விருந்தளித்தும் சிறப்பித்தும் தனி கௌரவங்களும் செய்துள்ளனர்.

அண்மைக் காலமாக ராமமூர்த்தியின் ஈடுபாடும் பணிகளும் இலக்கியத்துடன் பக்தி சார்ந்த வண்ணமாக அமைந்து சிறப்பு பெற்று வருகிறது. இவரது 'சிவபக்தி தந்த செல்வம்' என்ற நூல் சைவ சித்தாந்த நெறிகளை மிக எளிதில் கதைப்போக்கில் விவரிக்கிற ஒரு பக்தி நாவலாகும். இவரது 'ஞான கங்கை' புதிய முறையில் குரு பக்தி பரப்பும் பிரசுரமாகும்.

தமக்குக் கிடைத்துள்ள எல்லாச் சிறப்புக்களும் தெய்வ பக்தியினாலும் குரு பக்தியினாலும் தான் என்று திடமாகக் கூறும் பாரதி காவலர் டாக்டர் கே. ராமமூர்த்தி எந்தப் பணியையும் சிரத்தையுடனும் சத்தியத்துடனும் செய்வதே அவரது இயல்பு என்பதை நெருங்கிய அன்பர் குழாமும் நானும் நன்றாக அறிவோம்.

ஸ்ரீ சாரதாம்பாள் திவ்ய சரிதம் எழுதியதின் மூலம் பாரதி காவலர் ஒரு திருப்பணி செய்துள்ள மன நிறைவு கொள்ளலாம் என்பதில் யாதொரு ஐயமுமில்லை.

தேசிய விருது பெற்ற 'நல்லாசிரியர்'
வே.மு. மந்திரம், M.A., B.T.
தலைமை ஆசிரியர் (ஓய்வு)
ராமகிருஷ்ணா மிஷன் மேல்நிலைப் பள்ளி மையம்,
சென்னை-17.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ சாரதாம்பாள் திவ்ய சரிதம்

(பாகம் 2)

சிருங்ககிரி ஸ்தல ஸ்ரீ சாரதாம்பாள் கோயில் வரலாறு

★

- ஸ்ரீ சாரதா கோயில் வரலாறும் திருப்பணிகளும்
- கற்கோயில் நிர்மாண நிறைவும் கும்பாபிஷேகங்களும்
- ஸ்ரீ சாரதா கோயில் உத்ஸவங்கள்
- ஸ்ரீஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகளின் தங்கரதத் திருப்பணி
- ஸ்ரீ சாரதாம்பாள் ஸ்தோத்திரங்கள்
- சிருங்ககிரியில் உள்ள கோயில்கள்

சரித்திரச் சான்றுகளுடன், வரலாற்று நிகழ்வுகள் முதன் முதலாக நூல் வடிவில் பக்திப் பரவசமாகத் தயாராகிறது.

ஆசிரியர்

பாரதி காவலர் டாக்டர் கே. ராமமூர்த்தி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீபத்மவாசன்